# பிங்கல நிகண்டு

## பிங்கலமுனிவர்

மின்னாக்கம்

PROJECT MADURAI

வள்ளுவர் வள்ளலார் வட்டம்

சுவர்கக்கத்தின் பெயர் = பொன்னுலகுந் துறக்கமும் புத்தே ளுலகும்விண்ணுலகு மேலை யுலகும் விசம்பு= மன்னுலகு நாகமுங் கற்பமும் வானுலகும்= வியனுலகுந் தானமு முவணையுஞ் சுவவுஞ் சுரரிடமு முயர்நிலையுஞ் சுவர்க்கப்பெயரே.

மேலேழுலகத்தின் பெயர் = பூலோகம் புவலோகஞ் சுவர்க்கலோகம் மாலோகந் தவலோகம் பிரமலோகம்= சிவலோகமித் திறத்தமேலேழுலகே.பூலோகம் புவலோகம் சுவலோகம் மகாலோகம்= சனலோகந் தவலோகம் சத்தியலோகமென= இத்திறத்தனவா மேலேழுலகே என்னும் பாடமும் உண்டு.

மோக்கத்தின் பெயர் = கீவலங் கைவலங் கதிசித்தி மோக்கம்.

மற்றும் மோக்கத்தின் பெயர் = அமுதம் பரஞ்சிவமுத்தியுமாகும்.

ஆகாயத்தின் பெயர் = வேணி விசும்பு வெளியும் பரிடம்= வானங்கோவிண் மண்டில மாசினி = மீமா கங்கம் வியோமம் புட்கரம்= வான்ககன நாக மங்குல் குண்டல= மண்டமுலக மம்பரங்குழைகுடி= லந்தர மகல மாகாயப் பெயரே.

வெளியின் பெயர் = வெடிவயல் வெள்ளிடை விடியலும் வெளியே.

பகிரண்டத்தின் பெயர் = அண்டரண்டம் பகி ரண்ட மாகும்

அண்டகோளகையின் பெயர் = கூடங் கடாக மண்டகோ ளகைப் பெயர்.

அண்டமுகட்டின் பெயர் = மூதண்ட மண்ட முகட்டின்பெயரே.

அண்டச்சுவரின் பெயர் = பித்திகை யண்டச் சுவரின்பெயரே.

திக்கின் பெயர் = மாதிரந் திகைதிசை வம்பல் விசும்பே= யாசை புலமே யுலகுகோ காட்டை= யரிதமம்பரங்ககுப மனைத்துந் திக்கே.

எண்டிக்கின் பெயர் = கிழக்குத் தென்கிழக்குத் தெற்குத் தென்மேற்கு= மேற்கு வடமேற்கு வடக்கு வடகிழக்கென்= றாகத் திக்கெட்டாகு மென்ப.

கிழக்கின் பெயர் = குணக்கே பூருவ மைந்திரம் பிராசி= கிழக்கின் பெயரே கீழ்த்திசையு மாகும்.

தெற்கின் பெயர் = அவாசி தக்கண மியாமினியந் தெக்குச்= சிவேதை தென்னிவை தெற்கென லாகும்.

மேற்கின் பெயர் = மேக்குப் பச்சிமங் குடக்கிவை மேற்கே.

மற்றும் மேற்கின் பெயர் = வாருணம் பிரத்தி யக்கு மதுவே.

வடக்கின் பெயர் = உதக்கே யுதீசி யுத்தரம் பிங்கலம்= வடக்கின்பெயரே மதி திசையு மாகும்;

திசைநாற்கோணத்தின் பெயர் = அந்தராளந்திசைநாற்கோணமாகும்.

எண்டிசைப்பாலர் பெயர் = இந்திர னக்கினி யியம னிருதி = வருணன் வாயு குபேர னீசான = னென்றாகு மெண்டிசைப் பாலர் பெயரே.

எண்டிசையானைப் பெயர் = ஐராவதம் புண்டரீகம் வாமனங் குமுத= மஞ்சனம் புட்பதந்தஞ் சார்வ பூமஞ் = சுப்பிரதீப மெண்டிசை யானைப் பெயரே.

அட்டமாநாகப் பெயர் = அனந்தன் வாசுகி தக்கன் கார்க்கோடகன் = பதுமன் மகாபதுமன் சங்க பாலன் = குளிக னட்டமா நாகப் பெயரே.

எண்டிசையோனிப் பெயர் = கொடிபுகை சிங்கநா யிடபங் கழுதை = யானை காக மிவை யெண்டிசை யோனி.

காற்றின் பெயர் = அநிலம் வங்கூ ழரிபவ மானன் = சமீரணன் மருத்துச் சதாகதி சலனன் = வாடை வளியே மாருதம் வாயு = கோதை வாதங்கூதை வேற்றலங் =
காலொலி பவன முயிர்கந்த வாகன் = பிரபஞ் சனன்மாபலனே பரிசன =
னாசுகன் கந்தவக னூதை காலிலி = விண்டு நீளை வந்து வுலவை = கொண்டல் கோடை யென்றிவை காற்றே.

மற்றுங்காற்றின் பெயர் = நீலு மாலு நிழலியு முயிர்ப்புங் = கூதிருமென்றே கூறற் பாற்றே.

பனிக்காற்றின் பெயர் = கூதிரு மூதையுங் குளிர்பனிக் காற்றே.

வடகாற்றின் பெயர் = வாடை வடந்தை வடகாற் றாகும்.

மேல்காற்றின் பெயர் = கோடை மேல் காற்றே.

கீழ்காற்றின் பெயர் = கொண்டல் கீழ்காற்றே.

தென்றலின் பெயர் = மந்தா நிலமே மலயக்காலே= = தென்கால் வசந்தன் தென்றிசைத்தென்றல்.

சுழல்காற்றின் பெயர் = சூறைவளியே சுழன்றெழுகாற்றே.

மற்றுஞ்சுழல்காற்றின் பெயர் = சூறாவளிசாரிகையுஞ் சொல்லும்.

தசவாயுவின்வகைப் பெயர் = பிராணன பான னுதானன் வியானன்= சமான னாகன் கூர்மன் கிருகரன் = றேவதத்தன் றனஞ்சய னென்றா = வாயுவீரைந் தாகு மிவைதாம்.

பிராணனென்பது = இருதய மண்டலத் தியங்கும் பிராணன்.

அபானனென்பது = உச்சத் தலத்திடைநிற்ப தபானன்.

உதானனென்பது= நாபியி னின்றங் கோவாத துதானன்.

வியானனென்பது = வியானனெங்கும் வியாபியா நிற்கும்.

சமானனென்பது = கந்தரசக் குழியிற் சந்திடைச் சமானன்.

நாகனென்பது = முடக்கலு நீட்டலுங் கிளப்பது நாகன்.

கூர்மனென்பது = உரோமம் புளகித்திமைப்பது கூர்மன்.

கிருகரனென்பது = கிருகர னென்பது கெழுமித், தும்மலுஞ் சினமும் வெம்மையும் விளைக்கும்.

தேவத்தனென்பது = ஓட்டமுமிளைப்பும்வியர்ப்புந் தேவத்தன்

தனஞ்சயனென்பது = ஒல்காவன்பி னல்லவர்கேண்மையி= =
னுயிருடல் விடினுந் தானுடல் விடாஅ, தொக்க நின்றங் குடலினை
வீக்கித், தலைகிழித்தகல்வது தனஞ்சயனாகும்.

சத்தமருத்துக்களின் பெயர் = குணக்குந் தெற்குங் குடக்கும்
வடக்கு= = மேலுங் கீழும் பலயோனியுயிரு, மாகுஞ் சத்த மருத்துப்
பெயரே.

நெருப்பின் பெயர் = அழலுதாசன னங்கி தேயு= = தழல்வசு
வுதகவன்றனஞ்சயன் றழலி= கனலி யெழுநா வனலி முளரி= =
யனலெரி யழலி கனலரி கருநெறி =
சுசியொளி தபனன் சுடர்சிகி சோதி= = தூமகேது வன்னி சுவனை=
பாவகன் சித்திர பானுவங் காரகன் = ஞெகிழிதூ யார னெருப்பின்
பெயரே.

வடவாக்கினியின் பெயர் = வடவை தீத்திரண் மடங்கலூ ழித்தீ=
கடையனலுத்தரம் வடவாக் கினிப் பெயர்

விளக்கின் பெயர் = சுடருந் தீபமு மொளியும் விளக்கே.

அனற்பொறியின் பெயர் = *புலிங்கம்பொறியனல்.
= = = = =
*("ஞெகிழிபுலிங்கம் கங்கம் அனற்பொறி" எனவும் பாடமுண்டு)

அனற்றிரளின் பெயர் = உற்கமணற்றிரள்.

காட்டெரியின் பெயர் = தாவங்காட்டெரி வரையனலு மாகும்.

தீக்கடை கோலின் பெயர் = அரணி ஞெலிகோல் ஞெகிழி
தீக்கடைகோல்

புகையின் பெயர் = தூமமு மரியுந் தூபமுமாவியு, மாகும் பெயரே
புகையென லாகும்.

நறும்புகையின் பெயர் = நறைகுய்வெடியே நறும்புகையாகும்.

அக்கினிதேவன் பெயர் = சாத வேதாமைவா கனனே= தீபதி
சித்திர பானு தனஞ்சயன்= றென்கீழ்த் திசையோன்
றேயுவாயுசகன், பாவகனக்கினிப் பண்ணவன் பெயரே.

அக்கினிதேவன் பாரியின் பெயர் = பாரிசுவாகா தேவி யாகும்.

முத்தீயின் பெயர் = காருக பத்திய மாகவ னீயந்,
தக்கணாக்கினிய மிக்கமுத்தீயே.

பஞ்சாக்கினியின் பெயர் = இராகம் வெகுளி காமஞ் சடமே,
தீபனம் பஞ்சாக்கினியின் பெயரே.

நீரின் பெயர் = ஆலமுஞ் சலமுமம்முமறலும் = பாணியுமப்பும்
பயமு முதகமும்=
வயமு மயமும் வாரியும் விகடியும்= புனலுஞ்சலிலமும் புவனமு
மளகமுஞ்=
சீவனமும் பானீயமுஞ் சிந்துமாங்குசமும்= வருணமு மம்பு
மழையுங் கவந்தமுங்=
கீலாலமு மேகமும் *மகிலமுமிதடியும்= நீரமுந்தோயமும்
வாரும்பதமுங்= காரு மாரியுங் கமலமும் பயசுங்= சுயமுஞ்
சம்பரமுங்கம்மும் புடகரமுஞ்= சீதமும் வசியுங் கோவுங்
காண்டமுங்= கனவிர தமுஞ்சீவனீயமு மலரு= நாரமு
மமுதமுநீரெனலாகும்.
= = = = =
*"வனமுந்தகடியும்" எனவும் பாடம்.

மேகத்தின் பெயர் = மாரியுமழையு மஞ்சு மாசுங்= காரும் புயலுங்
கனமுங் கொண்டலும், வானு †ந்தாராதரமுமையுஞ் சீதமுஞ்,
சீவதமுஞ்செல்லுங்குயினுஞ்சீ மூதமு,
மெழிலியுங்கொண்மூவும்விளைவு முகிலும், விண்ணுங்
கந்தரமுஞ்
சலதரமும் விசும்பு = மங்குலு மிளையுமாலுமம்புதமும் = விண்டுவு
மென்றிவை மேகப்பெயரே.
= = = = = = =
†"வானும் நாரதமும்" எனவும் பாடம்.

மற்றுமேகத்தின் பெயர் = முதிரம் பயோதரம் கதம்பமெய்ப்
பிரம்=
அப்பிரமாயமு மப் பெயர்க் குரித்தே.

இடியேற்றின் பெயர் = ‡ வெடியொலியுருமுகோ விண்ணேறசனி,
செல்லிகு ளியிடியேறு மடங்கலு மாகும்.
= = = = = = = =
‡ "இருள் சதகோடி சென்மடங்கலுமிடியே" எனவும் பாடம்.

மின்னலின் பெயர் = சம்பைவித்துருசபலை தடித்துச்= சஞ்சலை கனருசி தடியொளி மின்னல்.

மழையின் பெயர் = மாரி வானம் வருட மழையெனல்

பெருமழையின் பெயர் = ஆசாரம் பெருமழையாகுமென்ப.

விடாமழையின் பெயர் = சோனையும் பனித்தலும் விடாது சொரிதல்

தலைப்பெய்மழையின் பெயர் – தளியுறையாலி தலையல் தலைப்பெயல்.

மற்றும் தலைப்பெய்மழையின் பெயர் = *தலைப்பெயல் சோதகமும்
= = = = = =
* "துளியின்பெயரே சோதகமாகும்" எனவும்பாடம்.

ஆலாங்கட்டியின் பெயர் = ஆலிகனோ பலமாலாங்கட்டி.

மற்றும் ஆலாங்கட்டியின் பெயர் = கரகமுமாகுமென்மனார் புலவர்

மழைத்துவலையின் பெயர் = சிதரம் பிதிரே சீகரஞ்சிதரே= தூவல்து மிதந்திவலையுந் துவலை= துவலையின்பெயரெனச் சொல்லலாகும்

மழைவிடலின் பெயர் = தூறலுந்தலையலுஞ் சோதகமுமழைவிடல்

ஏழுமேகவகைப் பெயர் = சம்வர்த்தமாவர்த்தம் புட்கலா வர்த்தஞ், சங்காரித்தந் துரோணங் காளமுகி, நீல வருணமேழ் மேகப் பெயரே.

அவற்றுள்= எழுமழைவகைப் பெயர் = மணிநீர் பொன்பூ மண்கற்றீயென், றெழுவகை மேகம் பொழிமாரி யேழே

வருணன் பெயர் = சலபதி பாச தரனதிகேள்வன்= வருபுனற்செல்வன் வருணன்பெயரே.

வெள்ளத்தின் பெயர் = பிரளய நீத்தம் வாரி வெள்ளம்.

மற்றும் வெள்ளத்தின் பெயர் = ஓதமும் பெருகுமாகலு முரித்தே.

பனியின் பெயர் = இமமுந் துகினமஞ்சுநீகாரமும் = பனியின் பெயரே மந்தமும் பகரும்.

நிறைபுனலின் பெயர் = வழாறும் பிராறும் வாரியு நிறைபுனல்.

நீந்துபுனலின் பெயர் = அகாத மென்பது நீந்து புனலே.

தெளிந்தநீரின் பெயர் = சற்சல மென்பது தெளிந்தநீரே.

கலங்கனீரின் பெயர் = ஆவிலங்கலுழி யுடம்பை கலங்கற்புனல்.

நீரோட்டத்தின் பெயர் = கோலமென்பது கொடுநீ ரோட்டம்.

நீர்த்திரையின் பெயர் = அறலுந்தரங்கமு மலையுங்கல்
லோலமும்,
புனலின்றிரைக்குப் பொதுப்பெயராகும்.

மற்றும் நீர்த்திரையின் பெயர் = சிகரமென்பதுந்திரையின் பொதுவே.

நீர்க்குமிழியின் பெயர் = கொப்புண்மொக்குள் புற்புதங்குமிழி.

ஆழநீரின் பெயர் = அழுந்துங்குண்டுங் கயமு மாழநீர்.

நீர்ச்சுழியின் பெயர் = உந்தியுஞ்சுரியலு நீர்ச்சுழியாகும்.

நுரையின் பெயர் = பேனமும் பேவுநுரையின் பெயரே.

பரிவேடத்தின் பெயர் = ஊர்கோள் வட்ட மொளிகொண் மண்டிலம், பரிதி விசயம் பரிவேட மாகும்.

இந்திரவில்லின் பெயர் = வானவில்லிந்திர வில்லென வைப்பர்.

காமகாண்டத்தின் பெயர் = இரட்டைவில் காம காண்டமாகும்.

இருளின் பெயர் = அல்லுந் திமிரங்கருளே கருவரி = கச்சள மந்த தாரந் துவாந்த = நத்தந் தம்மொடு துணங்கற லிருளே.

பதினெண்கணத்தின் பெயர் = அமரர் சித்த ரசுரர் தைத்தியர்
கருடர் கின்னரர் நிருதர் கிம்புருடர் = காந்தருவ ரியக்கர்
விஞ்சையர் பூதர் = பசாசர் அந்தரர் முனிவ ருரக=
ராகாய வாசியர் போகபூ மியரெனப் = பாகுபட்டன பதினெண்
கணமே.

முதலாவதுவான்வகை முற்றிற்று.
ஆக சூத்திரம் .
= = = = = = = = = = = = = = = = = = = = = =

## இரண்டாவது : வானவர் வகை (= )

கணபதியின் பெயர் = ஏகதந்த னிறைமகனேரம்ப = னாகு
வாகனனைங்கரன் முக்கணன் = பார்ப்பதி புதல்வன் பாசாங்
குசதர = னத்தி முகத்தோ னரிதிரு மருகன் =
றந்திக் கடவு டான மும்மதன் = கங்கைசுதன்விநாயகன்
கணபதிபெயரே.

சிவன் பெயர் = அரன்சிவ னரூபி யனந்த னுருத்திரன் = பரன்கறை
மிடற்றோன் பார்ப்பதி கொழுநன் = கால காலன் பசுபதி கண்ணுத
= றாணு வெண்குணன் சங்கரனந்தி = யாதி சசிதர னைம்முகன்
பினாகி = சோதி சம்பு சூலி பிஞ்ஞகன் = முக்கணன் விடை யோன்
முன்னவன் பிறப்பிலி = நக்கன் சடையோ னாயகன் சயம்பு = காம
நாசன் பிதாகருணாலயன் = றேவ தேவன் றிரிபு ராந்தகன் =
மானிட மேந்தி பேயோடாடி =
முத்தன் முதல்வன் சுத்தன்யோகி = வேத முதல்வ னாரி பாக =
னாலமர் கடவுள் பவனேயநாதி = நீலகண்ட னிருத்தன்பூ தேசன் =
கங்கா தரன்மழுவாளி கபாலி = யங்கணன் கைலையாளிகங்
காள = னக்கர வார்த்தோ னழலாடி தற்பர = னித்தனிமல னீறணி
கடவுள் = யானை யுரித்தோ னமலனானந்தன் = வாமதேவன்
மகேச்சுரன் சதாசிவன் = றிரியம்பகன் விமலன் சந்திர சேகரன் =
மாலயற் கரியோ னாதனெண் டோளன் = ஞான மூர்த்தி நம்பன்
பகவன் = வாமன் கிரீசன் வரனு மாபதி =
பூதபதி புண்ணியன் புலித்தோ லுடையோன் = மாதேவன்
கொன்றை மாலையன் பித்த =
னீச்சுர னாச மில்லோனிறைவன் = பாசுபதன் குன்ற வில்லிபாண்
டரங்க = னீசன் பரமனு மெம்பிரான் பெயரே.

மற்றுஞ்சிவன் பெயர் = அந்தி வண்ணன் காமாரி புராரி =

யந்தகாரிபர்க்கனென் றனந்தமீசன் பெயர்.

சிவனூர்திகொடியின் பெயர் = ஊர்தியுங்கொடியு மிடப மென்று
ரைப்பர்.

சிவன்படையின் பெயர் = பரசுஞ்சூலமும் பினாகவில்லும்படை.

சிவனெண்குணத்தின் பெயர் = பவமின்மை யிறவின்மை
பற்றின்மை பெயரின்மை
= உவமை யின்மையொரு வினை யின்மை = குறைவிலறி
வுடைமை கோத்திர மின்மையென் = றிறைவனிடத்திலெண்குண
மிவையே.

சிவனைம்முகத்தின் பெயர் = ஈசானந் தற்புருட மகோரம் வாமஞ்=
சத்தியோ சாதஞ் சங்கர னைம்முகம்

சிவனிருப்புமுதலியவகைப் பெயர் = இருப்பதுகைலை தரிப்பது
கங்கை= முடிப்பது கொன்றை யுடுப்பது சருமம்

சிவபதநான்கின் பெயர் = தானாளுல கிருத்தறன் பாடிருத்தல்=
தானாம் பதம்பெற றானாகுதலென = நாலே சிவன்ற னல்லருட்
பதமே.

சிவபூசையியல்பின் பெயர் = சரியை கிரியையோக ஞானமென் =
றிவையொரு நான்குஞ் சிவபூசை யியல்பே.

சிவாகமநூற்பயன் பெயர் = தர்மார்த்த காமமோக் கஞ்சிவாகமம்.

நந்தியின் பெயர் = எருது விடையே றிடபம் புங்கவ, மிறைவர
கனஞ்சிவ. கணமுத னந்தி.

சிவனழித்தமுப்புரத்தின் பெயர் = பொன்னினும் வெள்ளியினும்
புக லிரும்பினு= மன்னமும் மதில்சிவ னழித்தமுப் புரமே

உமையின் பெயர் = ஆரியை காமக் கோட்டி யம்பிகை = நாரி
சத்தி நாயகி கௌரி = தேவி சாம்பவி தருமச் செல்வி= மலைமகள்
சங்கரிமாதா வையை = பரையே யுருத்திரை பார்ப்பதி யந்தரி =
நீலி கன்னி நிமலி குமரி = வேத முதல்வி விமலைமுக் கண்ணி =
யமலை யிமய வதியயி ராணி = சமய முதல்விதற்பரை
மனோன்மணி = சிவயுமை யம்மை திருநாம மென்ப.

மற்று முமையின் பெயர் = அரனிடத்தவள்சக மீன்றவள் பவானியெ
மதன்னை புண்ணிய முதல்வி பெயரே

கங்கையின் பெயர் = வரநதி சுரநதி மந்தா கினியுமை= கரநதி தசமுக நதிகங் காநதி = சிரநதி சிவன் சடை சேர்தெய்வ நதியே

முப்பத்திரண்ட றத்தின் பெயர் = ஆதுலர்சாலை யோதுவார்க் குணவறு = சமயத்தோர்க்குண்டி பசுவிற்கு வாயுறை = சிறைச்சோ றைய நடைதின் பண்ட = மறவைச் சோறு மகப்பெறு வித்தன் = மகவு வளர்த்தன் மகப்பால்வார்த்த = லறவைப்பிணஞ்சுடுத லறவைத்தூரியஞ் = சுண்ண நோய் மருந்து வண்ணார்நாவிதர் = கண்ணாடி காதோலை கண்மருந்து தலைக்கெண்ணெய்= பெண்போக மற்றும் பிறர்துயர் காத்த = றண்ணீர்ப் பந்தர் மடந்தடக் காவே= யாவுரிஞ்சுதறி விலங்கிற் குணவோ = டேறு விடுத்தல் விலைகொடுத் துயிர்விடுத்த = றன்னிலை யுயர்ந்தகன்னிகா தான= மிந்நான் கெட்டு மிறைவி செய் தருமம்.

அறுமுகக்கடவுள் பெயர் = குமரன் றெய்வ குஞ்சரி மணாளன் = சிலம்பன் முருகன் சேயே செவ்வேள் = கடம்பன் சாமி கார்த்திகேயன் = சேந்தன் குறிஞ்சிக் கிழவன் செட்டி = காங்கேயன் கௌரி மைந்தன் கந்தன் வேலன் வள்ளி கேள்வன் விசாகன் =
றாரு காரி குகன் சரவணபவன் = மயில்வாகனனே
வன்னிப்பூக்குமர, னாறிரு கரத்தோ னரிதிரு மருகன் = குழகன் கங்கை மைந்தன் குன்றெறிந்தோ = னறு மீன்காதல னசுரற் றடிந்தோன், சேவலங் கொடியோன் றேவசேனாபதி = பாவதி யாசான் கலையறி புலவ = னரன்பமன் யானை முகவற்கிளையோ = னினைய வறுமுகக் கடவுள் பெயரே.

அறுமுகக்கடவுளூர்தியின் பெயர் = ஆடும்யானையு மயிலு மூர்தி.

அறுமுகக்கடவுள்படைகொடியின் பெயர் =
அயில்வே லரும்படை கொடிசேவ லாகும்.

மாலையின் பெயர் = நீபமுஞ் செச்சையு மாலையாகும்.

வீரபத்திரன் பெயர் = உக்கிர னழற்கண்வந்தோ னுமைமகன் =

முக்கணன் றக்கன் வேள்வி முனிந்தோ = னேக வீரியன் சடாதரன் வில்லி = யீசன் மைந்தன் கணபதிக் கிளையோ = னாயிரமுகத்தோன் சிம்பு ளானோன் = பத்திரை கேள்வன் வீரபத் திரன் பெயர்.

வைரவன் பெயர் = கஞ்சுகன் மூவிலை வேலோன் காரி = முத்தன் கேத்திர பாலனிரு வாணி = சித்தன் ஞாளியூர்தி கபாலி = வடுக னின்னவை வயிரவன் பெயரே.

வைரவனூர்திபடையின் பெயர் = வைரவ னூர்தி ஞமலிசூலம் படை.

ஐயனார் பெயர் = சாத வாகனன் கோழிக்கொடியோன் = சாத்தன் வெள்ளை யானை வாகனன் = காரிசெண் டாயுதன் கடனிற வண்ணன் = பூரணை கேள்வன் புட்கலை மணாள = னாரிய னறத்தைக் காப்போன் யோகி = யரிகர புத்திர னையன் பெயரே.

ஐயனாரூர்திகொடியின் பெயர் = காரி யூர்தி காரிக் குதிரை = கோழிக்கொடியு மாகுமென்ப.

மாகாளியின் பெயர் = குமரி சண்டிகை குண்டலி நீலி, வலவை பைரவி கௌமாரி மாதரி = மாயை வீரி மதங்கி யாமளை = சூரிவேதாளி கங்காளி யோகினி = சூலிசாமுண்டி தாருகாரி = யாரியைதேவி வல்லணங்கையை யலகைக் கொடியாண் மாலினி முக்கண்ணி = பதுமையெண்டோளி பத்திரி யாரணி = யரிளி யூர்திமா காளி பெயரே.

மாகாளி யூர்தி கொடிபடையின் பெயர் = ஊர்திசிங்க முயர்கொடி யலகை= சூலம் படையெனச் சொல்லப்படுமே.

இடாகினியின் பெயர் = வஞ்சனி மாயவள் வலவையிடாகினி.

யோகினியின் பெயர் = சன்மினிசூர்மகள் யோகினிபெயரே

ஊர்திகொடியின் பெயர் = பேய்கொடி வாகன மோரியாகும்.

துர்க்கையின் பெயர் = அந்தரி மகிடற் காய்ந்தாளையை= விந்தயம் பணத்தி விசயையெண்டோளி = மாலுக்கிளையாள்பகவதிசயமகள்= பாலைக்கிழத்தி

வீரச்செல்வி= கௌரிகாத்தியாயனி சக்கராயுதி, யமரி குமரி யருங்கலை யூர்தி=
சமரி கன்னி சயைவாட் படையாள்= சூலி யாரியை நீலி சண்டிகை, வெற்றிமேதித் தலைமிசை நின்றாள், கொற்றவை நாராயணி துர்க்கை பெயரே.

துர்க்கையின் படைவாகனத்தின் பெயர் = கைவாள் படை வாகனங் கலையாகும்

காடுகாள் பெயர் = காடுகாண் மோடி காரிதாய் கொற்றி= மாரிசூரி வடுகிமூ தணங்கே.

சத்தமாதர்கள் பெயர் = பிரமாணி நாராயணி மாயேசுரி= கௌமாரி வராகி யுருத்திராணி = யிந்திராணியென் றெழுவகைமாதர்.

சத்தமாதர்களூர்தியின் பெயர் = அன்னமேறு விடையே யலகை, மஞ்ஞை களிறுகலுழனு மூர்தி.

சத்தமாதர்கள் படையின் பெயர் = மறைதண்டு சூலம் பினாகமெஃகம்= வச்சிரமாழிவன்படை யாகும்.

விட்டுணுவின் பெயர் = மாதவனெடியோன் மாயவன் சநார்த்தனன்=
சீதரன் பதும நாபன் றிருமால்= கொண்டல் வண்ணன் கோவிந்தன் முகுந்தன் =
விண்டுவன மாலி வாமன் வாமனன்= றிரிவிக்கிரமன் றிருமறு மார்பன்=
கேசவன் வரதன் முராரி யனந்தன்= காவற் கடவுள் காகுத்த னச்சுத=
னரவணைச் செல்வ னறிதுயி லமர்ந்தோன்= சக்கராயுதனே சார்ங்க பாணி=
தண்கடல் வண்ணன் சலச விலோசன= னுலகினை யளந்தோ னுலக முண்டோன்=
படிமுழுதிடந்தோ னலகைமுலை யுண்டோன்= றாமோதரனே சௌரிமதுசூதன=
னாதி பீதாம்பரனே வராகன்= றிருமகள் பூமி கொழுநன் கண்ண= னுவண
வூர்தி யுவண முயர்ந்தோன்= பஞ்சாயுதன் பரந்தாமன் பகவன்=
பூவை வண்ணன் புணரியிற் றுயின்றோன்= பிரமன் றந்தை

பின்னை கேள்வன்=
சங்கமேந்தி நாரசிங்க= னிருடிகேசன் றசவவதாரன்=
குறளனெடுமால் வலவன் கரியோ= னுந்தி பூத்தோ னந்த
கோபாலன்=
வாசு தேவன் றுளபமௌவிய= னனந்த சயனன் வைகுந்த நாத=
னாயிரம் பெயரோனரிமா லென்றிவை= நாராயணன் றிருநாம
மாகும்.

மற்றும்= அருந்தமனென்பது மாங்கவன் பெயரே.

விட்டுணுவினூர்திகொடியின் பெயர் =
ஊர்திகருடனொண்கொடியு மதுவே.

விட்டுணுவின் பஞ்சாயுதத்தின் பெயர் = சக்கரந் தனுவா டண்டு
சங்கம்= பற்றலர் மேல்விடும் பஞ்சாயுதமே.

அவற்றுள் சக்கரத்தின் பெயர் = சக்கரஞ் சுதரிசனம்

தனுவின் பெயர் = தனுவேசார்ங்கம்

வாளின் பெயர் = சயவாணாந்தகம்

தண்டின் பெயர் = தண்டுகௌ மோதகி.

சங்கின் பெயர் = சங்கு பாஞ்ச சன்னியமாகும்.

அரியின் தசாவதாரத்தின் பெயர் = மச்சங் கூர்மம்
வராகநரசிங்கம்= வாமனன் பரசு ராமனிராமன் = பலபத்திரனே
கண்ணண்வரு கற்கியென் = றிவையொரு பத்து மரியவ தாரம்.

அன்றியு மூவைந்தவதாரத்தின் பெயர் = சனகன் சனந்தனன்
சனாதன் சனற்குமார = னரநாராயணன் கபில னிடப= னாரத
னயக்கிரீவன் றத்தாத் திரேயன் = மோகினி வேள்வியின் பதியே
வியாதன்= றன்வந்திரியே பௌத்த னென்றாங்= கின்னமூ வைந்து
மரியவதாரம்.

வெற்றிக்கலப்பைப்படை யோனொழியப், புத்த னென்று
புகலப்படுமே.

திருமகளின் பெயர் = பொருளின் செல்வி பொறியரிப் பிரியை =

மலர்மக ளிந்திரை மாவே யிலக்குமி = கமலை யாக்கம் பதுமைசீதேவி = தாக்கணங் கிளையா டண்கடற் பிறந்தாண் = மாறிரு மான்பினண் மாமறைத் தலைவி = செய்யாள் பூமக டிருமகள் பெயரே.

பலபத்திரன் பெயர் = இரேவதி கொழுநன் குண்டலனுரோகணி = தநய னீலாம்பரனலாயுத = னச்சுதன் முன்னோன் காமபால = னநந்தன் வெள்ளை காளிந்தி மர்த்தனன் = பனந்துசன் முசலி கரந்துகி லுடையன் = பலதே வன்பலபத்திரன் பெயரே

பலபத்திரன்படை கொடியின் பெயர் = படையே கலப்பை கொடிபனையாகும்

காமன் பெயர் = மான்மகன் மதனன் மகரக்கொடியோன் = வேனிலாளி வில்வேள் வசந்த = னங்கச னநங்க னைங்கணைக் கிழவன் = றிங்கட்குடையோன் றென்றற் றேரோன் = வனசன் வில்லி மோகன் மாமலர்க் கணையோன் = மதிசகனிரதி காந்தன் மாரன் = மனோபவன் மனோசன் மனோபுமனமதன் = றிருமகண் மைந்தன் சம்பர சூதன = னுருவிலிகடன்முர சோன்கைதைச் சுரிகையன் = கந்தர்ப்பன் சித்தசன் பூவாளி பூமன் = கருப்பு வில்லி காமன்பெயரே.

காமனூர்தி கொடியின் பெயர் = வாகனந்தென்றன் மகரங்கொடியே

காமன்வில்கணையின் பெயர் = கழையேவில்லுக் கணைமலரைந்தே

காமனைங்கணையின் பெயர் = வனசஞ் சூதமசோக முல்லை = குவளை காமன் கொலுமைங்கணையே

அவற்றின் செயலின் பெயர் = உன்மத்த மதனமோகனஞ் சந்தாபம் =
வசீகரணம்மிவை மதன்கணைச்செயலே

அவற்றினவத்தையின் பெயர் = சுப்பிரயோகமும் விப்பிரயோகமுஞ் =
சோகமு மோகமு மரணமு மென்றிவை, யாகு மலர்க்கனை யைந்திவைத்தை.

அவற்றுள் = சுப்பிரயோகஞ் சொல்லாநினைவும்

விப்பிரயோகம் வெய்துயிர்த் திரங்கல்

சோகம் வெதுப்புத் துய்ப்பன தெவிட்டல்

மோக மழுங்கலு மொழிபல பிதற்றலும்

மரண மயர்ப்பு மயக்கமு மாகும்

பிரமன் பெயர் = அந்தணன் மலரோ னயனான் முகத்தோ = னுந்தியில் வந்தோனோதிம வாகனன் = பாரதி கொழுநன் படைப்போன்பகவனாரண னிரணிய கருப்பன் விரிஞ்சன் = வேதா விதாதா விதிசதா நந்தன் = றாதா பிதாமகன் சம்பு மான் மக = னெண்கணன் கமல யோனி பிரசாபதி = வேதன் கம்மிறை சூதன் பரமேட்டி =
திசைமுகன் வானவர்முதுவன் போதன் = வரனே குரவன் மண்பொதுத்தந்தை =
யநந்தன் ஞான னன்ன முயர்த்தோ = னிறைவன் மறையோன் பிரமன் பெயரே.

, பிரமனூர்திபடைகொடியின் பெயர் =
அன்னமூர்தி யரும்படை பாச =
மன்னிய கதைபடை கொடிமறை யாகும்.

நாமகளின் பெயர் =
பாரதி துய்யாள் பனுவ லாட்டி = வேதமுதல்வி பிராமி விமலை =
வாணி வெள்ளை நிறத்தினள் வாக்கா = ணான்முகன்
கிழத்தி ஞானத் திறைவி = காயத் திரியே சாவித் திரியே =
நற்பா மடந்தை நன்னூன் மடந்தை = யுலகமாதா நாமக ளிசைமகள்,
கலைமகள் வெண்டாம மரைமகள் கண்ணா =
டொலையா வென்னுயிர்த் துணைவிபெயரே.

நாமகளூர்தியின் பெயர் =
ஊர்தி பூரமாகுமென்ப.

இந்திரன் பெயர் = அமரா வதியோ னாயிரங்கண்ணன் = சதமகன் கோபதி போகிசங் கிரந்தனன் = பாகசாதனன் வச்சிரப் படையோன் = மேகவாகனன் விண்முழுதாளி = வாசவன் மகவான்

வானவன் கௌசிக = னாகண்டலனயி ராவதன்வலாரி =
புருகூதன் சக்கிரன் புரந்தரன் மருத்துவன் = மருதக்கிழவன்
வரைசிற கரிந்தோ = னரிசசி வல்லவன் றிருமலி சுவர்க்கன் =
வேள்வி நாயகன் புலவன் வேந்தன் = புரோகிதன் சுனாசி
கரியவன் புனிதன் = காண்டா வனன்மால் வெள்ளை வாரணன் =
றேவர் வேந்தன் பொன்னகர்ச் செல்வ = னைந்தரு நாத னிந்திரன்
பெயரே.

இந்திரன்றேவி பெயர் = சுந்தரி சசியயிராணிபுலோமசை =
யைந்தருச் செல்வி யிந்திரன்றேவி பெயர்.

இந்திரன்மகன் பெயர் = சயந்த னிந்திரன் றன்மகனாகும்.

இந்திரனகரின் பெயர் = ஆங்கவன் றிருநகரமரா வதியே.

இந்திரயானையின் பெயர் = ஓங்கிய வூர்தி வெள்ளையயி
ராவதம்.

இந்திரன் குதிரையின் பெயர் = மெச்சிய பரிமா வுச்சைச்சிரவம்.

இந்திரன்படை கொடியின் பெயர் = வச்சிரம் படையே வண்
கொடி யிடியாம்.

இந்திரன் மண்டபத்தின் பெயர் = மண்டபஞ் சயந்தம்.

, இந்திரன்மாளிகையின் பெயர் = மாளிகை வசந்தம்.

இந்திரன்பண்டாரத்தின் பெயர் = பண்டாரப் பெயர் பகரிற்
சுதன்மம்

, இந்திரனந்தன வனத்தின் பெயர் = அந்தண் கற்பகச் சோலை
நந்தனவனம்.

இந்திரன் சேமநிதிப் பெயர் = சேமநவநிதி.

இந்திரன்கோவின் பெயர் = கோக்காமதேனு.

இந்திரனுணவின் பெயர் = உணவதமுதம்.

புனைவதின் பெயர் = புனைவதுகற்பகமலர்.

அணிவதின் பெயர் = அணிவது சிந்தாமணி சூளாமணி.

நாடகத்தரம்பையர் பெயர் = மேனகையரம்பையுருப்பசி
திலோத்தமை = யான நால்வரு நாடகத் தரம்பையர்.

தேவர்பொதுப் பெயர் = வானவ ரமுதர் வரர்புத்தேளிர் =
மேலவரிமையவர் விண்ணவர் கடவுள = ரமரர் புங்கவரைய
ரிலேகர் = விபுதர் தீர்த்த ரசுரர்க்கமித்திர =
ருயர்நிலை யோர்சுர ரும்பர் புலவ = ரண்டர் முதல்வ ராதித்தர்
சுவர்க்கர் =
பொன்னுல குடையோர் தேவர் பொதுப் பெயர்.

முப்பத்துமுத்தேவர் பெயர் = ஆதித்தர் பன்னிருவ
ரச்சுவினிகளிருவ = ரீசர் பதினொருவரெண்மர் வசுக்க = ளாக
முப்பத்து மூவர் தம்பெயரே.

அவற்றுள். ஆதித்தர் பன்னிருவர் பெயர் = வைகத்தன் விவச்சு
தன் வாசன்மார்த் தாண்டன் = பாற்கர னிரவி யுலோகப் பிரகாச =
னுலோக சாட்சி திரிவிக்கிரம =
னாதித்தன் றிவாகரன் அங்கிச மாலி = யாகச் சூரியர் பன்னிரண்
டென்ப.

உருத்திரர் பதினொருவர் பெயர் = மாதேவனரனே
யுருத்திரன்சங்கர = னீல லோகித னீசானன் விசயன் = வீம தேவன்
பவோற்பவன்கபாலி = சௌமிய னேகா தசருருத் திரர் பெயர்.

அட்டவசுக்கள் பெயர் = தரன்றுருவன் சோம னாபச் சைவ = னனல
னணிலன் பிரத்தியூசன் = பிரபாச னட்ட வசுக்கள் பெயரே.

அச்சுவினிகளிருவர் பெயர் = அச்சுவினிதேவ ரிருவர்தம் பெயரே =
யாக முப்பத்து மூவர்தம் பெயரே.

கடவுளர்பொதுப் பெயர் = பண்ணவர் பகவர் தீர்த்தர் பட்டாரகர் =
புங்கவ ரென்பவுங்கடவுளர் பொதுப் பெயர்.

தெய்வத்தின் பெயர் = சூரே யணங்கு கடவு டெய்வதந் =
தேவுபுத்தேளியவு டெய்வமாகும்.

சுரர்மகளிர் பெயர் = அரமகளிர் சூரரமகளி ரரம்பையர் = சுரர்
மகளிராமெனச் சொல்லப் பெறுமே.

தெய்வப்பெண் பெயர் = அணங்குழூர் வஞ்சனை மாயவள் கன்னி = யிணங்கிய தெய்வப் பெண்பெய ராகும்.

மூதேவியின் பெயர் = கழுதை யூர்தி காக்கைக் கொடியாண் = முகடிதௌவை கலதி மூதேவி.

மற்றுமூதேவியின் பெயர் = சீர்கேடி கேட்டைகெடலணங் கேகவேணி சேட்டை யென்ன விளம்புவர்.

மூதேவியூர்தி படை கொடியின் பெயர் = வாகனங் கழுதைவன் படை துடைப்பங் = காகங் கொடியெனக் கழறல் வேண்டும்.

தருமதேவதையின் பெயர் = மரகத வல்லி பூகநிழலினள் = பரம சுந்தரியியக்கி பகவதி = யருகனைத் தரித்தா ளறத்தின் செல்வி = தருமதேவதை யம்பாலிகைபெயரே.

அருகன் பெயர் = புண்ணிய னெண்குணன் பொன்னெயினாதன் = பண்ணவன் பட்டாரகனே முனைவ = னசோகமர் கடவுள் பகவன் முக்குடையோ = னறவாழி வேந்த னரியணைச் செல்வன் = பூமிசை நடந்தோன் வரதன் சினேந்திர = னான பிறவு மருகன் பெயரே.

அருகனூர்தி படையின் பெயர் = அருக னூர்தி யம்புயம் படையே.

கொடியின் பெயர் = நாடகக் காட்சி ஞானசீ லங்கொடி.

புத்தன் பெயர் = பார்மிசை நடந்தோன் பகவன் புங்கவன் = றருமன் சாந்தன் முனைவன் வாமன் = புனிதன் சினன்வர னறிவன் பிடகன் = போதி வேந்தன் புத்தன் பெயரே.

குபேரன் பெயரே = இருநிதிக் கிழவ னியக்கர் வேந்தன் = வடதிசைத்தலைவ னரவாகனனே = யளகை யாளி யதிதனச் செல்வன் = சீரகத் தாரோன் வைச்சிரவணனே = யரனுடைத்தோழன் கின்னரர் பிரானே = மரகதன் புட்பக வூர்தி பிங்கலன் =
மந்திரி தனபதி குபேரன் றன் பெயர்.

குபேரன்வாகனத்தின் பெயர் = நரவா கனமும் புட்பகத் தேரு = மவன்வா கனமா மறியுங்காலே.

இயமன் பெயர் = இயமனரி யந்தகன் றென்றிசைக் கிழவன் = சமனேசண்டன் சண்பன்றருமன் = நமனேமறலி தண்ட தரனே = சைமினி நகரோன் வைதரணிநதியோன் = செங்கோற்கடவு ணசவ னடுவ = னிங்கிவை யமன் பெயர் கூற்று மிசைக்கும்.

யமனூர்தி படையின் பெயர் = எருமையூர்தி யெறியுமொண்படை = தண்டு பாசந் தானா கும்மே.

காலன் பெயர் = சண்டன்மறலி கூற்றுச் சமனே = வந்த மடங்கல் கான் மறலு மிசைக்கும்.

காலன்படையின் பெயர் = துணிக்கும் வெம்படை கணிச்சி யாகும்.

அசுரர் பெயர் = தானவர் அவுணர் தயித்தியர் கண்டகர் = மேனிகரப் போர்தகுவர்கார் வண்ணர் = தேவர்பகைவர்திதி புதல்வர சுரர்.

மாவலியின் பெயர் = வயிரோ சனனேமாவலி யவுணன்

நிருதர் பெயர் = நிசாசரர் சாலகடங்கடர் நிருதர்.

அரக்கர் பெயர் = அரக்கரிராக்கதர்யாது தானவர் = நிசாசரர் பிசிதாசனரென நிகழ்த்துப

கந்தருவர் பெயர் = கந்தருவரியக்கர் யாழோர் காந்தருவர் = தந்திரர் கின்னர ரென்னச் சாற்றுவர்.

வித்தியாதரர் பெயர் = விஞ்சையர் கேசரர் வித்தியா தரர் பெயர்.

வித்தியாதரரிடத்தின் பெயர் = சேணியும் விஞ்சைப் பதியுஞ் சேடியும் = யாணர் நகரும் வித்தியா தரரிடம்.

பூதத்தின் பெயர் = சாதகம் பாரிடங் குறள்கூளிசாரதம் = மகோதரம் கிருத்திமங்கணம்பூதப் பெயர்.

பேயின் பெயர் = கடிவே தாளங் கழுது கூளி = வெறியே யலகை பிசாசுமண்ணை = மயலே சோகுமருளே வியந்தரம் = பிரேத மழனே குணங்கு குணபாசி = பாசஞ் சாவு சவமேயள்ளை = குணபமும் பிணமும் பேய் பெயர் கூறும்

சூரியன் பெயர் = இரவி யினன்மணி யென்றூழ் செஞ்சுடர் =
பரிதிதேரோ னெல்லோன் பானு = சண்ட னருக்கன் றபன னாதவ
= னண்ட யோனி யாயிரங் கதிரோன் = கனலி திவாகரன்
கனலோன் பாற்கர = னனலியொளியோ னலரிமார்த் தாண்டன் =
றினகரன் செங்கதி ரரிதிமி ராரி = யருணன் சூரன் ஞாயிறு சவிதா
=
பகலேபர்க்கன் வெயிலோ னாதித்தன் = விரிச்சிகன் விரோசனன்
விகர்த்தனன் மித்திரன் = வெய்யோன் கதிரோன் வெஞ்சுடர்
சோதி =
பகலவ னெல்லை பதங்கனாதப = னழலவ னுதய னிருள்வலி
பொழுது =
பகவன் சான்றோன் வேந்தன் றாபநன் = றரணி யெல்லி
சாயாபதியே =
பகலோன் விண்மணி பனிப்பகை கதிரவன் = சுடரோன் மாலி
சூரியன்பெயரே

சூரியமண்டிலத்தின் பெயர் =
விசயமென்பதுவெங்கதிர்மண்டிலம்.

சூரியகிரகணத்தின் பெயர் = கரமேதீவிரங் கோகிரணங்கதிர்

வெயிலின் பெயர் = கோடை யென்றூ ழெல்லொளி வெயிலெனல்

மற்றும் வெயிலின் பெயர் = ஆதவமென்பது மப் பெயர்க்குரித்தே.

உதயத்தின் பெயர் = விடியல்வைகறை புலரி யுதயம்.

கழிவுநாளின் பெயர் = கழிவுநாளே காலி வைகல்.

அந்தியின் பெயர் = சந்தி மாலை சாய மென்றிவை =
யந்தியின்பெயர்கோ தூழியுமாகும்

நடுப்பகலின் பெயர் = மத்தி யான நண்பக னடுப்பகல்

மற்றும்நடுப்பகலின் பெயர் = உச்சியுமுருமமு மப் பெயர்க்
குரித்தே.

சாமத்தின் பெயர் = யாம மென்பது சாமமாகும்

பகலின் பெயர் = எல்லுத் திவசந் தினந்திவா வும்பகல்

அருக்கனூர்தியின் பெயர் = தனிக்காற் பொற்றே ரருக்க னூர்தி

அருக்கன்றேர்ப் புரவியின் பெயர் = ஒரேழ் புரவி
யுடையனவதற்கே.

அருக்கன்றேர்ப் பாகன் பெயர் = ஆதித்தன் பாகனருணனாகும்.

சந்திரன் பெயர் = இந்து சசியிம கிரணன்றண்சுட = ருடுபதி தாரா
பதியே யம்புலி = யமுதககதிரோன் சீதன் குரங்கி = விதுநிலவு
வல்லோன் வேந்தன் றண்ணவன் = கலையோன் மதியே களங்கன்
குபேர = னாலோன் பனிக்கதிர் குமுத சகாய =
னலவன் கலாநிதிநிசாகர நிசாபதி = யிரவோ னிராக் கதிர்
தானவன் சுதாகர = னுடுவேந்தன் பிறைமுயற் கூடு பசுங்கதிர் =
சந்திரன் றிங்கள் சோமன்றன் பெயர்.

நிலவின் பெயர் = நிலவின் பெயர் சந்திரிகை யென்ப.

பிறைநிரம்பலின் பெயர் = கலைபிறை நிரம்பல்கருதுங்காலே

சந்திரனூர்தியின் பெயர் = வெண்மதியூர்தி விமான மாகும்

இரவின் பெயர் = யாம நத்தம் யாமினி வகுஞ்சஞ் = சாமங்
கங்குனிசாநிசி திமிரம் = எல்லியுமல்லு மிரவின் பெயரே.

செவ்வாயின் பெயர் = அழலவன் பௌமனங்கா ரகனே =
குருதிவக்கிரன் குசனே மங்கல = னார லுதிர ணரத்த னறிவ =
னழலே யுலோகிதன் செந்தீ வண்ணன் =
சேயிவை செவ்வாய் சிறந்த பெயரே.

புதன் பெயர் = அருணன் கணக்க னறிஞன் சாமன் =
மதிமகனமேதை மாறேர்ப் பாகன் = புந்தி தூதன் பச்சை புதனே.

வியாழன் பெயர் = ஆசான் மந்திரி யாண்டாளப்பன் பொன் =
பீதகன் சுரகுரு பிரகற்பதி சீவன் = றேவ மந்திரி சித்தன்
கிகண்டிசன் = மேவியவந்தண னரசனும் வியாழன்,

வெள்ளியின் பெயர் = தைத்திய மந்திரி சல்லியன் சைத்தியன் =
மழைக்கோள் சுங்கன் கவிபுகர் பிரசுரன் = பார்க்கவன்
சுக்கிரனொள்ளியோன் பளிங்கு =

காப்பியன் சிதனே யுசனன் வெள்ளியின் பெயர்.

சனியின் பெயர் = கதிர்மக னீலன் சாவகன் காரி = முதுமகன் மேற்கோண் மந்தன் முடவன் = சௌரி பங்கு சந்தில் சனிப் பெயர்.

இராகுவின் பெயர் = தமமே கரும் பாம்பேயிராகுவாகும்.

கேதுவின் பெயர் = செம்பாம் பேசிகி கொடி கேதுவாகும்.

அனந்தன் பெயர் = அனந்தன் = போகவதிக்கிறை சேடன்.

வாரத்தின்யெயர் = வாசரங் கிழமை வாரமாகும்.

அச்சுவினியின் பெயர் = இரலை யைப்பசி யாழேறு தலைநாள் = பரவி மருத்துவ நாளச் சுவனி.

பரணியின் பெயர் = காடு கிழவோன் பூத மடுப்புத் = தாழிபெருஞ் சோறு தருமனாண்முக்கூட்டுப் = போதம்பரணிப் பெயர் தாசியுமாகும்

கார்த்திகையின் பெயர் = அறுமீனங்கி நாளே யளக்க = ரெரிநாளளகிறா னாவிதன் வாணன் = றழலே யாரல் கார்த்திகை தன் பெயர்.

உரோகிணியின் பெயர் = சகடு விமானஞ் சதியே யூற்றா = லயனாள்வைய முரோகிணி யாகும்.

மிருகச்சீடரித்தின் பெயர் = மாழ்கு மான்றலை மார்கழி நரிப்பற = மதிநாண் மும்மீன் பாலை வெய்யோன் = மிருகசீரிடமைந் தானமும் விளம்பும்.

திருவாதிகையின் பெயர் = அரனாள் செங்கை மூதிரை யாதிரை.

புனர்பூசத்தின் பெயர் = அதிதி நாள்கழையாவண மெரியே = புனர் தங்கரும்பிவை புனர்பூசமாகும்.

பூசத்தின் பெயர் = குருநாள் கார்குளங்கொடிறுவண்டு = புணர்தையாகும் பூசநாட்பெயரே.

ஆயிலியத்தின் பெயர் = அரவினாள் கௌவை யாயிலா யிலியம்.

மகத்தின் பெயர் = வேள்விகொடுநுகம வேட்டுவன்வாய்க்கா = லாதியெழுஞ்சனி பிதிர்நாண்மாக = மாசி யெழுவா யெழுஞ்சனி மகப் பெயர்.

பூரத்தின் பெயர் = இடையதெழுஞ்சனி யெலியே தூர்க்கை = பகவதி நாள்கணை நாவிதன் பூரம்.

உத்தரத்தின் பெயர் = பங்கனி கடைய தெழுஞ்சனி பாற்குனி = மானேறு கதிர்நாண் மாரிநாளுத்தரம்.

அத்ததின் பெயர் = கைம்மீன் கைனிகனலி நாளே = யைம்மீன் காமரங் களிறிவை யத்தம்.

சித்திரையின் பெயர் = நெய்மீனறுவை நேர்வான்பயறு = நடுநாடு வட்டாநாளே தச்சன் = றெரியி லின்னவை சித்திரைப்பெயரே.

சோதியின் பெயர் = விளக்கே மரக்கால் வெறுநுகம் வீழ்க்கை = துளக்கங் காற்றி னாளேசோதி

விசாகத்தின் பெயர் = அனிலநாண் முற்றின் முறம்வைகாசி = சுளகுவிசாகத் தொல்பெயராகும்

அனுடத்தின் பெயர் = பனைதேள் பெண்ணை புற்றாளி போந்தை யினையவைமித் திரநாளுமனுடம்

கேட்டையின் பெயர் = துளங்கொளி வல்லாரை வேதி யெரியழல் = கிளந்தவிந்திரனாள் சேட்டையுங் கேட்டை.

மூலத்தின் பெயர் = கொக்கே தேட்கடை குருகுவி லன்றின் = முற்றுமானி யசுரநாண் மூலம்

பூராடத்தின் பெயர் = உடைகுள முற்குளமாரி நீர்வாள் = புகலிற் பூராட நீரும் புகலும்.

உத்திராடத்தின் பெயர் = ஆடி விச்சுவ நாளே கடைக்குள = மோதிய வானியோடுத்திராடப் பெயர்

திருவோணத்தின் பெயர் = சோனைமாயோனாண் முக்கோல் சிரவண = மோணமென்ப வுலக்கையு மாகும்

அவிட்டத்தின் பெயர் = காகப்ஒபுள்ளே வசுக்கணாளே = யாவணி

பறவை யவிட்டப்பெயரே

சதயத்தின் பெயர் = குன்றுவருணனாள் பெருஞ்செக்குச் = சுண்டன் போரிவை சதயநாளே.

பூரட்டாதியின் பெயர் = புரட்டாதி முற்கொழுங்கோலே நாழி = யுரைப்பர் பரதநாள் பூரட்டாதி.

உத்திரட்டாதியின் பெயர் = முரசுபிற் கொழுங்கோன்மன்னனீப = முரைசெயி லறிவனா ளுத்திரட்டாதி.

இரேவதியின் பெயர் = தொழுவே நாவாய் தோணி சூலம் = பஃறி புருடநாள் கடைமீ னிரேவதி.

அருந்ததியின் பெயர் = அருந்ததி சாலி வடமீனாகும்

விடிமீனின் பெயர் = விடிமீன்பெயரே வெடியெனலாகும்

வான்மீனின் பெயர் = வான்மீன் பெயரே புச்சமெனலாகும்

வான்மீனின்பொதுப் பெயர் = சிதமும் பம்முஞ் சுக்கையுங் கணமு = முடுவுந் தாரகையு மொளியும்வான்மீனே.

இராசியின் பெயர் = மேடமு மிடபமு மிதுனமுங் கடகமுஞ் = சிங்கமுங் கன்னியுந் துலாமுந் தேளுந் = தனுவு மகரமுங் கும்பமு மீனமு = மென்னும் பெயரிவை யீராறுள்ளு =
மொப்புடை மிதுன மொழித்தல் லாதன = வப் பெயர்க் கப்பெய ரனைத்துமாகும்.

மிதுனத்தின் பெயர் = யாழே பாடவை யிரட்டை சவைமகள் = விழவுதண்டொடு மிதுனமாமே

இராசியின்பொதுப் பெயர் = இல்லுமோரையும் பவனமுமிராசி.

சூரிய சந்திரர்க்குரிய திசையின் பெயர் = கீழ்த்திசை யருக்கற்கும் வடதிசை சோமற்குஞ் = சார்ச்சியாகச் சாற்றினர் புலவர்

மூவகை வீதியின் பெயர் = மேடவீதி யிடபவீதி = மிதுனவீதி யெனவொருமூன்றே =
அவைதாம்இருசுடர் முதலிய வியங்குநெறியே.

மேடவீதியாவது = இடபஞ் சிங்க முதுனங் கடக = மினைய நான்கு மேடவீதி.

இடபவீதியாவது = மீன மேடங் கன்னி துலாமு = மான விடபவீதிக் கமைந்தன.

மிதுனவீதியாவது = வில்லுமகரங்குடமே விருச்சிகஞ் = சொல்லிய முதுன வீதித் துறையே,

இவற்றுள் = சொன்ன விராசி தொகுத்த மாதங்கண் = மன்னிய கதிர்முதற்கோள்வரு நெறியே.

காலத்தின் பெயர் = போழ்துங் கொன்னும் பொழுதுஞ் செவ்வியும் = ஏல்வையும் வேலையுமமையமுங் காலையுங் = காலும் பதமுங் கால மாகும்

காலநுட்பத்தின் பெயர் = கலையுந் துடியுங் கணமு மாத்திரையும் நொடியும் பிதிரு நுட்பமுந் திட்பமு = நிமிடமுங் கால நுட்பமாகும்

காலவிரைவின் பெயர் = கணமுமாத்திரையுங் காலவிரைவே

நாழிகையின் பெயர் = கடிகை விகலை கன்ன லிருத்தை = பதமே நாழி நாழிகை யாகும்.

நாளின் பெயர் = அல்க றிவாப்பக லானியந் திவச,மேல்வையெல் வைக றினமிவை நாளே.

முன்னைநாளின் பெயர் = நென்னலு நெருநலு முன்னைநாளாகும்.

பின்னைநாளின் பெயர் = பிற்றையும் பின்றையும் பின்னைநாளாகும்.

திதியின் பெயர் = திதியேபக்கம்.

மாதத்தின் பெயர் = மதியே திங்கண் மாதமாகும்.

ஒருகலைவருமதிநாளின் பெயர் = ஒருகலைவருமதிநாள் சினீவாலி.

அமாவாசையின் பெயர். = குகுவமாவாசை.

முதற் பக்கத்தின் பெயர் = பக்கமுதலது நந்தையாகும்.

இரண்டாம் பக்கத்தின் பெயர் = பத்திரையென்பது இரண்டாம் பக்கம்.

மூன்றாம் பக்கத்தின் பெயர் = மூன்றேசயைபக்கம்.

நன்காம் பக்கத்தின் பெயர் = நான்கேயிருத்தை.

ஐந்தாம் பக்கத்தின் பெயர் = ஐந்தாம்பூரணையாகும்.

பூரணையின் பெயர் = அனுமதி பவ்வம் பூரணையிடையுவா.

கார்காலத்தின் பெயர் = நவங்கார்காலம்.

கூதிர்காலத்துக்குங் கொடும்பனிக் காலத்துக்கும் பெயர் = கூதிர் காலமுங் கொடும்பனிக்காலமு = மிரண்டுகாலமுஞ் சிசிரமாகும்.

இளவேனிலின் பெயர் = மாதவம்வசந்த மதுவிள வேனில்.

கொடியவேனிலின் பெயர் = கோடைசமஞ்சுசி கொடிய வேனில்.

பருவமுமிருதுவும் பகரிலொன்றே.

அறுவகைப்பருவகாலப் பெயர் = காரேகூதிர் முன்பனி பின்பனி = சீரிளவேனில் முதுவேனிலென்றாங் = கிருமூன்றுவகைப்பருவந்தானே.

அவைதாம் = ஆவணிமுதாலா வீரிண்டிரண்டாக = மேவிய திங்களெண்ணினர் கொளலே.

அறுவகை யிருதுவின் பெயர் = வசந்தங்கிரீடம் வருடஞ்சரமே = யேமந்தஞ் சிசிரமென விருதுவாறாகும்.

அவைதாம் = சித்திரை முதலாச் சென்மாத மிரண்டா = வைத்தனவெண்ணிக் கொள்கவென்ப.

ஆண்டின் பெயர் = ஆயனஞ்சமை யயனந்தெய்வதம் = வருடம் வற்சர மாண்டின்பெயரே.

வாழ்நாளின் பெயர் = ஆயூகமாயுள் வாழ்நாளென்ப.

உகமுடிவின் பெயர் = ஊழியுமடங்கலு முகமுடிவாகும்.

நால்வகையுகத்தின் பெயர் = கிரேதாதிரேதா துவாபரங்
கலியென, வொருநான் கென்பவுகத்தின் பெயரே.

அமுதின் பெயர் = அமரியுஞ்சுதையு மருந்து மமுதே.

தெய்வவுணவின் பெயர் = சருவும் பலியு நிவேத்தியமு மமுது =
மவியுந் தெய்வ வுணவாகும்மே.

ஆலகாலவிடத்தின் பெயர் = காளகூட மாலகால விடமே.

ஆன்மாவின் பெயர் = பசுவுயிர் சீவன் புற்கலன் சேதன =
னணுவியமான னாதன் செந்து = வாவி பூத னுறவி கூத்த =
னானவின்னவை யான்மாவாகும்.

இரண்டாவது வானவர் வகை முற்றிற்று.
மேற்படி சூத்திரம் .
= = = = =

## மூன்றாவது : ஐயர்வகை.(= )

இருடிகள் பெயர் = முனிவர் மாதவ ரிலிங்கிகண் முனைவர் =
படிவருறுவர் பண்ணவரைய = ரறவோர் தபோதன ரறிஞ ரந்தணர்
= துறவோர் கடிந்தோர் மோனியர் யோகியர் =
கோபங்காய்ந்தோர் நீத்தோர் மெய்யர் = தாபத ரிருடிக
டம்பெயராகும்.

சத்தவிருடிகளின் பெயர் = அகத்தியன் புலத்திய
னங்கிராகௌதமன் =
வசிட்டன் காசிபன் மார்க்கண் டேயனென் =
றிசைத்தவிவர்தாமேழிருடிகளே.

அகத்தியன் பெயர் = குறுமுனிகும்ப யோனி யகத்தியன்.

சைவதவப்பாலோர் பெயர் = மாவிர தியருங் காளா முகரும் =
பாசுபதருஞ் சைவதவப்பாலோர்.

நாரயணசமயத்தார் பெயர் = வைணவர்* பாகவதர் நாரயண சமயத்தோர்.
= = = = =
* "பாகவதர் நாராயண சமயத்தோர்" எனவும் பாடம்.

சமணர் பெயர் = சாவகரருகர் சமண ரமணர்.

சமண்டவத்தோர் பெயர் = ஆசீவகர் தாபதரத்தவத்தோரே.

புத்தர் பெயர் = புத்தர் சாக்கியர் தேரர் பௌத்தர்.

புத்ததவத்தோர் பெயர் = வைத்தசீவக ரத்தவத் தோரே.

.சடைமுடியோர் பெயர் = முனிவர் தாபதர் சடைமுடி யோரே. *

ஒருமையின் பெயர் = ஒருமையென்பதிறையுணர் வாகும்.

ஒன்றென்னும் பெயர் = ஒன்றெனப்படுவது வீடுபெறலே.

இருமையின் பெயர் = இருமையென்பதிம்மையு மறுமையும். *

இருவினையின் பெயர் = இருவினை புண்ணிய பாவமென்ப.

இருவகைத் தோற்றத்தின் பெயர் = இருவகைத் தோற்றஞ் சராசரமென்ப.

இருசுடரின் பெயர் = இருசுடரிரவி மதிய மாகும்.

இருமரபின் பெயர் = இருமரபுதாய்வழி தந்தைவழியென்ப.

இருவகைக்கந்தத்தின் பெயர் = இருவகைக்கந்த நற்கந்தந் துர்க்கந்தம்.

இருவகையறத்தின் பெயர் = இல்லறந் துறவற மிருவகையறமே.

ஒருவகைப்பொருளின் பெயர் = கல்வியுஞ்செல்வமு மிருவகைப் பொருளே.

இருவகைக்கூத்தின் பெயர் = இருவகைக்கூத்து மார்க்கந்தேசிகம்.

மும்மையின் பெயர் = மும்மை யும்மையு மிம்மையு மறுமையும்.

முப்பொறியின் பெயர் = மனமும் வாக்குங் காயமு முப்பொறி.

முச்செயலின் பெயர் = படைத்தலுங் காத்தலு மழித்தலு முச்செயல்

முக்காலத்தின் பெயர் = இறந்த காலமெதிர் கால நிகழ் காலமெனச் = சிறந்த கால மூன்றெனச் செப்புவர்.

மூவிடத்தின் பெயர் = முன்னிலை படர்க்கை தனமை மூவிடம்,

முக்குற்றத்தின் பெயர் = காமம் வெகுளி மயக்கமுக்குற்றம்,

மூவகைமொழியின் பெயர் = பட்டாங்குபேசல் பழித்தல் புகழ்தன் = = முட்டின்றாகு மூவகைமொழியே.

முக்குணத்தின் பெயர் = சாத்துவிக மிராசதந் தாமத முக்குணம்.

அவற்றுள் சாத்து விககுணம் = = ஞானந்தவ மேன்மை நல்லருண் மோனம் = வாய்மை பொறைபுல னடக்கல் சாத்துவிகம்.

இராசதகுணம் = தானந் தவமே தருமம் பேணல் = = ஞானங் கல்வி நலனிவை தெரித = = லீன மில்லா விராசத குணமே.

தாமதகுணம் = நிறைபே ருண்டி நீதிகேடுறக்க = மறலி பொய் சோம் பொழுக்கம் வழுவுதல் = கொலையேவஞ்ச மிவைதா மதகுணம்.

மூவகைத்தானத்தின் பெயர் = முதலிடைகடையென மூவகைத்தானம்.

அவற்றுள் உத்தமதானம் = அறத்தி னீட்டி வரும்பொருள் புறத்துறைக் =
குற்றமூன்று மறுத்தநற் றவர்க்குக் = கொள்கெனப்பணிந்து குறையிரந்தவர்வயி = னுள்ளமுவந் தீவதுத்தம தானம்.

மத்திமதானம் = ஆதுலரந்தக ருறுப்பறைகளாதர் = மாதர்க் கீவதுமத்திமதானம்.

கடைப்படுதானம் = ஆர்வம்புகழே யச்சங்கைம்மாறு = காரணங் கண்ணோட்டங் கடப்பா டென்றிவை = யேழுங் கடைப்படு தான

மென்ப.

மூவகைப்பாவபுண்ணிய வழக்கத்தின் பெயர் = செய்தல் செய்வித்தலுடன் படென்னா = வருமுறைபாவ புண்ணிவழக்கம்.

மூவுலகின் பெயர் = பூமியந்தரஞ் சுவர்க்க மென்ன = வருமூன்றுலகின் பெயரெனவறைவர்.

முச்சுடரின் பெயர் = திங்கள் வெய்யோனக்கினி யென்றிவை = மூந்றுஞ் சுடரெனமொழிகுவர்புலவர்.

திரிகடுகத்தின் பெயர் = திரிகடுகஞ் சுக்குத்திப்பிலி மிளகு.

திரிபலையின் பெயர் = திரிபலை நெல்லி கடுக்காய் தான்றி.

நாற்கதியின் பெயர் = தேவகதிமிருககதி மக்கள் கதியே = மேவு நரககதியெனநாங்கே.

நால்வகைவேதத்தின் பெயர் = இருக்கு வேமெதசுரு வேதஞ் = சாம வேத மதர்வண வேதமென = நால்வகை வேத நாம மாகும்.

நால்வகையிழிச் சொல்லின் பெயர் = குறளை கடுஞ்சொல் பயனில் சொல்லே =
மருள்கொள்சொல்லெனவிழிச்சொ னான்கே.

ஆடவர்நாற்குணத்தின் பெயர் = அறிவு நிறையோர்ப்புக் கடைப்பிடியென்னத் =
தகுமிவையாடவர் தங்குணநான்கே.

பெண்கள்நாற்குணத்தின் பெயர் =
நாணமட மச்சம்பயிர்ப் பென்றின்ன = = மாணிழையவர்க்கு வருங்குணநான்கே.

நால்வகைப் புண்ணியத்தின் பெயர் = தானங்கல்வி தவமே யொழுக்க = நால்வகைப்புண்ணிய நாமமாகும்.

உயிர்தோற்றநால்வகையின் பெயர் =
குடல்போற்பையினுமுட்டை யினுந்தோன்றியும் =
மெய்க்கண்வியர் வினுமிக்கநிலத்தினும் = ஒக்கநால்வகை யுயிர்த்தோற்றம்மே.

நால்வகைப் புலமையின் பெயர் = கவியே கமகன் வாதி வாக்கியென் =
றிவையொரு நான்கும் புலமைக் கியல்பே.

அவற்றுள் கவியின்வகை = ஆசு மதுரஞ் சித்திரம்வித்தாரமெனப் பாவகை பாடுவோன் கவியெனப்படுமே.

கமன்வகை = ஞாபகஞ் செம்பொரு ணடையினெப் பொருளுங் = காசின்றுரைப்போன் கமஎ னாகும்.

வாதிவகை = ஏதுவு மேற்கோளு மெடுத்துக் காட்டித் = தன்கோணிறீஇப் பிறர்கோண் மறுபோன் = மன்பதை மதித்த வாதி யாகும்.

வாக்கிவகை = அறம்பொரு ளினபம் வீடெனுந் திறங்கள் = கேட்கவேட்க வினியன கூறு = மாற்றலுடையான் வாக்கியாகும்.

ஆசுகவிவகை = கொடுத்த பொருளிற் றோடுத்தலினத்தி = னடுத்தபொழுதிற் பாடுவதாசுகவி.

மதுரகவிவகை = பொருளின் பொலிவுஞ்சொல்லின் றிறனுந் = தொடையுந் தொடைக்கண்விகற்பமுந் துதைந்தங் = குருவக முதலா மலங்காரங்ளை = யுட்கொண்டோசை பொலிவுடைத்தாகி = யுய்த்துணர் வோர தமுள்ளங் கட்கு =
மால்கட லமிழ்தம்போற் பாடுவதுமதுரகவி.

சித்திரகவிவகை = மாலை மாற்றே சக்கரஞ் சுழிகுள = மேகமாதமெழுகூற் றிருக்கை = காதை கரப்பே கரந்துறைப் பாட்டே = தூசங் கௌலேவாவன் ஞாற்றே =
பாத மயக்கே = பாவின் புணர்ப்பே = கூட சதுக்கங்கோமூத் திரியே = யோரெழத் தினத்தா னுயர்ந்த பாட்டே = யொற்றுப் பெயர்த்த வொருபொருட் பாட்டே = சித்திரப் பாவே விசித்திரப்பாவே = விற்ப நடையேவினாவுத்தரமே = சருப்பதோ பத்திரஞ் சார்ந்த வெழுத்தே = வருக்கமு மற்றும்வடநூற்கடலு = ளொருக்குடன் வைத்த வுதாரண நோக்கி = விரித்து நிறைத்துமிறைக்கவிப் பாட்டுத் = தெரித்துப் பாடுவது சித்திர கவியே.

வித்தாரகவிவகை = மும்மணிக்கோவையும் பன்மணி மாலையு = மறமுங்கலிவெண் பாவுமட லூர்ச்சியு = மியலிசை

நாடகமியன்றபல் கவியுங் = கூத்தும் கிரீடையுங் பாடாண்டத்துறையும் = வகுத்தவகுப்பும் விருத்தக் கவிதையும் = விரித்துப் பாடுவது வித்தார கவியே.

நாற்பொருளின் பெயர் = அறம்பொருளின்பம்வீ டெனப்பொருணான்கே.

நால்வகைக் கேள்வியின் பெயர் = கற்றல் கேட்ட லவ்வழி நிற்ற = லொத்த னால்வகைக்கேள்வி யாகும்.

நானிலத்தின் பெயர் = முல்லைகுறிஞ்சிமருத நெய்தலெனச் = சொல்லிய முறையே நால்வகையாகும்.

நால்வகைச்சேனையின் பெயர் = யனைதேர்பரிகாலா ளென்றிவை = நால்வகைத் தானைநாமமாகும்.

நால்வகைப்பொன்னின் பெயர் = சாதரூபங் கிளிச்சிறை யாடகஞ் = சாம்பூ நதமிவை நால்வகைப் பொன்னே.

நால்வகைப்பூவின் பெயர் = கோட்டுப்பூ கொடிப்பூ நீர்ப்பூவோடு = புதற்பூவென்றிவை நால்வகைப்பூவே.

நால்வகைப்புசிப்பின் பெயர் = உண்பதின்ப நக்குவ பருகுவ = நால்வகைப் புசிப்பி னாம மாகும்.

நால்வகையூறுபாட்டின் பெயர் = குத்தல் வெட்ட லெய்த லெறிதனால்வகை யூறு பாடென நவில்வர்.

நால்வகையுபாயத்தின் பெயர் = சாமபேத தான தண்டம்மென = நெறிபடு முபாய நான்காகும்மே.

நால்வகைநிலையின் பெயர் = பைசாசமாலீட மண்டிலம்பிரத்தி = யாலீடநால்வகை நிலையாகும்மே.

பஞ்சபாதகவகைப் பெயர் = கொலையே களவு கள்குரு நிந்தை, பகரும் பொய்யுடன் பஞ்சபா தகமே.

ஐவகைவினாவின் பெயர் = அறியான் வினாவலறிவொப்புக்காண்ட, லைய மறுத்த லவனறிவு தான் கோடன், மெய்யவற்குக் காட்டலோடைவகை வினாவே.

பஞ்சாங்கவகைப் பெயர் = திதியே வாரநாள் யோகங்
கரணமெனப், பகருஞ் சோதிடப் பஞ்சாங் கம்மே.

பஞ்சசயனவகைப் பெயர் = மயிர்ச்சேணம் பஞ்சுமெத்தை
வண்படாந் தூவி,
பயிற்றுந்தண் வீப்பாய்பஞ்ச சயனம்.

பஞ்சவாசவகைப் பெயர் = தக்கோல மேலமிலவங்கஞ் சாதிக்காய்
கர்ப்பூர மென்றிவை கமழ்பஞ்ச வாசம்.

பஞ்சபூதவகைப் பெயர் = நிலநீர் தேயுவாயு வாகாயமென்றிவை
புலனறிந்தோ ரேத்துமைம் பூதம்.

பஞ்சபுலன்பஞ்சேந்திரியங்களின் வகைப் பெயர் = சுவை யொளி
யூறோசை நாற்ற மறியுங் = கருவி நாகண் மெய்செவி மூக்கே.

இந்திரியத்தின் பெயர் = கரணம் பொறிவாயில் கந்தமிந் திரியம்.

ஐவகைக் குசலவித்தையின் பெயர் =
எண்ணலெழுதலிலைகிள்ளல் பூத்தொடுத்தல் = பன்னமைந்த
யாழினொடு குசல மைந்தே.

ஐவகை மெய்க்குற்றத்தின் பெயர் = கொட்டாவிநெட்டை
குறுகுறுப்புக்கூன்கிடை, நட்டுவிழலைந்து மெய்ந்நவைக் குறியே.

ஐவகை விரையின் பெயர் = கோட்டந் துருக்கந் தகரமகி லரா
மொட்டிய வைந்தும் விரையென வுரைப்பர்.

ஐவகைத் தந்தையர் பெயர் = அரசன் றலைவன் றந்தை
முன்னோன் குரவனோ டைவருங் குறிப்பினிற் றந்தை.

ஐம்பால்வகைப் பெயர் = ஐம்பாலென்ப தொருவனொருத்தி =
பலரொன்று பலவெனப் பகுத்தனர் புலவர்.

ஐவகையுணவின் பெயர் = கடித்த னக்கல் பருகல் விழுங்கன்,
மெல்ல லென்றிவை யைவகை வுணவே.

பஞ்சசத்தகருவியின் பெயர் = தோறொளைநரம்பு கஞ்சம் பாடல்
பல்பேத பஞ்ச சத்தமாகும்.

ஐவகைவேள்வியின் பெயர் = கடவுள் பிரமம் பூத மானிடந்

தென்புலத் தாரென் றைவகை வேள்வி.

ஐவகைத்தாயர் பெயர் = ஈன்றதா யூட்டுந்தாய் முலைத்தாய்கைத் தாய் =
செவிலித்தாயென வைவகைத் தாயர்

கான்படுதிரவியமைந்தி ன் பெயர் = அரக்கிறா லின்றே
னணிமயிற்பீலி = நாவி கான்படுதிரவிய மைந்தே.

கடல்படு திரவியமைந்தின் பெயர் = பவளமுத்துச் சங்கொக்
கோலை = யுப்புக் கடல்படுதிரவிய மைந்தே. (

நாடுபடு திரவியமைந்தின் பெயர் = செந்நெல் செவ்விளநீர்சிறு
பயறு = கன்னற் கதலியெனப் பெயர் பெற்ற,
வைந்துநன்னாட்டமைந்த திரவியம்

நகர்படு திரவியமைந்தின் பெயர் = கண்ணாடிபித்தன்
கருங்குரங்கு காட்டானை =
மண்ணாளும்வேந்தனோ டைந்துதிரவியம்

மலைபடு திரவியமைந்தின் பெயர் = அகில்கறி கோடட மொடுதக்
கோலங் = குங்கும மைந்து மலைபடுதிரவியம்.

ஆறங்கத்தின் பெயர் = மந்திரஞ் சூத்திர வியாகரண நிகண்டு
சந்தோ பிசித நிருத்தஞ் சோதிட = மென்றன வேதத்
தாறங்கமென்ப.

நன்னாட்டமைதியறுவகைப் பெயர் = செல்வம் விளையுள்
பல்வளஞ்செங்கோல் = கொல்குறும் பின்மை கொடும்பிணி
யின்மையென் = றிவ்வகையாறு நன்னாட்டமைதி.

போகபூமியறுவகைப் பெயர் = ஆதியரிவஞ்சநல்லரி வஞ்ச =
மேமத வஞ்ச மிரணவஞ்சந் = தேவகுருவ முத்தர குருவமெனப் =
போகபூமி யறுவகைப் படுமே.

உட்பகையாறின் பெயர் =
காமங் குரோதமோக முலோப = மதமாச்சரியமுட்பகையா
றென்ப.

அறுவகைச் சுவையின் பெயர் = தித்தித்தல் கூர்த்த றுவர்த்தல்

கார்த்தல் =
கைத்தல் புளித்தலோ டறுவகைச்சுவையே

அறுவகைப் புறச்சமயத்தின் பெயர் = உலகாயதம்புத்தஞ்
சமணமீ மாஞ்சை = பாஞ்சராத்திரம் பாட்டாசாரிய = மிவ்வகை
யாறும்புறச்சமயமாகும்

உட்சமயமாறின் பெயர் = வைரவம் வாமங் காளாமுகமா விரதம் =
பாசுபதஞ்சைவமென் றுட்சமய மாறே.

பெரியோரெழுவகைப்பெற்றியின் பெயர் =
அறமும்பொருளுமின்பமும் மன்பும் = பொறுமையும் புகழு
மதிப்பு மென்றிவை = எழுவகைப் பெற்றி பெரியோ ரியல்பே.

எழுவகைத்தாதின் பெயர் = *இரதமுமுதிரமு மென்புந்தோலும் =
தசையு மூளையுஞ் சுக்கிலமுமென்றிவை = எழுவகைத்தாது
வெனப் பெயர் பெறுமே.
*இரதம் = மச்சை

எழுவகை நதியின் பெயர் = கங்கை யமுனை நருமதை சரச்சுவதி
பொங்குகாவிரி குமரி கோதாவரியென் = றேழுபெருவகைநதி
யெனவுரைப்பர்

எழுவகை நரகத்தின் பெயர் = பெருங்களிற்றுவட்டம் பெருமணல்
வட்ட = மெரிபரல் வட்ட மரிபடை வட்டம் = புகையின்வட்டம்
பெருங்கீழ் வட்டம் இருளின்வட்டமென வெழுவகை நரகம்.

தேவுமாவுந் தாபரமும் பறவையு = மேவியமக்களூர்வ நீரனவும்
பேசிலெழுவகைப் பிறப்பெனமொழிப.

இவற்றின் யோனிபேதம் = அவற்றுள் *தேவரீரேழ்மக்களொன்
பான் = றாபரமிருபா ணர்வன பன்னொன்று =
நீரனவிலங்குபுண்ணிரல் பப்பத்தா = மாகவெண்
பத்தினாலிலக்கபேத = மேவும்யோனி யாமென் றுரைப்பர்.
= = = = = = = =
*ஊர்வனபன்னொன்றாமொன்பதாமானிடவர் = நீர்பறவை
நாற்கா னிரல்பத்தாம் =
சீரிய = தெய்வம் பதினாலாம் தாபரங்கணாலைந்தென் =
றெய்தும்பிறப்பிவைகளேழு.

அவற்றுட்டன்னை யறிந்தவரறியாத வரின் பெயர் = தன்னையறிந்தவர் சாயுச்சி யத்தர் = பின்னையர் மீண்டுபிறப்போ ரென்ப.

நாட்டேழ்குற்றத்தின் பெயர் = வெட்டில் கிளியே நாவா யேனந் = தொட்டியர் கள்வர் சோனைப் பெரும்புய = னட்ட நாட்டேழ் குற்றமாகும்

அட்டமூர்த்தவகைப் பெயர் = பார்நீர் தேயுவாயுவா காயஞ் = சூரியன் சந்திர னியமான னென்ன = வாராய்ந் துரைத்த வட்ட மூர்த்தம்

அட்டமா சித்தியின் பெயர் = அணிமா மகிமா கரிமா விலகிமா = பிராத்தி பிராகாமிய மீசத்துவம் வசித்துவமென் = றோதற் கரிய வட்டமா சித்தி.

அட்டாங்கயோகத்தின் பெயர் = இயம நியம மாதனம் பிராணா யாமம் பிரத்தியாகாரந் தாரணை = தியானஞ் சமாதியென்றட்டாங்கயோகம்

அவற்றுளியமம் = கொல்லா விரதமெய்ம்மைகூறல் = கள்ளாமை பிறர்பொருட் காதலின்மை = மெய்வகையிந்திய மடக்கலுமியமம்.

நியமம் = தவமே சௌசந் தத்துவநூ லோர்தன் = மனமுவந் திருத்த றெய்வம் வழிபட = னினையுங் காலை நியம மாகும்.

ஆதனம் = பத்திரங் கோமுகம் பங்கயங் கேசரி = சுவத்திகஞ் சுகாதன மென்பவாதனம்.

பிராணாயாமம் = இரேசக பூரக கும்பக மேற்றி = வாயுவை யடக்கல் பிராணா யாமம்.

பிரத்தியாகராம் = உரையா துபாதியை நீக்கி யுபாதியைப் = பிரியாதுண் ணோக்கல் பிரத்தியாகாரம்.

தாரனை = உற்றுயிர் பூத மனாதியிலொடுக்கித் = தற்பர நாடுத றாரணை யாகும்.

தியானம் = அவமாம் புலத்தை யடக்கி மனாதி = சிவயோகஞ்

சேர்த றியான மாகும்.

சமாதி = இந்துவும் பானுவும் விந்துவு நாதமுஞ் = சந்தியில் வைத்தல் சமாதியாகும்.

எண்வகைக் காட்சியின் பெயர் = அறமையப் படாமை யாவாவொன்றின்மை = யறிவு வர்ப்பின்மை மூட மறுத்த = லறப்பழி மறுத்த லழிந்தோரை நிறுத்த = லறத்தை விளக்க லறுசமயத்தவர்க்கன் = பிவற்றிய லாகு மெண்வகைக் காட்சி.

அருகனெண் குணத்தின் பெயர் = அநந்தஞான மநந்ததரிசனம் = அநந்த வீரியமநந்த சுகமே = நாம மின்மை கோத்திர முன்மை = யாயு வின்மை யழியாவியல்பென் = றேயுந்தகைய வாமருக னெண்குணமே.

எண்வகைக் குற்றத்தின் பெயர் = ஞானா வரணியந் தரிசனா வரணியம் = வேத நீய மோக நீய = மாயு நாமங் கோத்திர நாமங் = காயவந்தராயம் வரயுவந்தராய மென் =
றேயு மெண்வகைக் குற்ற மென்ப.

அட்டமங்கலத்தின் பெயர் = கவரி நிறை குடங் கண்ணாடி தோட்டி = முரசு விளக்குப் பதாகை யிணைக்கய = லளவில் சிறப்பி னட்டமங் கலமே.

சிறப்பில்லா வெண்வகைப் பெயரெச்சத்தின் பெயர் = சிறப்பில் சிதடுமுறுப்பில் பிண்டமும் = கூனுங் குறளு மூமையுஞ் செவிடு = மாவு மருளு மென்ப மக்கட் = கேயிஞ் சிறப்பிலா வெண்பெய ரெச்சம்.

அட்டகிரியின் பெயர் = இமய மந்தரங்கைலைவிந்த = நிடதமேமகூட நீலங் கந்தமென் = றெண்வகை வெற்புக் கியன்ற பெயரே.

அட்டகணிதத்தின் பெயர் = சங்கலிதம் விப கலிதங் குணனம் = பாகாரம் வர்க்கங் கனமூல மெட்டே.

அட்டபரிசத்தின் பெயர் = தட்டல் பற்றறடவ றீண்டல் –குத்தல் வெட்டல் கட்ட லூன்ற = வெட்டு முடம்பின் பரிச மாகும்.

நவமணியின் பெயர் = வைரமுத்த மாணிக்கம் பவளம் = மரகதங்

கோமேதகம் வைடூரியம் = நீலம் புருடராகமென்ன =
நானிலம்புகழு நவமணிப்பெயரே.

நவபுண்ணியத்தின் பெயர் = எதிர்கொளல் பணித லிருத்தல் கால் கழுவல் =
விரைமலர் தூவல் தூபம் விளக்கே = யெருசுவை
யுண்டியமைந்தோர்க் குதவுதல் =
புகழ்தனவபுண் ணியத்தி னாம மாகும்.

நவதாரணையின் பெயர் = நாம தாரணை வச்சிர தாரணை =
மாயா தாரணை சித்திரதாரணை = சத்ததாரணை
வத்துத்தாரணை = சதுர்கதாரணை செய்யுட்டாரணை =
நிறைவுகுறைவாகிய வெண்பொருட் டாரணை = நவதாரணையி
னாம மாகும்.

நவதாளத்தின் பெயர் = சமதாள மரும தாளமட தாளம் = படிம
தாளஞ் சயதா ளம்மே = மட்டியதாளம் விடதாள நிவிர்த = தாளந்
துருவதாள மென்ன = நவதா ளத்தி னாம மாகும்.

நாடக நவரதப் பெயர் = சிருங்காரம் வீரியம் பெருநகை கருணை
= யிரௌத்திரங் குற்சை சாந்தமற் புதம்பய = நாடகத்தியலு
நவரதமாகும்

சிற்பத்தொழிலின் பத்துறுப்பின் பெயர் = கல்லுமுலோகமுஞ்
செங்கலு மரமு = மண்ணுஞ் சுதையுந் தந்தமும் வண்ணமுங் =
கண்ட சருக்கரையு மெழுகு மென்றிவை = பத்தே சிற்பத்
தொழிற்குறுப் பாகும்.

உயிர்வேதனை பன்னிரண்டின் பெயர் = அனலுஞ் சீதமும் வாதமு
மசனியும் = புனலுமாயுதமும் விடமு மருந்தும் = பசியுந் தாகமும்
பிணியுமுனி வறாமையு = முயிரின் வேதனை யோரீ ராறே.

பதினெண் யாகங்களின் பெயர் = சோதிட்டோம மங்கிட் டோம =
முத்தியஞ் சோடசீவாச பேய = மத்தி ராத்திரஞ் சோம யாகஞ் =
சாதுர் மாசியம் பவுத்திர மேத =
மணிபுண்டரீக மங்கி சயனே = யிராச சூய மச்சுவ மேதம் =
விச்சுவ தித்துப் பிரம மேதம் = பிரணவமேதம் பாசுபந் தம்மெனப்
= பாற்படு பதினெண்யாக மென்ப.

பதினெண்புராணங்களின் பெயர் = * மச்சங் கூர்மம் வராகம்வா

மனம் = பதுமம் வைணவம் பாகவதம் பிரமஞ் = சைவ மிலிங்கம்
பௌடிய நாரதீயங் = காரூடம் பிரம கைவர்த்தங் காந்த =
மார்க்கண் டேயமாக் கினேயம் பிரமாண்டம் = பாற்படு
பதினெண் புராணமாகும்.
= = = = = = = = = =
*மச்சம், கூர்மம், வராகம், வாமனம், சைவம், இலிங்கம்,
பௌடியம், காந்தம், மார்க் கண்டேயம், பிரமாண்டம், இப்பத்துஞ்
சிவபுராணங்கள். வைணவம், பாகவதம், காரூடம், நாரதீயம்
இந்நான்கும் விட்டுணு புராணங்கள். பிரமம், பதுமம்
இவ்விரண்டும் பிரமபுராணங்கள். ஆக்கினேயம்
அக்கினிபுராணம். பிரமகைவர்த்தம் சூரியபுராணம்.

உபபுராணம் பதினெட்டின் பெயர் = நாரசிங்கஞ் சநற்கு மாரம் =
நாரதீயம் சிவதன் மந்துருவாசம் = நந்திகேச்சுர
மவுசனங்காளிகம் = வாருணஞ்சாம்பேசம் பராசரம்பார்க்கவம் =
காபிலமானவம் வாசிட்டலைங்கம் = சவுர மாரீச மானவ
மென்னும் = ஈரொன் பானுப புராணமென்ப.

தருமநூல் பதினெட்டின் பெயர் = மநுவேயத்திரிவிண்டு வாசிட்டம்
= யமமாபத்தம்பம் யாஞ்ஞுவற்கியம் = பராசரமாங்
கீரசமுசனம்மே = காத்தியாயனம் சமவர்த்தம் வியாசம் =
பிரகற்பதி சங்கலிதம் சாதான்மம் = கைதமந்தக்கமீ =
ரொன்பானும் = தருமநூலின் பெயரெனச் சாற்றுவர்

யாகையின் பதினெண் குற்றத்தின் பெயர் = பசியுநீர் வேட்டலும்
பயமும் வெகுளியு = முவகையும் வேண்டலு நினைப்பு முறக்கமு =
நரையு நோய் படுதலுமரணமும் பிறப்பு = மதமு மின்பமு
மதிசயமும் வியர்த்தலுங் = கேத முங்கை யறவு மென்றிவை =
மாய யாக்கைக்குப் பதினெண் குற்றம் = இக்குற்ற நீக்கியோர்
வச்சிரகாயர்.

மூன்றாவது ஐயர்வகை முற்றிற்று
ஆக சூத்திரம்
= =

நான்காவது : அவனிவகை ( = )

மண்ணுலகின் பெயர் = அவனி வைய மகலிடங் காசினி = புவனி
புடவி பூதலம் பூமி = புவனம் படிபுவி பொழிலே பூவே = சகமே

தினிதரை தாலஞ் சாந்தை = யுகம் பார் தரணி யுலோகந் தாரணி = தலநீர் வரைப்புத் தராதல மகாதல = நிலம்பிரு திவிதர நிலையே ஞால = மசலையூ வலய மளக்கர் மண்டலம் = பவன மகநடு பாலம் விபுலங் = கோத்திரை குவலயங் குவ்வேகோ நேமி = தாத்திரிவேலா வலயந் தரித்திரி = திணைமகி சக்கரம் பொறை நகம்பாரி = வசுந்தரை வசுமதி வசுதைமண் ணுலகே

மற்றும் மண்ணுலகின் பெயர் = பூதிய மகிலம் புரையே பாரமென் = றோதிய பிறவுமப் பெயர்க் குரித்தே.

நவகண்டத்தின் பெயர் = வடபால் விதேகந் தென்பால் விதேகங் = கீழ்பால் விதேக மேல்பால் விதேகம் = வடபா லிரேவதந் தென்பா லிரேவதம் = வடபாற் பரதந் தென்பாற் பரதம் = மத்திம கண்ட மென்ன வருபவை = நற்பெரு நாவலந் தீவினவ கண்டம்.

பூவலயத்தின் பெயர் = பூகோளம் பூகண்டம் பூவலய மென்ப.

எழுதீவின் பெயர் = முதலது நாவலந் தீவே யுடைய = திறலியின்றீவே கிரவுஞ்சத் தீவே = குசையின் றீவே யிலவந் தீவே = தெங்கந்தீவே புட்கரத் தீவென் = றேத்திய பெருந்தீ வேழிற்கும்பெயரே.

ஏழ் பொழிலின் பெயர் = ஏழ்பெருந் தீவுமேழ் பொழிலெனப் படுமே.

கீழேழுலகின் பெயர் = அதலம் விதலம் சுதலம் நிதலம் = தராதலம் ரசாதலம் பாதலவுலகம் = என்றிவை கீழே ழுலகெனப் படுமே.

நரகத்தின் பெயர் = நிரயமும் பவர்க்கமுங் கும்பியும் புலவு = மூழ்த்தலும பரமு மள்ளலு மளறு = மதோகதி பாவந்துவர்ந்த மருஞ்சிறை = யிருளு மென்பதிவை நரகப் பெயர்.

ஏழுநரகங்களின் பெயர் = கூடசாலங்கும்பி பாக = மள்ளலதோகதி யார்வம் பூதி =
செந்து வென்றேழுந் தீநரகப் பெயர்.

நாட்டின் பெயர் = பைதிர மண்டிலம் பாடி தேயந் = தண்ணடை நீவரங் கோட்டஞ் சனபதஞ் = சும்மை யகலுள் கண்ட மேணியென் = றின்ன விராச்சிய முலகுநா டென்ப.

உலகின் பொதுப் பெயர் = புவன நாடு பொழிறலம் புடவி = பவன மிராச்சிய முலகின் பொதுப் பெயர்.

காசியின் பெயர் = காசிவாராணசி.

காஞ்சியின் பெயர் = கச்சிகாஞ்சி.

சிதம்பரத்தின் பெயர் = மன்றஞ்சிதம்பரம்.

திருவாரூரின் பெயர் = கமலைதிருவாரூர்.

உறையூரின் பெயர் = கோழியுறையூர்.

மதுரையின் பெயர் = கூடன்மதுரை.

கருவூரின் பெயர் = கருவூர்வஞ்சி.

கடாரத்தின் பெயர் = காழகங்கடாரம்.

சிங்களத்தின் பெயர் = ஈழஞ்சிங்களம்.

மிதிலையின் பெயர் = மிதிலைவிதேகை.

அவந்திநகரின் பெயர் = அவந்தியுஞ்சை.

அரித்துவாரத்தின் பெயர் = அரித்து வார மாயாபுரியே.

காவிரிப்பூம்பட்டினத்தின் பெயர் = காக நதிபுகார் காவிரிப்பூம்பட்டினம்.

புரத்தின் பெயர் = புரியென்கிளவி புரமென் றாகும்.

சேரியின் பெயர் = பாடியென்பது சேரியாகும்.

முனைமேற்சென்றோ ருறைபதியின் பெயர் = பாசறை முனை மேற்சென்றோருறைபதி.

ஊரின் பெயர் = பூக்கங் கேடகம் பூரியம் பூண்டி = பாக்கம் புரிகெடிபதி நகர் சும்மை = சேரி மண்டிலம் சேர்வு குப்பங் = காடு குடிக்காடு வேலியகலுள் =
வைப்புக் கிராமம் வசதியருப்ப = மாதர மில்லிடம் புகலிடம்

புரமேபாழி நத்தங் கோசர மொக்க = முறையு ளிருக்கை யூரின் பெயரே.

சிற்றூரின் பெயர் = பேடுங் குடியும் பெருந்தண் ணடையும் = பட்டு நொச்சியும் பள்ளியு மென்றிவை = சிற்றூர் தனக்குச் சிறந்த பெயரே.

நிலத்தின் பெயர் = மாவுந் திணையும் வேலியு நிலமெனல்.

மற்றும் நிலத்தின் பெயர் = பூவுமப் பெயர்புகலப் பெறுமே.

வழியின் பெயர் = அதருமயனமுமாறுமடைவும் = பதவையும்வதியு மத்தமு மார்க்கமுங் = கடவையுங் கிறியு நடையும் போக்கு = மிடவையுந் தாரியுந்தாரையு மியவையுந் = தெருவு மொழுக்கமுஞ் செப்பமுஞ் சுரமுஞ் = சரியு நெறியுஞ் செலவுந் தரங்கும் = பட்டமும் வனமுங் காலும் பதமும் – வட்டையும் வகிரும் வாரியும் வழியெனல்.

அருநெறியின் பெயர் = அத்தமுங் கடமுஞ் சுரமு மருநெறி.

யானைசெல்வழியின் பெயர் = தண்டம் யானை சென்ற வழியே

இழிந்தேறும்வழியின் பெயர் = படுக ரென்ப திழிந்தே றும்வழி.

சிறுவழியின் பெயர் = விடங்கர் செறுவழி.

நீள்வழியின் பெயர் = நீள்வழியளக்கர்

கவர்வழியின் பெயர் = கவலை கவர்வழியின் கட்டுரையாம்

முதுவரம்புவழியின் பெயர் = மஞ்சின் முதியவரம்பின் வழியே.

புதுவரம்புவழியின் பெயர் = மரிசி புதியவரம்பின் வழியே

பள்ளத்தின் பெயர் = ஞெள்ளறாழ்வுபடுகரவல் குழி = பள்ளமிழிவு பயம்புதாழ்நிலமே

மேட்டின் பெயர் = உயர்நிலந் திடர்சுவ லோங்க றிட்டை = மிசையே மோடுமே டென்றாகும்

சிறுதிட்டையின் பெயர் = பாறைமேடு முரம்பு பதுக்கை = யாகு

முயர்சிறு திட்டை யதன் பெயர்

விளக்கின் பெயர் = சுடர், தீபம், ஒளி. .

அனற்பொறியின் பெயர் = புலிங்கம் .

அனற்றிரளின் பெயர் = உற்கம், .

காட்டெரியின் பெயர் = தாவம், வரையனல்.

தீக்கடைகோலின் பெயர் = அரணி, ஞெலிகோல், ஞெகிழி

புகையின் பெயர் = தூமம், அரி, தூபம், ஆவி

நறும்புகையின் பெயர் = நறை, குய், வெடி.

அக்கினிதேவன் பெயர் = சாதவேதா, மைவாகனன், தீபதி, சித்திர பானு,தனஞ்சயன், தென்கீழ்த்திசையோன்,தேயு, வாயுசகன், பாவகன்

அக்கினிதேவன்பாரியின் பெயர் = சுவாகாதேவி

முத்தீயின் பெயர் = காருகபத்தியம், ஆகவனீயம், தக்கணாக்கினியம்

பஞ்சாக்கினியின் பெயர் = இராகம், வெகுளி, காமம், சடம், தீபனம்

நீரின் பெயர் = ஆலம், சலம், அம், அறல், பாணி, அப்பு, பயம், உதகம் வயம், அயம், வாரி, விகடி, புனல், சலிலம், புவனம், அளகம், சீவனம், பானீயம், சிந்து, ஆம், குசம், வருணம், அம்பு, மழை, கவந்தம், கீலாலம், மேகம், அகிலம், தடி, நீரம, தோயம், வார், பதம், கார், மாரி, கமலம், பயசு, கயம், சம்பரம், கம், புட்கரம், சீதம், வசி, கோ, காண்டம், கனவிரதம், சீவனீயம், அலர், நாரம், அமுது.

மேகத்தின் பெயர் = மாரி, மழை, மஞ்சு, மாசு, கார், புயல், கனம், கொண்டல், வான், தாராதரம், மை, சீதம், சீவதம், செல், குயின், சீமூதம், எழிலி, கொண்மூ, விளைவு, முகில், விண், கந்தரம், சலதரம், விசும்பு, மங்குல், இளை, மால், அம்புதம், விண்டு.

மற்றும்மேகத்தின் பெயர் = முதிரம், பயோதரம், கதம்பம், மெய்ப்பிரம், அப்பிரம், ஆயம். ஆக

இடியின் பெயர் = வெடி, ஒலி, உரும், கோ, விண்ணேறு, அசனி, செல், இகுளி, மடங்கல்

மின்னலின் பெயர் = சம்பை, வித்துரு, சபலை, தடித்து,சஞ்சலை, கனருசி, தடி, ஒளி.

மழையின் பெயர் = மாரி, வானம், வருடம்.

பெருமழையின் பெயர் = ஆசாரம்.

விடாமழையின் பெயர் = சோனை, பனித்தல்.

தலைப்பெய்மழையின் பெயர் = தளி, உறை, ஆலி, தலையல்

மற்றுந்தலைப்பெய்மழையின் பெயர் = சோதகம்.

ஆலாங்கட்டியின் பெயர் = ஆலி, கனோபலம்.

மற்றும் ஆலாங்கட்டியின் பெயர் = கரகம். ஆக

மழைத்துவலையின் பெயர் = சிதரம், பிதிர்,சீகரம், சிதர், தூவல், துமிதம், திவலை.

மழைவிடலின் பெயர் = தூறல், தலையல்,சோதகம்.

ஏழுமேகவகைப் பெயர் = சம்வர்த்தம், ஆவர்த்தம்,புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீலவருணம்.

அவற்றுள் ஏழுமழைவகைப் பெயர் = மணி, நீர்,பொன், பூ, மண் கல்,தீ.

வருணன் பெயர் = சலபதி, பாசதரன், நதிகேள்வன், புனற்செல்வன்.

வெள்ளத்தின் பெயர் = பிரளயம், நீத்தம், வாரி.

மற்றும்வெள்ளத்தின் பெயர் = ஓதம், பெருக்கு. ஆக

.பனியின் பெயர் = இமம், துகினம், மஞ்சு, சீகாரம்,எமந்தம்.

நிறைபுனலின் பெயர் = வழாறு, பிராறு, வாரி.

நீந்துபுனலின் பெயர் = அகாதம்.

தெளிந்தநீரின் பெயர் = சற்சலம்.

கலங்கனீரின் பெயர் = = ஆவிலம், கலுழி, உடம்பை.

நீரோட்டத்தின் பெயர் = = கோலம். ( )

நீர்த்திரையின் பெயர் = = அறல், தரங்கம், அலை, கல்லோலம்.

மற்றும் நீர்த்திரையின் பெயர் = = சிகரம். ஆக

நீர்க்குமிழியின் பெயர் = = கொப்புள்,மொக்குள்,புற்புதம்.

ஆழநீரின் பெயர் = = அழுந்து,குண்டு,கயம்.

நீர்ச்சுழியின் பெயர் = = உந்தி, சுரியல்.

நுரையின் பெயர் = = பேனம், பே

பரிவேடத்தின் பெயர் = = ஊர்கோள், வட்டம்,மண்டிலம், பரிதி விசயம்.

இந்திரவில்லின் பெயர் = = வானவில்.

காமகாண்டத்தின்பெய்ர் = இரட்டைவில்.

இருளின் பெயர் = = அல்,திமிரம், கருள், கருவரி,கச்சளம், அந்தகாரம், துவாந்தம், தமம், நத்தம்,துணங்கறல்.

பதினெண்கணவகைப் பெயர் = = அமரர்,சித்தர், அசுரர், தைத்தியர்,கருடர், கின்னரர், நிருதரி, கிம்புருடர். காந்தருவர், இயக்கர்,விஞ்சையர், பூதர், பசாசர்,அந்தரர், முனிவர், உரகர், ஆகாசவாசியர், போகபூமியர்.

முதலாவது வான்வகை முற்றிற்று.
ஆக சூத்திரம் .

---

இரண்டாவது : வானவர் வகை. / பெயர்ப்பிரிவு.

கணபதியின் பெயர் = ஏகதந்தன், இறைமகன், ஏரம்பன், ஆகுவாகனன், ஐங்கரன், முக்கண்ணன், பார்ப்பதிபுதல்வன், பாசாங்குசதரன், அத்திமுகத்தோன், அரிதிருமருகன், தந்திக்கடவுள், மும்மதன், கங்கைசுதன், விநாயகன்.

சிவன் பெயர் = அரன், அரூபி, அனந்தன், உருத்திரன், பரன், கறைமிடற்றோன், பார்ப்பதிகொழுநன், காலகாலன், பசுபதி, கண்ணுதல், தாணு, எண்குணன், சங்கரன், நந்தி, ஆதி, சசிதரன்; ஐம்முகன்; பினாகி, சோதி, சம்பு, சூலி, பிஞ்ஞகன், முக்கண்ணன், விடையோன், முன்னவன், பிறப்பிலி, நக்கன், சடையோன், நாயகன், சயம்பு, காமநாசன், பிதா, கருணாலயன், தேவதேவன், திரிபுராந்தகன், மானிடமேந்தி, பேயோடாடி, முத்தன், முதல்வன், சுத்தன், யோகி, வேதமுதல்வன், நாரிபாகன்; ஆலமர்கடவுள், பவன்அநாதி, நீலகண்டன், நிருத்தன், பூதேசன், கங்காதரன், மழுவாளி, கபாலி, அங்கணன், கைலையாளி, கங்காளன், அக்கரவார்த்தோன், அழலாடி, தற்பரன்,
நித்தன், நிமலன், நீறணிகடவுள், யானையுரித்தோன், அமலன், ஆனந்தன்,
வாமதேவன், மகேச்சுரன், சதாசிவன், திரியம்பகன், விமலன், சந்திரசேகரன்,
மாலயற்கரியோன்; நாதன், எண்டோளன், ஞானமூர்த்தி, நம்பன், பகவன்,
வாமன், கிரீசன், வரன், உமாபதி, பூதபதி, புண்ணியன், புலித்தோலுடையோன்,
மாதேவன், கொன்றைமாளையன், பித்தன், ஈச்சுரன், நாசமில்லோன், இறைவன், பாசுபதன், குன்றவில்லி, பாண்டரங்கன், ஈசன், பரமன், பிரான்.

மற்றுஞ்சிவன் பெயர் = அந்திவண்ணன், காமாரி, புராரி, அந்தகாரி, பர்க்கன். ஆக

சிவனூர்திகொடிவகைப் பெயர் = இடபம்.

சிவன்படையின் பெயர் = பரசு, சூலம், பினாகவில்.

சிவனெண்குணத்தின் பெயர் = பவமின்மை, இறவின்மை, பற்றின்மை, பெயரின்மை, உவமையின்மை, ஒருவினையின்மை, குறைவிலறிவுடைமை, கோத்திரமின்மை.

சிவனைம்முகத்தின் பெயர் = ஈசானம், தற்புருடம், அகோரம்,

வாமம், சத்தியோசாதம்.

சிவனிருப்புமுதலியவகைப் பெயர் = இருப்பது கைலை, தரிப்பது கங்கை, முடிப்பது கொன்றை, உடுப்பது சருமம்.

சிவபதநான்கின் பெயர் = *தானாளுலகிருத்தல், தன்பாடிருத்தல், தானாம் பதம்பெறல், தானாகுதல்.
* இவற்றைச் சாலோகமுதலிய முத்திகளாகக்கொள்க.

சிவபூசையியல்பின் பெயர் = சரியை, கிரியை, யோகம், ஞானம்.

சிவாகமநூற்பயன் பெயர் = தர்மம், அர்த்தம், காமம், மோக்கம்

நந்தியின் பெயர் = எருது, விடை, ஏறு, இடபம், புங்கவம், இறைவாகனம், சிவகணமுதல்.

சிவனழித்தமுப்புரத்தின் பெயர் = பொன்மதில், வெள்ளிமதில், இருப்புமதில்.

உமையின் பெயர் = ஆரியை, காமக்கோட்டி, அம்பிகை, நாரி, சத்தி, நாயகி, கௌரி, தேவி, சாம்பவி, தருமச்செல்வி, மலைமகள், சங்கரி, மாதா, ஐயை, பரை, உருத்திரை, பார்ப்பதி, அந்தரி, நீலி, கன்னி, நிமலி, குமரி, வேதமுதல்வி, விமலை, முக்கண்ணி, அமலை, இமயவதி, அயிராணி, சமயமுதல்வி, தற்பரை, மனோன்மனி, சிவை, அம்மை.

மற்றும் உமையின் பெயர் = அரனிடத்தவள், சகமீன்றவள், பவானி, அன்னை, புண்ணியமுதல்வி ஆக

கங்கையின் பெயர் = வரநதி, சுரநதி, மந்தாகினி, உமைகரநதி, தசமுகநதி, சிரநதி, தெய்வநதி.

முப்பத்திரண்டறத்தின் பெயர் = ஆதுலர்க்குச்சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தோர்க்குண்டி, பசுவிற்குவாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டநல்கல், அறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால் வார்த்தல், அறவைப் பிணஞ்சுடுதல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய்மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய்,பெண்போகம், பிறர்துயர்காத்தல், தண்ணீர்ப்பந்தர், மடம், தடம், கரவு,

ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறுவிடுத்தல், விலைகொடுத்துயிர்காத்தல், கன்னிகாதானம். .

அறுமுகக்கடவுள் பெயர் = குமரன், தெய்வகுஞ்சரிமணாளன், சிலம்பன், முருகன், சேய், செவ்வேள், கடம்பன், சாமி, கார்த்திகேயன், சேந்தன், குறிஞ்சிக்கிழவன், செட்டி, காங்கேயன்,கௌரிமைந்தன், கந்தன், வேலன், வள்ளிகேள்வன், விசாகன், தாரகாரி, குகன், சரவணபவன், மயில்வாகனன், வன்னிப்பூக்குமரன், ஆறிருகரத்தோன், அரிதிருமருகன், குழகன், கங்கைமைந்தன், குன்றெறிந்தோன், அறுமீன்காதலன், அசுரற் றடிந்தோன், சேவலங்கொடியோன், தேவசேனாபதி, பாவகி, ஆசான், கலையறிபுலவன், அரன்மகன், யானைமுகவற்கிளையோன்.

அறுமுகக்கடவுளூர்தியின் பெயர் = ஆடு, யானை, மயில்.

அறுமுகக்கடவுள்படைகொடியின் பெயர் = படைவேல், கொடிசேவல்.

மாலையின் பெயர் = நீபம், செச்சை.

வீரபத்திரன் பெயர் = உக்கிரன், அழற்கண்வந்தோன், உமைமகன், முக்கணன், தக்கன்வேள்விமுனிந்தோன், ஏகவீரியன், சடாதரன், வில்லி, ஈசன்மைந்தன், கணபதிக்கிளையோன், ஆயிரமுகத்தோன், சினம்புளானோன், பத்திரைகேள்வன்.

வைரவன் பெயர் = கஞ்சுகன், மூவிலைவேலோன், காரி, முத்தன், கேத்திரபாலன், நிருவாணி, சித்தன், ஞாளியூர்தி, கபாலி, வடுகன்.

வைரவ னூர்தி படையின் பெயர் = ஊர்தி, ஞமலி, படை,சூலம்.

ஐயனார் பெயர் = சாதவாகனன், கோழிக்கொடியோன், சாத்தன், வெள்ளையானை வாகனன், காரி, செண்டாயுதன், கடனிறவண்ணன், பூரணை கேள்வன், புட்கலை மணாளன், ஆரியன், அறத்தைக்காப்போன், யோகி, அரிக ரபுத்திரன்.

ஊர்தி, காரிக்குதிரை, கொடி, கோழிக்கொடி.

மாகாளியின் பெயர் = குமரி, சண்டிகை, குண்டலி, நீலி, வலவை,

பைரவி, கௌமாரி, மாதரி, மாயை, வீரி, மதங்கி, யாமளை, சூரி, வெதாளி, கங்காளி, யோகினி, சூலி, சாமுண்டி, தாரகாரி, ஆரியை, தேவி, வல்லணங்கு, ஐயை, அலகைக்கொடியாள், மாலினி, முக்கண்ணி, பதுமை, எண்டோளி, யாளியூர்தி,

மாகாளியூர்திகொடிபடையின் பெயர் = ஊர்தி, சிங்கம், கொடி, அலகை, படை, சூலம்.

இடாகினியின் பெயர் = வஞ்சனி, மாயவள், வலவை, இடாகினி.

யோகினியின் பெயர் = சன்மினி, சூர்மகள்.

ஊர்திகொடியின் பெயர் = கொடி, பேய், வாகனம், ஓரி.

துர்க்கையின் பெயர் = அந்தரி, மகிடற்காய்ந்தாள், ஐயை, விந்தை, அம்பணத்தி, விசயை, எண்டோளி, மாலுக்கிளையாள், பகவதி, சயமகள் பாலைக்கிழத்தி, வீரச்செல்வி, கௌரி, காத்தியாயினி, சக்கராயுதி, அமரி, குமரி, கலையூர்தி, சமரி, கன்னி, சயை, வாட்படையாள், சூலி, ஆரியை, நீலி, சண்டிகை, மேதித்தலைமிசை நின்றாள், கொற்றவை, நாராயணி.

துர்க்கையின் படைவாகனத்தின் பெயர் = படை கைவாள்: வாகனம்:கலை.

காடுகாள் பெயர் = மோடி, காரிதாய், கொற்றி, மாரி, சூரி, வடுகி மூதணங்கு.

சத்தமாதர்கள் பெயர் = பிரமாணி, நாராயணி, மாயேசுரி, கௌமாரி, வராகி, உருத்திராணி, இந்திராணி.

சத்தமாதர்களூர்தியின் பெயர் = பிரமாணிக்கு அன்னம், வராகிக்கு ஏறு. மாயேசுரிக்கு விடை. உருத்திராணிக்கு அலகை, கௌமாரிக்கு மஞ்ஞை. இந்திராணிக்குக் களிறு. நாராயணிக்குக் கலுழன்.

சத்தமாதர்கள்படையின் பெயர் = பிரமாணிக்கு வேதம். வராகிக்குத் தண்டு. உருத்திராணிக்குச் சூலம். மாயேசுரிக்குப் பினாகம். கௌமாரிக்கு வேல். இந்திராணிக்கு வச்சிராயுதம், நாராயணிக்குச் சக்கரம்.

விட்டுணுவின் பெயர் = மாதவன், நெடியோன், மாயவன், சநார்த்தனன், சீதரன், பதுமநாபன், திருமால், கொண்டல்வண்ணன், கோவிந்தன், முகுந்தன், விண்டு, வனமாலி, வாமன், வாமனன், திரிவிக்கிரமன், திருமறுமார்பன், கேசவன், வரதன், முராரி, அனந்தன், காவற்கடவுள், காகுத்தன், அச்சுதன், அரவணைச்செல்வன், அறிதுயிலமர்ந்தோன், சக்கராயுதன், சார்ங்கபாணி, கடல்வண்ணன், சலசவிலோசனன், உலகினையளந்தோன்,உலகமுண்டோன், படிமுழுதிடந்தோன், அலகமுலை யுண்டோன், தாமோதரன், சௌரி, மதுசூதனன், ஆதி, பீதாம்பரன், வராகன், திருமகள்கொழுநன், பூமிகொழுநன், கண்ணன், உவணவூர்தி, உவணமுயர்த்தோன், பஞ்சாயுதன், பரந்தாமன், பகவன், பூவைவண்ணன், புணரியிற்றுயின்றோன், பிரமன்றந்தை, பின்னைகேள்வன், சங்கமேந்தி, நாரசிங்கன், இருடிகேசன், தசவவதாரன், குறளன், நெடுமால், வலவன், கரியோன், உந்திபூத்தோன், நந்தகோபாலன், வாசுதேவன், துளபமௌலியன், அனந்தசயனன், வைகுந்தநாதன், ஆயிரம்பெயரோன், அரி, மால், நாராயணன்.

மற்றும் விட்டுணுவின் பெயர் = அருந்தமன். ஆக

விட்டுணுவினூர்திகொடியின் பெயர் = கருடன்.

விட்டுணுவின்பஞ்சாயுதத்தின் பெயர் = சக்கரம், தனு, வாள், தண்டு, சங்கம்.

அவற்றுள் சக்கரத்தின் பெயர் = சுதரிசனம்.

தனுவின் பெயர் = சார்ங்கம்.

வாளின் பெயர் = நாந்தகம்

தண்டின் பெயர் = கௌமோதகி

சங்கின் பெயர் = பாஞ்ச சன்னியம்

அரியின்தசாவதாரத்தின் பெயர் = மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலபத்திரன், கண்ணன், கற்கி

அன்றியுமூவைந்தவதாரத்தின் பெயர் = சனகன், சனந்தனன்,

சனாதன், சனற்குமாரன், நரநாராயணன், கபிலன், இடபன், நாரதன், அயக்ரீவன், தத்தாத்திரேயன், மோகினி, வேள்வியின்பதி, வியாதன், தன்வந்திரி, பௌத்தன்,.

பலராம னொழியமற்ற மூர்த்தங்களைப் புத்தனென்று சொல்லப்படும்.

திருமகளின் பெயர் = பொருளின்செல்வி, பொறி, அரிப்பிரியை, மலர்மகள், இந்திரை, மா, இலக்குமி, கமலை, ஆக்கம், பதுமை, சீதேவி, தாக்கணங்கு, இளையாள், கடற்பிறந்தாள், மாறிருமார்பினள், மறைத்தலைவி, செய்யாள், பூமகள்,

பலபத்திரன் பெயர் = = இரேவதிகொழுநன், குண்டலன், உரோகணிதநயன், நீலாம்பரன்,அலாயுதன், அச்சுதன்முன்னோன், காமபாலன், அநந்தன், வெள்ளை, காளிந்திமர்த்தனன், பனந்துசன், முசலி, கருத்துகிலுடையன், பலதேவன்.

பலபத்திரன் படைகொடியின் பெயர் = = படை, கலப்பை: கொடி, பனை..

காமன் பெயர் = = மான்மகன், மதனன், மகரக்கொடியோன், வேனிலாளி, வேள், வசந்தன், அங்கசன், அநங்கன், ஐங்கணைக்கிழவன், திங்கட்குடையோன், தென்றற்றேரோன், வனசன், வில்லி, மோகன்,மலர்கணையோன், மதிசகன், இரதிகாந்தன், மாரன், மனோபவன், மனோசன், மனோபு, மன்மதன் திருமகண் மைந்தன். சம்பரசூதனன், உருவிலி, கடன்முரசோன், கைதச்சுரிகையன், கந்தர்ப்பன். சித்தசன், பூவாளி, பூமன், கருப்புவில்லி.

காமனூர்திகொடியின் பெயர் = = வாகனம் தென்றல்: கொடி, மகரம்.

காமன்வில்கணையின் பெயர் = = வில்,கழை: கணை, ஐவகை மலர்.

காமனைங்கணையின் பெயர் = = தாமரை, மாம்பூ, அசோகம், முல்லை, குவளை.

அவற்றின்செயலின் பெயர் = = பெருமயக்கு. சிந்தாகுலம்,

புணர்சசிக் கிணங்குதல். மோகனம். சந்தாபம், வசீகரணம்.

அவற்றினவத்தையின் பெயர் = = சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம்.

, அவற்றுள் சுப்பிரயோகம், பேசாதொழியாநினைவு.

விப்பிரயோகம் பெருமூச்செறிந்து வருந்துதல்.

சோகம் வெதும்பி யுணவு வெறுத்தல்.

மோகம் அழுதலும் பிதற்றுதலும்.

மரணம் உயிர்சோர்தலு மயங்குதலும்.

பிரமன் பெயர் = = அந்தணன், மலரோன், அயன், நான்முகத்தோன்,

உந்தியில்வந்தோன், ஓதிமவாகனன், பாரதிகொழுநன், படைப்போன், பகவன், ஆரணன், இரணியகருப்பன், விரிஞ்சன், வேதா, விதாதா, விதி,சதானந்தன், தாதா, பிதாமகன், சம்பு, மான்மகன், எண்கணன், கமலயோனி, பிரசாபதி, வேதன், கம், இறை, சூதன், பரமேட்டி, திசைமுகன், வானவர் முதுவன், போதன், வரன், குரவன், மண்பொதுத்தந்தை, அனந்தன், ஞானன், அன்னமுயர்த்தோன்; இறைவன்; மறையோன்.

.பிரமனூர்திபடைகொடியின் பெயர் = ஊர்தி, அன்னம்: படை பாசம், தண்டம்: கொடி = மறை.

நாமகள் பெயர் = பாரதி, துய்யாள், பனுவலாட்டி, வேதமுதல்வி, பிராமி, விமலை, வாணி, வெள்ளைநிறத்தினள், வாக்காள், நான்முகன் கிழத்தி, ஞானத்திறைவி, காயத்திரி, சாவித்திரி, பாமடந்தை, நூன்மடந்தை, உலகமாதா, இசைமகள், கலைமகள், வெண்டாமரைமகள், கண்ணாள், உயிர்த்துணைவி.

நாமகளூர்தியின் பெயர் = பூரம்.

இந்திரன் பெயர் = அமராவதியோன், ஆயிரங்கண்ணன், சதமகன் கோபதி, போகி, சங்கிரந்தனன், பாகசாதனன், வச்சிரப்படையோன், மேகவாகனன், விண்முழுதாளி, வாசவன்,

மகவான், வானனன், கௌசிகன், ஆகண்டலன், அயிராவதன், வலாரி, புருகூதன், சக்கிரன், புரந்தரன், மருத்துவன், மருதக்கிழவன், வரைசிறகரிந்தோன், அரி, சசிவல்லவன், திருமலிசுவர்க்கன், வேள்விநாயகன், புலவன், வேந்தன், புரோகிதன், சுனாசி, கரியவன் புனிதன், காண்டாவனன், மால், வெள்ளைவாரணன், தேவர்வேந்தன், பொன்னகர்ச்செல்வன், ஐந்தருநாதன்.

இந்திரன்றேவி பெயர் = சுந்தரி, சசி, அயிராணி, புலோமசை, ஐந்தருச்செல்வி.

இந்திரன்மகன் பெயர் = சயந்தன்.

இந்திரனகரின் பெயர் = அமராவதி.

இந்திரன்யானையின் பெயர் = அயிராவதம்.

இந்திரன்குதிரையின் பெயர் = உச்சைச்சிரவம்.

இந்திரன்படைகொடியின் பெயர் = படை, வச்சிரம்:கொடி, இடி.

இந்திரன்மண்டபத்தின் பெயர் = சயந்தம்

இந்திரன்மாளிகையின் பெயர் = வசந்தம்.

பண்டாரத்தின் பெயர் = சுதன்மம்.

இந்திரனந்தனவனத்தின் பெயர் = கற்பகச்சோலை.

இந்திரன்சேமநிதிப் பெயர் = நவநிதி.

இந்திரன்கோவின் பெயர் = காமதேனு.

இந்திரனுணவின் பெயர் = அமுதம்.

புனைவதின் பெயர் = கற்பகமலர்.

அணிவதின் பெயர் = சிந்தாமணி, சூளாமணி.

நாடகத்தரம்பையர் பெயர் = மேனகை, அரம்பை, உருப்பசி, திலோத்தமை.

தேவர்பொதுப் பெயர் = வானவர், அமுதர், வரர், புத்தேளிர், மேலவர், இமையவர், விண்ணவர், கடவுளர், அமரர், புங்கவர், ஐயர், இலேகர், விபுதர், தீர்த்தர், அசுரர்க்க மித்திரர், உயர்நிலையோர், சுரர், உம்பர், புலவர், அண்டர், முதல்வர், ஆதித்தர், கவர்க்கர், பொன்னுலகுடையோர்.

முப்பத்துமுத்தேவர் பெயர் = ஆதித்தர், பன்னிருவர்: அச்சுவினிகள், இருவர்: ஈசர், பதினொருவர்: வசுக்கள் எண்மர்.

அவற்றுள் ஆதித்தர்பன்னிருவர் பெயர் = வைகத்தன், விவச்சுதன், வாசன், மார்த்தாண்டன், பாற்கரன், இரவி, உலோகப்பிரகாசன், உலோகசாட்சி, திரிவிக்கிரமன், ஆதித்தன், திவாகரன், அங்கிசமாலி

உருத்திரர் பதினொருவர் பெயர் = மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன் கபாலி, சௌமியன்.

அட்டவசுக்கள் பெயர் = தரன், துருவன், சோமன், ஆபச்சைவன் அனலன், அணிலன், பிரத்தியூசன், பிரபாசன்.

அச்சுவினிகளிருவா பெயர் = அச்சுவினிதேவர்.

கடவுளர்பொதுப் பெயர் = பண்ணவர், பகவர், தீர்த்தர், பட்டாரகர், புங்கவர்.

தெய்வத்தின் பெயர் = சூர், அணங்கு, கடவுள், தெய்வதம், தே, புத்தேள், இயவுள்.

சுரர்மகளிர் பெயர் = அரமகளிர், சூரரமகளிர், அரம்பையர்.

தெய்வப்பெண் பெயர் = அணங்கு, சூர், வஞ்சனை, மாயவள், கன்னி.

மூதேவியின் பெயர் = கழுதையூர்தி, காக்கைக்கொடியாள், முகடி, தௌவை, கலதி.

மற்றும் மூதேவின் பெயர் = சீர்கேடி, கேட்டை, கெடலணங்கு, ஏகவேணி, சேட்டை.

.மூதேவியூர்தி படைகொடியின் பெயர் = வாகனம் = கழுதை: படை = துடைப்பம்:கொடி = காகம்.

தருமதேவதையின் பெயர் = மரகதவல்லி, பூகநிழலினள், பரமசுந்தரி, இயக்கி, பகவதி; அருகனைத்தரித்தாள், அறத்தின்செல்வி, அம்பாலிகை.

அருகன் பெயர் = புண்ணியன், எண்குணன், பொன்னெயினாதன், பண்ணவன், பட்டாரகன், முனைவன், அசோகமர்கடவுள், பகவன், முக்குடையோன், அறவாழி வேந்தன், அரியணைச்செல்வன், பூமிசைநடந்தோன் வரதன், சினேந்திரன்.

அருகனூர்தி படையின் பெயர் = அம்புயம்.

கொடியின் பெயர் = காட்சி, ஞானம், சீலம்.

புத்தன் பெயர் = பார்மிசைநடந்தோன், பகவன், புங்கவன், தருமன், சாந்தன், முனைவன், வாமன், புனிதன், சினன், வரன், அறிவன், பிடகன், போதிவேந்தன்.

குபேரன் பெயர் = இருநிதிக் கிழவன், இயக்கர் வேந்தன், வடதிசைத் தலைவன், நரவாகனன், அளகையாளி, அதிதனச் செல்வன், சீரகத்தாரோன், வைச்சிரவணன், அரனுடைத் தோழன், கின்னரர்பிரான், மரகதன், புட்பகவூர்தி, பிங்கலன், மந்திரி, தனபதி.

குபேரன்வாகனத்தின் பெயர் = நரவாகனம், புட்பகத்தேர்.

இயமன் பெயர் = இயமன், அரி, அந்தகன், தென்றிசைக்கிழவன், சமன், சண்டன், சண்பன், தருமன், நமன், மறலி, தண்டதரன், சைமினி நகரோன், வைதரணிநதியோன், செங்கோற்கடவுள், நாசவன், நடுவன், கூற்று,

யமனூர்தி படையின் பெயர் = ஊர்தி, எருமை, படை, தண்டு பாசம்.

காலன் பெயர் = சண்டன், மறலி, கூற்று, சமன், மடங்கல், கால், மறல்.

காலன்படையின் பெயர் = கணிச்சி.

அசுரர் பெயர் = தானவர், அவுணர், தைத்தியர், கண்டகர், மேனிகரப்போர், தகுவர், கார்வண்ணர், தேவர்பகைவர், திதிபுதல்வர்.

மாவலியின் பெயர் = வயிரோசனன்

நிருதர் பெயர் = நிசாசரர், சாலகடங்கடர்

அரக்கர் பெயர் = இராக்கதர், *யாதுதானவர், நிசாசரர், பிசிதாசனர்.
*யாது தானவர் எனச்சொல்வகை செய்து இருபெயராகக் கொள்ளலும் ஒன்று

கந்தருவர் பெயர் = இயக்கர், யாழோர், காந்தருவர், தந்திரர், கின்னரர்.

வித்தியாதரர் பெயர் = விஞ்சையர், கேசரர்.

வித்தியாதரரிடத்தின் பெயர் = சேணி, விஞ்சைப்பதி, சேடி, யாணர்நகர்.

பூதத்தின் பெயர் = சாதகம், பாரிடம், குறள், கூளி, சாரதம், மகோதரம், கிருத்திமம், கணம்.

பேயின் பெயர் = கடி = வேதாளம் = கழுது = கூளி = வெறி = அலகை = பிசாசு = மண்ணை மயல் = சோகு = மருள் = வியந்தரம் = பிரேதம் = அழன் = குணங்கு குணபாசி = பாசம் = சாவு = சவம் = அள்ளை = குணபம் = பிணம்.

சூரியன் பெயர் = = இரவி, இனன்,மணி, என்றூழ், செஞ்சுடர், பரிதி, தேரோன், எல்லோன், பானு, சண்டன், அருக்கன், தபனன் ஆதவன், அண்டயோனி, ஆயிரங்கதிரோன், கனலி, திவாகரன், கனலோன் பாற்கரன், அனலி, ஒளியோன், அலரி, மார்த்தாண்டன், தினகரன், செங்கதிர், அரி, திமிராரி, அருணன், சூரன், ஞாயிறு, சவிதா, பகல், பர்க்கன், வெயிலோன், ஆதித்தன், விரிச்சிகன், விரோசனன், விகர்த்தனன், மித்திரன் வெய்யோன், கதிரோன், வெஞ்சுடர், சோதி, பகலவன், எல்லை, பதங்கன், ஆதபன்,அழலவன், உதயன், இருள்வலி, பொழுது, பகவன்,சான்றோன்,
வேந்தன், தாபநன், தரணி, எல்லி, சாயாபதி,

பகலோன்,விண்மணி, பனிப்பகை, கதிரவன், சுடரோன், மாலி.

சூரியமண்டிலத்தின் பெயர் = = விசயம்.

சூரியகிரகணத்தின் பெயர் = = கரம், தீவிரம், கோ,கதிர்.

வெயிலின் பெயர் = = கோடை, என்றூழ், எல், ஒளி.

மற்றும்வெயிலின் பெயர் = = ஆதவம்.

உதயத்தின் பெயர் = = விடியல், வைகறை, புலரி.

கழிவுநாளின் பெயர் = = காலி, வைகல்.

அந்தியின் பெயர் = = சந்தி,மாலை, சாயம்,கோதூழி.

நடுப்பகலின் பெயர் = = மத்தியானம், நண்பகல்.

மற்றும் நடுப்பகலின் பெயர் = = உச்சி, உருமம்.

சாமத்தின் பெயர் = = யாமம்.

பகலின் பெயர் = = எல், திவசம், தினம், திவா.

அருக்கனூர்தியின் பெயர் = = ஒற்றையாழித்தேர், பொற்றேர்

அருக்கன்றேர்ப்புரவியின் பெயர் = = ஏழ்புரவி.

அருக்கன்றேர்ப்பாகன் பெயர் = = அருணன்.

சந்திரன் பெயர் = = இந்து, சசி,இமகிரணன், தண்சுடர், உடுபதி, தாராபதி, அம்புலி, அமுதககிரோன், சீதன், குரங்கி, விது, நிலவு, அல்லோன், வேந்தன், தண்ணவன், கலையோன்,மதி,களங்கன், குபேரன்,ஆலோன், பனிக்கதிர்,தானவன், சுதாகரன், உடுவேந்தன், பிறை, முயற்கூடு,பச்கதிர், திங்கள், சோமன்.

நிலவின் பெயர் = = சந்திரிகை.

பிரைநிரம்பலின் பெயர் = = கலை.

சந்திரனூர்தியின் பெயர் = = விமானம்.

இரவின் பெயர் = = யாமம், நத்தம், யாமினி, வகுஞ்சம். சாமம். கங்குல், நிசா, நிசி, திமிரம், எல்லி, அல்.

செவ்வாயின் பெயர் = = அழலவன், பௌமன். அங்காரகன், குருதி வக்கிரன், குசன், மங்கலன், ஆரல், உதிரன், அரத்தன், அறிவன், அழல், உலோகிதன், செந்தீவண்ணன், சேய்.

புதன் பெயர் = = அருணன், கணக்கன், அறிஞன், சாமன், மதிமகன், மேதை, மால், தேர்ப்பாகன், புந்தி, தூதன், பச்சை.

வியாழன் பெயர் = = ஆசான், மந்திரி. ஆண்டளப்பான், பொன், பீதகன், சுரகுரு, பிரகற்பதிர, சீவன், தேவமந்திரி, சித்தன், சிகண்டிசன், அந்தணன், அரசன்.

வெள்ளியின் பெயர் = = தைத்தியமயந்தரி, சல்லியன், சைத்தியன் மழைக்கோள், சுங்கன். கவி, புகர், பிரசுரன், பார்க்கவன், சுக்கிரன், ஒள்ளியோன், பளிங்கு, காப்பியன், சிதன், உசனன்.

சனியின் பெயர் = = கதிர்மகன், நீலன், சாவகன், காரி, முதுமகன், மேற்கோள், மந்தன், முடவன், சௌரி, பங்கு, சந்தில்.

இராகுவின் பெயர் = = தமம், கரும்பாம்பு.

கேதுவின் பெயர் = = செம்பாம்பு, சிகி, கொடி.

அனந்தன் பெயர் = = போகவதிக்கிறை, சேடன்.

வாரத்தின் பெயர் = வாசரம், கிழமை.

அச்சுவினியின் பெயர் = இரலை ஐப்பசி யாழ் ஏறு தலைநாள் புரவி மருத்துவநாள்.

பரணியின் பெயர் = காடு கிழவோன் பூதம் அடுப்பு தாழி சோறு தருமனாள் முக்கூட்டு போதம் தாசி.

கார்த்திகையின் பெயர் = அறுமீன் அங்கிநாள் அளக்கர் எரிநாள் அளகு இறால் நாவிதன் வாணன் தழல் ஆரல்

உரோகிணியின் பெயர் = சகடு விமானம் சதி ஊற்றால் அயனாள் வையம்

மிருகசீரிடத்தின் பெயர் = மாழ்கு மான்றலை மார்கழி நரிப்புறம் மதிநாள் மும்மீன் பாலை வெய்யோன் ஐந்தானம்

திருவாதிரையின் பெயர் = அரனாள் செங்கை மூதிரை

புனர்பூசத்தின் பெயர் = அதிதிநாள் கழை ஆவணம் எரி புனர்தம் கரும்பு

பூசத்தின் பெயர் = குருநாள் காற்குளம் கொடிறு வண்டு புணர்தை.

ஆயிலியத்தின் பெயர் = அரவினாள் கௌவை ஆயில்

மகத்தின் பெயர் = வேள்வி, கொடுநுகம், வேட்டுவன், வாய்க்கால், ஆதியெழுஞ்சனி பிதிர்நாள், மாகம், மாசி, எழுவாயெழுஞ்சனி

பூரத்தின் பெயர் = இடையெழுஞ்சனி, எலி, தூர்க்கை, பகவதி, நாள் கணை, நாவிதன்

உத்தரத்தின் பெயர் = பங்குனி, கடையெழுஞ்சனி, பாற்குனி, மானேறு, கதிர்நாள், மாரிநாள்

அத்தத்தின் பெயர் = கைம்மீன் கைனி கனலிநாள் ஐம்மீன் காமரம் களிறு

சித்திரையின் பெயர் = நெய்மீன் அறுவை நேர்வான் பயறு நடுநாள் துவட்டநாள் தச்சன்

சோதியின் பெயர் = விளக்கு, மரக்கால், வெறுநுகம், வீழ்க்கை, துளக்கம், காற்றினாள்.

விசாகத்தின் பெயர் = அனிலநாள், முற்றில், முறம், வைகாசி, சுளகு.

அனுடத்தின் பெயர் = பனை, தேள், பெண்ணை, புல், தாளி, போந்தை, மித்திரநாள்.

கேட்டையின் பெயர் = துளங்கொளி, வல்லாரை, வேதி, எரி, அழல், இந்திரனாள், சேட்டை.

மூலத்தின் பெயர் = கொக்கு, தேட்கடை, குருகு, வில், அன்றில் ஆனி, அசுரநாள்

பூராடத்தின் பெயர் = உடைகுளம், முற்குளம், மாரி, நீர்நாள், நீர்.

உத்திராடத்தின் பெயர் = ஆடி, விச்சுவநாள், கடைக்குளம், ஆனி.

திருவோணத்தின் பெயர் = சோனை, மாயோனாள், முக்கோல், சிரவணம், உலக்கை

அவிட்டத்தின் பெயர் = காகப்புள், வசுக்கணாள், ஆவணி, பறவை.

சதயத்தின் பெயர் = குன்று, வருணனாள், செக்கு, சுண்டன், போர்.

பூரட்டடாதியின் பெயர் = புரட்டாதி, முற்கொழுங், நாழி, பரதநாள்.

உத்திரட்டாதியின் பெயர் = முரசு, பிற்கொழுங்கோல், மன்னன் நீபம், அறிவனாள்.

இரேவதியின் பெயர் = தொழு, நாவாய், தோணி, சூலம், பஃறி புருடநாள், கடைமீன்

அருந்ததியின் பெயர் = சாலி, வடமீன்

விடிமீனின் பெயர் = வெடி.

வான்மீனின் பெயர் = புச்சம்

வான்மீனின்பொதுப் பெயர் = சிதம், பம், சுக்கை, கணம், உடு, தாரகை, ஒளி.

இராசியின் பெயர் = மேடம், இடபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்னும் பன்னிரண்டிராசிகளுள் மிதுனமொழிந்த வேனைய விராசிகட்கு அவ்வப் பெயர்க்குரியன வாய்வரும் பெயரனைத்தும் அவ்வவ்இராசிகட்குக் கொள்க

மிதுனத்தின் பெயர் = யாழ், பாடவை, இரட்டை, சவைமகள், விழவு, தண்டு.

இராசியின் பொதுப் பெயர் = இல், ஓரை, பவனம்

சூரியசந்திரர்க்குரிய திசையின் பெயர் = அருக்கன்றிசை கீழ்த்திசை, சோமன்றிசை வடதிசை.

மூவகைவீதியின் பெயர் = மேடவீதி, இடபவீதி, மிதுனவீதி, அவை சூரியசந்திரர் முதலிய கிரகங்கள் சஞ்சரிக்கும் வழி.

மேடவீதியாவது = இடபம் சிங்கம் முதுனம் கடகம்

இடபவீதியாவது = மீனம், மேடம், கன்னி, துலாம்

மிதுனவீதியாவது = தனுசு, மகரம், கும்பம், விருச்சிகம்

இவற்றுள் முற்கூறிய மூன்றிராசிகளுள் இடபமுதல் விருச்சிகம் ஈறாகத்தொகுத்த மாதங்களில் சூரியன் முதலிய கிரகங்கள்வரும்வழி.

காலத்தின் பெயர் = போழ்து, கொன், பொழுது, செவ்வி, ஏல்வை வேலை, அமையம், காலை, கால், பதம்

காலநுட்பத்தின் பெயர் = கலை, துடி, கணம்., மாத்திரை, நொடி பிதிர், நுட்பம், திட்பம், நிமிடம்.

காலவிரைவின் பெயர் = கணம் மாத்திரை.

.நாழிகையின் பெயர் = கடிகை, விகலை, கன்னல், இருத்தை, பதம். நாழி.

நாளின் பெயர் = அல்கல், திவா, பகல், ஆனியம், திவசம், ஏல்வை, எல், வைகல், தினம்.

முன்னைநாளின் பெயர் = நென்னல், நெருநல்.

பின்னைநாளின் பெயர் = பிற்றை,பின்றை.

திதியின் பெயர் = பக்கம்.

மாதத்தின் பெயர் = மதி, திங்கள்.

ஒருகலைவருமதிநாளின் பெயர் = சினீவாலி.

அமாவாசையின் பெயர் = குகு.

முதற்பக்கத்தின் பெயர் = நந்தை. அதுவருமாறு , , , நந்தை.

இரண்டாம்பக்கத்தின் பெயர் = பத்திரை' , ,பத்திரை.

மூன்றாம்பக்கத்தின் பெயர் = சயை. , , சயை.

நன்காம்பக்கத்தின் பெயர் = இருத்தை. , , இருத்தை.

ஐந்தாம்பக்கத்தின் பெயர் = பூரணை. , , பூரணை.

பூரணையின் பெயர் = அனுமதி, பவ்வம், இடை, உவா.

கார்காலத்தின் பெயர் = நவம்.

கூதிர்காலத்துக்குங் கொடும்பனிக்காலத்துக்கும் பெயர் = சிசிரம்.

இளவேனிலின் பெயர் = மாதவம், வசந்தம், மது.

கொடியவேனிலின் பெயர் = கோடை,சமம், சுசி.

பருவமும் இருதுவுமொருபொருட்கிளவி

அறுவகைப்பருவகாலப் பெயர் = கார்,கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில். .

அவைதாம் = ஆவணி, புரட்டாதிகார், ஐப்பசி, கார்த்திகைகூதிர். மார்கழி, தைமுன்பனி. மாசி, பங்குனி பின்பனி. சித்திரை, வைகாசி, இளவேனில்*. ஆனிஆடிமுதுவேனில்.

அறுவகையிருதுவின் பெயர் = வசந்தம்,கிரீடம், வருடம், சரம், ஏமந்தம், சிசிரம்.

அவைதாம் = சித்திரை , வைகாசி வசந்தம், ஆனி,ஆடிகிரீடம், ஆவணி, புரட்டாதிவருடம், ஐப்பசி, கார்த்திகைசரம், மார்கழி, தைஏமந்தம்; மாசி, பங்குனி சிசிரம்.

ஆண்டின் பெயர் = ஆயனம்,சமை, அயனம்,தெய்வதம், வருடம் வற்சரம்.

வாழ்நாளின் பெயர் = ஆயூகம், ஆயுள்.

உகமுடிவின் பெயர் = ஊழி, மடங்கல்.

நால்வகையுகத்தின் பெயர் = கிரேதா, திரேதா, துவாபரம், கலி.

அமுதின் பெயர் = அமரி,சுதை, மருந்து.

தெய்வவுணவின் பெயர் = சரு, பலி, நிவேத்தியம், அமுது, அவி.

ஆலகாலவிடத்தின் பெயர் = காளகூடம்.

ஆன்மாவின் பெயர் = பசு, உயிர், சீவன், புற்கலன், சேதனன், இயமானன்,ஆதன், செந்து,ஆவி, பூதன், உறவி ,கூத்தன். .

இரண்டாவது வானவர் வகை முற்றிற்று.
மேற்படி சூத்திரம் .

---

## மூன்றாவது : ஐயர்வகை / பெயர்ப்பிரிவு.

இருடிகள் பெயர் = = முனிவர், மாதவர், இலிங்கிகள், முனைவர், படிவர், உறுவர், பண்ணவர், ஐயர், அறவோர், தபோதனர், அறிஞர், அந்தணர், துறவோர், கடிந்தோர், மோனியர், யோகியர், = கோபங்காய்ந்தோர், நீத்தோர், மெய்யர், தாபதர். ( )

சத்தவிருடிகளின் பெயர் = = அகத்தியன், புலத்தியன், அங்கிரா, கௌதமன், வசிட்டன், காசிபன், மார்க்கண்டேயன்.

அகத்தியன் பெயர் = = குறுமுனி, கும்பயோனி.

சைவதவப்பாலோர் பெயர் = = மாவிரதியர், காளாமுகர், பாசுபதர்.

நாரயணசமயத்தார் பெயர் = = வைணவர், பாகவதர்,.

சமணர் பெயர் = = சாவகர், அருகர், அமணர்.

சமண்டவத்தோர் பெயர் = = ஆசீவகர், தாபதர்.

புத்தர் பெயர் = = சாக்கியர், தேரர், பௌத்தர்.

புத்ததவத்தோர் பெயர் = = சீவகர்.

.சடைமுடியோர் பெயர் = = முனிவர், தாபதர்.

ஒருமையின் பெயர் = = இறையுணர்வு.

ஒன்றின் பெயர் = = வீடுபெறுகை.

இருமையின் பெயர் = = இம்மை, மறுமை.

இருவினையின் பெயர் = = புண்ணியம், பாவம்.

இருவகைத் தோற்றத்*தின் பெயர் = = சரம், அசரம்.

இருசுடரின் பெயர் = = சூரியர், சந்திரர்.

இருமரபின் பெயர் = = தாய்வழி, தந்தைவழி.

இருவகைக்கந்தத்தின் பெயர் = = நற்கந்தம், துர்க்கந்தம்.

இருவகையறத்தின் பெயர் = = இல்லலற*ம், துறவறம்.

இருவகைப்பொருளின் பெயர் = = கல்வி,செல்வம்.

இருவகைக்கூத்தின் பெயர் = = மார்க்கம், தேசிகம்.

மும்மையின் பெயர் = = *உம்மை, இம்மை, மறுமை.
*உம்மை கழிபிறப்பு.

முப்பொறியின் பெயர் = = மனம், வாக்கு, காயம்.

முச்செயலின் பெயர் = = படைத்தல், காத்தல்,அழித்தல்.

முக்காலத்தின் பெயர் = = இறந்தகாலம், எதிர் காலம், நிகழ்காலம்.

மூவிடத்தின் பெயர் = = முன்னிலை, படர்க்கை, தன்மை.

முக்குற்றத்தின் பெயர் = = காமம், வெகுளி, மயக்கம். ( )

மூவகைமொழியின் பெயர் = = உண்மைகூறல், பழித்தல் புகழ்தல்.
( )

முக்குணத்தின் பெயர் = = சாத்துவிகம், இராசதம், தாமதம்.

அவற்றுள்சாத்துவிககுணம் = = ஞானம், தவம், மேன்மை, அருள்,மோனம், வாய்மை, பொறுமை, புலனடக்கல்.

இராசதகுணம் = = தானம், தவம், தருமம், பேணல், ஞானம்; கல்வி, நலன்,கேள்வி.

தாமதகுணம் = பேருண்டி, நீதிகேடு, உரக்கம், மறதி, பொய், சோம்பு, ஒழுக்கம் = வழுவுதல், கொலை, வஞ்சம்.

மூவகைத்தானத்தின் பெயர் = முதல், இடை, கடை.

அவற்றுளுத்தமதானம் = அறத்தானீட்டிய பொருளை முக்குற்ற மற்ற நற்றவத்தோரைக் கொள்கெனப் பணிந்து, குறையிரந்து மனமகிழ்ந்து கொடுத்தல்.

மத்திமதானம் = *ஆதுலர், அந்தகர் +உருப்பறைகள், ‡ஆதர், மாதர், இவர்களுக்குக் கொடுப்பது.
= = = =
*ஆதுலர் இரப்போர், +உறுப்பறைகள் அவயவமிழந்தவர், ‡ஆதர் பற்றுக்கோடில்லாதவர், ஆர்வம் விருப்பம்,

கடைப்படுதானம் = ஆர்வம், புகழ், அச்சம், கைம்மாறு, காரணம் கண்ணோட்டம், $கடப்பாடு இவற்றைப்பற்றி யீவது.
= = = =
$கடப்பாடு = முறைமை.

மூவகைப்பாவபுண்ணியவழக்கத்தின் பெயர் = செய்தல், செய்வித்தல், உடன்பாடு.

மூவுலகின் பெயர் = பூமி, அந்தரம், சுவர்க்கம்.

முச்சுடரின் பெயர் = சந்திரன், சூரியன், அக்கினி.

திரிகடுகத்தின் பெயர் = சுக்கு, திப்பிலி, மிளகு.

திரிபலையின் பெயர் = நெல்லி, கடுக்காய், மிளகு.

நாற்கதியின் பெயர் = தேவகதி, மிருககதி, மக்கள்கதி, நரககதி.

நால்வகைவேதத்தின் பெயர் = இருக்கு, எசுர், சாமம், அதர்வணம்.

நால்வகையிழிச்சொல்லின் பெயர் = குரளை, கடுஞ்சொல், பயனில்சொல். பொய்சொல்லல்.

ஆடவர்நாற்குணத்தின் பெயர் = அறிவு, நிரை, ஓர்ப்பு, கடைப்பிடி.

பெண்கணாற்குணத்தின் பெயர் = நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு.

நால்வகைப் புண்ணியத்தின் பெயர் = தானம், கல்வி, தவம், ஒழுக்கம்.

உயிர்த்தோற்றநால்வகையின் பெயர் = பை, முட்டை, வியர்வை, நிலம்.

நால்வகைப்புலமையின் பெயர் = கவி, கமகன், வாதி, வாக்கி.

அவற்றுள் கவியின்வகை = ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், என்னு நாற்கவிகளைப் பாடுவோன் கவிஎன்று சொல்லப்படுவான்.

கமகன் வகை = அரும்பொருளைச் செம்பொருணடையாகக் காட்டி விவகரிப்போன் கமகன்.

வாதிவகை = காரணமுமேற் கோளுமெடுத்துக் காட்டிப் பிறர்மதத்தை மறுத்துத் தன்மதநிறுத்துவோன் வாதி.

வாக்கிவகை = அறம்பொருளின்பம் வீடெனுநான் குறுதிகளைக் கேட்கவும் விரும்பவும் இனியனவாக விரித்துக் கூறுவோன்வாக்கி.

ஆசுகவிவகை = பொருள், அடி, பா, அணி முதலிய கொடுத்து மற்றொருவன் பாடுகவென்றவுடனே பாடுவது ஆசுகவி.

மதுரகவிவகை = பொருட்செல்வம், சொல்லாற்றல், தொடை, தொடைவிகற்பஞ் செறியவுருக முதலிய வலங்காரத்தோடின்னோசைத் தாயாராய் வோர்மனங்கட்கு அமுதம் போலினிமைபயப்பப் பாடுவது மதுரகவி.

சித்திரகவிவகை = மாலைமாற்று, சக்கரம், சுழிகுளம், ஏகபாதம், எழுகூற்றிருக்கை, காதைகரப்பு, கரந்துறை, தூசங்கொளல், வாவன்ஞாற்று, பாதமயக்கு, பாவின்புணர்ப்பு, கூடசதுக்கம், கோமூந்திரி, ஒரெழுத்தினம், ஒற்றெழுத்துக்தீர்ந்த வொருபொருட் பாட்டு, சித்திரப்பா, விசித்திரப்பா, விகற்பநடை, வினாவுத்தரம், சருப்பதோபத்திரம், எழுத்துவருத்தனம், இவை முதலிய வற்றைவடநூற் பரப்பில்முற்ற ஓதிவைத்த வுதாரணங்களை யாராய்ந்து விரிவுபடக் கூறியவற்றினியலால் * மிறைக்கவியில் விளக்கிப்பாடுவது சித்திரகவி.
= = = = = = = = = = = =
* மிறைக்கவி = சித்திரகவி.

வித்தாரகவிவகை = மும்மணிக்கோவை, பன்மணிமாலை,மறம், கலிவெண்பா, மடலூர்தல். இயல், இசை, நாடகம்,பல்வகைக்கவி,கூத்து, கிரீடை, பாடாண்டத்துறை, வகுப்பும், விருத்தகவிதை யிவை முதலியவற்றை விரித்துப் பாடுவது வித்தாரகவி.

நாற்பொருளின் பெயர் = அறம்,பொருள், இன்பம், வீடு.

நால்வகைக் கேள்வியின் பெயர் = கற்றல், கேட்டல், *அவ்வழிநிற்றல், †ஒத்தல். ( )
= = = = = =
*அவ்வழிநிற்றல் பாவனை †ஒத்தல் நிட்டை. ‡பைசாச முதலியவற்றின் விரிவைப் பின்னர்க் காண்க.

நானிலத்தின் பெயர் = முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்.

நால்வகைச்சேனையின் பெயர் = யானை, தேர், பரி, காலாள்.

நால்வகைப்பொன்னின் பெயர் = சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம்.

நால்வகைப்பூவின் பெயர் = கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ,புதற்பூ

நால்வகைப்புசிப்பின் பெயர் = உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன

நால்வகையூறுபாட்டின் பெயர் = குத்தல், வெட்டல், எய்தல், எறிதல்.

நால்வகையுபாயத்தின் பெயர் = சாமம், பேதம், தானம், தண்டம்.

நால்வகைநிலையின் பெயர் = ‡பைசாசம், ஆலீடம், மண்டிலம், பிரத்தியாலீடம்.

பஞ்சபாதகவகைப் பெயர் = கொலை, களவு, கள், குரு நிந்தை, பொய்.

ஐவகைவினாவின் பெயர் = அறியான்வினாவல், அறிவொப்புக் காண்டல், ஐய மறுத்தல், அவனறிவுதான்கோடல்,, மெய்யவற்குக் காட்டல்.

பஞ்சாங்கவகைப் பெயர் = திதி, வாரம், நாள், யோகம், கரணம்.

பஞ்சசயனவகைப் பெயர் = மயிர்ச்சேணம், பஞ்சுமெத்தை, வண்படாம், அன்னத்தின்றூவி, *வீப்பாய்.
= = = = = = =
*வீப்பாய் = மலர்ப்பாய்.

பஞ்சவாசவகைப் பெயர் = தக்கோலம், ஏலம், இலவங்கம், சாதிக்காய், கர்ப்பூரம்.

பஞ்சபூதவகைப் பெயர் = நிலம், நீர், தேயு, வாயு, ஆகாயம்.

பஞ்சபுலன் பஞ்சேந்திரியங்களின் வகைப் பெயர் = சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், நா, கண், மெய், செவி, மூக்கு.

இந்திரியத்தின் பெயர் = கரணம், பொறி, வாயில், கந்தம்.

ஐவகைக்குசலவித்தையின் பெயர் = எண்ணல், எழுதல், இலைகிள்ளல், பூத்தொடுத்தல், யாழ்வாசித்தல்.

ஐவகைமெய்க் குற்றத்தின் பெயர் = கொட்டாவி, நெட்டை, குறுகுறுப்பு, கூன்கிடை, நட்டுவிழல்.

ஐவகைவிரையின் பெயர் = கோட்டம், துருக்கம், தகரம், அகில், ஆரம்.

ஐவகைத்தந்தையர் பெயர் = அரசன், தலைவன், தந்தை, முன்னோன், குரவன்.

ஐம்பால்வகைப் பெயர் = ஒருவன், ஒருத்தி, பலர்,ஒன்று, பல.

ஐவகையுணவின் பெயர் = கடித்தல், நக்கல், பருகல், விழுங்கல், மெல்லல்.

பஞ்சசத்த கருவிவகைப் பெயர் = தோற்கருவி, தொளைக்கருவி, நரப்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி.

ஐவகை வேள்வியின் பெயர் = கடவுள்வேள்வி, பிரமவேள்வி, பூதவேள்வி, மானிடவேள்வி, தென்புலத்தார் வேள்வி.

ஐவகைத் தாயர் பெயர் = ஈன்றதாய், ஊட்டுந்தாய், முலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய்.

கான்படு திரவியமைந்தின் பெயர் = அரக்கு இறால் தேன் மயிற் பீலி நாவி.

கடல்படு திரவியமைந்தின் பெயர் = பவளம் முத்து சங்கு ஒக்கோலை உப்பு.

நாடுபடு திரவியமைந்தின் பெயர் = செந்நெல் செவ்விளநீர் சிறுபயறு, கரும்பு வாழை.

நகர்படு திரவியமைந்தின் பெயர் = கண்ணாடி பித்தன் கருங்குரங்கு யானை வேந்தன்

மலைபடு திரவியமைந்தின் பெயர் = அகில் மிளகு கோட்டம் தக்கோலம் குங்குமம்

ஆறங்கத்தின் பெயர் = மந்திரம் வியாகரணம் நிகண்டு சந்தோபிசிதம் நிருத்தம் சோதிடம்

நன்னாட்டமைதியறு வகைப் பெயர் = செல்வம் விளையுள் பல்வளம் செங்கோல் குறும்பின்மை பிணியின்மை

போகபூமியறு வகைப் பெயர் = ஆதியரிவஞ்சம் நல்லரிவஞ்சம் ஏ மதவஞ்சம் இரணவஞ்சம் தேவகுருவம் உத்தரகுருவம்

உட்பகையாறின் பெயர் = காமம் குரோதம் மோகம் உலோபம் மதம் மாச்சரியம்

அறுவகைச்சுவையின் பெயர் = தித்தித்தல் கூர்த்தல் துவர்த்தம் கார்த்தல் கைத்தல் புளித்தல்

அறுவகைப்புறச்சமயத்தின் பெயர் = உலகாயதம் புத்தம் சமணம் மீமாஞ்சை பாஞ்சராத்திரம் பாட்டாசாரியம்

உட்சமயமாறின் பெயர் = வைரவம் வாமம் காளாமுகம் மாவிதம் பாசுபதம் சைவம்

பெரியோரெழுவகைப் பெற்றியின் பெயர் = அறம் பொருள் இன்பம் அன்பு பொறுமை புகழ் மதிப்பு

எழுவகைத் தாதின் பெயர் = இரதம் உதிரம் என்பு தோல் தசைமூளை சுக்கிலம்
= = = = = = =
*பெற்றி தன்மை

எழுவகை நதியின் பெயர் = கங்கை, யமுனை, நருமதை, சரச்சுவதி, காவிரி, குமரி, கோதாவரி

எழுவகை நரகத்தின் பெயர் = பெருங்களிற்றுவட்டம், பெருமணல்வட்டம், எரிபரல்வட்டம், அரிபடைவட்டம், புகைவட்டம், பெருங்கீழ்வட்டம், இருள்வட்டம்

எழுவகைப் பிறப்பின் பெயர் = *தே, மா, தாபரம், பறவை, மக்கள், ஊர்வன, நீர்வாழ்வன
*தே = தெய்வம். மா = மிருகம்

எழுவகையோனிபேத விரிவின் பெயர் = தேவர் பதினான்கு நூறாயிரம், மக்களொன்பது நூறாயிரம், தாபர மிருபதுநூறாயிரம், ஊர்வன பதினொருநூறாயிரம், நீர்வாழ்வன பத்துநூறாயிரம், விலங்கு பத்துநூறாயிரம், புள் பத்துநூறாயிரம் ஆக வெண்பத்தினான்கு நூறாயிரம்.

அவற்றுட்டன்னையறிந்தவரறியாத வரின் பெயர் = தன்னையறிந்தவர் = சாயுத்தியத்தர். தன்னையறியாதவர் = பிறப்போர்.

நாட்டேழ்குற்றத்தின் பெயர் = †வெட்டில் கிளி நாவாய் ஏனம்

தொட்டியர் கள்வர் பெரும்புயல்
† விட்டில் எனவும் வழங்கும்

அட்டமூர்த்தவகைப் பெயர் = பார் நீர் தேயு வாயு ஆகாயம் சூரியன் சந்திரன் இயமானன்

அட்டமாசித்தியின் பெயர் = அணிமா மகிமா கரிமா இலகிமா பிராத்தி பிராகாமியம் ஈசத்துவம் வசித்துவம்

அட்டாங்கயோகத்தின் பெயர் = இயமம் நியமம் ஆதனம் பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி

அவற்றுனியமம்ஆவது = கொல்லாமை மெய்ம்மைகூறல் கள்ளாமை பிறர்பொருட்காதலின்மை இந்திரியமடக்கல்

நியமம்ஆவது = தவம் சௌசம் தத்துவநூலோர்தல் பெற்றது கொண்டுமகிழ்தல் தெய்வம்வழிபடல்

ஆதனம்ஆவது = பத்திரம் கோமுகம் பங்கயம் கேசரி சுவத்திகம் சுகாதனம்

பிரணாயாமம்ஆவது = பிராணவாயுவையிரேசக பூரககும்பகஞ் செய்தல்

பிரத்தியாகாரம்ஆவது = சீவவுபாதியை நீக்கிப் பிரபஞ்சவுபாதியைச் சிவசொரூபமாகப் பார்த்தல்

தாரணை ஆவது = முழங்கால், குதம், இதயம், கண்டம், கபாலமாகிய இத்தானங்களிற் பிருதிவி முதலிய பஞ்சபூதங்களையொடுக்கி, அத்தானங்களில் பிரமன் முதலிய பஞ்சமூர்த்திகளையும் பாவித்தல்.

தியானம் ஆவது = ஐம்புலத்தையும் அந்தக் கரணத்தையுமடக்கிச் சிவயோகஞ் சேர்தல்.

சமாதி ஆவது = ஆதாரதரிசனத்தையும் நிராதார தரிசனத்தையுங் கடந்து மீதானத்துநிற்றல்.

எண்வகைக் காட்சியின் பெயர் = அறத்தை ஐயப்படாது செய்தல், அவாசிறிது மில்லாமை, உவர்ப்பில்லாத அறிவுடைமை,

மூடமறுத்தல், மிகவும் பழிமறுத்தல், அழிந்தோரைநிறுத்தல், அறத்தைவிளக்கல், அறுசமயத்தவர்க் கன்பு.

அருகன்எண் குணத்தின் பெயர் = அநந்தஞானம், அநந்ததரிசனம், அநந்தவீரியம், அநந்தசுகம், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுவின்மை, அழியாவியல்பு

எண்வகைக் குற்றத்தின் பெயர் = ஞானாவரணியம், தரிசனாவரணியம், வேதநீயம், மோகநீயம், ஆயுநாமம், கோத்திரநாமம், காயவந்தராயம், வாயுவந்தராயம்.

அட்டமங்கலத்தின் பெயர் = கவரி, நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, பதாகை, இணைக்கயல்.

சிறப்பில்லா எண்வகைப் பெயரெச்சத்தின் பெயர் = *சிதடு, உறுப்பில் பண்டம், கூன், குறள், ஊமை, செவிடு !மா, #மருள்.
* சிதடு = குருடு, ! மா மிருகத்தன்மை # மருள் உறுப்புமயக்கம்.

அட்டகிரியின் பெயர் = இமயம், மந்தரம், கைலை, விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தம்.

அட்டகணிதத்தின் பெயர் = *சங்கலிதம், !விபகலிதம், # குணனம், $பாகாரம், % வர்க்கம், வர்க்கமூலம், &கனம், கனமூலம்.
* சங்கலிதம் = கூட்டல், ! விபகலிதம் = கழித்தல், # குணனம் = பெருக்கல்,
$ பாகாரம் = பங்கிடல், % வர்க்கம் = சமமாகியஈரெண்ணின் பெருக்கம்,
& கனம் = சமமாகிய மூவெண்ணின் பெருக்கம்.

அட்டபரிசத்தின் பெயர் = தட்டல், பற்றல், தடவல், தீண்டல், தல், வெட்டல், கட்டல், ஊன்றல்.

நவமணியின் பெயர் = வைரம், முத்து, மாணிக்கம், பவளம், மரகதம், கோமேதகம், வைடூரியம், நீலம் , புருடராகம்.

நவபுண்ணியத்தின் பெயர் = எதிர்கொளல், பணிதல், இருத்தல், கால்கழுவல், அருச்சித்தல், தூபங்கொடுத்தல், தீபங்காட்டல், அறுசுவை யுண்டியமைந்தோர்க் குதவுதல், புகழ்தல்.

நவதாரணையின் பெயர் = நாம தாரணை, வச்சிர தாரணை,

மாயா தாரணை, சித்திர தாரணை, சத்த தாரணை, வத்துத் தாரணை, சதுரங்க தாரணை, செய்யுட்டாரணை, நிறைவுகுறையாகிய வெண்பொருட்டாரணை

நவதாளத்தின் பெயர் = சமதாளம், அருமதாளம், அடதாளம், படிமதாளம், சயதாளம், மட்டியதாளம், விடதாளம், நிவர்ததாளம், துருவ தாளம்

நாடகநவரதப் பெயர் = சிங்காரம் வீரியம் பெருநகை கருணை இரௌத்திரம் குற்சை சாந்தம் அற்புதம் பயம்

சிற்பத்தொழிலின் பத்துறுப்பின் பெயர் = கல் உலோகம் செங்கல் மரம் மண் சுதை தந்தம் வண்ணம் கண்டசருக்கை மெழுகு

உயிர்வேதனை பன்னிரண்டின் பெயர் = அனல், சீதம், வாதம், அசனி, புனல், ஆயுதம், விடம், மருந்து, பசி, தாகம், பிணி, முனிவறாமை

பதினெண்யாகங்களின் பெயர் = சோதிட்டோமம், அங்கிட்டோமம், உத்தியம், சோடசீ, வாசபேயம், அத்திராத்திரம், சோமயாகம், சாதுர் மாசியம், பவுத்திரமேதம், சௌத்திராமணி, புண்டரீகம், அங்கிசயன், இராசசூயம், அச்சுவமேதம், விச்சுவதித்து பிரமமேதம், பிரணவமேதம் பசுபந்தம்

பதினெண் புரானணங்களின் பெயர் = * மச்சம், கூர்மம், வராகம், வாமனம், பதுமம், வைணவம், பாகவதம், பிரமம், சைவம், இலிங்கம், பௌடியம், நாரதீயம், காரூடம், பிரமகைவர்த்தம், காந்தம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமாண்டம்

= = = = = = = = = = = = = = = = =

*மச்சம் பதினாலாயிரங்கிரந்தம், கூர்மம் ஆறாயிரங்கிரந்தம். வராகம் இருபத்துநாலாயிரங்கிரந்தம். வாமனம் பதினாலாயிரங்கிரந்தம்.
பதுமம் ஐம்பத்தையாயிரங்கிரந்தம். வைணவம் ஆறாயிரங்கிரந்தம்.
பாகவதம் பதினெண்ணாயிரங்கிரந்தம். பிரமம் பதினாயிரங்கிரந்தம்.
சைவம் இருபத்துநாலாயிரங்கிரந்தம். இலிங்கம் பதினோராயிரங்கிரந்தம்.
பௌடியம் முப்பத்தோராயிரங் கிரந்தம். நாரதீயம் இருபத்தையாயிரங்கிரந்தம்.

கருடம் ஆறாயிரங்கிரந்தம். பிரமகைவர்த்தம் பன்னீராயிரங்கிரந்தம்.
காந்தம் = இலட்சங்கிரந்தம். மார்க்கண்டேயம் முத்பத்தீராயிரங்கிரந்தம்.
ஆக்கினேயம் எண்ணாயிரங்கிரந்தம். பிரமாண்டம் பன்னீராயிரங்கிரந்தம்

உப புராணம் பதினெட்டின் பெயர் = நாரசிங்கம், சநற்குமாரம், நாரதீயம், சிவதன்மம், துருவாசம், நந்திகேச்சுரம், அவுசனம், காளிகம், வாருணம், சாம்பேசம், பராசுரம், பார்க்கவம், காபிலம், மானவம், வாசிட்டலைங்கம், சவுரம், மாரீசம், பிரமாண்டம்

தருமநூல் பதினெட்டின் பெயர் = மநு, அத்திரி, விட்டுணு, வாசிட்டம், யமம், ஆபத்தம்பம், யாஞ்ஞுவற்கியம், பராசரம், ஆங்கீரசம், உசனம் காத்தியாயனம், சமவர்த்தம், வியாசம், பிரகற்பதி, சங்கலிதம், சாதான்மம், கௌதமம், தக்கம்.

யாக்கையின் பதினெண்குற்றத்தின் பெயர் = பசி, நீர்வேட்டல்,பயம், வெகுளி, *உவகை, †வேண்டல், நினைப்பு, உறக்கம், நரை, நோய்படுதல், மரணம், பிறப்பு, மதம், இன்பம், அதிசயம், வியர்த்தல், ‡கேதம் §கையறவு.
= = = = = = = =
*உவகை = மகிழ்கூர்தல் †வேண்டல் = குறையிரத்தல் ‡கேதம் = துன்பம் § கையறவு = செயலறுதல்.

மூன்றாவது ஐயர்வகை முற்றிற்று
ஆக சூத்திரம்

---

நான்காவது : அவனிவகை / பெயர்ப்பிரிவு

மண்ணுலகின் பெயர் = அவனி, வையம், அகலிடம், காசினி, புவனி, புடவி, பூதலம், பூமி, புவனம், படி, புவி, பொழில், பூசகம், மேதினி, தரை, தாலம், சாந்தை, யுகம், பார், தரணி, உலோகம், தாரணி, தலம், நீர்வரைப்பு, தராதலம், மகாதலம், நிலம், பிருதிவி தரம், நிலை, ஞாலம், அசலை, பூவலயம், அளக்கர், மண்டலம், பவனம், அகம், நடு பாலம், விபுலம், கோத்திரை, குவலயம், கு கோ, நேமி, தாத்திரி, வேலாவலயம், தரித்திரி, திணை, மகி, சக்கரம், பொறை, நகம், பாரி, வசுந்தரை, வசுமதி, வசுதை

மற்றும் மண்ணுலகின் பெயர் = பூதியம் அகிலம் புரை பாரம்

நவகண்டத்தின் பெயர் = வடபால்வி, தேகம், தென்பால்விதேகம், கீழ்பால்விதேகம், மேல்பால்விதேகம், வடபாலிரேவதம், தென்பாலிரேவதம், வடபாற்பரதம், தென்பாற்பரதம், மத்திமகண்டம்

பூவலயத்தின் பெயர் = பூகோளம் பூகண்டம்

எழுதீவின் பெயர் = நாவல் இறலி கிரவுஞ்சம் குசை இலவம் தெங்கு புட்கரம்

ஏழ்பொழிலின் பெயர் = ஏழ்பெருந்தீவு

கீழேழுலகின் பெயர் = அதலம் விதலம் சுதலம் நிதலம் தராதலம் ரசாதலம் பாதலம்

நரகத்தின் பெயர் = நிரயம் பவர்க்கம் கும்பி புலவு ஊழ்த்தல் அபரம் அள்ளல் அளறு அதோகதி பாவம் துவாந்தம் அருஞ்சிறை இருள்

ஏழு நரகங்களின் பெயர் = கூடசாலம் கும்பிபாகம் அள்ளல் அ தோகதி ஆர்வம் பூதி செந்து

நாட்டின் பெயர் = பைதிரம் மண்டிலம் பாடி தேயம் தண்ணடை நீவரம் கோட்டம் சனபதம் சும்மை அகலுள் கண்டம் ஏணி இராச்சியம் உலகு

உலகின் பொதுப் பெயர் = புவனம் நாடு பொழில் தலம் புடவி பவனம் இராச்சியம்

காசியின் பெயர் = வாராணாசி

காஞ்சியின் பெயர் = கச்சி

சிதம்பரத்தின் பெயர் = மன்றம்

திருவாரூரின் பெயர் = கமலை

உறையூரின் பெயர் = கோழி

மதுரையின் பெயர் = கூடல்

கருவூரின் பெயர் = வஞ்சி

கடாரத்தின் பெயர் = காழகம்

சிங்களத்தின் பெயர் = ஈழம்

மிதிலையின் பெயர் = விதேகை

அவந்திநகரின் பெயர் = உஞ்சை

அரித்துவாரத்தின் பெயர் = மாயாபுரி

காவிரிப்பூம்பட்டினத்தின் பெயர் = கரகநதி புகார்

புரத்தின் பெயர் = புரம்

சேரியின் பெயர் = பாடி

முனைமேற்சொன்றோருறைபதியின் பெயர் = பாசறை.

ஊரின் பெயர் = பூக்கம் கேடகம் பூரியம் பூண்டி பாக்கம் புரி கெடி பதி நகர் சும்மை சேரி மண்டிலம் சேர்வு குப்பம் காடு குடிக்காடு வேலி அகலுள் வைப்பு கிராமம் வசதி அருப்பம் ஆதரம் இல்லிடம் புகடலிம் புரம் பாழி நத்தம் கோசரம் ஒக்கம் உறையுள் இருக்கை

சிற்றூரின் பெயர் = பேடு குடி தண்ணடை பட்டு நொச்சி பள்ளி

நிலத்தின் பெயர் = மா திணை வேலி

மற்றும்நிலத்தின் பெயர் பூ

வழியின் பெயர் = அதர் அயனம் ஆறு அடைவு பதவை வதி அத்தம் மார்க்கம் கடவை கிறி நடை போக்கு இடவை தாரி தாரை இயவை தெரு ஒழுக்கம் செப்பம் சுரம் சரி நெறி செலவு தரங்கு பட்டம் வனம் கால் பதம் வட்டை வகிர் வாரி

அருநெறியின் பெயர் = அத்தம் கடம் சுரம்

யானைசெல்வழியின் பெயர் = தண்டம்

இழிந்தேறும் வழியின் பெயர் = படுகர்

சிறுவழியின் பெயர் = விடங்கர்

நீள்வழியின் பெயர் = அளக்கர்

கவர்வழியின் பெயர் = கவலை

முதுவரம்புவழியின் பெயர் = மஞ்சில்

புதுவரம்புவழியின் பெயர் = மரிசி

பள்ளத்தின் பெயர் = ஞெள்ளல் தாழ்வு படுகர் அவல் குழி இழிவு பயம்பு

மேட்டின் பெயர் = உயர்நிலம், திடர், சுவல், ஓங்கல், திட்டை, மிசை, மோடு

சிறுதிட்டையின் பெயர் = பாறை மேடு முரம்பு பதுக்கை

குப்பைமேட்டின் பெயர் = கரு குவை கொம்மை திடர்

நடுவின் பெயர் = நனந்தலை நாப்பண் மத்தியம் நள் ஒத்தல்நா அணவு இடை கூழை

ஐந்திணையின் பெயர் = குறிஞ்சி பாலை முல்லை மருதம் நெய்தல்

அவற்றுள் குறிஞ்சிநிலத்தின் பெயர் = புறணி துருக்கம் புறவம் வன்பால் குறும்பொறை புறம்பணை

மலையின் பெயர் = விலங்கல் சயிலம் விண்டு வெற்பு சிலம்பு சிமயம் சிகிரி சிலோச்சயம் பொருப்பு பொங்கர் பொறை கோ பூதரம் பருப்பதம் பதலை பறம்பு பாதவம் அத்திரி நகம் அடுக்கல் நவிரம் குத்திரம் குவடு கோத்திரம் குன்று தாணு அசலம் சானு மேரு ஓதி வீரம் கிரி காண்டம் ஓங்கல் பீலி திகிரி அரி பிறங்கல் மாதிரம் கல் வரை பொகுட்டு தரணி சிமிலம் சையம் பத்திரம் வேதண்டம் இரவி மேதரம் சாரல் பொற்றை நாகம் சிலை போதி

சிறுமலையின் பெயர் = குன்று பொற்றை குவடு குறும்பொறை

இறும்பு

மலைப்பக்கத்தின் பெயர் = சாரல் சரி கடம் தடம்சானு வாரம் நிதம்பம்

மலைமுகட்டின் பெயர் = குவடு, கோடு, கூடம், கொடுமுடி, சிகரம், மலையம், சேண்.

பாறையின் பெயர் = அறை.

துறுகல்லின் பெயர் = பொறை.

விடரின் பெயர் = விடர், கல்லளை.

கற்பாழியின் பெயர் = காண்டை.

கீழறையின் பெயர் = பிலம்.

மலைமுழையின் பெயர் = முடுக்கர், கந்தரம், பிலம்,குகை, குகரம், கற்புழை, நிகுஞ்சம், வங்கு.

பெருங்கல்லின் பெயர் = கேளிதம்.

சிறுகல்லின் பெயர் = உபலம். .

திரண்டகல்லின் பெயர் = உலங்கு, குண்டு, உலம்.

எழுமலையின் பெயர் = கைலை, இமயம், மந்தரம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலகிரி.

இமயமலையின் பெயர் = பூதரம், ஆதிமலை, பொன்மலை, சிமயம், ஏமந்தாசலம்.

மற்றுமிமயமலையின் பெயர் = மேரு,புள்ளிமலை.

மகமேருவின் பெயர் = தேவராலயம், பெருமலை, வடமலை, மூவாமலை, மந்தரம், பொன்மலை. .

கைலாயகிரியின் பெயர் = வெள்ளியங்கிரி, சயிலாதி, வேதண்டம், கண்ணுதல் மலை, நொடித்தான்மலை.

பொதியமலையின் பெயர் = தென்மலை, மலையம்.

கொல்லிமலையின் பெயர் = வல்லியம்.

மலையரையன் பெயர் = கிரிராசன், *உமையவட் பெற்றோன், இமவான்.

மலைமேற்றுருக்கத்தின் பெயர் = அருப்பம்.

மலைச்சாரல் வீழ்புனலின் பெயர் = அருவி.

அருவிப்புனல் வீழிடத்தின் பெயர் = தூவானம்.

மலைக்கணவாயின் பெயர் = பூழை.

தினைப்புனத்தின் பெயர் = ஏனல், வளாகம்.

குறிஞ்சி நிலத்தூரின் பெயர் = குறும்பொறை, சீறூர், சிறுகுடி.

குறிஞ்சி நிலப்பறையின் பெயர் = தொண்டகம், முருகியம், துடி.

குறிஞ்சி நிலமாக்களின் பெயர் = கானவர், குறவர்.

குறிஞ்சி நிலப்பெண்கள் பெயர் = குறத்தியர், கொடிச்சியர், மறத்தியர்.

குறிஞ்சித் தலைமகன் பெயர் = பொருநன், சிலம்பன், வெற்பன்.

குறிஞ்சிக் கடவுளின் பெயர் = கந்தன்.

பாலைத்திணையின் பெயர் = மறுபுலம், செம்புலம், வன்பால்.

பிளப்பின் பெயர் = விடர், கமர்.

பரலடுத்துயர் நிலத்தின் பெயர் = முரம்பு, பதுக்கை.

பாலை நிலத்தூரின் பெயர் = முனையிடம், குறும்பு.

பாலை நிலப்பறையின் பெயர் = துடி.

பாலை நிலமாக்கள் பெயர் = மறவர், எயினர், சவரர், கிராதர்,

கானவர்,குறவர், புளினர்.

பாலை நிலப் பெண்கள் பெயர் = எயிற்றியர், பேதையர், மறத்தியர்.

பாலை நிலத்தலைமகன் பெயர் = விடலை, காளை, மீளி.

பாலை நிலக்கடவுளின் பெயர் = துர்க்கை.

முல்லைத் திணையின் பெயர் = புறவம், புறம்பணை, புறவணி.

காட்டின் பெயர் = கானம், கடறு, கான், காந்தாரம், தாவம், புறவம், சங்கிரம், கட்சி, அடவி, காண்டகம், விந்தம், கானகம், கவனம், குறும்பொறை, ஆரணியம், குப்பம், கோட்டை, அரணம், வல்லை, துருக்கம், உயவை, சுரம், கானனம், கடம், பழுவம், பொச்சை, கண்டகம், தில்லம், களரி, முளரி, ககனம், அத்தம், வனம்.

காட்டுத் துருக்கத்தின் பெயர் = அருப்பம், கோட்டை, வல்லை, ஆரணியம், அரணம்.

முல்லை நிலக்கான்யாற்றின் பெயர் = கலுழி, உயவை.

பழங்கொல்லையின் பெயர் = முதைப்புனம்.

புதுக்கொல்லையின் பெயர் = இதைப்புனம்.

மற்றுமந்நிலத்தின் பெயர் = தில்லியம்.

முல்லை நிலத்தூரின் பெயர் = பாடி.

முல்லை நிலப்பறையின் பெயர் = ஏறுகோள், பம்பை.

முல்லை நிலமாக்கள் பெயர் = இடையர். அண்டர், பொதுவர், கோபாலர், குடவர், அமுதர், கோவலர், ஆயர், தொறுவர், விந்தர்.

முல்லை நிலப்பெண்டிர் பெயர் = இடைச்சியர், தொறுத்தியர், பொதுவியர், குடத்தியர்.

முல்லை நிலத்தலைவன் பெயர் = கானக நாடன், குறும்பொறைநாடன், தோன்றல், அண்ணல்.

முல்லை நிலக்கடவுளின் பெயர் = திருமால்.

மருதத் திணையின் பெயர் = பழனம், தொடு, பணை, மென்பால், கழனி, பண்ணை.

யாற்றின் பெயர் = ஒலியல் உந்தி, புனல், ஒணம், குடிஞை , சிந்து, தீர்த்திகை, தீபவதி, தடினி, ஆபதகை.

யாற்றிடைக் குறையின் பெயர் = இலங்கை, அரங்கம், துருத்தி.

வெண்மணலின் பெயர் = வாலுகம்.

கருமணலின் பெயர் = அறல்.

நுண்மணலின் பெயர் = அதர், அயிர், எக்கர்.

புழுதியின் பெயர் = பொடி, மண்.

.மணற்குன்றின் பெயர் = புளினம்.

ஊறலின் பெயர் = அஃகம், உறவி, அசும்பு.

கங்கையின் பெயர் = வானதி, பகீரதி, மந்தாகினி, சானவி,வரனதி, சுரநதி, விமலை, திரிபதகை, தெய்வநதி.

யமுனையின் பெயர் = கதிரவன்புதல்வி, காளிந்தி.

சரச்சுவதி நதியின் பெயர் = சோணை.

கௌதமை நதியின் பெயர் = கோதை.

நருமதை நதியின் பெயர் = சோமன் புத்திரி, இரேவை.

காவிரியின் பெயர் = பொன்னி.

பொருநையின் பெயர் = பொருந்தம்.

கன்னி நதியின் பெயர் = குமரி

ஆன்பொருந்த நதியின் பெயர் = ஆனிவானி ஆன்பொருநை சூதநதி

வைகை நதியின் பெயர் = வேகவதி (

கோதாவரியின் பெயர் = விமலை

மருத நிலத்தூரின் பெயர் = மடப்பம் தண்ணடை

மருத நிலப்பழையின் பெயர் = அரி கிணை முரசம் பணை

வயலின் பெயர் = கழனி புலம் கைதை தடி மருதம் வரப்புள்மா செறு பண்ணை பானல் பழனம் விளையுள் பணை செய்

சிறுசெய்யின் பெயர் = குண்டில் பாத்தி

வரம்பின் பெயர் = மரிசு கோடு கூலம்

வரம்பருகின் பெயர் = கங்கு மரிசு

செந்நெல்விளை நிலத்தின் பெயர் = சாலேயம்

அனைத்துமுண்டாகு நன்னிலத்தின் பெயர் = உறாவரை

பாழ் நிலத்தின் பெயர் = கரம்பு களரி

விளையா நிலத்தின் பெயர் = களர் சவர்

மருதநில மாக்களின் பெயர் = களமர் உழவர் கடைஞர் சிலதர் மள்ளர் மேழியர்

மருதநிலப் பெண்கள் பெயர் = உழத்தியர் கடைசியர்

மருதநிலத் தலைமகன் பெயர் = மகிழ்நன் ஊரன் கிறவன்

மருதநிலக் கடவுள் பெயர் = அமரர்பதி

நெய்தற்றிணையின் பெயர் = கடல்

கடலின் பெயர் = அம்பரம் ஆர்கலி அளக்கர் தோயம் அம்புராசி மகராலயம் பரவை சலதி பௌவம் மகோததி சலநிதி வீரை வேலா வலயம் நீர் வெள்ளம் வாரி வேலை வாருணம் புணரி சிந்து முந்நீர் தொன்னீர் நரலை சக்கரம் உந்தி சலராசி உப்பு உததி

சாகரம் சமுத்திரம் நேமி நதிபதி பாராவாரம் பயோததி வாரிதி வாரணம் வலயம் அத்தி ஆழி பெருநீர் அலை உவா உவரி சிந்துவாரம் ஓதம் அரி குரவை அழுவம் தொண்டிரை கார் கோள்

எழு கடலின் பெயர் = உப்பு தேன் கருப்பஞ்சாறு தயிர் நெய் பால் அப்பு

கழி முகத்தின் பெயர் = அதோமுகம் புகார் அழிவு கூடல் காயல்

மற்றும் கழிமுகத்தின் பெயர் = அருவி கயவு

கடற்றிரையின் பெயர் = ஓதம் புணரி சீகரம் வேலை அலை

உவர்நீரின் பெயர் = உறை

கடற்கரையின் பெயர் = வேலை பாராவாரம்

தோணா முகத்தின் பெயர் = சூழ்கழியிருக்கை

உப்பளத்தின் பெயர் = அளம் கானல் அளக்கர் உவளகம் கழி நிலம் மரக்கால்

கழியின் பெயர் = காயல் முகம்

உவர்த்தரையின் பெயர் = இருணம்

மணற்குவையின் பெயர் = புளினம்

உவர்க் களத்தின் பெயர் = உவளகம்

உப்பமைப்போர் பெயர் = உமணர் அளவர் உப்பர்

நெய்தனிலத்தூரின் பெயர் = பாக்கம் பட்டினம்

நெய்தனிலப் பறையின் பெயர் = சாபறை, மீன், கோட்பறை.

நெய்தனில மாக்கள் பெயர் = கடலர் திமிலர் சலவர் நுளையர் பரதர் வலையர்

நெய்தனிலப் பெண்கள் பெயர் = பரத்தியர் நுளைச்சியர்

நெய்தற்றலை மகன் பெயர் = மெல்லன் புலம்பன் தண்கடற் சேர்ப்பன் துறைவன் கொண்கன்

நெய்தனிலக் கடவுளின் பெயர் = வருணன்

நீர்நிலையின் பெயர் = இலைஞ்சி பண்ணை ஏல்வை குண்டம் அலந்தை பொய்கை வலயம் சுனை சிறை பட்டம் உடுவை பயம்பு படுகர் குட்டம்தாங்கல் கோட்டகம் ஏரி உவளகம் மடு ஓடை படு தடம் வாவி தடாகம் ஆவி சூழி கிடங்கு சலதரம் கேணி பணை கயம் பல்வலம் நளினி இலந்தை மூழி குழி குளம்

புனற்கரைவரம்பு இவற்றின் பெயர் = கூலம் தீரம் வாரம் கோடு.

சேற்றின் பெயர் = அளறு பூழி அளக்கர் சேதசம் அசறு பங்கம் அள்ளல் குழை தொளி கொள்ளம் செய்யல் கும்பி குழம்பு தொள்ளி சகதி தொய்யல் நுரம்பு அசும்பு செதும்பு அங்கணம் பூகி

அருவருப்புறு சேற்றின் பெயர் = நொளில் ஊழில்

சேற்றிலெழுங்குமிழியின் பெயர் = கொப்புள் பொகுட்டு

ஊறலின் பெயர் = உறவி அசும்பு ஊற்று

செய்கரையின் பெயர் = சேது அணை குரம்பு குலை

கிணற்றின் பெயர் = உறவி கூவல் கூபம்

ஊரிலுள்ளாருண்ணும் நீரின் பெயர் = ஊருணி

சுடுகாட்டின் பெயர் = ஈமம் மயானம் சுடலை சுடுநிலம் இடுகாடு புறங்காடு பிதிர்வனம்

சாம்பரின் பெயர் = அடலை வெண்பலி

பொடியின் பெயர் = துகள் நீறு சுண்ணம் குறுமல் சிதர் பராகம் சின்னம் பிதிர் நுணுங்கு சன்னம் நூறு தாது பூதி தூள் புழுதி அணு

புற்றின் பெயர் = வன்மீகம்

புற்றாஞ்சோற்றின் பெயர் = குறும்பி

ஒதுக்கிடத்தின் பெயர் = துச்சில்

வேறிடத்தின் பெயர் = ஒருசிறை

பசும்புற்றரையின் பெயர் = அரிதம் சாட்டுவலம்

களர்நிலத்தின் பெயர் = முதுநிலம்

யுத்தகளத்தின் பெயர் = களம் பறந்தலை போர்க்களங் களரி ஆகவபூமி விளாகம் செருக்களம் அடுகளம் செங்களம் அமர்க்களம் மொய் படுகளம்

பிணம்படு நிலத்தின் பெயர் = பறந்தலை செம்புலம்

பகைமேற் சென்றோருறைபதியின் பெயர் = பாசறை முனைப்பதி பாடி பாளையம் பாளி

மற்றும் பகைமேற்சென்றோ ருறைபதியின் பெயர் = கேடகம் கடவை

நகரத்தின் பொதுப் பெயர் = ஆலயம் நிகாயம் புரி ஆவாசம் தாமம் சாதனம் தாவளம் சரணம் பதி பள்ளி பாழிபாடி நிலயம் நிகேதனம் நியமம் நிசாதனம் உறையுள் வசதி உசம் சம்வாகம் குடம் வேசனம் கோட்டம் அகரம் புரம்

அகழின் பெயர் = ஓடை கிடங்கு கேணி உடு அகப்பா பரிகம் அகழி

மதிலின் பெயர் = ஆரை, புரிசை, அரணம், சாலம், வேலி, பரவை, உவளகம், இஞ்சி, ஓதை, வேணகை, எயில், சிறை, கடகம், துருக்கம், அகப்பா, சுற்று, காப்பி, வரைப்பு, சக்கரம், வாரி, காவல், அரண், புறம், நொச்சி உரம்

மற்றுமதிலின் பெயர் = ஆரல் பிரகாரம் பந்தமுமாகும் ஆக

மதிலுறுப்பின் பெயர் = ஞாயில் எந்திரம் நாஞ்சில் கோசம் விதப்பு நரலை பதப்பாடு தோணி கொத்தளம் பொறி

மதிலுளுயர் நிலத்தின் பெயர் = அகப்பா பரிகம்

வாரியுளுயர் நிலத்தின் பெயர் = பரிகை கற்பா

ஆழ்வாரி நிலத்தின் பெயர் = ஓதை

கோபுர வாயிலின் பெயர் = கோட்டி வாரி

மற்றுங் கோபுரவாயிலின் பெயர் = ஆத்தானம் அரிகூடம்

கோபுரவாயிற் புகும்புழையின் பெயர் = புதவு

கோபுரவாயிற்றிண்ணையின் பெயர் = அளிந்தம்

வதுவைத் திண்ணையின் பெயர் = மணை வேதிகை

கடைத் தெருவின் பெயர் = ஆவணம், பீடிகை, கூலம், அங்காடி, சேனை, நியமம்

தெருவின் பெயர் = விச்சை, ஆவணம், வீதி, மறுகு, சேனை, நியமம், சிறகு, ஞெள்ளல், வாடை, கோசு, மார்க்கம், ஒலியல், பாடகம்

மற்றுந் தெருவின் பெயர் = செப்பம் வேணி சிரேணி ஆக

சந்தியின் பெயர் = அந்தி கவலை வரி அரி கோடகம்

முச்சந்தியின் பெயர் = = அந்தி,

நாற்சந்தியின் பெயர் = = சோடகஞ், சிருங்காடகம், வரிசந்தி, சதுத்தம்.

சேரியின் பெயர் = = பாடம், வேணி, வாடை, முறி, சிரேணி

அரசர்வீதியின் பெயர் = = பூரியம்.

வைசியர் சேரியின் பெயர் = = வாசிகை.

இடைச் சேரியின் பெயர் = = ஆவிரம்,வல்லியம், உவளகம்.

வேடர் வீதியின் பெயர் = = பக்கணம்.

.. அக்க சாலையின் பெயர் = = ஆவேசனம்.

அம்பலத்தின் பெயர் = = பொதியில், மன்றம்,பொது, சபை.

அரசர் கோயிலின் பெயர் = = மாளிகை, சாலை, மந்திரம், பவனம், குலம்.

அரசிருக்கையின் பெயர் = = அத்தாணி, பூரியம்,ஆசாரம், வேத்தவை

சித்திரகூடத்தின் பெயர் = = தெற்றி, அம்பலம்.

மண்டபத்தின் பெயர் = = மானம், சமித்தம்.

மன்னன்றேவியில்லத்தின் பெயர் = = அந்தப்புரம், கந்தவாரம், அரண்மனை,

கோபுரத்தின் பெயர் = = கூடம், சிகரி, சிகரம்.

மாடத்தின் பெயர் = = மாளிகை, சூளிகை, தெற்றி.

.. உபரிகையின் பெயர் = = மேனிலை.

நிலவறையிந் பெயர் = = கீழ்நிலை.

..நாடகசாலையின் பெயர் = = நவாங்கம்.

ஆடலிடத்துக்கும்வட்டாடிடத்துக்கும் பெயர் = = அரங்கம்.

பாடல்பலியிடத்தின் பெயர் = = பட்டிமண்டபம்.

தேவர் கோவிலின் பெயர் = = சிநகரம், சேதிமம், சிதேந்திரம், கோட்டம், நிலையம், மந்திரம், நிகேதனம், ஆலயம், நகரம், தனி.

மல், படை, சூது, கல்விபயி லிடத்தின் பெயர் = = கழகம். =

வீட்டின் பெயர் = மனை நகர் சேர்பு வசதி அகம் இல் புரையுள் பாத்தி புக்கில் இல்லம் பவனம் உறையுள் பதி மாடம் குலம் இடவகை இல்லிடம்

சிற்றிலின் பெயர் = குரம்பை குடில் குடிசை

வீட்டிறப்பின் பெயர் = இறை வளவி

முகட்டின் பெயர் = விடங்கம் கொடைக்கை மஞ்சு

கல்லூரியின் பெயர் = கல்வி சுற்றுவாரி

வேயுளின் பெயர் = வேய்தல்

தாழ்வாரத்தின் பெயர் = ஆரோகணம் சோபானம்

முற்றத்தின் பெயர் = முன்றில் அங்கணம்

நிலாமுற்றத்தின் பெயர் = அரமியம் (!)

தூம்புவாயின் பெயர் = அங்கணம்

பொல்லாநிலத்தின் பெயர் = சகதி

சலதாரையின் பெயர் = சுருங்கு புழல்

மற்றுஞ்சலதாரையின் பெயர் = அங்கணம்

நீர்தகைகதவின் பெயர் = ஓ

சாளரவாலின் பெயர் = சாலேகம் வாதாயனம் சாலம் நுழை
சாலகம் காலதர்

மனைவாயிலின் பெயர் = துவாரம், வாரி, தோட்டி, உவளகம்,
புகுதி, கோட்டி, புதவு, கடை, தடம், அருநெறி, தூம்பு, சிதம்

கதவின் பெயர் = ஓபு கிளர்வி யுதைபு நிகுத்தை காப்பு வாரி
கபாடம் தோட்டி

தாழின் பெயர் = காழ் சீப்பு கடிகை

துறப்பின் பெயர் = அள் கொல் பறலிகை வலிப்பற்று பூட்டு வீகம்

யானைக்கூடத்தின் பெயர் = ஆலயம் ஒளி

யானைதுயிலிடத்தின் பெயர் = சேவகம் சாலை சேக்கை

குதிரைப்பந்தியின் பெயர் = மந்திரம் சாலை பணை லாயம்

தொழுவின் பெயர் = தொழுகு பட்டி தொறுவிடம் தொழுவு தோழம் வேலி ஆனிலை

கற்படுத்ததரையின் பெயர் = குட்டிமம்

சுவர்த்தலத்தின் பெயர் = உவமாநிலம் பித்திகை

திண்ணையின் பெயர் = திட்டை, குறடு, தெற்றி, வேதிகை, மண்ணீடு.

அடுக்களையின் பெயர் = அட்டில், மடைப்பள்ளி.

அடுப்பின் பெயர் = காமரம், சுல்லி, குமுதம், உத்தானம்.

அக்கினிட்டியின் பெயர் = ஞெகிழி, இந்தளம், நெருப்பிடுகலம், அனற்குவை.

கடைக்கொள்ளியின் பெயர் = அலாதம், இராதம், ஞெகிழி.

மற்றுங் கடைக்கொள்ளியின் பெயர் = முளரி, உற்கை.

வேள்விக்குண்டத்தின் பெயர் = வேதி, நித்தம்.

மட்கலஞ்சுடுமிடத்தின் பெயர் = சுள்ளை, சூளை.

உலைக்கலத்தின் பெயர் = உறவி.

உலைமூக்கின் பெயர் = குருகு, சிவை.

கரியின் பெயர் = கந்தள், இருந்தை, நல்லம்.

குதிரின் பெயர் = புகல்.

தவத்தோரிருக்குமிடத்தின் பெயர் = பாழி, கரண்டை, பள்ளி, மடம், குகை, தாபதம்.

கூட்டின் பெயர் = குடம்பை, கட்சி, குலாயம்.

பண்ணுங்கூட்டின் பெயர் = பஞ்சரம், குலாயம்.

கல்விபயில் களத்தின் பெயர் = கழகம், பட்டிமம்.

துயிலிடத்தின் பெயர் = ஆய்வை, கிடக்கை, அணை, பரியங்கம், பாயல், சேக்கை, பள்ளி, தளிமம், சாயல், தட்டம், தற்பம், சயனம், அம்பரம், சேர்விடம்.

விலங்கு துயிலிடத்தின் பெயர் = பாழி, பண்ணை, பணை, பட்டம், போத்து, சேக்கை.

தோட்டத்தின் பெயர் = பாதவம், துடவை, படப்பை.

மற்றும் தோட்டத்தின் பெயர் = ஆரம், தொடு.

வேலியின் பெயர் = வீர்தி, காவல்.

நுழைவாயிலின் பெயர் = நூழை, சுருங்கை.

பரணின் பெயர் = பணவை, இதணம், கழுது.

கவரிறுக்கியின் பெயர் = கடவை, நடவை, மடவை.

காதவழியின் பெயர் = காவதம்.

கூப்பிடு தூரத்தின் பெயர் = குரோசம், எல்லை.

யோசனையின் பெயர் = புகை.

கோழிப்பறவையளவின் பெயர் = கிரவுஞ்சம்.

இடத்தின் பெயர் = வாசம், பாடு, மாடு, கடை, சிறை, சாதனம், பக்கம், தாபரம், வாய், புலம், மருங்கு, பாங்கு, நத்தம், வைப்பு, மரு, தலம், அடி,வயின், மதர்வு, களம், வழி, வளாகம், உழை, பட்டி, வகை, திணை, சூழல், தலை, இடம், அருகு, தானம், கண், இடை, சார், கால், பின், முதல், தாவளம், பால், உளி, பாழி, நிலம், இல், பள்ளி, ஞாங்கர், நிலை, பதி, உறையுள் நிசாதனம், முன்னர், நியமம், வசதி, நிகாயம், தேயம், புடை, அயமராட்டம், கோட்டம், கீழ், மேல், மடம்.

மற்றும் இடத்தின் பெயர் = காடு. *ஆக

சபையின் பெயர் = சங்கம், குழு, சமுகம், அவை, கோட்டி, தொகுதி, கணம், கூட்டம், சமவாயம்.

நால்வகையரணின் பெயர் = மலை, காடு, மதில், நீர்.

வன்பாலின் பெயர் = குறிஞ்சி, பாலை.

மென்பாலின் பெயர் = மருதம்.

சமப்பாலின் பெயர் = முல்லை, நெய்தல். *

நான்காவது அவனிவகை முற்றிற்று.
ஆக சூத்திரம் .

---

ஐந்தாவது = ஆடவர்வகை / பெயர்ப்பிரிவு

பார்ப்பார் பெயர் – அறவோர், பூசுரர், அறுதொழிலாளர், இரு பிறப்பாளர், எரிவளர்ப்போர், ஆதிவருணர், வேதியர், அந்தணர், வேள்வியாளர், மறையவர், விப்பிரர், மேற்குலத்தோர், முற்குலத்தோர், ஐயர், வேதபாரகர், முப்புரிநூலோர், தொழுகுலர்

மற்றும் பார்ப்பார் பெயர் = முத்தீம ரபினர்

பிரமசாரியின் பெயர் = வன்னி

.அந்தணரறு தொழிலின் பெயர் – ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்

அந்தணர் மாலைகொடியின் பெயர் = மாலை கமலம் = கொடிவெளதம்

அந்தணர்க்குரிய பொருளின் பெயர் – தருப்பை, முஞ்சிப்புல், சமித்து

துரோணாசாரியின் பெயர் – வேதக்கொடியோன், வின்னூலாளன், பாரத்துவாசன், கும்பசன்

அரசரின் பெயர் – பார்த்திபர், இறைவர், காவலர், பதிகள், கோக்கள், வேந்தர், கொற்றவர், புரவலர், பொருநர், மன்னர், பூபாலர், நிருபர், முதல்வர், ஏந்தல், குரிசில், மகிபாலர், தலைவர்

எண்வகை மாலையின் பெயர் – வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி,

நொச்சி, உழிஞை, தும்பை, வாகை

அரசர்கள் படைகொடியின் பெயர் = படை – அறுவகைத்தானை, கொடி = சிங்கம்

அறுவகைச் சக்கரவர்த்திகளின் பெயர் – அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புரூரவா, சகரன், கார்த்தவீரியன்

வீட்டுமன் பெயர் – சந்தனு ,முன்மைந்தன் ,தெய்வ விரதன், கங்கை தகையன், காங்கேயன், பிரமசாரி

குருகுலத்தரசர் பெயர் = பௌரவர் கௌரவர் பாரதர்

தருமபுத்திரன் பெயர் – தருமமைந்தன், பொறையாளன், உதிட்டிரன், முரசக்கொடியோன்

துரியோதனன் பெயர் – மன்னர், மன்னவன், வணங்கா முடியோன், பன்னக முயர்த்தோன், காந்தாரிசெம்மல்

கன்னன் பெயர் – கதிர்மதலை, மிகுகொடையாளன், அங்கர் கோமான், கவசகுண்டலன், கானீனன், கச்சைக்கொடியோன்

வீமன் பெயர் = வாயுமைந்தன் கதாயுதன் மாருதி கோளரிக்கொடியோன் இடும்பிகொழுநன் விருசோதரன்

அருச்சுனன் பெயர் = பற்குனன் கிரீடி பார்த்தன் வீபற்சு சவ்வியசாசி விசயன் தனஞ்சயன் கிருட்டிணன் சுவேதவாகனன் சுரேந்திரன் மைந்தன் கிருட்டிணசகாயன் வானரக்கொடியோன் மாதவிகொழுநன் காண்டீபன் ஆண்டொழின்மைந்தன்

நகுலசாதேவர் பெயர் = மத்திரைமைந்தர் அச்சுவினிமதலையர் இரட்டையர்

சேரன் பெயர் = பூழியன் உதியன் கொங்கன் பொறையன் வானவன் குட்டுவன் வானவரம்பன் வில்லவன் குடநாடன் வஞ்சிவேந்தன் கொல்லிச்சிலம்பன் கோதை கோளன் பொருநைத்துறைவன் போந்தின் கண்ணியன் மலையன் மலையமான்

கொடிகுதிரையின் பெயர் = கொடி = வில்=புரவி – பாடலம்

சோழன் பெயர் = சென்னி வளவன் செம்பியன் கிள்ளி பொன்னித்துறைவன் புலிக்கொடியோன் மால் கோழிவேந்தன் நேரிவெற்பன் ஆரின்கண்ணியன் நேரியன் அபயன் சூரியன் புனனாடன்

மற்றுஞ்சோழன் பெயர் = கேசவன் ஆக

கொடிகுதிரையின் பெயர் = கொடி = புலி=புரவி = கோரம்

பாண்டியன் பெயர் = செழியன் கூடற்கோமான் தென்னவன் வழுதி மீனவன் பஞ்சவன் மாறன் கௌரியன் வேம்பின் கண்ணியன் கைதவன் மலையப்பொருப்பன் வைகைத்துறைவன் குமரிச்சேர்ப்பன்

கொடிகுதிரையின் பெயர் = கொடி கயல்; குதிரை = கனவட்டம்

சளுக்குவேந்தர் பெயர் = வேள்புலவரசர்

குறுநிலமன்னர் பெயர் = குறும்பர் புரோசர்

மற்றுங்குறுநிலமன்னர் பெயர் = வேளிர். ஆஉ

வரைவின்றியாவருக்குங் கொடுக்குந்தலைவள்ள லெழுவர் பெயர் = சகரன், காரி, நளன், துந்துமாரி, நிருதி, செம்பியன், விராடன்.

இரப்போர்க்குக் கொடுக்குமிடை வள்ளலெழுவர் பெயர் = அந்திமான், சிசுபாலன், அக்குரன், வக்கிரன், சந்திமான், கன்னன், சந்தன்.

புகழ்வோருக்குக் கொடுக்குங் கடை வள்ளலெழுவர் பெயர் = பாரி, எழிலி, நள்ளி, ஆய், மலையன், ஓரி, பேகன்.

அரசிய லாறின் பெயர் = படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண்.

அரசரறுவகைத் தானையின் பெயர் = வேல், வாள், வில், தேர், பரி, களிறு.

அரசியலாறின் பெயர் = அறநிலையறம், மறநிலையறம், அறநிலைப் பொருள், மறநிலைப்பொருள், அறநிலையின்பம், மறநிலையின்பம்.

அறநிலை யறத்தினியல் = நான்குவருணத்தாரும், தத்தம் வருணத்திற் பிறழாது நிலைபெறப்பாது காத்தலற நிலையறம்.

மறநிலை யறத்தினியல் = நிரை மீட்டலும் பகைவெல்லுதலு மாகிய செஞ்சோற்றுக்கடன் கழியாதாரைத் தண்டித்துக் குறைவுறச் செய்தன் மறநிலையறம்.

அறநிலைப் பொருளியல் = நெறிவழிநின்று தத்தநிலையினால் முயன்று
பெறுபொருளற நிலைப்பொருள்.

மறநிலைப் பொருளியல் = பகைஞர் பொருளுந் திறைப்பொருளுங்குற்றஞ் செய்தோரை யொறுக்கும் பொருளும் சூதில்வெல் பொருளு மறநிலைப் பொருள்.

அறநிலையின் பவியல் = குலமுமொழுக்கமுங் குணமும் பருவமுமொத்த கன்னிகையைத் தீவேட்டில் லத்திருத்த லறநிலை யின்பம்.

மறநிலையின் பவியல் = ஏறுதழுவலும் வில்லாலிலக்க மெய்தலும் பொருள் கொடுத்துக் கோடலும் வலிந்து கோடலுமாகிய நெறியால் மணத்தன்
மறநிலையின்பம்.

அரசரறுதொழிலின் பெயர் = ஓதல், பொருதல், உலகுபுரத்தல், ஈதல், வேட்டல், படைபயிறல்.

செங்கோல்வேந்தனெழுவகை நிலையின் பெயர் = அறம், பொருள்,
இன்பம், இம்மை, மறுமை, புகழ், மதிப்பு.

அரசர்க்கைம் பெருங்குழுவின் பெயர் = மந்திரியர் புரோகிதர் சேனாபதியர் தூதர் சாரணர்

அரசர்க் கெண்வகைத் துணைவர் பெயர் = கரணத்தியல்வோர் கருமவதிகாரர் சுற்றத்தார் கடைகாப்பாளர் நகரமாக்கள் படைத்தலைவர் இவுளிமறவர் யானைவீரர்

அரசர்க்கைவகை யுறுதிச் சுற்றத்தின் பெயர் = நட்பாளர்

அதணாளர் மடைத்தொழிலாளர் மருத்துவக்கலைஞர் நிமித்திகப்புலவர்

முற்கூறியமூவகையோரும் வெண்கொற்றக் குடையினை யுடைய அரசர்களுக்குப் பதினெண்வகைத்தொழில் செய்யும் பகுதி யுடையவர்களாவார்கள்

வைசியர்பொதுப் பெயர் = தாளாளர் இப்பர் தருமக்கிழவர் வேளாளர் இளங்கோக்கள்

வைசியர் முத்தொழிலின் பெயர் = கோக்களைக்காக்கல் பொருளீட்டல் ஏர்த்தொழில்

கோவைசியர் பெயர் = * வைசிய னொருவனே அந்தணர் வேள்வியைக் குறைபாடின்றி முடித்தற்குப்பூண்ட தொழில்களால் வந்த தொன்று தொட்டுள்ள பெயர்கள்சொல்லுமிடத்தில் இவர்களுள்கோவைசியர் = கோவலர் இப்பர் கோவர்த்தனர் எனப் பெயர்பெறுவார் (

தனவைசியர் பெயர் = நாய்கர் எட்டியர் வணிகர் பரதர்

பூவைசியர் பெயர் = உழவர் மேழியர் காராளர் இளங்கோ பூபாலர்

பூவைசியரறுதொழிலின் பெயர் = ஓதல் வேட்டல் உபகாரம் வாணிகம் பசுக்காவல் உழவுத்தொழில்

வணிகரெண்குணத்தின் பெயர் = தனிமையாற்றல் முனிவிலனாதல் இடனறிந்தொழுகல் பொழுதொடுபுணர்தல் உறுவதுதெரிதல் இறுவதஞ்சாமை ஈட்டல் பகுத்தல்

சூத்திரர் பெயர் = பின்னவர் சதுர்த்தர் பெருக்காளர் வளமையர் முத்தொழிலர் மண்மகள்புதல்வர் உழவர் ஏரினர் வாணர் காராளர் வினைஞர் மேழியர் வேளாளர்

வேளாளர்பத்துவகைத்தொழிலின் பெயர் = ஆணைவழிநிற்றல்' மாண்வினை தொடங்கல், கைக்கடனாற்றல், குற்றமனத்தின்மை, சுற்றம்

= = = = = = = = = = = = = =

*இதனைத்தரும நூலிற்காண்க .

போற்றல், நீங்காதமுயற்சி, மன்னிறைதருதல், ஒற்றுமைகோடல்,

ஒழுக்கம்,
விருந்துபுறந்தருதல்.

குருவின் பெயர் = பட்டாரகன், பதி, பண்ணவன், பகவன், அத்தன், தீர்த்தன், ஆசான், அடிகள், புங்கவன், சாமி, ஈசன், நாதன், இறைவன், கடவுள், கோமான், குரவன், ஐயன், கோமான்.

ஆசாரியன் பெயர் = ஓசன், பணிக்கன், உபாத்தி, தேசிகன்.

ஆயுள்வேதியர் பெயர் = மாமாத்திரர், பிடகர், மருத்துவர்.

குயவர் பெயர் = வேட்கோவர், கும்பகாரரர், குலாலர், சக்கியர்.

உப்புவணிகர் பெயர் = உமணர், அளவர், உப்பர்.

கடிகைமாக்கள் பெயர் = பெருநம்பிகள், மங்கலப்பாடகர், எட்டர்

கம்மாளர் பெயர் = கம்மியர், யவனர், ஓவியர், வித்தகர், தபதியர்.

கொல்லர் பெயர் = கருமர், மனுவர், கம்மியர்.

தச்சன் பெயர் = மரவினையாளன், தபதி

தட்டார் பெயர் = செங்கொல்லர், பொன்வினை செய்வோர்.

மற்றுந்தட்டார் பெயர் = அக்கசாலையர், சொன்னகாரரர். ஆக

கன்னார் பெயர் = கன்னுவர், கஞ்சகாரரர்.

சிற்பாசாரியர் பெயர் = கல்வினையர், கற்றொழிலோர்.

நரப்புக்கருவியாளர் பெயர் = குயிலுவர்.

தோற்கருவியாளர் பெயர் = இயவர்.

மிலேச்சர் பெயர் = ஆரியர்.

சோனகர் பெயர் = யவனர்.

சித்திரகாரரர் பெயர் = ஓவியர்.

முத்தங்கோப்பார் பெயர் = மணிகுயிற்றுநர்.

வண்ணார் பெயர் = காழியர், ஈரங்கொல்லியர்.

மற்றும் வண்ணார் பெயர் = ஏகாலியர், தூசர்.

நாவிதன் பெயர் = பெருமஞ்சிகன் மயிர்வினைஞன்

மற்றும்நாவிதன் பெயர் = ஏனாதி சிரையன்மங்கலியன் ஆக

செக்கான் பெயர் = சக்கிரி நந்தி

சங்கறுப்போர் பெயர் = வளைபோழ்நர்

மீகாமன் பெயர் = நீகான் மாலுமி மரக்கலன்

ஆட்டுவாணிகன் பெயர் = சாபலன்

ஊன்விலைஞர் பெயர் = சூனர்

தோல்விலைஞர் பெயர் = பறம்பர்

உறைகாரர் பெயர் = காரோடர்

துன்னர் பெயர் = குயினர் பொல்லார்

கள்விலைஞர் பெயர் = பழையர் துவசர் படுவர்

சண்டாளர் பெயர் = குணுங்கர் புலைஞர் கீழோர் இழிஞர் அணங்கு

பாணர் பெயர் = சென்னியர் வைரியர் செயிரியர் மதங்கர் இன்னிசைகாரர்

பாண்டொழிற்கீழ்மக்கள் பெயர் = பண்டர் ஓவர்

பாண்மகள் பெயர் = பாடினி விறலி பாட்டி மதங்கி பாடன்மகடூஉ

தேர்ப்பாகன் பெயர் = சாரதி சூதன் வலவன்

யானைப்பாகர் பெயர் = ஆதோரணர் வாதுவர்

பரிமாவடிப்போர் பெயர் = வாதுவர்

மடையர் பெயர் = வாலுவர் கூவியர் பானசிகர்

மற்றும்மடையர் பெயர் = பாசகர் ஆக

ஒற்றர் பெயர் = சாரர் வேயர் சாரணர்

கூத்தர் பெயர் = நாடகர் நிருத்தர் நடர் கண்ணுளர் கோடியர் வயிரியர் பொருநர்

நாடகக்கணிகையின் பெயர் = நடி கூத்தி

தமிழ்க்கூத்தர் பெயர் = வாயிலோர்

கழைக்கூத்தர் பெயர் = வேழம்பர்

வெறியாட்டாளன் பெயர் = வேலன் முருகன் தேவராளன் படிமத்தவன்.

தேவராட்டியின் பெயர் = சாலினி முதியாள் படிமத்தவள்

தூதர் பெயர் = வினையுரைப்போர் வழியுரைப்போர் உறுதியோர் பண்புரைப்போர்

கொலையாளன் பெயர் = காதகன் சாருகன்

வேதனைசெய்வோன் பெயர் = அருந்துதன்

ஆண்பாலின் பெயர் = மானவன் மகன் ஆடூஉ மைந்தன் ஆடவன் புமான் காளை

ஆண்பாலிற்சிறந்தவன் பெயர் = நம்பி

முதல்வன் பெயர் = ஆதி நாதன்

உயர்ந்தோர் பெயர் = உலகம்

பெருமையிற்சிறந்தோன் பெயர் = பெருமகன் மல்லன் தலைவன் பெருமான் குரிசில் செம்மல் கோமான் கோ ஆண்டகை பொருநன் அண்ணல் ஓங்கல் ஏந்தல் மீளி விடலை

எப்பொருட்குந்தலைவன் பெயர் = இறை காரணன் இயவுள் தோன்றல் அதிபன்

மந்திரியர் பெயர் = எண்ணர் நூலோர் அமைச்சர்

மந்திரித் தலைவர் பெயர் = முதுவர் குரவர் மூத்தோர் முன்னோர் உழையோர் சூழ்வோர் நூல்வல்லோர் அமைச்சர் தேர்ச்சித்துணைவர்

இவர்நட்பாளர் பெயர் = இப் பெயர்கள் அம்மந்திரத்தலைவர் நட்பாளருக்கும் வரும்

மந்திரிதந்திரியர் பெயர் = ஏனாதி காவிதி அமாத்தியர்

கருமத்தலைவன் பெயர் = வள்ளுவன் சாக்கை

போர்த்தலைவர் பெயர் = பொருநர்

பரிவாரத்தின் பெயர் = பரியாளம்

ஒத்துரைப்போர் பெயர் = கணக்காயர்

கலைவல்லோர் பெயர் = கவிஞர்

புலமையோர் பெயர் = மேலோர் பண்டிதர் புலவர் ஆசிரியர் புந்தியர் மேதையர்

அறிஞர் பெயர் = ஆன்றோர் சான்றோர்

பாவலர் பெயர் = கலைஞர்

கற்றோர் பெயர் = விற்பனர்

நாவலர் பெயர் = கவிகள் புலவர் கவிஞர்

மற்றும்நாவலர் பெயர் = சாரதி சாடு சூரியர் ஆக

மிகவல்லோர் பெயர் = விபுதர் நிபுணர் குசலர்

மற்றும்மிகவல்லோர் பெயர் = எழுத்தாளர் ஆக

அயலோர் பெயர் = நொதுமலர் வம்பலர்

புதியோர் பெயர் = அதிதியர் வம்பலர்

மூதறிவாளர் பெயர் = முதுவர்

குறிக்கொள்வோர் பெயர் = பாராயணர்

வல்லோன் பெயர் = வலவை வல்லவன் வல்லுநன்

மாட்டார் பெயர் = வல்லார்

நடுச்சொல்வோன் பெயர் = கள்வன் கரியன்

கொடையுளோன் பெயர் = புரவலன் ஈகையாளன் தியாகி
உபகாரி வேளாளன்

வள்ளியோன் பெயர் = வள்ளல் கொடையோன் வள்ளியோன்

இரப்போர் பெயர் = இரவலர் பரிசிலாளர் யாசகர்

புகழ்வோர் பெயர் = பூகதர் மாகதர் வந்தியர் பப்புவர் வேதாளியர்

தூர்த்தர் பெயர் = விடர் காமுகர்

காதலித்தோர் பெயர் = விழைந்தோர் ஆர்வலர் வேட்டோர்
நயந்தோர் ஆதரித்தோர்

வல்லாளன் பெயர் = வயவன் மீளி

திண்ணியோன் பெயர் = வியவன் வண்டன் வீரன் மிண்டன்
விறலோன் பொருநன் விடலை மள்ளன் திறலோன் பண்ணவன்

படைவீரர் பெயர் = மறவர் கூளியர் மள்ளர் பொருநர் இகலர்
செருநர் வாளாளர் வாளுழவர் படர் வீரர்

கீழோர் பெயர் = பல்லவர் கயவர் பதகர் நீசர் புல்லர் பூரியர்
புள்ளுவர் கையர் கலர் தீயோர் கண்டகர் மூடர் அசடர் அதன்மர்
முசுண்டர் சுமடர் வெளிறர் அற்பர்

அறிவிலான் பெயர் = முழுமகன் சிதடன் மூடன் பேதை இழுதை அஞ்ஞை ஆதன் ஏழை மடமகன் குதலை

அடிமையின் பெயர் = தொழும்பு தொண்டு தொத்து தாதர் தொறு விருத்தி

மற்றும்அடிமையின் பெயர் = சேடர் கிணகர் ஆக

கள்வர் பெயர் = கரவடர் சோரரர் புரையோர் கட்டோர் கரவர் பட்டிகர் திருடர்

அச்சமுடையோன் பெயர் = பீரு சிதன் பீதன் கரிதன் காதரன்

வஞ்சனையாளன் பெயர் = மாயன் நிகாதன்

வேகமுடையோன் பெயர் = கவனன் சவனன்

கடினன் பெயர் = கற்கசன்

வழிச்செல்வோன் பெயர் = பதிகன் பாந்தன்

மற்றும்வழிச்செல்வோன் பெயர் = வியவன் ஆக

ஏவுவான் பெயர் = வியவன்

தொழில்செய்வோர் பெயர் = தொழுவர் கம்மியர்

தரித்திரர் பெயர் = இல்லோர் ஆதுலர் வறியோர் ஏழையர் நல்கூர்ந்தோர் பேதையர்

மற்றும்தரித்திரர் பெயர் = அகிஞ்சினர் ஆக

வாயில்காப்போர் பெயர் = கடைகாவலர்

தசைதின்போன் பெயர் = சாடிலி கூடிலி

நோயுற்றொழிந்தோன் பெயர் = உல்லாபன்

மனோகரன் பெயர் = சல்லாபன்

புகளாழன் பெயர் = இயவுள்

குலமுள்ளோர் பெயர் = குலிஞர்

உரியோன் பெயர் = கிழவன்

நிருவாணியின் பெயர் = நக்கன்

கூர்மையில்லோன் பெயர் = மந்தன்

.நாகரிகர் பெயர் = = சதுரர், காமுகர்.

.கருணையுள்ளோன் பெயர் = = காருண்ணியன்.

.வரையாதுகொடுப்போர் பெயர் = = வள்ளியோர்.

ஓர்குடியிற்கொண்டோன் பெயர் = = சகலன்.

சுற்றத்தின் பெயர் = = கேள், ஒக்கல், கிளை, பந்தம், கூளி, கடும்பு, குடும்பம்.

உறவின் பெயர் = = நண்பு, தமர், உரியர், நட்பு, நட்டோர், பற்றினர்

தங்குடித்தமரின் பெயர் = = தாயத்தார், ஞாதியர்.

ஒருகுடியின் பெயர் = = உதிரப்பிரிவினர்.

வழித்தோன்றலின் பெயர் = = வழியோன்.

பாட்டன் பெயர் = = தாதை, தன்றாதை, மூதாதை.

மற்றும் பாட்டன் பெயர் = = பிதாமகன். ஆக

ஈன்றோன் பெயர் = = தாதை, அத்தன், தந்தை, பிதா,ஐயன்.

மாமன் பெயர் = = மாதுலன், அம்மான்.

மருமகன் பெயர் = = மருமான், பிறங்கடை, ஓங்கல்.

மூத்தோன் பெயர் = = அண்ணல், தமையன், தம்முன், தோன்றல் முன்னவன், சேட்டன்.

இளையோன் பெயர் = = பின்னவன், இளவல், பின்றோன்றல்,

கனிட்டன், எம்பி, அனுசன்.

தாயின் பெயர் = = அம்மை, அன்னை, ஆய், அவ்வை, தம்மனை மோய், ஈன்றாள், தன்னை.

முன்பிறந்தான் பெயர் = = அன்னை, செவிலி, தௌவை,சேட்டை, முன்னவள், மூத்தாள்.

பின்பிறந்தாள் பெயர் = = பின்னை, கையை, தங்கை.

மைத்துனன் பெயர் = = சம்மதன்.

மணவாளன் பெயர் = = கணவன், கொழுநன், காந்தன், கேள்வன், மணமகன், காதலன், வல்லவன், உரியோன், பதி, தவன், கொண்கன், பத்தா, துணைவன், தலைமகன், தலைவன்.

மற்றுமணவாளன் பெயர் = கண்டன் வேட்டோன் ஆக

மணவாளனுக்குரிய பெயர் = நாயகன்

மணமகள் பெயர் = உரிமை வல்லவி தாரம் துணைவி வாழ்க்கைத்துணை மணவாட்டி பாரி இல்லாள் பன்னி விருந்தனை இல்லவள் குடும்பினி களம் காந்தை இல் மனை காதலி நாயகி

மைந்தன் பெயர் = சந்ததி மதலை தநையன் காதலன் நந்தனன் சிறுவன் மெய்யன் தோன்றல் செம்மல் முளை சுதன் கால் பொருள் புதல்வன் புத்திரன் பிறங்கடை எச்சம் சேய்

மகள் பெயர் = புதல்வி சிறுமி புத்திரி தநையை சுதை ஐயை பந்தனை

பிள்ளையின் பெயர் = குழவி குழந்தை

மகன்மகள்என்னுமிருபாற்கும் பொதுப் பெயர் = எச்சம்

பாலர் பெயர் = மகார் குறுமாக்கள் சிறார்

இளைஞன் பெயர் = மழவன் குமரன் மைந்தன் சேடன் இளவல் முருகன் காளை

மற்றுமிளைஞன் பெயர் ஆடவன் உவா ஆக

தோழன் பெயர் = சிலதன் எலுவன் சேடன் நண்பன் பாங்கன் சகாயன்

தோழன்முன்னிலைப்பெபயர் = ஏடா

சங்காத்தியின் பெயர் = அருகன் சம்மதன் நண்பன்

தலைமைப்பெண் பெயர் = குரத்தி பெருமாட்டி ஆசாள் இறைவி கோமகள் தலைவி அடிகள் ஐயை சாமி அத்தை

பெண்மணிகளிற்சிறந்தவள் பெயர் = நங்கை

அருந்தவப்பெண் பெயர் = பைம்மை கௌந்தி

தோழியின் பெயர் = சிலதி பாங்கி சேடி இணங்கி துணைவி இகுளை சகி

தோழிமுன்னிலைப் பெயர் = ஏடி ஏலா

ஏவலிற்சிறந்தவள் பெயர் = சேடி

கைத்தாயின் பெயர் = தாதி, செவிலி, கோடாய், பின்னனை.

கன்னியின் பெயர் = குமரி.

கோலம்புனை பெண்ணின் பெயர் = வண்ணமகள்.

நால்வகைப்பெண் பருவத்தின் பெயர் = வாலை, தருணி, பிரவிடை விருத்தை.

. முதியாள் பெயர் = விருத்தை, மூத்தாள்.

.எழுவகைப்பெண் பருவத்தின் பெயர் = பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண். இவற்றினாண்டு , ,,, , ,

. மலடியின் பெயர் = மைம்மை, வந்தி.

கலன்கழிமகளிர் பெயர் = கைம்மை, கைனி, விதவை,

கைம்பெண்
அமங்கிலி.

.பொதுமகளிர் பெயர் = விலைமகள், சூளை, வேசி, பரத்தை, கணிகை

பெண்ணின் பெயர் = அரிவை, அங்கனை, மடந்தை, ஆடவள், தெரிவை,
மானினி, சிறுமி, இளம்பிடி, சுரிகுழல், மகடூஉ, காந்தை, மாது, வனிதை, நல்லாள், காரிகை, தளிரியல், அணங்கு, தையல், பெதும்பை, பேதை, மடந்தை, மங்கை, மாயோள், பாவை, பிணா. .

மித்திரர் பெயர் = ஒல்லுநர், துன்னுநர், ஒன்றுநர், நேர்ந்தார், நண்ணுநர், நள்ளுநர், நயந்தோர், மேவினர், சேர்ந்தோர்.

மாற்றலர் பெயர் = ஒல்லார், நோனார், ஒன்றலர், நண்ணலர், திருந்தலர், மேவலர், செற்றார், செறுநர், இன்னார், கருதலர், எண்ணலர், நள்ளார், பொருந்தலர், பற்றலர், புல்லார், சேரார், தெவ்வர், அரடையலர், தரியலர், தெறுநர், ஒட்டார், பகைஞர்.

ஆடவர்கூட்டத்தின் பெயர் = சவை, பண்ணை, சங்கம், கோட்டி, அவை.

மாதர் கூட்டத்தின் பெயர் = ஓரை, பண்ணை, ஆயம், குழு.

மகளிர் விளையாட்டின் பெயர் = ஓரை, பண்ணை, கெடவரல், பொய்தல், உண்டாட்டு, கிரீடை, உப்பு, கேளி, வண்டல்.

.மக்கட்பரப்பின் பெயர் = மன்பதை, பைஞ்ஞீலி.

.மக்கட்பொதுப் பெயர் = மாந்தர், மானவர், மானிடர், மண்ணவர், மனிதர், நரர்.

குலத்தின் பெயர் = குடி, திணை, விழுப்பம், ஒழுக்கம்.

குலமுள்ளோன் பெயர் = குலீனன்.

வேட்டோர் பெயர் = நயந்தோர், காதலர், நசையுநர், நயவர், விழைந்தோர், ஆர்வலர்.

குருடன் பெயர் = அந்தகன், சிதடன்.

முடவன் பெயர் = பங்கு, சூனியன்.

குறளன் பெயர் = குஞ்சன், வாமனன்.

மற்றுங்குறளன் பெயர் = சிந்தன்.

செவிடன் பெயர் = வதிரன்.

ஊமையின் பெயர் = மூகை, மூங்கை.

கூனன் பெயர் = கோணன்.

அலியின் பெயர் = பேடன், நபுஞ்சகன், பேதை, பெண்டகன், சண்டன்.

கொண்டோற் பிழைத்துப் பெறுமகன் பெயர் = குண்டகன்.

விதவை பெற்ற மதலையின் பெயர் = கோளகன்.

கன்னியிற் பிறந்தோன் பெயர் = கானீனன்.

நாற்குலத்தில் உயர்ந்தவாணு மிழிந்தபெண்ணுங் கூடிப்பிறந்த பிள்ளைகளின் பெயர் = அநுலோமர்.

உயர்ந்தபெண்ணு மிழிந்தவாணுங் கூடிப்பிறந்த பிள்ளைகளின் பெயர் = பிரதிலோமர்.

அநுலோமத்தாணு பிரதிலோமப்பெண்ணுங் கூடிப் பிறந்த பிள்ளைகளின் பெயர் = அந்தராளர்.

அநுலோமப்பெண்ணும் பிரதிலோமத்தாணுங் கூடிப்பிறந்த பிள்ளைகளின் பெயர் = விராத்தியர்.

பேடியிலக்கண வகை = நச்சுப்பேசல், நல்லிசையோர்தல், அச்சுமாறல், ஆண்பெண்ணாதல், ஒருகையைவீசிநடத்தல், தலையிலொருகை வைத்தல், எதிர்ந்தோரைக்கண்டு விலகல், எதிர்ந்தோர்மேற் செல்லுதல், பார்வைவேறுபடுதல், பிறருக்குநடுநடுங்கிச் சுழன்றுதிரிதல், பிறரைக்கண்டு நகைத்தல், நாணுதல், பலநாடகஞ் செய்தல், பக்கம்பார்த்தல், பதுங்கித்திரிதல், காரணமில்லாமற் பலவற்றைக்

கோபங்கொண்டு பேசல், தன் முலையைத் தானேவருத்தல், அசக்கல், அழுதல், சோர்ந்தருவருத்தல், குறுக்கிக்கூட்டிப் பார்த்தல், இடையில் ஒரு கை வைத்தல், அதனைவாங்கல், இரங்கிப்பேசல், எல்லெல்லென்றுபாடுதல், இவை போன்ற பிற செய்கைகள்.

கருவின் பெயர் = சினை, பீள், சூல், வயாவு, கருப்பம்.

தோலின் பெயர் = உரிவை, அதள், ஒலியல், புறணி, சருமம், வடகம், போர்வை, பச்சை, துருத்தி, துவக்கு, கிருத்திமம்.

இரத்தத்தின் பெயர் = செந்நீர், சோரி, நெய்த்தோர், செம்பால், புண்ணீர், சுடுவல், புலால்நீர், சோணிதம், உதிரம், குருதி, கறை

ஊனின் பெயர் = தசை, தூ, தடி, விடக்கு, புலை, பிசிதம், புலால், புண், புரணி, வள்ளூரம், புலவு.

மற்றும் ஊனின் பெயர் = இற்றி, இறைச்சி.

பிச்சின் பெயர் = ஊழை, மூளை, மாசு.

கருப்பம்பயிலிடத்தின் பெயர் = பைசந்தி, பைங்குழி.

ஈரலின் பெயர் = ஈருள்.

செவ்வீரலின் பெயர் = இரத்தம்.

விழுக்கின் பெயர் = விளர், நிணம், கொழுப்பு.

மற்றும் விழுக்கின் பெயர் = நெய், வழும்பு.

வழும்பின் பெயர் = வழுக்கு.

மலக்குரம்பையின் பெயர் = குடர்.

மெய்ம்மலத்தின் பெயர் = மாசு.

உண்மலத்தின் பெயர் = உபமலம்.

இந்திரியத்தின் பெயர் = கந்தம், சுக்கிலம்.

*குலையின் பெயர் = மூகை, குண்டி.

முடையின் பெயர் = பூதி, ஊழ்த்தல், தசை, புலவு.

சோணிதத்தின் பெயர் = செம்பால்.

நரம்பின் பெயர் = நாடி, சிரை, மேதை.

எலும்பின் பெயர் = என்பு, அத்தி, அங்கம், களேவரம்.

கழியுடலின் முழுவெலும்பின் பெயர் = கங்காளம்.

உடம்பின் பெயர் = ஆகம், காத்திரம், யாக்கை, தனு, உடல், பூதியம், புணர்வு, புகல், வியம், விம்மிதம், தேகம், அங்கம், மூர்த்தம், சரீரம், விக்கிரகம், பிண்டம், மேனி, தொக்கு, காயம், குரம்பை, கடம், மெய், சடம், புரம், பூட்சி, தாபரம், புற்கலம்.

வடிவத்தின் பெயர் = படிவம், உருவம், சட்டகம், மேனி, வண்ணம்.

காலின் பெயர் = பதம், பாதம், சரணம், கழல்.

மற்றுங்காலின் பெயர் = சலன், அடி, அங்கிரி, தாள். ஆக

கரட்டின் பெயர் = பரடு, மிசைத்திரள், காலடி.

கணைக்காலின் பெயர் = சங்கம்.

முழந்தாளின் பெயர் = சானு.

தொடையின் பெயர் = குறங்கு, வாமம், கவான், ஊரு.

அல்குலின் பெயர் = கடிதடம், நிதம்பம், அரை.

மற்றும் அல்குலின் பெயர் = வடிவு, அகல், உபத்தம்.

பிருட்டத்தின் பெயர் = பிருட்டம், சகனம், குய்யம், பாயுரு.

ஆன்குறியின் பெயர் = இலிங்கம், கோசம்.

பெண்குறியின் பெயர் = யோனி, பகம்.

மற்றும்பெண்குறியின் பெயர் = பூப்பகம்,பொன், சின்னம்.

இடையின் பெயர் = மத்திமம், நுசுப்பு, மருங்கு.

மருங்கின்பக்கத்தின் பெயர் = ஒக்கலை.

கொப்பூழின் பெயர் = இதலை, இலைஞ்சி, நாபி, உந்தி, போகில்.

மலத்தின் பெயர் = அமேத்தியம்.

சிறுநீரின் பெயர் = அமரி, உவரி.

வயிற்றின் பெயர் = குக்கி, துத்தம், மடி,வயின், உதரம், மோடு, சடரம், அகடு.

மார்பின் பெயர் = அகலம் உரம் ஆகம்

மற்றும்மார்பின் பெயர் = மருமம் நெஞ்சு

முலையின் பெயர் = பயோதரம் சுவர்க்கம் குருக்கண் அம்மம் நகிலம் தனம் குயம் சேக்கை கொம்மை கொங்கை

மற்றும் முலையின் பெயர் = பறம்பு

முலைக்கண்ணின் பெயர் = சிலீமுகம் சூசுகம்

கையின் பெயர் = கரம் அத்தம் பாணி தோள் கைத்தலம்

முழங்கையின் பெயர் = கூர்ப்பரம்

மணிக்கட்டின் பெயர் = கிலுத்தம்

உள்ளங்கையின் பெயர் = அங்கை குடங்கை அகங்கை

விரலின் பெயர் = அங்குலி

நகத்தின் பெயர் = உகிர்

தோளின் பெயர் = புயம் மொயம்பு வாகு

கமுக்கட்டின் பெயர் = வாகுமூலம் கைம்மூலம்

தோண்மேலின் பெயர் = சுவல் செகில் நிகலம்

கழுத்தின் பெயர் = கிரீவம் களம் கில்லம் கந்தரம் கண்டம் மிடறு

முதுகின் பெயர் = வெரிந் புறம் அபரம் வெந்

பிடர்த்தலையின் பெயர் = சுவல் பிடர் எருத்தம் சிறுபுறம் கயில் நிமம்

கதுப்பின் பெயர் = கபோலம் கொடிறு அணு கவுள்

மோவாயின் பெயர் = தாடி கட்டம்

மற்றுமோவாயின் பெயர் = சுவுகம் தாழ்வாய்

முகத்தின் பெயர் = ஆனனம் வதனம் துண்டம் வத்திரம்

உதட்டின் பெயர் = பாலிகை முத்தம் இதழ்

மேலிதழின் பெயர் = ஓட்டம்

கீழிதழின் பெயர் = அதரம்

அண்ணத்தின் பெயர் = அணரி

பல்லின் பெயர் = எயிறு தந்தம் தசனம்

மற்றும்பல்லின் பெயர் = முறுவல் நகை மூரல்

நகுதலின் பெயர் = சிரித்தற்கு மேற்கூறிய அம்மூன்று பெயருமே கொள்க

எயிற்றின் பெயர் = விளிம்பு

நாக்கின் பெயர் = நா தாலு தாரம் சிகுவை

வாயின் பெயர் = வைப்பு புலனிடம் பாங்கர்

உண்மிடற்றின் பெயர் = அணல்

உண்ணாக்கின் பெயர் = அண்ணம்

மற்றும் உண்ணாக்கின் பெயர் = சிறுநாக்கு

கீழ்வாய்ப்புறத்தின் பெயர் = அணல்

மேல்வாய்ப்புறத்தின் பெயர் = அணரி அண்ணம்

மற்றும் மேல்வாய்ப்புறத்தின் பெயர் = அணல்

மூக்கின் பெயர் = துண்டம் நாசி கோணம்

செவியின் பெயர் = காது கேள்வி அள் சுருதி கன்னம் சோத்திரம்

கண்ணின் பெயர் = திட்டி விலோசனம் நேத்திரம் நயனம் தாரை அம்பகம் விழி நாட்டம் அக்கம் நோக்கு சக்கு திருட்டி பார்வை கோ

கண்மணியின் பெயர் = தாரை

கண்ணிமையின் பெயர் = விளிம்பு

புருவத்தின் பெயர் = புரூரம் பிருகுடி நுதல்

மற்றும்புருவத்தின் பெயர் = புதல் புகுடி பீரு

கழுத்தின்பின்குழியின் பெயர் = பனிச்சை சூறை

தொண்டைக்குழியின் பெயர் = தொண்டை கில்லம்

நெற்றியின் பெயர் = முண்டகம் மத்தகம் நுதல் அளிகம் பாலம் குளம் இலலாடம்

தலையின் பெயர் = சிரம் கம் சேகரம் சென்னி முடி உத்தமாங்கம் நவிரம் உச்சி சிகரம் முண்டம் மத்தகம் மூர்த்தம் உவ்வி

குடுமியின் பெயர் = சிமிலி சிக்கம் சிகை சிமி

உச்சியின் பெயர் = நவிரம் சுடிகை சூழி

ஆண்பான்மயிரின் பெயர் = குஞ்சி பித்தை ஓரி குழல் கார்பங்கி கேசம் சுரியல் கதுப்பு தளை நவிர் பிச்சம் சிகை

பெண்பான்மயிரின் பெயர் = குழல் கூழை குந்தளம் கூந்தல் அளகம் ஓதி ஐம்பால் கதுப்பு சுருள் விலோதம் பரிசாரம் கேசம் சுரியல் மராட்டம் கோதை குருள் குரல் கூரல்

ஆண்மயிர்க்கும் பெண்மயிர்க்கும் பொதுப் பெயர் – கதுப்பு கேசம் சுரியல் குழல்

பெண்மயிர்முடியின் பெயர் = கொப்பு மிஞ்சிகம் கொண்டை தம்மிலம் முச்சி சிகழிகை

மயிர்க்குழற்சியின் பெயர் = குந்தளம் அளகம் விலோதம்

குழற்கொத்தின் பெயர் = குந்தளம்

ஐம்பான்முடியின் பெயர் = *முடி குழல் தொங்கல் பனிச்சை சுருள்

பிறமயிரின் பெயர் = ஓரி பங்கி உளை உரோமம் கேசம் மராட்டம்

செறிமயிர்ப்பரப்பின் பெயர் = சிரோந்தம் உரோமம்

ஆண்பான்மயிர்முடியின் பெயர் = பின்னகம் பந்தம் முடி முச்சி கொண்டை சிகழிகை குழல் சுடிகை மௌலி

சடையின் பெயர் = குடிலம் வேணி கோடீரம் சடிலம் பின்னல்

தலைமயிரின் பெயர் = சிரோருகம்

நரைமயிரின் பெயர் = சரை

மற்றும்நரைமயிரின் பெயர் = பலிதம் ஆக

உறுப்பின் பெயர் = அவயவம் காத்திரம் அங்கம்

மற்றும்உறுப்பின் பெயர் = சினை மூர்த்தம் ஆக

சந்தின் பெயர் = கந்து கொளுத்து மூட்டு

உடற்றழும்பின் பெயர் = வடு வசி கச்சை சேக்கை அங்கிதம் சுவடு செதுக்கை

இறையின் பெயர் = பிறங்கு வரி பொறி வரை

= = = = = = = = = = = = = = = = = = =
*முடி மயிரையுச்சியின் முடித்தல். குழல் சுருட்டி முடித்தல். தொங்கல் மயிரைமுடிந்து விடுதல். பனிச்சை பின்னிவிடுதல். சுருள் பின்னே செருகல்

தேமலின் பெயர் = துத்தி வசந்திகை திதலை சுணங்கு உத்தி திதனி

கோழையின் பெயர் = ஐ, காசம்.

கழலையின் பெயர் = அரலை

பிணத்தின் பெயர் = அழனம் சவம் குணபம் பிரேதம் களேபரம்

உடற்குறையின் பெயர் = யூபம் கவந்தம் மட்டை

சிரமாலையின் பெயர் = அழிதலை கரோடி

தலையோட்டின் பெயர் = கபாலம் வெண்டலை

பஞ்சமலவகையின் பெயர் = மலம் நீர் வாயு செந்நீர் கந்தம்

இருபத்தைந்து தத்துவத்தின் பெயர் = பூதம் ஞானேந்திரியம் புலன் கன்மேந்திரியம் அந்தக்கரணம் ஆன்மா ஆக

ஓரறிவுயிரின் பெயர் = புல் மரம்

ஈரறிவுயிரின் பெயர் = அட்டை நந்து

மூவறிவுயிரின் பெயர் = சிதல் எறும்பு

நாலறிவுயிரின் பெயர் = வண்டு ஞெண்டு

ஐந்தறிவுயிரின் பெயர் = மக்கள் *மா
= = = = = = = = = = = =
* மா = விலங்கு

ஆறறிவுயிரின் பெயர் = மக்கள்† ஒருசார்விலங்கு
= = = = = = =
† ஒருசார் விலங்கு என்றது கடளரையும் அவர் வழிபட்டோரையும் உணர்ந்துவழிபடும் விலங்கினை

இருவகைத்தாதுவின் பெயர் = சுரோணிதம் சுக்கிலம்

மூவடிவின் பெயர் = பெண் ஆண் அலி

முப்பிணியின் பெயர் = பித்தம் வாதம் சிலேட்டுமம்

எண்வகை மணத்தின் பெயர் = *பிரமம் தெய்வம் பிரசாபத்தியம் ஆரிடம் காந்தருவம் ஆசுரம் இராக்கதம் பைசாசம்
சோற்றின் பெயர் = அன்னமயினியடிசி லோதனம் = பொம்மல் போனகமடைபுன்க மூரல் = புழுக்கன் மிதவை யமலைபுற்கை = உணவு சருப்பாளித நிமிரல் வல்சி = யசனம்துற்றுக் கவளமுதரகம் = சொன்றி பாத்துக்கூழ்பதம்புகா சோறே

கஞ்சியின் பெயர் = கஞ்சியவாகே காடி மோழை

பாற்சோற்றின் பெயர் = பாயசம்பாற்சோறே

ததியுணவின் பெயர் = தயிரிற் றிமிரறதியி னுணவே

அவிழின் பெயர் = பதமவிழாகும்

வழியுணவின் பெயர் = பொதிதோட் கோப்புச் சம்பளம் வழியுணவே

பிட்டின் பெயர் = ஆவியும் வெந்தையும் பிட்டெனலாகும்

மோதகத்தின் பெயர் = மோதகமிலட்டுகம்

அடையின் பெயர் = அப்பமடையே

உக்காரியின் பெயர் = அஃகுல்லியுக்காரி

பில்லடையின் பெயர் = பில்லடைசஃகுல்லி

தினைமாவின் பெயர் = நுவணைதினைமா

நென்மாவின் பெயர் = இடிநென்மாவே

தோசையின் பெயர் = கஞ்சந்தோசை

பூரிகையின் பெயர் = நொலையல்பூரிகை

மாவின் பெயர் = பிண்டியு மருப்பமும்பிட்டமுதுவணையு = மென்றிவை மாவென லிடியுமாகும்

அப்பவருக்கத்தின் பெயர் = அபூபங்கஞ்ச மிலையடை மெல்லடை நொலையல் பூரிகை சஃகுல்லி போனக = மண்டிகை பொள்ளலு மப்பவருக்கம்

சிற்றுண்டியின் பெயர் = அப்பம் பிட்டோட குல்லியிடியெனச் செப்பிய வெல்லாஞ் சிற்றுண்டி யாகும்

கறிவர்க்கத்தின் பெயர் = கறிவர்க்கங் கூட்டமை

.. கறியின் பெயர் = கறிநீடாணம்

பொரியலின் பெயர் = கருனைபொரியல்

புளிங்கறியின் பெயர் = துவையேபுளிங்கறி

குழம்பின் பெயர் = ஆணங்குழம்பாம்

பச்சடியின் பெயர் = அவித்துவையல்பச்சடி

வறையலின் பெயர் = வறையலோச்சை

பிண்ணாக்கின் பெயர் = மலாவகம்பிண்ணாக்கே

சூட்டிறைச்சியின் பெயர் = சூசியம் படிர்திரஞ் சூட்டிறைச்சியாகும்

மீன்முள் ளரிந்திடுங் கருவியின் பெயர் = அயிரி மீன்முள் ளரிந்திடுங்கருவி

பாலின் பெயர் = பயசு க்ஷீர மமிழ்து பயம் பாலே

தயிரின் பெயர் = ததியளைபெருகு தயிரெனலாகும்

நெய்யின் பெயர் = ஆதிரங் கிருத மாச்சிய மிழுது = நேயந்துப்பு நெய்யா கும்மே

மற்றுநெய்யின் பெயர் = அவியா காரமு மதன் பெயர் பெறுமே

வெண்ணெயின் பெயர் = ஐயங் கவீன நவநீ தம்மென = வெண்ணெய் விதந்து விளம்பப்படுமே

மோரின் பெயர் = மதிதந் தக்கிரங் காலசேய மோரே

மற்றுமோரின் பெயர் = அருப்ப மளைமுசர் மச்சிகையு மாகும்

எண்ணெயின் பெயர் = தைல மெண்ணெய் நேயமு மாகும்

தேனின் பெயர் = பிரசமு மதுவுந் தேனெனப் பேசுவர்

குழம்பின் பெயர் = பாரு குழம்பு

செறிகுழம்பின் பெயர் = செச்சை செறிகுழம்பு

கண்டசருக்கையின் பெயர் = கண்டம் பாளிதங் கண்ட சருக்கரை.

மணற்பாகின் பெயர் = கட்டியும் விசயமுங் கன்னலு மணற்பாகே

சருக்கரையின் பெயர் = குளமக் காரங் குடமிவை சருக்கரை

மற்றுமோர்வகைச்சருக்கரையின் பெயர் = உண்டே யயிர்புல் லகண்டமொரு விகற்பம்

கற்கண்டின் பெயர் = கன்னல் கட்டி கற்கண்டாகும்

கள்ளின் பெயர் = பாலி பிழியே படுமதுத் தணியல் = சாலி யாலி யாலை சாறு = மாதவஞ் சாதி சுரையே மாரி = மதுவம் வேரி தொப்பி தேற = னறவு பிரச மாம்பலி ரேயந் = தொண்டி நனை மாலி யரிட்ட மாசபங் = கௌவை சுவிகை சுலோகி *சுண்டை = வெறியே யம்மியம் வாருணம் பானளியே மேதை = முண்டகம் பாரி = மட்டுக் காலி சாயனங் காதம் = பரியெலி வாணிதங் கொங்கு மகரந்தங் = குந்தி சொல்விளம்பி யருப்பங் களியே = கல்லியஞ் சுமாலி ஞாளிதேமு = நாற்றம் வடிநறை மதுகரங் கள்ளே.

மற்றுங்கள்ளின் பெயர் = பழையு மந்திரமும் பகரப்படுமே.

கோற்றேனின் பெயர் = பிரசங் கோற்றேன்.

தேன்கூட்டின் பெயர் = இறா றேன்கூடே.

பலபண்டத்தின் பெயர் = பண்ணியம் வளமே பட்டம் பண்டம் = பண்ணிகாரங் கூலம் பலபண் டப் பெயர்.

அரும்பண்டத்தின் பெயர் = தாரமென் கிளவி யரும்பண்டமாகும்.

எச்சிலின் பெயர் = மிச்சி லுச்சிட்ட மெச்சிலாகும்.

உணவின் பெயர் = உணாவே வல்சி யுண்டி யோதன = மசனம் பதமே யிரையா கார = முறையே யூட்ட முணவென லாகும்.

பேருண்டியின் பெயர் = பிரப்பென் றுரைப்பது பேருண்டியாகும்.

உண்பனவற்றின் பெயர் = துற்றி யுண்பன.

தின்பனவற்றின் பெயர் = திற்றி தின்பன.

பருகுவனவற்றின் பெயர் = பானமுந் துவையும் பருகுவன வாகும்.

அடிசிலென்பது = அடப்படுவ தடிசில்.

புழுங்கலென்பது = புழுக்குவது புழுங்கல்.

தித்திப்பின் பெயர் = இழுமு மதுரமு மினிமையுந் தேமு = மமுதுஞ் சுவையுந் தித்திப் பாகும்.

கைப்பின் பெயர் = கைத்தறித்தங் கைப்பாகும்மே.

புளிப்பின் பெயர் = ஆமில மாம்பிர மாகும் புளிப்பே.

காழ்த்தலின் பெயர் = கரிலே காயங் கடுகங் காழ்த்தல்.

துவர்ப்பின் பெயர் = துவர்ப் பேதுவரம்.

உவர்த்தலின் பெயர் = உவர்த்தலுவரே.
= = = = = = = = =

= வது பூணின்வகை.

ஆபரணத்தின் பெயர் = பூணணி அணிகலம் பூடணம் வள்ளி =

ஆயிழை கலமு மாபரணம் மே.

மணிமுடியின் பெயர் = மகுடங் கிரீட மௌலி மணிமுடி.

மற்றும்மணிமுடியின் பெயர் = சூடிகை சுடிகை சேகரமுஞ் சொல்லும்.

முடியுறுப்பைந்தின் பெயர் = கோடகங் கிம்புரி முகுடந் தாமம் = பதும முடியுறுப் பிவை யைந்தாகும்

முடிமாலையின் பெயர் = பாட முடிமாலை கோடி கரோடி

பதக்கத்தின் பெயர் = கண்டிகை மதாணி யாரமும் பதக்கம்

தோளணியின் பெயர் = அங்கதங் கேயூரந் தோளணி யாகும்

குண்டலத்தின் பெயர் = குண்டல மஞ்சிகை குழையெனலாகும்

காதணியின் பெயர் = வல்லிகை கொட்டை கடிப்பங் காதணி

குணுக்கின் பெயர் = கடிப்பிணை குணுக்காம்

தோட்டின் பெயர் = தாடங்கந் தோடே

கங்கணத்தின் பெயர் = வளையுந் தொடியுங் கடகமுங் கங்கணம்

கைவளையின் பெயர் = சரியுந் தொடியுங் சூடகமுஞ் சங்குங் = குருகும் வண்டுங் கன்றுங் கைவளை

பிள்ளைக்கைவளையின் பெயர் = பிள்ளைக்கைவளை பிடிக மாகும்

சுட்டியின் பெயர் = சுட்டி சுடிகை

பட்டத்தின் பெயர் = பட்ட மோடை

பாதகிண்கிணியின் பெயர் = பரிபுர நூபுரம் பாதிண் கிணியே

சதங்கையின் பெயர் = பாத சதங்கை சிறுமணி கிண்கிணி

சிலம்பின் பெயர் = அரிதளை ஞெகிழி நூபுரஞ் சிலம்பே

மற்றும்சிலம்பின் பெயர் = அரவமுஞ் சிலம்பினபிதானம்மே

காற்சரிக்குங்கைச்சரிக்கும் பெயர் = பரியகங் காற்சரி கைச்சரியுமாகும்

காலணியின் பெயர் = பாத சாலங் காலணியாகும்

பாடகத்தின் பெயர் = பாத கடகம் பாடகமாகும்

ஓசைசெய்தளையின் பெயர் = ஞெகிழங் குடச்சூ லோசை செய்தளை

ஆடவர்கொடைவீரத்தாலணிவதின் பெயர் = ஆடவர் கொடையால் வீரத் தாலணி = பாதத் தணியே கழலணியென்ப

மாதரிடையணியின் பெயர் = காஞ்சி மேகலை கலாபம் பருமம் = விரிசிகை மாத ரிடையணி யெனப்படும் = அவற்றுள் காஞ்சியெண்கோவை யெழுகோவை மேகலை = கலாபம் நானான்கு பருமம் பதினெட்டு = விரிசிகை யெண்ணான்கு கோவையென்ப

சரிமணிக்கோவையின் பெயர் = கலாபந் தோரை சரிமணிக் கோவை

அரைப்பட்டிகையின் பெயர் = அத்துமனாவு மரைப்பட்டிகையே

அரைஞாணின் பெயர் = இரதர மரைஞாண்

செவிமலர்ப்பூவின் பெயர் = கன்னாவதஞ் சஞ் செவிமலர்ப்பூவே

ஆபரணத்தொங்கலின் பெயர் = தொங்க லுத்தி மதலிகைதூக்கம்

மோதிரத்தின் பெயர் = வீக மாழி யிலச்சினை மோதிரம்

மணிவடத்தின் பெயர் = சரமே யாரந் தாம மணிவடம்

பூணுநூலின் பெயர் = உபவீதம் பூணு நூலென மொழிப

நுதலணியின் பெயர் = இலம்பகம் புல்லகஞ் சூட்டு நுதலணி

தெய்வவுத்தியின் பெயர் = திருத்தெய்வவுத்தி

தலைக்கோலத்தின் பெயர் = பங்குசம்
பிஞ்ஞுகம்பயிறலைக்கோலம்

தலைப்பாளையின் பெயர் = தொய்யகமென்பது
தலைப்பாளையாகும்

கிம்புரியின் பெயர் = தாங்கி கிம்புரி கோளகை பூணே

பிருஞ்சூட்டின் பெயர் = பெருஞ்சூட் டென்பது சிவளிகைப் பெயரே

சரப்பணியின் பெயர் = சரப்பணி வயிரச் சங்கிலி யாகும்

பேரணியின் பெயர் = மதாணி யாரம் பெரும்பூண்பேரணி

பூண்கடைப்புணர்வின் பெயர் = கடையுங் கயிலும் பூண்கடைப்
புணர்வே

மாதரணிவடத்தின் பெயர் = ஆரங் கண்டிகை தாமங் கோவை =
மாலையிழைமா தரணிவடப் பெயரே
= = = = = = = = = = = = = = =

= வது இரத்திநவகை

மாணிக்கத்தின் பெயர் = மாமணி செம்மணி மாணிக்கம் பதும =
ராக மென்பதுமப் பெயர்க் குரித்தே

வைடூரியத்தின் பெயர் = வால வாயம் வயிடூரிய மெனல்

வயிரத்தின் பெயர் = வச்சிரம் வயிரம்

மரகதத்தின் பெயர் = மரகத மரிமணி பச்சை மணியே

நீலமணியின் பெயர் = நீல மணிப் பெயர் மணியென நிகழ்த்துப

பவளத்தின் பெயர் = துப்புப் பிரவாளந் துவர்துகிர் பவளம்

மற்றும்பவளத்தின் பெயர் = வித்துரும மரத்த மென்னவும்
விளம்புப

முத்தின் பெயர் = நித்தில மாரந் தரளமு முத்தே

கடவுண்மணியின் பெயர் = நிதியு நிதானமும் கடவுண் மணிப் பெயர்

மணிப்பொதுப் பெயர் = மனவுங் காசு மணியின் பொதுப் பெயர்

ஐவகைத்தெய்வமணியின் பெயர் = சிந்தா மணிசூ ளாமணி சிமந்தக = மணிசூடாமணி கௌத்துவ மணியென் = றினையவை தெய்வ மணியைந் தென்ப

சங்கநிதியென்பது = சங்கநிதி சங்கின் வடிவின தாகும்

பதுமநிதியென்பது = பதுமநிதி பதும வடிவினதாகும்

சந்திரகாந்தமாவது = சந்திர காந்த மணிநீர் கால்வது

சூரியகாந்தமாவது = சூரிய காந்த மணிதீச் சுடர்வது

இருப்புக்காந்தத்தின் பெயர் = இருப்புக்காந்தஞ்சும்பகமென்ப

பளிங்கின் பெயர் = படிகம் பருக்கை காழுபலம் பளிங்கே

வளைமணியின் பெயர் = மனவு மக்கும் வால்*வளை மணியே
= = = = = = = =
*வளைமணி = அக்குணி

செங்கல்லின் பெயர் = தாது செங்கல் காரிகமு மாகும்

சிந்தூரத்தின் பெயர் = திலகமென்பதுசிந்தூரமாமே

சாதிலிங்கத்தின் பெயர் = இங்குலிகஞ்சாதிலிங்கங்குலிகம்

அகன்மணிப்பொதுப் பெயர் = அரதநஞ் சலாகை†யகன்மணி யாகும்
= = = = = =
† அகன்மணி = தேவமணிப்பொது
= = = = = = = = = = = = =

= வது உலோகவகை

பொன்னின் பெயர் = ஆடகம் வேங்கை யரிசெந் தாது = காணந்
தேசிகங் காஞ்சனங் கர்ப்பூரங் = காரந் தொடுக்கங் கனகஞ்சா
மீகர = மீழஞ் சுவண மிரணிய மேம = மாசை செங்கொ
லாக்கங்கோ வம் = பீதக மாழை யீகை சாக்குப் = பந்தந் தமனிய
மத்தம் பூரி = சந்திரம் வித்த நிதியே வெறுக்கை = யிந்த
வகைப்பெய ரெல்லாம் பொன்னே

மற்றும் பொன்னின் பெயர் = அனந்தமும் வசுவு மருத்தமும்
பொருளுந் = தனமும் பண்டமுந் திரவியமு மதற்கே

வெள்ளியின் பெயர் = தார மிரசிதங் களதௌதம் வெள்ளி

செம்பின் பெயர் = தாமிர மெருவை வடுவே சுற்பம் =
உதும்பரஞ்சீருள் சீருணஞ் செம்பே

வெள்ளீயத்தின் பெயர் = சீருளும் வங்கமும் வெள்ளீய மாகும்

காரீயத்தின் பெயர் = நாகங்காரீயம்

தராவின் பெயர் = மதுகந்தராவாம்

துத்தநாகத்தின் பெயர் = நாகம் துத்தநாகம்;

பித்தளையின் பெயர் = இரதிமா யாபுரி யாரகூடம் பித்தளை

வெண்கலத்தின் பெயர் = கஞ்சமுறைவெண்கலமாகும்மே

இரும்பின் பெயர் = கருங்கொ லகியங் கருந்தாது வயிலு =
மிரும்பின்பெயரே யயமு மென்ப

உலோகக்கட்டியின் பெயர் = மாழை சுவணம் வங்காரந் தகணை
= யாடக முலோகக் கட்டியாகும்

பஞ்சலோகத்தின் பெயர் = தமனிய மிரும்பு தாமிர மீய = மிரசிதம்
பஞ்சலோக மென்ப

நவலோகங்களின் பெயர் = இரதி மதுக நாகங் கஞ்சமென் = றுரை
செய் நாலுட னவலோக ம்மே

பண்டாரத்தின் பெயர் = கோசந் தண்டம் பண்டார மாகும்;

பொற்கலனிருக்கையின் பெயர் = பொற்கல னிருக்கை பொற் பண்டாரம்

உண்கலத்தின் பெயர் = தாலந் தட்டந் தளிகை பாசனமுண்கலம்

வட்டிலின் பெயர் = கரகமுங் கோரமும் வள்ளமுஞ் சகடமுஞ் = சிகரமுஞ் சாகையும் வட்டிற் பெயரே

சிறுவட்டிலின் பெயர் = கிண்ணமும் வள்ளமுஞ் சிறுவட்டிற் பெயரே

மற்றும்சிறுவட்டிலின் பெயர் = கிராணமென்பதுஞ் சிறுவட்டிற் பெயரே

நாழிகைவட்டிலின் பெயர் = கன்னலுங் கிண்ணமுநாழிகை வட்டில்

கண்ணாடியின் பெயர் = புளக மத்த மாடிபடி மக்கல = மொளி வட்டங் கஞ்சனை தருப்பணங் கண்ணாடி

மற்றுங்கண்ணாடியின் பெயர் = ஆதரிசன முருவங் காட்டி கஞ்சனமுமாகும்

படிக்கத்தின் பெயர் = படியகம் படிக்கம்

கலசப்பானையின் பெயர் = கஞ்சனை கலசப் பானை யாகும்

துடுப்பின் பெயர் = கசிதந்துடுப்பு

நெய்த்துடுப்பின் பெயர் = சுருவை நெய்த்துடுப்பே

சட்டுவத்தின் பெயர் = தவ்வி சிலகந் தறுவிசட்டுவம்

கைம்மணியின் பெயர் = படலிகை வட்டம்பகரிற்கைம்மணி

பெருமணியின் பெயர் = பெருமணி கண்டைமணி யானைமணி யென்ப

எறிமணியின் பெயர் = எறிமணி சேகண்டி.

தூபமணியின் பெயர் = தூபமணி கைம்மணி.

தாளத்தின் பெயர் = கிட்டிசீர் பாண்டில் கஞ்சங்கைத் தாளம்.

கிண்கிணிமாலையின் பெயர் = குரலே தாரிவை கிண்கிணி மாலை.

காளத்தின் பெயர் = காகளங் காளம்.

சிறுசின்னத்தின் பெயர் = பீலி சிறுசின்னம்.

கொம்பின் பெயர் = கோடு மிரலையும் வயிருங் கொம்பே.

மற்றுங்கொம்பின் பெயர் = ஆம்பலுமாமென்றறையப் படுமே.

பரணியின் பெயர் = கோயே பரணி.

கமண்டலத்தின் பெயர் = குண்டிகை காண்டகங் கரகங் கமண்டலம்.

கெண்டியின் பெயர் = கடிப்பங் கோடிகங் கெண்டி யாகும்.
= = = = = = = = =

= வது. ஆடைவகை.

கூறையின் பெயர் = ஆடை, கோடிசூடி வட்டங் = காடகம் புட்டங் கலிங்கங் காழகம் = படந் தூசுபுடைவை துகில்பரி வட்ட = மாவரணந் தானை யுடையா சார = மம்பர நீலியறுவை யுடுக்கை = சம்படம் பட்டி சாடி சேலை = மடியே சீரை வட்டுடை கோசிகங் = கலையே வாசனங் கூறை யெனக் கருதுவர்.

சிறுதுகிலின் பெயர் = கந்தை விரிபங் கண்டை பிடியல் = வேதகம் புங்கம் பங்கங் கத்தியந் = தூரியஞ் சிற்றிலிவை சிறுதுகிற் பெயரே.

நல்லாடையின் பெயர் = நாகம் பாரி நல்லாடைப் பெயரே.

பட்டுவருக்கத்தின் பெயர் = பாளிதங்கோசிகம்பட்டுவருக்கம்.

மற்றும்பட்டுவருக்கத்தின் பெயர் = காம்பு நேத்திரமுங் கருதுவரதற்கே.

பணித்தூசின் பெயர் = பாளிபணித் தூசு தேவாங்கென்ப.

மயிர்ப்படாத்தின் பெயர் = மயிரகம் வயிரிய மயிர்ப்படா மாமே.

அத்தவாளத்தின் பெயர் = வடகமுல்லாச மத்த வாளம்.

சித்திரப்படாத்தின் பெயர் = புத்தகஞ் சித்திரப்படாமதாகும்.

உத்தரீயத்தின் பெயர் = உத்தரா சங்கமே கசமுத் தரீயம்.

கொய்சகத்தின் பெயர் = நீவிகொய்சகம்.

போர்வையின் பெயர் = மீக்கோள்போர்வை.

உடுத்தலிறுக்கலின் பெயர் = சுற்றலுடுத்தலிறுக்கறற்றல்.

.முன்றானையின் பெயர் = முன்றானை தோகை.

முகபடாத்தின் பெயர் = முகபடாஞ்சூழி. .

கம்பளிப்படாத்தின் பெயர் = கம்பலங் கம்பளங் கம்பளிப் படாமே.

செம்படாத்தின் பெயர் = சிம்புளி செம்படாம்.

முலைக்கச்சின் பெயர் = வம்புவார் விசிகை பட்டிகை முலைக்கச் செனல்.

கச்சின்றலைப்பின் பெயர் = கஞ்சகஞ் சார்வாரங்கச்சின்றலையே.

மேற்கட்டியின் பெயர் = விதானங் கம்பலம் படங்குவானி மேற்கட்டி.

சட்டையின் பெயர் = கஞ்சுகங் குப்பாய மெய்ப்பை காஞ்சுகியங்கி வாரணஞ் சட்டையாகும்.

இடுதிரையின் பெயர் = அவிடி கஞ்சிகை யவளிகை காண்ட = மெழினி கண்டம் பாரங் கழனி = படமிடு திரை மெய்ப்படாமு மாகும்.

மெத்தையின் பெயர் = தவிசு மணையுந் தளிமமு மெத்தை.

மற்றும்மெத்தையின் பெயர் = காகுளி யென்பதுங் கருதப் பெறுமே.

தலையணையின் பெயர் = உபதான மென்பது தலையணையாகும்.

பெருங்கொடியின் பெயர் = படமே வானி பதாகை கேதனந் = துவசஞ் சத்தி தோகை துகிலே = படங்குவி லோதனம் படாகை பெருங்கொடியே.

மற்றும்கொடியின் பெயர் = கிளத்துப் பெறுமே கேதுவுமிதன் பெயர்.

வீதியிற்கட்டியகொடியின் பெயர் = விடங்கம் வீதியிற் கட்டிய கொடியே.

தேரிற்கட்டுங்கொடியின் பெயர் = தேரிடைத் திகழ்கொடி கூவிரமாகும்.

சிறுகொடியின் பெயர் = கத்திகை சிறுகொடி கட்டுரையாகும்.

மரவுரியின் பெயர் = வற்கலை யிறைஞ்சி சீரைமரவுரி.

சும்மாட்டின் பெயர் = சுடுவு சுமடு சுமையடை சும்மாடு.

துணியின் பெயர் = சிதரே சிதலை சீரை துணியே.

பரிவட்டத்தின் பெயர் = வத்திர மாசாரம் வாசம் பரிவட்டம்.
= = = = = = = = = = =

= வது பூச்சுவகை.

சாந்தின்பொதுப் பெயர் = கலவைச் சேறுங் காலேக வண்ணமுங் = களபமும் விரையுங் கலவையுஞ்சாந்தே.

நால்வகைச்சாந்தின் பெயர் = பீதங் கலவை வட்டிகை புலியென நால்வகைச்சாந்தி னாமமாகும்.

கருப்பூரத்தின் பெயர் = பாளிதங் கருப்பூரம்.

கத்தூரியின் பெயர் = மான்மதங் கத்தூரி.

புழுகின் பெயர் = வாசநெய்புழுகே.

பூசுவனவற்றின் பெயர் = அங்கராகம் பூசுவன வாகும்.

மயிர்ச்சாந்தின் பெயர் = ஏலந் தகரங் காசறை மயிர்ச்சாந்தே.

செஞ்சாந்தின் பெயர் = செஞ்சாந் தென்பது செங்குங்குமமே.

மற்றும்செஞ்சாந்தின் பெயர் = தளமென்றுரைப்பது மதற்கேசாற்றும்.

வெண்சாந்தின் பெயர் = தளமென்றுரைப்பதுவெண்சாந்தாகும்.

சந்தனத்தின் பெயர் = சந்து சாந்தம் சந்தஞ் சந்தனம்.

கலவையின் பெயர் = கலவை களபப் பெயர தாகும்.

பனிநீரின் பெயர் = கந்தசாரமிமசலம்பனிநீரே.

செறிகுழம்பின் பெயர் = தேய்வையுஞ்செச்சையுஞ் செறிகுழம்பாகும்.

அப்புதலின் பெயர் = கொட்டலப்புதல்.

பூசுதலின் பெயர் = புலர்த்தல் பூசுதல்.

மகளிராகத்தெழுது கோலத்தின் பெயர் = மகளிர் கோலால் வனமுலையாகத்துத் = தொழில்பெர வரிப்பது தொய்யிலாகும்.

நுதற்குறியின் பெயர் = புண்டரந்திலக நுதற்புனைகுறியே.

*அச்சுதமென்பது = அச்சுத மறுகரிசி கூட்டிய தாகும்.
= = = = = = = = = = 

= வது சூட்டுவகை.

மாலையின் பெயர் = சுக்கை தொடைய றெங்கல் கத்திகை = யலங்கல் கண்ணி தெரியறாரே = யணியல்தாம மொலியல் சூட்டு

= கோதைமஞ்சரி மாலையின் கூற்றே.

நுதலணிமாலையின் பெயர் = சூட்டேயிலம் பகநுதலணிமாலை.

கோத்தமலரின் பெயர் = கோத்தமலரேமத்தகமாலை.

பின்னியமாலையின் பெயர் = பிணையலென்பது
பின்னியமாலை

கோத்தமாலையின் பெயர் =
சிகழிகைபடலைவாசிகைதொடையல்.

வாகைமாலையின் பெயர் = கல்வியிற் கேள்வியிற் கொடையிற்
படையில் = வெல்லு நரணிவதுவாகையாகும்.
= = = = = = = = = = = =
= வது இயல்வகை.

மூவகைத்தமிழின் பெயர் = இயற்றமிழிசைத் தமிழ் நாடகத்
தமிழென = வகைப்படச் சாற்றினர் மதியுனர்ந்தோரே. (
= = = = = = = = = = = =
*அச்சுதத்தை அக்கதமென்றுவழங்குவர்.

எண்வகைக்கணத்தின் பெயர் = அறம்பொரு ளின்பம் வீடென்றி
வற்றின் = றிறம்படச்செய்யுள் செப்புங்காலை = நீரின்கணமு
நிலத்தின்கணமுந் தேயுவின்கணமும் வாயுவின் கணமு =
மந்தரகணமுமியமான கணமுஞ் = சந்திர கணமுஞ் சூரியகணமு
மென் = றெண்வகைக்கணமுமியம்பல் வேண்டும்

அவற்றுள் நீரின் கணவகை = நேர் முதலாகி நிரையிணை
பின்வரினீரின் கணமெனச்சீர் பெயர் பெறுமே

நிலத்தின்கணவகை = நிரை மூன்றுறுசீர் நிலக்கண மாகும்

தேயுவின்கணவகை = நேர்நடுவாகி நிரையிரு பால்வரிற் =
றேயுவின் கணமெனச் செப்புவர் புலவர்

*மாருதகணவகை = இறுதி நிரையா யிணைநேர் முன்னர் =
வருவது மாருத கணமென வைப்பர்

அந்தரகணவகை = முந்து நிரையிணை வந்துநேர் பின்வரி =
னந்தர கணமென் றறையல் வேண்டும்

இயமானன் கணவகை = நேர்மூன்றாகிற் சீரியமானன்

மதியின்கணவகை = முதனிரையாகி யிணைநேர்பின்வரின் = மதியின் கணமென வகுத்தனர் புலவர்

†எரிகதிர்க்கணவகை = நிரைநடு வாகி நேரிரு பால்வரி = னெரிகதிர்க் கணமென் றியம்பினர் புலவர்
= = = = = = = = =
† எரிகதிர் = சூரியன்

அவ்வெட்டினுள் நற்கணவகை = நிலனுநீரு மதியுமிய மானனு நலமிக முன்வரினன் கணமாகும்

தீக்கணவகை = ஏனையநான்கு மூனமதாகும்

நன்கணதீக்கணவரலாற்றுவகை = வெண்பா = காய்ச்சீரின் முன்னிரண்டுங் கைகொள் கனிச்சீரின், வாய்த்தசீர் பின்னிரண்டும் வாங்கிக்கொள் = வாய்த்த, கனிச்சீரின் முனம்னிரண்டுங் காய்ச்சீரின் பீன்னும், நுனித்த கணமெட்டினுக்கு நூல்

எழுத்துப் பொருத்தவகை = சொல்லியவகையா லெழுத்துப் பொருத்தம் = வல்லெழுத்தல்லது மெல்லெழுத் தாகா = யாவகைச் செய்யுட் கின்பமொடு புணர்ந்த = மூவகைச் சீரேமுதற்சீ ராகும்
= = = = = = = = =
*மாருதம் = காற்று

தானப்பொருத்தவகை = வெண்பா = தன்னெழுத் துப்பாலன் குமர னிரண்டாகு, மன்னவற்கு மூன்றாம் வகுக்குங்காற் = றுன்னிய, நஞ்சார் விருத்தமா நான்காகி லைந்தாகி, லெஞ்சா மரணத் தியல்பு

நற்றானந்தீத்தானமாவன = தலைவ னெழுத்தே முதலாய்ச் சாற்றினல மிகுமூன்று மற்றிரண்டு மூனம்

நாட்பொருத்தவகை = வெண்பா = தன்னாட்குப் பின்னாளு நன்றாகுஞ் சம்பந்த = நன்னான்கு மாறு நலம்பெருகும் = பொன்னனையா = யெட்டினோ டொன்பானா மித்தனையு மென்பரே = யொட்டாரை யொட்டுவிக்கு நாள்

(இதுவும் அது) நீர்க்கணத்து நாள்சதய நீடியமானன் கணநாள் = பார்க்கிற் பரணிபடிக் கணத்துக் = கேற்குநாள் = கேட்டை மதியின்கணநாண் மகமிங்குக் = கூட்டிய நாளென்றே கூறு.

(இதுவுமது) காற்றின்கணநாள் கடுஞ்சோதி கார்த்திகையா = மேற்ற வெரிக்கணத்துக் கெண்ணுங்காற் = றோற்றிரவி = பொங்குகணநாள் புநர்பூச மாகாயந் = தங்குகண நாளோணந்தான்

நற்கணத்தின்பயன் = நிலமதி நீரியமான னெனுநான்கும் = பெருக்கஞ் செய்தலில் வாழ்நாள் பயத்தலிற் = றருக்கிய சீர்த்தி தன்னைத்தருதலின் = மிகுதிருவாக்கலின் வேந்தர்க்கும் பிறர்க்குந் = தகுமெனக் கழறினுந் தகாமற் றச்சீர்க் = குரியவா நாளொடும் பொருந்தாக்காலே

தீக்கணத்தின்பயன் = அந்தரவாயு வளவிலாதித்தன் = செந்தழலெந்நுந் தீக்கணஞ் சேரின் = தேசம் போக்குதல் செல்வத்தைப் பிரித்தல் = சூனியமாக்கல் சூழ்நோயுறுத்தல் = ஊனம்பயக்குமென் றுரைத்தன ராய்ந்து = தெள்ளிதினுணர்ந்த செந்தமிழ்க் கவிஞர்.

உண்டிபோருத்தவகை = ஆதியமு தெழுத் தாகிய வச்சீர்க்கோதிய தெய்வத்துக் குரிய நாளொடும் = பாடப் படூஉ மியல்பின்றியு மிறைவன் = பிறந்த நாளினும் பெயர்நாடன்னினும் = இரண்டினொன்றிற் பொருந்தக்கூறிய = பாத முதலே யெடுப்பின் மற்றவற் = கேறு திரு வாக்குமெ *ன்மனார் புலவர்.

புள்வகை = வெண்பா = அகரமே வல்லூறா மாந்தை யிகர = முகரமே காக்கையென வோது = மெகரமே, *வண்டானக் கோழி வளைவாய் மயிலென்னக், கொண்டா ரொகரக் குறி.
= = = = = = = = = = = = = = = = =
*வண்டானம் வளவிய தானமாகக்கொண்ட

+கன்னல்வகை = ஐவகை யெழுத்தி லகர $முதிப்ப = இகரந்தானே யின்புறுமென்ப = உகரமரசா மெகரந்துயிலும் = ஒகரந்தானே யுயிரப்பின் றொடுங்கும்.
= = = = = = = = = = =
+கன்னல் நாழிகை, உதையாதி நாழிகை முதல் நாழிகை முப்பதும் ஒவ்வொன்றிற்கு அவ்வாறு நாழிகையாகக் கொள்ளுதலாம்.

$உதிப்ப என்றது ஆறுநாழிகையில் ஐந்துபுள்ளுந்தத் தந்தொழில் பெறநிற்றல்.

அவ்வவர் பெயர்முத லெழுத்துவந் துதிப்ப = வவ்வவர்ப் பாடினாக்க மிகுமே.

பால்வகை = எழுத்தெனப் படுபவை யாண்பெண் ணலியே.

அவற்றுள் = ஆணெழுத்து = உயிர்பன் னிரன்டு மாணெனப் படுமே.

பெண்ணெழுத்து = உயிர்மெய் யெல்லாம் பெண்ணெழுத்தென்ப.

அலியெழுத்து = ஒற்றெழுத் தெல்லா மலியெனப் படுமே.

, அவ்வெழுத்துகளுள் முதற்சீரின் முதலெழுத்து இன்னதெனல் = எழுத்தின் கிழத்தி நாமக ளாதலிற் = பெண்ணெழுத் தல்லது முன்வைத் துரையார்.

மங்கலச்சொல் = திருவேகளிறே தேர்பரிகடலே = பொலிவே மணியே பூப்புகழ் சீரெனல் = வருத்தநீங்கிய மங்கலச் சொல்லே.

வேதியர்க் குரிய பாவகைப் பெயர் = பிள்ளைப் பாட்டு வாயின் முன்னம் = வெள்ளைப் பாடு வேதியர்க் குரித்தே.

அரசர்க்குரிய பாவகைப் பெயர் = நேரிசை யகவலுங் கொச்சகக் கலியு = மாரா யுங்கா லரசர்க் குரித்தே.

வணிகர்க் குரிய பாவகைப் பெயர் = வஞ்சியும் மின்னிசை வெள்ளையும் வணிகர்க் = கெஞ்சலில்லா வியல் புடைத்தாகும்

சூத்திரர்க் குரிய பாவகைப் பெயர் = நெடுவெண் பாட்டும் நேரிசை யகவலுங் = கடியசூத் திரர்க்குக் கட்டுரைத் தனரே.

காப்புக்குரிய கடவுள் = காப்புமுத லிசைக்குங் கடவுடானே = பூக்கமழ் தண்டுழாய் புனைந்தவனாமவன் = காவற் கிழமைய னாதலானும் = பூவின்கிழத்தியைப் பொருந்துதலானு = முடியுங்கடகமு மொய்பூந்தாருங் = குழையுநூலுங் குருமணிப்பூணும் = அணியுஞ்செம்ம லாதலானும் = மன்னுறு பிரமனைத் தருத லானும் = முன்னுற மொழிதற் குரிய னாமெனப்

= பன்னி யுரைத்தனர்
பாவலர் தாமே.

ஆண்பாற்பிள்ளைப் பாட்டின்வகை = பிள்ளைப்பாட்டுத் தெள்ளிதிற் கிளம்பிற் = றிங்களிரண்டிற் றெய்வங் காக்கென = இன்றமிழ்ப்புலவரியம்பிய காப்பு = மைந்தாந்திங்களிற் செங்கீரையாடலு = மாறாந்திங்களிற் கூறுதல்கற்றலொ டேழாந்திங்களி னின்னமுதூட்டலு, மெட்டாந்திங்களினி யற்றாலாட்டலு = மொன்பதாந் திங்களி லுயர்சப்பாணியும் = பத்தினோடொன்றின் முத்தங்கூறலு மாண்டுவரையி னீண்டு வருகென்றலு = மதியீரொன்பதின் மதியையழைத்தலு = மிரண்டாமாண்டிற் சிறுபறை கொட்டலு = மூன்றாமாண்டிற்சிற்றில் சிதைத்தலும் = நாலாமாண்டிற் சிறுதேருருட்டலும் = பத்திற்பூணணிபன்னீராண்டினிற் கச்சொடு சுரிகைகாமுறப்புனைதலென் = றின்னவை பிறவுமாகுமிவற்றுள் = முன்னர்மொழிந்த வொழிந்தவற்றோடும் = பெற்றவாண்பாற் பிள்ளைப்பாட்டாம் = முன்னுறக்கிளந்த ஆண்டினாள்வரை = இசைத்தபாட லிருபாற்குமுரித்தே.

பெண்பாற்பிள்ளைப் பாட்டுவகை = பேணும் சிறப்பிற் பெண்மக வாயின் = மூன்றா மாண்டிற்குழமண மொழிதலு = மைந்தின் முதலா யொன்பதின் காறு = மைங்கணைக் கிழவனை யார்வமொடு நோற்றலும் = பனிநோர் தோய்தலும் பாவையாடலு = மம்மனை கழங்கு பந்தடித் தாடலுஞ் = சிறு சோறடுதலுஞ் சிற்றி லிழைத்தலு = மூசலாடலு மென்றிவை யுள்ளிட்டுப் = பேசிய பெண்பாற் பிள்ளைப் பாட்டே.

கவியரங்கேற்றிய பாட்டுடைத்தலைவன் செய்யும் வழிபாடு = உருவகமுவமை வழிநிலை மடக்கே = விரிசுடர் விளக்கென விரவி வருநவும் = வேற் றுமை நிலையே வெளிப்படு நிலையே = நோக்கே யுட்கோ டொகைமொழி மிகைமொழி = வார்த்தை தன்மை பிறர்கோள் வைப்பெனப் = பாற்படக் கிடந்த பகுதியின் வருநவுஞ் = சிறப்பு மொழி சிலேடை மறுத்துமொழிநிலையே = வுடனிலைக் கூட்ட முவமான முருவக = நுவலா நுவற்சி தலைக்கட் டியமொழி = நிதரிசனம் பாராட் டொருங்கியனிலையே = யையமுயர்வே விரவியல் வாழ்த்தென = வெய்துமிருபத் தெட்டலங்காரத் தாலு = மெழுத்துச் சொற்பொரு ளியாப்பு நெறியாலு = நவையறச் செய்யுள் செய்யும் பாவல = னவையு மரசு மறியப் பாடுவோன் = முத்தமிழ் வல்லோ னாற்கவி பாடுவோ =

னுத்தமச் சாதியிற் றப்பாதுயர்ந்தோ = னுறுப்பிற் குறையா தொழுக்கமொடு புணர்ந்தோன் = முப்பதுகழிந்தங் கெழுபதுக் குளவாம் = பெற்றியினமைந்த பிராயம துடையோன் = பாடுங் கவிதை நாடுறக் கொள்ளிற் = றோரண நாட்டித் துகிற்கொடியெடுத்து = வார்முரசியம்ப மறையோர் வாழ்த்த = விழுத்தகு கோலத்து விரித்தபூங் கலிங்கத்துப் = பழிப்பில் பாலிகைப் பல்லுணா முளையின் = விளக்கு நிறை குடத்து விதானப் பந்தரிற் = றுளக்கமில் பல்வகைத் தூணிகைப் பொதியிற் = பல்கிளை நெருக்கிற் பாவையர் பல்லாண்டின் = மல்குவனப் பமைந்த வளமனைநாப்பண் = வெண்டுகிலுடுத்து வெண்பூச் சூடித் = தன்றவிசிருத்தித் தானயலிருந்து = மங்கலச்செய்யுண் மகிழ்ந்துகேட்டுப் = பொன்னு மாடையும் பூணுங் கடகமு = மின்னிவை பிறவுங் கொடுத்தே ழடிநிலம் = புரவலன் பின்சென் றொழிகென நிற்றல் = பூவலர் நறுந்தார்ப் புரவலன் கடனே.

பரிசில்பெறாவகை = பாட்டுடைத்தலைவன் பரிசில்கொடானேல் = மீட்டொரு பேரின் விரைந்ததிற் சேர்த்தி = யூரும் பேரு மொருங்கே பறித்துச் = சீருந் தளையுஞ் செல்வதினாட்டி = னிங்கிவன்றிருவிழந் திடர்ப்படத் திருவு, மங்கவற்காகுமாகாதிவற்கே.

மற்றும் பாவலன் பரிசுபெறாக்காற்செய்யும்வகை = பரிசி லீயாப் பாவிதன் பனுவலைத் = தெரிதர வெழுதிச் செம்பூச் சூடித் = தன்மனைப் புறத்தினுஞ் சாமுண்டி முன்றிலும், பன்னகம் வாழும் பழம்பதி தன்னினு = மயானத் திடத்தினு மறுகு தன்னினுந் = தியானித்திருந்து செந்தீக் கொளுத்த = வீரறுதிங்களி னிறுதி யாமென்ப = தாதிப்புலவனறைந்த மொழியே.

இதுவுமது = பரிசில்பெறாது பாடியபுலவன் = றெருமர லுள்ளமொடுகலங்கித் தீங்குயிற் = பாட்டுடைத்தலைவன்றிப் பாட்டுக் = கேட்டினிதிருந்த கிளைஞருங்கெடுவர்.
= = = = = = = = = =

= வது இசைவகை.

காமரப்பாட்டின் பெயர் = கானங் கொளையே வரிகந் தருவங் = கீத
மிராகங்கேயம் பாணி = நாத மிசைபண் காமரப் பாட்டே.

நால்வகைப்பண்ணின் பெயர் = பாலைகுறிஞ்சி மருதஞ் செவ்வழி யென = நால்வகை யாழா நாற்பெரும் பண்ணே.

பாலையாழ்த்திறத்தின் பெயர் = அராக நேர்திற முறுப்புக் குறுங்கலி = யாசா னைந்தும் பாலையாழ்த்திறனே.

குறிஞ்சியாழ்த்திறத்தின் பெயர் = நைவளங் காந்தாரம் படுமலை மருளொடு = வயிர்ப்புப் பஞ்சுர மரற்றுச் செந்திற = மிவ்வகை யெட்டுங் குறிஞ்சி யாழ்த் திறனே.

மருதயாழ்த்திறத்தின் பெயர் = நவிர்வடுகு வஞ்சிசெய்திற நான்கு = மருத யாழ்க்கு வருந்திற னாகும்.

செவ்வழியாழ்த்திறத்தின் பெயர் = நேர்திறம் பெயர்திறஞ் சாதாரி முல்லையென = நாலுஞ் செவ்வழி நல்யாழ்த்திறனே.

பெரும்பண்ணின்வகை = ஈரிரு பண்ணு மெழுமூன்று திறனு = மாகின்றன விவை யிவற்றுட் பாலையாழ் = செந்துமண் டலியாழ் பவுரி மருத யாழ் = தேவதாளி நிருபதுங்கராகங் = நாகராக மிவற்றுட் குறிஞ்சியாழ் = ஆசாரி சாயவேளர் கொல்லி = கின்னராகஞ் செவ்வழிமௌசாளி சீராகஞ் = சந்தியிவை பதினாறும் பெரும்பண்.

பாலையாழ்த்திறன்வகையின் பெயர் = தக்கராக மந்தாளி பாடை அந்தி மன்றல் நேர்திறம் வராடி = பெரிய வராடி சாயரி பஞ்சமம் = திராடம் அழுங்கு தனாசி சோமராகம் = மேகராகந் துக்கராகங் = கொல்லிவராடி காந்தாரம் சிகண்டி = தேசாக்கிரிசுருதி காந்தாரம்மிவை = யிருபதும்பாலையாழ்த்திறமென்ப.

குறிஞ்சியாழ்த் திறன்வகையின் பெயர் = நட்டபாடை யந்தாளி மலகரி = விபஞ்சிகாந்தாரஞ் செருந்திகெவுடி = உதயகிரி பஞ்சுரம் பழம்பஞ்சுரம் = மேகராகக்குறிஞ்சிகேதாளி = குறிஞ்சி கௌவாணம் பாடை சூர்துங்கராக = நாகமருள்பழந் தக்கராகம் = திவ்வியவராடி முதிர்ந்தவிந்தள = மநுத்திரபஞ்சமந் தமிழ்க்குச்சரியருட் = புரிநாரா யணிநட்டராக = மிராமக்கிரி வியாழக்குறிஞ்சி பஞ்சமம்தக்கணா திசாவகக்குறிஞ்சி = யாநந்தையெனவிவை முப்பத்திரண்டுங் = குறிஞ்சியாழ்த்திறமாகக்கூறுவர்.

மருதயாழ்த் திறன்வகையின் பெயர் = தக்கேசி கொல்லி யாரிய

குச்சரி = நாகதொனி சாதாளி யிந்தளந் தமிழ்வேளர் கொல்லி = காந்தாரங் கூர்ந்த பஞ்சமம் பாக்கழி = தத்தள பஞ்சம மாதுங்க ராகம் = கௌசிகஞ் சீகாமரஞ் சாரல் சாங்கிமம் = எனவிவை பதினாறு மருதயாழ்த்திறனே.

செவ்வழியாழ்த் திறன்வகையின் பெயர் = குறண்டி யாரிய வேளர் கொல்லி = தனுக்காஞ்சி யியந்தை யாழ்பதங் காளி = கொண்டைக்கிரி சீவனியாமை சாளர் = பாணி நாட்டந் தாணு முல்லை = சாதாரி பைரவம் காஞ்சி யென விவை = பதினாறுஞ் செவ்வழி யாழ்த்திற மென்ப.

மற்றுந்திறத்தின் பெயர் = தாரப் பண்டிறம் பையுள் கஞ்சி = படுமலை யிவைநூற்று மூன்றுதிறத்தன.

நேர்திறத்தின் பெயர் = துக்கராக நேர்திறமாகும்.

காந்தாரபஞ்சமத்தின் பெயர் = உறழ்ப்புக்காந்தாரபஞ்சமமாகும்.

சோமராகத்தின் பெயர் = குறுங்கலி யென்பது சோமராகம்.

காந்தாரத்தின் பெயர் = சாரற்றிறமெனி னதுகாந்தாரம்.

நட்டபாடையின் பெயர் = நைவளமென்பது நட்ட பாடை.

பழம்பஞ்சுரத்தின் பெயர் = பஞ்சுரம் பழம்பஞ்சுரமாகும்மே.

கவ்வாணத்தின் பெயர் = படுமலையென்பது பகரிற்கவ்வாணம்.

அநுத்திரபஞ்சமத்தின் பெயர் = அயிர்ப்புஅநுத்திரபஞ்சமமாகும்.

குறிஞ்சியின் பெயர் = அரற்றுக்குறிஞ்சி.

செந்துருதியின் பெயர் = செந்திறஞ் செந்துருதி.

தக்கேசியின் பெயர் = நவிர்தக்கேசி.

வடுகின் பெயர் = இந்தளம் வடுகெனல்.

பாக்கழியின் பெயர் = வஞ்சிபாக்கழி.

சிகண்டியின் பெயர் = செய்திறஞ் சிகண்டி.

சாதாரியின் பெயர் = முல்லை சாதாரி புறநீர்மை நேர்திற = மெனலாங்கிசைப்ப ரிசைவல் லுநரே.

நால்வகையாழின் பெயர் = பேரி யாழுஞ் சகோட யாழு = மகரயாழுஞ் செங்கோட்டி யாழு = மென நால்வகை யாழி னாம மாகும்.

ஏழிசையின் பெயர் = குரலே துத்தங் கைக்கிளை யுழையே = யிளியே விளரி தார மென்றிவை = யேழும் யாழி னிசைகெழு நரம்பே.

அவற்றுள் செம்பாலைவகை = குரல்குரலாகிற்செம்பாலையென்ப.

படுமலைப்பாலைவகை = துத்தங் குரலாகிற் படுமலைப்பாலை.

செவ்வழிப்பாலைவகை = கைக்கிளைகுரலேற் செவ்வழிப்பாலை.

அரும்பாலைவகை = உழைகுர லாகி லரும்பாலை யென்ப.

கொடிப்பாலைவகை = இளிகுர லாகிற் கொடிப்பாலை யென்ப.

விளரிப்பாலை = விளரி குரலாகின் விளரிப் பாலை.

மேற்செம்பாலையின்வகை = தாரங் குரலேன் மேற்செம் பாலை

ஏழ்பாலைகளுள் இதனினிது வலிதெனல் = ஆயவை யேழும் பாலை யவற்றுட் = செம்பாலைக்குப் படுமலைப்பாலை = படுமலைப்பாலைக்குச் செவ்வழிப்பாலை = செவ்வழிப்பாலைக் கரும்பாலை யாகும் = அரும்பா லைக்குக் கொடிப்பாலை வலிதே = கொடிப்பாலைக்கு விளரிப்பாலை = விளரிப் பாலைக்கு மேற்செம்பாலை = வலிதென் றுரைத்தனர் வான்றமிழ்ப் புலவர்

ஏழிசைதம்மிற் பிறக்கும் வகை = தாரத்துளுழையு முழையுட் குரலுங் = குரலு ளிளியு மிளியுட் டுத்தமுந் = துத்தத்துள் விளரியும் விளரியுட் கைக்கிளையுந் = தம்மிற் பிறக்குந் தகுதிய வென்ப.

இவற்றின் பிறப்பிடத்தின் பெயர் = குரலது மிடற்றிற் றுத்த நாவினிற் = கைக்கிளை யண்ணத்திற் சிரத்தி லுழையே = இளிநெற் றியினில் விளரி நெஞ்சினில் = தாரநாசியிற்

றம்பிறப்பென்ப.

இவற்றின் மாத்திரைகளாவன = நான்கு நாலு மூன்று மிரண்டு = நான்கு மூன்று மிரண்டு மாத்திரை = குரன்முதலாகக் கூறுமென்ப.

ஏழிசையோசையாவன = வேண்டியவண்டு மாண்டகு கிளியுங் = குதிரையும் யானையுங் குயிலுந் தேனுவ் = மாடுமென்றிவை யேழிசையோசை.

இவற்றினெழுத்தாவன = ஆஈஊஏ ஐஓ ஔவென் = றேழுமேழிசைக் கெய்துமக் கரங்கள்.

ஏழிசைக்குரிய மணங்களாவன = *மௌவன் முல்லை செவ்விணர்க்கடம்பு =
வஞ்சி நெய்தல் வனசம்புன்னை = எஞ்சலில்லா ஏழிசைமணமே.
= = = = = = = = =
*மௌவல் = வனமல்லிகை.

இவைகளின்சுவை = பாலுந்தேனுங் கிழானு நெய்யு = மேலமும் வாழையு மாதுளங் கனியு = மாகு மேழிசைக் கமைந்தநன் சுவையே.

இவைகளுக் கிறைவர் பெயர் = விசுவா மித்திர னியம னங்கி = திங்கள் வெய்யோன் கௌதமன் காசிப = னென்றிவரேழிசைக் கிறைவரென்ப.

மந்தவிசையின் பெயர் = மந்தரங் காகுளி மந்த விசையே.

சமனிசையின் பெயர் = மதுரந் துத்த மத்திமஞ் சமனிசை.

வல்லிசையின் பெயர் = தாரமு முச்சமும் வல்லிசையாகும்.

இசைவிகற்பத்தின் பெயர் = ஏனையோரிசை விகற்பமென்ப.

குரற்குரிய திறத்தின் பெயர் = குரற்குரி யதிற மாசான் றிறமே.

இருதுறையின்வகை = இருதுறை செந்துறை வெண்டுறை யென்ப

பண்ணென்பது = நிறைந்தநரம்பு நிகழும்பண்ணெனல்.

திறமென்பது = குறைந்த நரம்பு திறமெனக்கொள்க.

யாழெழு மின்னிசையின் பெயர் = எழாலே யாழெழு மின்னிசையென்ப.

இசைக்குழலின் பெயர் = வாரிவங்கியமற்றிவை யிசைக்குழல்

வீணையின் பெயர் = வீணை கின்னரந் தண்டு மாகும்.

யாழின் பெயர் = தந்திவீணை கின்னரங்கோட்டங் = கோடவதிவி வஞ்சி யாழ்ப் பெயர் கூறும்.

மற்றும்யாழின் பெயர் = அறிகலமுங்கருவியுமப் பெயர்க்குரித்தே.

யாழ்வலிக்கட்டின் பெயர் = வலிக்கட்டுத்திவவே.

முறுக்காணியின் பெயர் = முறுக்காணி மாடகம்.

நரம்பின் பெயர் = கோலேதந்திரி குரலிவைநரம்பே.

ஆதியாழாவது = ஆயிரநரம்பிற் றாதியாழாகும்.

உள்ளோசையின் பெயர் = முரல்வு நரல்வுந் தெளிருஞெளிரும் = விழைவு நுணுக்கமு முள்ளோசை யென்ப.

பல்லியந்தழுவுபாடலின் பெயர் = சங்கீதம்பல்லியந்தழுவுபாடல்.

ஆடற்கேற்கும்பாட்டின் பெயர் = செந்துறைப் பாட்டே யாடற் கேற்பது.

பாடற்கேற்கும்பாட்டின் பெயர் = வெண்டுறைப்பாட்டே பாடற் கேற்பது.

அகமார்க்கமாவது = அருமையிற்பாட லகமார்க்ககமாகும்.

யாழ்நரம்போசையின் பெயர் = கலித்தல் சும்மை கம்பலை யழுங்கல் = சிலைத்த றுவைத்தல் சிலம்ப லிரங்க = லிமிழ்தல்லிம்ம லிரட்ட லேங்கல் = கனைத்த றழங்கல் கறங்க லரற்ற = லிசைத்த லென்றிவை யாழ்நரம் போசை.

ஒலியின் பெயர் = ஓதை நாதங் கம்பலை சும்மை = யாகுலம் பலம்பல் கோடணை யரவ = மோசை கர்ச்சனை யொலியா

கும்மே.

திரட்டோசையின் பெயர் = அலறல்கூப்பிட றெழித்த லுரப்பல் = பிளிற லென்றிவை திரட்டோசை யாகும்.
= = = = = = = = = = =

= வது நாடகவகை.

கூத்தின் பெயர் = நடமேநாடகநடன நட்டம் = படித மண்டிலந்தாண்டவம் பரத = நிலைய நிருத்த மாட றூக்கு = வாலுத றுணங்கை யவிநய மிலையம் = பாணி குரவை கூத்தெனப் பகர்வர்.

கூத்தின்விகற்பத்தின் பெயர் = கரண முப்பித மலைப்புப்புரியம் = பிரமரிவீரட் டானங் குனிப்பு = வுள்ளானங்கடக மிலைய மென்ப = வொள்ளிய கூத்தின் விகற்பமாகும்.

சிரமஞ்செய்தலின் பெயர் = பருமித்தல் சிரமஞ் செய்தலென்ப.

சிவனாடலின் பெயர் = பாண்டரங்கங் காபாலங்கொடு கொட்டி = ஆண்ட சிவன தாட லாகும்.

பதினோருருத்திர ராடலின் பெயர் = கொட்டி குரவை குடங்குடை வெறியே = மல்லுப்பேடு பாவை கடையம் பாண்டரங்க = மரக்கா லீசர் பதினோராடல்

மாயோனாடலின் பெயர் = அல்லியங் குடமாடன் மல்லே மரக்கா = லல்லொளி மாயோ னாடலாகும்.

திருமக ளாடலின் பெயர் = பாவை யென்பது திருமக ளாடல்.

முருகனாடலின் பெயர் = கொட்டியுங்குடையுங்குமரனாட = லொடிய துடியு முரித்தா கும்மே.

காமனாடலின் பெயர் = பேடாடல் காமன தாடலாகும்.

அயிராணி யாடலின் பெயர் = அயிராணி யாடற் பெயர் கடையமாகும்.

துர்க்கையாடலின் பெயர் = துர்க்கை யாடல் மரக்கா லென்ப.

சத்தமாத ராடலின் பெயர் = எழுவகை நங்கைமா ராடலுந் துடியே.

கைகோத் தாடலின் பெயர் = குரவைக் கூத்தே கைகோத் தாடல்.

முடக்கிய விருகை பழுப்புடை யொற்றி யாடலின் பெயர் = முடக்கிய விருகை பழுப்புடை யொற்றித் = தொடக்கிய நடையது துணங்கை யாகும்.

வேலனாடலின் பெயர் = அணங்கும் வெறியும் கழங்கும் வேலனாடல். )

ஒத்தறுத்தலின் பெயர் = வட்டித்த றட்டல் வட்டணை யொத்தறுத்தல்.

கைகுவித்துக் கொட்டலின் பெயர் = கொம்மை கொட்டல் கை குவித்துக் கொட்டல்.

ஆர்த்துவாய் கொட்டலின் பெயர் = ஆவலங் கொட்ட லார்த்து வாய் கொட்டல் .

குந்திநிற்றலின் பெயர் = குந்திய கானிலை குஞ்சித்த லாகும்.

கைகூப்பி மெய்கோட்டி நிற்றலின் பெயர் = குடந்தங் கைகூப்பி மெய்கோட்டி நிற்றல்.

கூத்தாடலின் பெயர் = அகவ றாண்ட லாடுத னடித்த = லசைதல் பெயர்த லடுத்தல்கூத்தாடல்.

மற்றுங் கூத்தாடலின் பெயர் = மாற லென்பதுங் கூறலாகும்.

தாளவொத்தின் பெயர் = சதியுஞ் சீருந் தாளவொத் தின் பெயர்.

நாடகமாவது = அதினி னடிக்கு நடம் நாடகமாகும்.
= = = = =

= வது மண்டிலவகை.

விற்றொடுத்தம்பினையெய்வார்க்குரிய்நால்வகைநிலையின் பெயர் = நவையறு பைசாச நிலையுமண்டிலமு = மாலீட நிலையும் பிரத்தியா லீடமு = மெனக்கொளுநிலையு மொருநால்வகையே.

அவற்றுள் பைசாச நிலைவகை = ஒருகா னிலைநின் றொருகான் முடக்கும் = பரிசாய நிலையது பைசாச நிலையே.

மண்டிலநிலைவகை = இருகான்மண் டிலித் திடுதன்மண்டிலநிலை.

ஆலீடநிலைவகை = வலக்கான் மண்டிலித் திடக்கான் முந்துறி = லதற்பெய ராலீட நிலையதாகும்.

பிரத்தியாலீடநிலைவகை = வலக்கான் முந்துற் றிடக்கான்மண்டிலித் = திடற் பெயர் பிரத்தியா லீடநிலையே.
= = = = = = =

= வது படைவகை.

போரின் பெயர் = யுத்த மாகவந் தும்பை சமரங் = கணையஞ் செரு சங்கிரா மம்மிகலெதிர் = ஞாட்புப் பூசலா யோதனமடலம = ரிரண மலைதலா மின்னவை போரே.

புறவகை = வெண்பா = வெட்சிநிரைகவர்தன் மீட்டல்கரந்தையாம் = வட்கார்மேற் செல்வது வஞ்சியா = முட்கா = ரெதிரூன்றல் காஞ்சியெயில்காத்த னொச்சி = யதுவளைத்த லாகு முழிஞை = யதிரப் = பொருவது தும்பையாம் போர்க்களத்து மிக்கோர் = செருவென் றதுவாகையாம்.

புறப்புறவகை = = வாகை பாடாண் பொதுவியற் றிணையெனப் = போகிய மூன்றும் புறப்புற மாகும்.

நால்வகைப்படையின் பெயர் = கோலத்தேர்கரி குதிரை காலா = ணால்வகைப் படையி னாம மாகும்.

தேரின் பெயர் = குயவு வையங் கொடிஞ்சி சயந்தனந் = திகிரியந் திரங்கவரி யரி யிரதந்தேர்.

மற்றுந்தேரின் பெயர் = கூவிரமென்பது மோர்வழிக்கொளலே.

தேருருளின் பெயர் = உருளிகா லாழி பரிதி யுந்தி = திகிரி சில்லிநேமி தேருருளே.

தேரினகத்திற்செறிகதிரின் பெயர் = அகத்திற்செறிகதி

ராரெனலாகும்.

தேர்க்கொடிஞ்சியின் பெயர் = கூவிரங்கொடிஞ்சி.

தேர்மொட்டின் பெயர் = கூம்புதேர் மொட்டே.

தேர்முட்டியின் பெயர் = பிரம்புதேர் முட்டி யென்னப் பேசுவர்.

தேர்நடுவின் பெயர் = நடுவட் டேர்ப் பெயர் காப்பணுந் தட்டும்.

தேர்மரச்சுற்றின் பெயர் = கிடுகென் கிளவி தேர்மரச்சுற்றே.

தேர்ப்பலகைப்பாவின் பெயர் = பாரே பலகைப் பாவெனலாகும்.

தேர்ப்பரப்பின் பெயர் = பாரே தேரின் பரப்புமாகும்.

அச்சுருவாணியின் பெயர் = அச்சே தேரி னச்சுரு வாணி.

பரிபூண்டதேரின் பெயர் = பாண்டில்கஞ் சிகைவையம் பரிபூண்டதேரே.

பண்டியின் பெயர் = சகட மொழுகை சாகாடு பண்டி.

பண்டியுள்ளிருசின் பெயர் = பண்டியுள்ளிருசு கந்தெனப்பகர்வர்.

அரசுவாவினிலக்கணம் = காலோர் நான்குந் தனிக்கையுங் கோசமும் =
வாலுறுப் போடேழு மாநிலந் தோய்வதும் = பாலுஞ் சங்கும் போலுங் காலுகிர் = காலினுந் தன்றனிக் கையினு மெய்யினும் = வாலினு மருப்பினுங் கோறல்வல் லதுவா = யேழ்முழ முயர்ந்தோன் பான்முழ நீண்டு = பதின்மூன்றுமுழஞ் சுற்றுடைத் தாகித் = தீயுமிழ் சிறுகண்ணுஞ் செம்புகரு முடைத்தாய் = *முன்புயர்ந்து *பின்பணித்தாய = தியானை யரசுவா வாகுமென்ப.

அரசர்க்குரிய பரியினிலக்கணம் = மாதர்தம்மணமென மிக்கமணத்தது = வாழை மடலென வளர்ந்த செவியது = நாலுதாளு மெருத்துமுகனும் = வெந்து முன்னும் வெண்மையுடையதாய் = எண்பத் திருவிர லுயர முயர்ந்தது = பண்புடை யரசர்க் காவது பரியே.

பரியின்கதிவகைப் பெயர் = மல்ல கதியே வாநர கதியே = மயூர கதியே *வல்லிய கதியே = மால்விடைக் கதியென வருங்கதி யைந்துந் = தோலாப் புரவிக்குச் சொல்லிய கதியே.
= = = = = = =

= வது காலாள்வகை.

பகைவர்மேற்செல்லல் = ஊராண்மையென்பதோங்கிச்செல்லல்.

பகைவரிடத்தில்செய்யும் அரியசெயல் = பேராண்மை யென்ப தரிய செயலே.

புறங்கொடுத்தோர்மேலாயுதம் எறியாமை = சாய்குநர்மேற்படை விடாமை தழிஞ்சி.

வெற்றிப்பூவின் பெயர் = பூளை வெற்றிப்பூவா கும்மே.

கொள்ளையின் பெயர் = சூறையுங் கொண்டியுங் கொள்ளை யாகும்.

வாரலின் பெயர் = வாரல் கவரல் வெளவ லதுகொளல் .

படையின் பெயர் = தானை பதாதி தண்டம் பதாகினி = வானி யநிகம் வாகினி தந்திரஞ் = சேனை பகுதி பாடி பலம்படை.

மற்றும்படையின் பெயர் = நிதானமுங் ககனமுந் தளமு நிகழ்த்தும்.
= = = = = = = = = = = = =
*வல்லியகதி = புலியைப்போலும்பாய்ச்சலுடையநடை.

படைவகுப்பின் பெயர் = ஒட்டும் யூகமுமுண்டையு மணியு = மற்றிவை படையின் வகுப்பென லாகும்

படையுறுப்பின் பெயர் = தூசியுங் கூழையு நெற்றியுங் கையு = மணியுமென்ப தப்படைக் குறுப்பே

பேரணியின் பெயர் = கூழையென்பது பேரணியாகும்

கொடிப்படையின் பெயர் = தாரே முன்செல் கொடிப்படை யாகும்

கீழறுத்தலின் பெயர் = அறைபோதல் கீழறுத்தன் படைமறுத்த

லாகும்

பொரவழைத்தலின் பெயர் = அறைகூவ லென்பது பொரவழைத்தலாகும்
= = = = = = = = = = =

= வது தோற்கருவிவகை

முழவின் பெயர் = முழவு குளிரே

குடமுழாவின் பெயர் = மண்கணை முழவங் குடமுழா வாகும்

படகத்தின் பெயர் = பணவந் திண்டிம மானகம் படகம்

கடிப்பின் பெயர் = குணிலே கடிப்பின் கூற்றாகும்மே

சிறுபறையின் பெயர் = ஆகுளி சிறுபறை

திமிலையின் பெயர் = சல்லரி திமிலை

ஒருகட்பறையின் பெயர் = ஒருகட் பறையே மொந்தை யென்ப

நிசாளத்தின் பெயர் = தண்ணுமை நிசாளம்

ஒருபறைவிகற்பத்தின் பெயர் = ஒருபறை விகற்பந் தாழ்பீலி யாகும்

பன்றிப்பறையின் பெயர் = பன்றிப்பறையே குடப்பறையாகும்

கரடிப்பறையின் பெயர் = கரடிநாமக் கட்டுரை தட்டை

ஒருகட்பகுவாய்ப்பறையின் பெயர் = பதலையொருகட் பகுவாய்ப் பறையே

துந்துபியின் பெயர் = சகண்டைமுரசு பணையே சகடந் = துந்துபியென்ப தூரியமு மாகும்

மற்றுந்துந்துபியின் பெயர் = பேரிதகணித மென்னவும்பேசுவர்

உவகைப்பறையின் பெயர் = உவகைப்பறையே தூரிய மாகும் (

உடுக்கையின் பெயர் = துடியே யுடுக்கை

பம்பைப்பறையின் பெயர் = தடாரி பம்பைப்பறை

தம்பட்டத்தின் பெயர் = முரசு தம்பட்ட முழவு மாகும்

தலைவிரிபறையின் பெயர் = குழையுடற் றலைவிரி பறைகத் திரியே

மரக்காற்பறையின் பெயர் = மரக்காற் பறையே கோதையாகும்.

பலவகைப்பறையின் பெயர் = பணவந் திண்டிமந் தக்கை யிடக்கை = திமிலை கண்டிகை கண்டை குறடு = பணைசிந் தூரம் பாண்டிகம் பீலி = கரடிகை துடிகை கடுவை யூமை = சகடை கிடுகு பல்வகைப் பறையே.

வாச்சியப்பொதுப் பெயர் = தூரியமுழவம் வைதங்கோடணை = முரசுபீலி முருடு தடாரி = யியம்பணை வாச்சியப் பொதுப்பெய ரென்ப. .
= = = = = = = = =

= வது குடைவகை.

குடையின் பெயர் = கவிகை சத்திரம் பிச்சங் கவிப்புக் = குளிராத பத்திரந் தொங்கல் குடைப் பெயர்.

செங்குடையின் பெயர் = செங்குடைமீயையுஞ்சிந்தூரமுமாகும்.

பீலிக்குடையின் பெயர் = துங்கப் பீலிக்குடைசுழ லாகும்.

பீலிக்குஞ்சக் குடையின் பெயர் = தழையே தொங்கல் சமாலம் பிச்சங் = குளிரி பீலிக் குஞ்சமாகும்.
= = = = = = = = = = = =

= வது ஆயுதவகை.

வில்லின் பெயர் = கோதண் டஞ்சிலை கொடுமரங் கார்முகஞ் = சாபந் துரோணந் தனுசு தனுவில் லாகும்.

மற்றும்வில்லின் பெயர் = தடிமுனி சிந்து வாரஞ் சராசனந் = தவரே வேணுச் சார்ங்கமுமாகும்.

நாணின் பெயர் = பூரி யாவம்பூட்டுத் தொடை வடம் = நாரி நரம்புகுணநாணின் பெயரே .

நாணினொலியின் பெயர் = நாணி னொலியே *மருமராஞ்சமாகும்.
= = = = = = = = = = = = =
*மாஞ்சம் என்பது மற்றொருபிரதி.

அம்பின் பெயர் = பகழி வாளி தோணி பாணங் = கதிரம் பல்லங் கணைகோல் சரமொடு = வண்டு பத்திரஞ் சிலீமுகம் விசிக = மம்பின் பெயருடு வாகலு முரித்தே.

அம்புத்தலையின் பெயர் = உடுவம் புத்தலை.

மொட்டம்பின் பெயர் = உதண்மொட்டம்பே.

அம்புக்குப்பியின் பெயர் = புழுகு குப்பி.

அம்புக்கட்டின் பெயர் = புதை யம்புக்கட்டே.

அம்புக்குதையின் பெயர் = பகழி புங்க மம்புக்க குதையே.

அம்புத்திரள்கட்டுங்கயிற்றின் பெயர் = பகழித்திரளின் பெயர் பற்றாக்கை.

அம்பறாத்தூணியின் பெயர் = தூணி புட்டி லம்பறாத் தூணி.

மற்றுமம்பறாத்தூணியின் பெயர் = ஆவமு மாவ நாழிகையுமாகும்.

குதையின் பெயர் = குலையே வில்லி லிருதலைக் குதையே.

அம்பினிறகின் பெயர் = அம்பி னிறகு வுடுவென் றாகும்.

பிண்டிபாலத்தின் பெயர் = பீலித்தண் டெஃகம் பிண்டி பாலம்.

நாராசத்தின் பெயர் = சலாகை நாராசம்.

இருப்புமுள்ளின் பெயர் = தாறிருப்பு முள்ளே.

கழுமுள்ளின் பெயர் = கழுக்கடை கழுமுட் கட்டுரை யாகும்.

வாளின் பெயர் = நவிரேதி நாட்டங் கடுத்தலை நாந்தகம் = வசியே கட்கம் வஞ்சம் வாளே.

மற்றும்வாளின் பெயர் = மட்டா யுதந்தூ வத்தியு மாகும்.

கூன்வாளின் பெயர் = கோணங் கூன்வாள்.

.சிறுவாளின் பெயர் = முசுண்டி சிறு வாள்.

கொடுவாளின் பெயர் = குயமும் புள்ளமுங் கொடுவாளாகும்.

அரிவாளின் பெயர் = அரிகதிர்க் கத்திக்கு மப்பெய ராகும்.

*சுழல்படையின் பெயர் = சுழல்படை வட்டம் பாரா வளையம்.
= = = = = = = = = = = = = =
* சுழல்படைவளைதடி.

ஈர்வாளின் பெயர் = வேதினங் கரபத் திரமுமீர்வாள்.

உடைவாளின் பெயர் = சுரிகை பத்திரங் குறும்பிடி யுடைவாள்.

கைவாளின் பெயர் = கண்ட மென்பது கைவா ளாகும்.

கணையத்தின் பெயர் = எழுவும் பரிகமுங் கணைய மென்ப.

சூலத்தின் பெயர் = காள நல்வசி சூலங் கழுமுண் = மூவிலை வேலே முத்தலைக் கழுவெனல்.

பூங்கருவியின் பெயர் = சன்னகம் பூங்கருவியாகச்சாற்றும்.

மழுவின் பெயர் = பரசு கணிச்சி நவியமு மழுவே.

மற்றுமழுவின் பெயர் = பாலந் தண்ணமு மழுப்படை யாகும்.

இலைமூக்கரிகத்தியின் பெயர் = குளிரிலை மூக்கரி கத்தி யாகும் = கணிச்சியு மதன்பாற் கருதப்படுமே.

கோடாலியின் பெயர் = குடாரமு நவியமுங் கோடாலி யாகும்.

தோட்டியின் பெயர் = சரணாங் கணிச்சி யங்குசந் தோட்டி.

மற்றுந்தோட்டியின் பெயர் = கோண மென்றுங் கூறப்படுமே.

வேலின் பெயர் = உடம்பிடியெஃக மயிலே கத்தி = விட்டேறரண ஞாங்கரும் வேலே.

வச்சிராயுதத்தின் பெயர் = வயிரப் படையே சம்பங் குலிசம் = அசனி வச்சிரப் படையாகும்மே.

மற்றும் வச்சிராயுதத்தின் பெயர் = சதகோடி யென்பதுஞ் சாற்றப்பெறுமே.

தண்டாயுதத்தின் பெயர் = தடியுங் கதையும் சீருந் தண்டெனல்.

மற்றுந்தண்டாயுதத்தின் பெயர் = வயிரமு முளையு மெறுழுமற்றுதுவே.

கிளிகடி கருவியின் பெயர் = தழலுந் தட்டையுங் கிளிகடி கருவி.

குறுந்தடியின் பெயர் = குணிலே குறுந்தடி.

ஈட்டியின் பெயர் = இட்டி யீட்டி.

கவணின் பெயர் = கவணை யொடிசில் குணில் குளிர் கவணே.

சிறுசவளத்தின் பெயர் = குந்தஞ் சிறுசவளம்.

பெருஞ்சவளத்தின் பெயர் = குந்தந்தோமரம் பீலிபெருஞ்சவளம்.

சக்கரத்தின் பெயர் = திகிரி நேமி யாழியெஃ கம்வளை = = பரிதி யொளி வட்டஞ் சுதரிசனஞ் சக்கரம்.

கைக்கட்டியின் பெயர் = கோதை கைக்கட்டி கைப்புடையுங் கூறும்.

கைவிடுபடையின் பெயர் = அத்திரம் விடுபடை.

கைவிடாப்படையின் பெயர் = சத்திரம் விடாப்படை.

சுவரகழ் கருவியின் பெயர் = கன்னஞ் சுவரகழ் கருவியாகும்.

தறிகைக்கும் உளிக்கும் பெயர் = தறிகை கணிச்சியுளிக்குமதுவே.

கைவேலின் பெயர் = கைவேல் விகற்பங் கப்பணந் தோமரம்.

கயிற்றின் பெயர் = பாசங் கச்சை நாண்வடம் பழுதை = = தாம மிரச்சுத் தாம்பு கயிறே.

தாமணியின் பெயர் = தாமணி கண்ணி தாம்பு மாகும்.

வலைக்கயிற்றின் பெயர் = சால மென்பது கயிற்றுவலையே.

அஞ்சனமெழுதுங்கருவியின் பெயர் = கோலே யஞ்சன மெழுதுங் கருவி.

எழுதுங்கருவியின் பெயர் = கண்டமூசியாணி யெழுதுங்கருவி.

ஊசியின் பெயர் = = சூசி யூசி யென்ப.

ஊசித்தொளையின் பெயர் = பாசமூ சித்தொளை துன்னமும் பகரும்.

நுனியின் பெயர் = நுதியு நுனையு நுனியா கும்மே.

முசுண்டியின் பெயர் = தானை படையே முற்கர *முசுண்டி.
= = = = = = =
*முசுண்டி = சம்மட்டி வடிவினதோராயுதம்.

இருப்புலக்கையின் பெயர் = முசலமிருப் புலக்கை.

சங்கிலியின் பெயர் = துவக்குத் தொடர்சங் கிலியே யிடங்கணி.

பற்றிரும்பின் பெயர் = கற்பொறியள்வலி பற்றிரும்பாகும்.

கூர்மையின் பெயர் = வயிரமும் வள்ளும் வசியும் வையு = மயிலு நிசிதமு மள்ளும் பூவு = மாருங் கூர்மையி னபிதா னம்மே.

ஆயுதப்பொதுப் பெயர் = தானை படையே படைக்கலங் கருவி யெஃகியவை யாயுதம் வேலு மியம்புவர்

மற்றும் ஆயுதப்பொதுப் பெயர் = துப்பு மேதியுஞ் சுதன்மமு

மாகும்.

படையுறையின் பெயர் = தடறுங்கருவிப்புட்டிலுமுறையெனல்.
= = = = = = = = =

= ஆவது செயற்கைவகை

கவசத்தின் பெயர் = ஆசு தசனம் சடாரி யரணம் = பாசங் கண்டம் பருமங் கச்சை = சாலிகை மாடிகை கந்தளம் பார = மேழகங் கசையே மெய்புகு கருவி = கவசப் பெயரே சடாரியுஞ் சொல்லும்.

மற்றும் கவசத்தின் பெயர் = அந்தளமு மபரமுஞ் சுரிகையுஞ் சொல்லும்.

கேடகத்தின் பெயர் = கேடகம்வட்டந் தட்டிகடகம் = வேதிகை கிடுகு பலகை கேடகம்.

*மாவட்டணத்தின் பெயர் = தட்டியம் பலகை தட்டுமா வட்டணம்.

தோற்பலகையின் பெயர் = தோற்பரந் தட்டுத் தோற்பலகைத் தோலுமாம்.

யானைப் புரசைக்கயிற்றின் பெயர் = தூசு கவடு புரசைக் கயிறெனல்.

யானைமுகபடாத்தின் பெயர் = சூழி படமே வேழ முகபடாம்.

மற்றும் யானைமுகபடாத்தின் பெயர் = மலையின் மந்தன மென்றுஞ் சொல்லும்.

யானைகட்டுந்தறியின் பெயர் = ஆளானம் வெளிலேயானை யணைதறி.

யானைக்கச்சையின் பெயர் = கரியின் கச்சை கண்டமாகும்.

யானைமேற்றவிசின் பெயர் = இலகடம்பலகாரந்தவிசெனலாகும்.

மற்றும் யானைமேற்றவிசின் பெயர் = மணையும் பலகையையு மப் பெயர் கூறும்.

குதிரைக்கலணையின் பெயர் = பருமமும் பண்ணும் படையும்

பல்லணமும் = பரமு மென்றிவை பரிமாக் கலணை.

மற்றும் குதிரைக்கலணையின் பெயர் = சூழியும்பரிமாக் கலணையாகும்.
= = = = = = =
* மாவட்டணம் நெடும்பரிசை.

குதிரை யங்கவடியின் பெயர் = கச்சமும் படியு மங்கவடியென்ப.

குதிரைச்சம்மட்டியின் பெயர் = மத்திகை கோலே மற்றிவை சம்மட்டி.

குதிரைக்கயிற்றின் பெயர் = வற்கம் வாய் வட்டங்குசை கயிறென்ப.

குதிரைக்கடிவாளத்தின் பெயர் = கலியமுமூட்டுங் கிராமுங் கலினமுங் = கறுழு மென்றிவை கடிவாளப் பெயர்.

கடிவாளப்பூணின் பெயர் = மற்றதற் கணியுங் விருளை யெனலாகும்.

கலப்பையின் பெயர் = படையலந் தொடுப்புப் படைவாணாஞ்சி = லிலாங்கலி யால முழுபடை கலப்பை.

மற்றும்கலப்பையின் பெயர் = கலனை யென்பதுங் கலப்பைப்*பெரே.

மேழியின்பெயெர் = கொடுநுக மேழிக் கூற்றா கும்மே.

குறுந்தறியின் பெயர் = போதிகை குறுந்தறி.

வேள்வித்தறியின் பெயர் = யூபம் வேள்வித்தறி.

தூணின் பெயர் = தாணுவுங் காலுங் கம்பமுந் தம்பமு = மாளான மதலை யெழுவெளி லேதறி = தூணென்றுரைப்பர் கந்துஞ் சொல்லும்.

தொழுவின் பெயர் = தொழுவின்பெயரே தோழமாகும்.

யானைத்தோட்டியின் பெயர் = யானையின் குடாரியங்குசந்தோட்டி = கோண மியானை வணங்கியுங் கூறும்.

பெருங்குறட்டின் பெயர் = அடைகுறட் டின் பெயர் பட்டடையாகும்.

பெருங்குரட்டின் பெயர் = கூரின் முருடு பெருங்குற டென்ப.

சம்மட்டியின் பெயர் = கொட்டுஞ் சம்மட்டிகூடமென்ப.

சுட்டுக்கோலின் பெயர் = சுட்டுக்கோ லாணி.

கொழுவின் பெயர் = கோல்கொழு வென்ப.

ஒண்டியிண் பெயர் = ஊற்றாணி யொண்டி.

பாரைக்கோலின் பெயர் = மீன்குத்தி பாரைக்கோல்.
= = = = = = = =

= வது அக்குரோணிவகை.

பதாதியென்பது = ஒருபெருங்களிறு மொருபெருந்தேரும் = புரவி மூன்றும் படைஞரைவரும் = பதாதியென்றுபகரப்படுமே.

சேனாமுகமென்பது = பதாதி மும்மடி சேனாமுகமே.

குமுதமென்பது = = சேனாமுக மும்மடி தானாங் குமுதம்.

கணகமென்பது = = குமுதமும்மடிகொண்டது, கணகம்.

வாகினியென்பது = = கணக மும்மடி கொண்டது வாகினி,

பிரளயமென்பது = = வாகினி மும்மடியாகும் பிரளயம்.

சமுத்திரமென்பது = = பிரளய மும்மடி கொண்டது சமுத்திரம்.

சங்கமென்பது = = சமுத்திர மும்மடி கொண்டது சங்கம்.

அநீகமென்பது = = சங்கமும்மடி கொண்ட தநீகம்.

அக்குரோணியென்பது = = அநீக மும்மடியக் குரோணி யாகும்.
= = = = = = = = = =

= வது வெள்ளவகை.

அக்குரோணி எட்டுப்பங்குகொண்டது = = முந்தையெண் மடங்கு கொண்டதொன் றேகம்.

ஏகம்எட்டுப்பங்குகொண்டது = = ஏக மெண்மடங்கு கொண்டது கோடி.

கோடிஎட்டுப்பங்குகொண்டது = = கோடியெண் மடங்கு கொண்டது சங்கம்.

சங்கம் எட்டுப்பங்குகொண்டது = = சங்கமெண்மடங்கு கொண்டது விந்தம்.

விந்தம்எட்டுப்பங்குகொண்டது = = விந்தமெண் மடங்கு கொண்டது குமுதம்.

குமுதம் எட்டுப்பங்குகொண்டது = = குமுதமெண் மடங்குகொண்டது பதுமம்.

பதுமம்எட்டுப்பங்குகொண்டது = = பதுமமெண் மடங்குகொண்டது நாடு.

நாடு எட்டுப்பங்குகொண்டது = = நாடெண்மடங்கு கொண்டது சமுத்திரம்.

சமுத்திரம் எட்டுப்பங்குகொண்டது = = சமுத்திரமெண்மடங்கு கொண்டது வெள்ளம்.
= = = = = = = = =

= வது இல்லணிவகை

கருமபூமியினியல் = = உழவு தொழிலே வரைவு வாணிகம் = விச்சை சிற்பமென் றித்திறத் தறுதொழிற் = கற்பனை யுடையது கரும பூமி.

போகபூமியியல் = = பதினா றாட்டைக் குமரனுஞ் சிறந்த = பன்னீராட்டைக் குமரியு மாகி = யொத்த மரபினு மொத்த வன்பினுங் = கற்பகநன்மர நற்பய னுதவ = வாகியசெய்தவத் தளவுமவ்வுழிப் = போக நுகர்வதுபோகபூமி.

ஆசிரியர்கூற்று = அந்தண ரருமறை மன்ற லெட்டினுட் = பிரமந் தெய்வம் பிரசா பத்திய = மாரிடங் காந்தருவ மாசுர மிராக்கதம் =

பைசாச மென்னவெண்வகைப் படூஉம் = வதுவை வகையின் மணமொன் றாயினர் = வாழ்க்கையென்னுமில்லற நன்னெறிக் = கேற்பவை நாமத்தெஞ்சிய கூறுவன்.

கட்டிலின் பெயர் = கட்டில்பா ரிமஞ்சம் பரியங்கம் பாண்டில்.

விசியின் பெயர் = கட்டிலின்வசியே யரியெனக்கழறும்.

பீடத்தின் பெயர் = பீடிகை தவிசுவிட்டரம் பீடம்.

சிங்காதனத்தின் பெயர் = பத்திராதனம் சிங்காதன மென்ப.

உரலின் பெயர் = கறையு முலூகலமுந்திட்டையுமுரலே.

உலக்கையின் பெயர் = முசலமுந் தடியு முரோங்கலு முலக்கை.

உறியின் பெயர் = சிமிலி தூக்குச் சிக்கஞ் சிதருறி.

ஊஞ்சலின் பெயர் = ஊசலூஞ்ச றூரியு மாகும்.

ஏணியின் பெயர் = இறைவையுங் கடவையு மேணியாகும்.

கண்ணேணியின் பெயர் = கண்ணே ணிப் பெயர் மால்பென்றாகும்.

அளவையின் பெயர் = கச்சமுங் கடனு மளவை யாகும்.

மரக்காலின் பெயர் = அம்பணந் தூம்புகா லாகலு முரித்தே.

தூக்குக்கோலின் பெயர் = நிறையே கட்டளை வாணிக னிறுப்பான் = துலையே கோலோடு தூக்குக்கோலே.

கொத்தளிப்பாயின் பெயர் = ஆரை கொத்தளிப்பாய்.

புற்பாயின் பெயர் = சாப்பை புற்பாய்.

பிரப்பம்பாயின் பெயர் = சாதிபிரப்பம்பாய்.

தோற்பாயின் பெயர் = சருமந்தோற்பாய்.

தடுக்கின் பெயர் = தவிசுதடுக்கே.

குழாயின் பெயர் = தண்டுகுழாயே.

பூந்தட்டின் பெயர் = பீடிகை படலிகை கோடிகம் பூந்தட்டு.

விளக்குத்தண்டின் பெயர் = கௌசிக மல்லிகை கம்ப மத்திகை = சுடர்நிலைத் தண்டெனத் தீபமு மதற்கே.

முறத்தின் பெயர் = சின்னந் தட்டுச் சேட்டை #முச்சின்முறம்.

சுளகின் பெயர் = சூர்ப்பஞ் சுளகே.

புட்டிலின் பெயர் = இறைவை புட்டில்.

= = = = = = = = = =
* போகபூமி ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம், எமதவஞ்சம், ஏமவஞ்சம், தேவகுருவம், உத்தரகுருவம், இதுகருமபூமியிலாதலால் பின்னர்க்கூறினார்.
# முற்றில் எனவும் பாடம்.

கூடையின் பெயர் = வட்டிகை கூடை.

துடைப்பத்தின் பெயர் = துடைப்பஞ் சோதனி மாறலகுவாருகோல்.

நாழியின் பெயர் = வட்டிகுஞ்சம் படிநாழி யாகும்.

தயிர்கடைதறியின் பெயர் = தயிர்கடை தறிவெளில்.

தயிர்க்கோலின் பெயர் = தயிர்க்கோன் மத்தாம்.

காராம்பியின் பெயர் = காராம்பி யம்பி.

நீர்ப்பத்தலின் பெயர் = பத்த லம்பணம்.

கரண்டியின் பெயர் = கரண்டங் கரண்டி.

அம்மியின் பெயர் = அரைசிலை யம்மி யாகலு முரித்தே.

அம்மிக்கல்லின் பெயர் = அம்மிக் கல்குழவி.

சானையின் பெயர் = சிலாவட்ட மென்பது சானையாகும்.

சந்தனமரைகல்லின்பயர் = சாணஞ் சிலாவட்டஞ் சந்தனமரைகல்.

நாடாவின் பெயர் = காருகர்நாடா நூனாழியாகும்.

இறைகூடையின் பெயர் = இடா ரிறை கூடை.

சும்மாட்டின் பெயர் = சுமடுசுடுவுஞ் சுமையடைசும்மாடே.

பேராலவட்டத்தின் பெயர் = ஆலவட்ட முக்கந் தால விருந்தம்.

மற்றும்பேராலவட்டத்தின் பெயர் = கால்செய் வட்டமு மப் பெயர் கழறும்.

சிற்றாலவட்டத்தின் பெயர் = சிவிறியென்பது சிற்றாலவட்டம்.

சாந்தாற்றின் பெயர் = பீலியென்பது சாந்தாற்றியாகும்.

சீப்பின் பெயர் = சிக்க மயிர்வாரி கங்கம் சீப்பெனல்.

திரிகையின் பெயர் = வட்டமும் பந்துந் தட்டுந் திரிகை.

பந்தின் பெயர் = கந்துகம் பந்தெனல்.

அம்மானையின் பெயர் = அம்மனை யம்மானை.

மகளிர்விளையாட்டுக்கலத்தின் பெயர் = ஓரை யென்பது விளையாட் டொண்கலம். .

கூத்தர்கருவியின் பெயர் = கலப்பை கூத்தர் கருவியாகும்.

நீர்சிதறுந்துருத்தியின் பெயர் = நீர்சிதறுந் துருத்தி சிவிறி யாகும்.

செருப்பின் பெயர் = தொடுதோல் கழலிவை தோற்செருப்பாகும்.

மிதியடியின் பெயர் = பாதுகை மிதியடி பாவலு மாகும்.

மிதியடியின்மேலிட்டகொட்டையின் பெயர் = குடையே கல்லை கொட்டையதன் பெயர்.

உலைத்துருத்தியின் பெயர் = உதியத் திரிசிவை யுலைத்துருத் திப் பெயர்.

கொல்லுலைமூக்கின் பெயர் = குருகுஞ் சிவையுங் கொல்லுலை மூக்கே.

சுண்ணச்சாந்தின் பெயர் = சுதையேகளபஞ் சுடுசுண்ணச்சாந்தே.

நெருப்புறுவிறகின் பெயர் = ஞெகிழிகொள்ளிநெருப்புறுவிறகே.

விறகின் பெயர் = இந்தனங்காட்டந்துவரிவைவிறகே.

ஓமவிறகின் பெயர் = சமிதை யோமவிறகெனச்சாற்றும்.

அரிவாண்மணையின் பெயர் = புள்ளங் கூர்வா யிரும்பரி வாண்மணை.

சுக்கின் பெயர் = நாகரஞ் சுண்டி சுக்கா கும்மே.

மிளகின் பெயர் = திரங்கல் கலினை கோளக மிரியல் = காயமரீசம் கறி யிவை மிளகே.

மஞ்சளின் பெயர் = நிசி யரிசனமே பீதங் காஞ்சனி = அரித்திர மின்னவை மஞ்சளாகும்.

அரிசியின் பெயர் = அரியே வீயந் தண்டுலமரிசி.

தவிட்டின் பெயர் = முட்டைதவிடே முடைபொதியு மாகும்.

பெருங்காயத்தின் பெயர் = இங்குப் பெருங்காயம்.

குங்குலியத்தின் பெயர் = குக்கில் குங்கிலியம்.

, கடுகின் பெயர் = ஐயவிகடுகு.

உப்பின் பெயர் = இலவண முப்பாகும்.

பருப்பின் பெயர் = முதிகை முற்கம் பருப்பெனமொழிப.

அரக்கின் பெயர் = அரத்தமுந் துப்பு மரக்கின்பெயரே.

செத்தையின் பெயர் = காடுந் துராலு மயலுஞ்செத்தை.

பாடையின் பெயர் = பாடை வெள்ளிலா சந்தியுமாகும்.

தாழியின் பெயர் = அகளமுஞ் சாடியும் பதலையு மன்றித் = தளமுந் தாழியின் சாற்றிய பெயரே.

நீர்ச்சாலின் பெயர் = நிறைவட்ட மிடங்கர் நீர்ச்சா லாகும்.

கொப்பரையின் பெயர் = கொப்பரை கொப்பரி கடாரந் தசும்பு.

குடத்தின் பெயர் = கடமு மிடங்கருந் தாழியு மிறங்கருங் = குணமு மிரும்பையுங் கும்பமுங் குடங்கரும் = குடந்தமுங் கலசமு மிடக்கருங்குடமே.

மிடாவின் பெயர் = கரீரங் குழிசி முகை தடாமிடாவே.

பானையின் பெயர் = குண்டமு மிடாவுங் குழிசியும் பானை.

தயிர்கடைதாழியின் பெயர் = குடாரு மந்தினி வெண் டயிர்த்தாழி.

கரகத்தின் பெயர் = கர்க்கரி சிரகங் கன்னல் கரகம்.

மட்கலத்தின் பெயர் = கடிஞை பாத்திர மட்கல மாகும்.

தகழியின் பெயர் = இடிஞ்சில் பாண்டி லெரிசுடர்த் தகழி.

குடுவையின் பெயர் = குடுவை குண்டம்.

சட்டியின் பெயர் = விசளை சட்டி.

அகலின் பெயர் = சராவஞ் சுத்திகை யிடிஞ்சி லகலென்ப.

கொள்கலத்தின் பெயர் = இடுங்கலங் கொள்கலம் பாண்ட மென்ப.

வெற்றிலையின் பெயர் = நாகவல்லிதாம்பூலம் வெற்றிலை.

பாக்கின் பெயர் = கோலந் துவர்க்காய் பாகு பாக்கே.

சுண்ணாம்பின் பெயர் = சுண்ணமுநீறும் சுண்ணாம்பாகும்.

திருநீற்றின் பெயர் = பூதி யோமப்பொடி விபூதி காப்புப் = புண்ணிய சாந்தம் வெண்டாது திருநீறே.

சாணியின் பெயர் = புண்ணிய சாந்தஞ் சாணிசா ணாகம்.

சாம்பலின் பெயர் = அடலை வெண்பலி சாம்ப லாகும்.

பெட்டியின் பெயர் = மஞ்சிகம் பெட்டி.

பேழையின் பெயர் = மஞ்சிகை பேழை.

அணிகலச் செப்பின் பெயர் = கண்டிகை பீடிகை காண்டங் கடிப்ப = மன்றியுங் கோடிக மணிகலச் செப்பே.

ஆறாவது = அநுபோகவகை முற்றிற்று.
= = = = =

ஏழாவது = பண்பிற்செயலிற்பகுதிவகை.

உள்ள நல்வகை.

குணத்தின் பெயர் = *உள்ள நல்வகை யுரைக்குங்காலை = மாலையும் பெற்றியு மரபுங் கிழமையும் = பாலும் விதியும் பான்மையு மியல்புந் = தகவுந் தகுதியுந் தகைமையும் தன்மையும் = பரிசும் படியு முறையும் பண்பு = நிலையும் வண்மையு நீருஞ் சால்புங் = குணமென லதன் பெயர் கொள்கையு மாகும்.
= = = =
*உள்ள நல்வகை = மனத்தினல்வகை.

உயர்வின் பெயர் = உவப்புப் புரைசே ணுன்னதந் துங்க = நிவப்பு மேடு நீள்வரி பிறங்க = லேந்த லொழுகல் போக லோச்ச = லோங்கல் வார்தலுறையுயர் வென்ப.

வலியின் பெயர் = முரணு மறமு முன்பு நோன்மையு = முரமும் பாழியு மூக்கமு மதுகையு = முடலையு மும்பலு மூரியுந் தோற்றமு = மிடலும் *மளளமுங் கூளியு மீடுந் = திறமு மெழிலு மெறுழுந் திண்மையும் = வயமும் விறலு மைந்துந் துப்பு = மீளியு மடலுந் தாவு மாண்மையும் = ஆற்றலுங் கோளு மிகலு மொய்ம்பும் = மதனுங் கலியும் வலியின் பெயரே.

மாட்சிமையின் பெயர் = மாணலு மாணுஞ் சால்பு மதனு = மான்றலும்
வாய்த்தலு மாட்சிமை யாகும்.

கொழுமையின் பெயர் = கொழுமையுஞ் செழுமையும் வளமைமையுங்
கொழுப்பே.

குளிரின் பெயர் = நளிபனி சீதந் தண்ணே சீதளங் = குளிரின் பெயரே நளிருங் கூறும்.

செவ்விதின் பெயர் = செவ்வையுஞ் செப்பமுஞ் செம்மையுஞ் செவ்வனு = மிவ்வகை பிறவுஞ் செவ்விதின் பெயரே.

அறிவின் பெயர் = உணர்வு காட்சி யுரனே மேதை = தெளிவு புலனே தெருட்சி போதம் = புத்தி ஞான மறிவெனப் புகல்வர்.

வெற்றியின் பெயர் = வலனுங் கொற்றமுங் வாகையு முல்லையுஞ் = சயமு மாடும் புகலும் படினமும் = விசயமும் வெற்றமும் வென்றியும் வெற்றி.

செல்வத்தின் பெயர் = சீரும் வெறுக்கையும் விபவமுந் திருவு = மாவு மாக்கமும் வாழ்க்கையும் பொறியு = மாகுஞ் செல்வத் தபிதா னம்மே.

பற்றின் பெயர் = பரிவு மார்வமு மீரமும் பற்றே.

அன்பின் பெயர் = அளிநார் சங்க நேய மன்பே.

மற்றுமன்பின் பெயர் = பாச மென்றும் பேசப்படுமே.

அருளின் பெயர் = தகவுங் கருணையு மிரக்கமுந் தயவுங் = கிருபையு மபயமுங் கிளரரு ளாகும்.

மனத்தின் பெயர் = முன்னமு மகமு முள்ளமு முன்னமும் = இதயமு நெஞ்சு முள்ளு மனமே.

குறிப்பின் பெயர் = சிந்தையு நினைவுந் தெளிவுந் தியானமு = மிங்கிதமுங் கருத்து மெண்ணமுங் குறிப்பே.

மற்றுங்குறிப்பின் பெயர் = அங்கதுநாட்டிய மாகலு முரித்தே.

குறித்தலின் பெயர் = கண்ண னுதலல் காணல் புகற – லெண்ணல் பேணல் கருதல் சுட்ட = லுன்ன லென்றிவை குறித்தலை யுரைக்கும்.

வரையறுத்தலின் பெயர் = குணித்தலுங் கணித்தலுங் குறித்தலு மன்றி = மதித்தலும் வரையறுத்தற் பொருட்டாமே.

தேடலின் பெயர் = நாடலுந் நேடலுந் தேட லாகும்.

மற்றுந்தேடலின் பெயர் = கூடலுங்கையரிக்கொளலு மதற்கே.

நினைத்தலின் பெயர் = உன்னல் படர்த லூழ்த்தல் கருதல் = முன்னலறிதல் வலித்தல் சிந்தித்தல் = எண்ண லனைத்து நினைப்பென் றிசைப்பர்.

ஏமாப்பின் பெயர் = ஏமாப்புச் செம்மாப்பு.

இறுமாப்பின் பெயர் = ஏக்கழுத்த மிறுமாப்பு.

களிப்பின் பெயர் = மதர்ப்பு மதர்வை மதந்தருக் கேமம் = பெருமிதஞ் செருக்கும் பேசிற் களிப்பே.

இன்பத்தின் பெயர் = நகையு மேமமு நயமு மகிழ்ச்சியுஞ் = சுகமுங் கடியுந் தொய்யலு மின்பம்.

பேரின்பத்தின் பெயர் = அகமலர்ச்சி பேரின்ப மாநந்தமாகும்.

சுகத்தின் பெயர் = சந்தமுந் தருமமு மழகுமகிழ்வுஞ்சுகம்.

தெளிவின் பெயர் = தெருளு மானவு முணர்வுந் தேறலுந் = தேற்றமுந் துணிவும் தெளிவின்றிற்த்த.

நயத்தின் பெயர் = நறுமை விழுப்ப நன்னர் நயமே.

நன்மையின் பெயர் = உறுதி யாண ரொண்மை யுத்தமம் = நன்றி சேடு நன்மைநன் றாகும்.

பொறுத்தலின் பெயர் = சமித்தலு நோன்றலுங் கமித்தலும் பொறுத்தல்.

முயற்சியின் பெயர் = முயற்சி யூக்க மியற்றி யாள்வினை = யுஞற்றுத் தாடுப் புற்சா கம்மே.

உற்சாகத்தின் பெயர் = உஞற்றுத் தாள்வினை துப்பூக்க முற்சாகம்.

இலாபத்தின் பெயர் = பலனு மூதியமும் பயனு மாக்கமும் = பேறும் பலித்தலு மிலாபப் பெயரே.

ஒற்றுமையின் பெயர் = ஒருமை குறிப்போ டொற்றுமை யாகும்.

துணையின் பெயர் = இணையுந் துப்புஞ் சகாயமு மென்றிவை = துணையென்ப புகலுஞ் சொல்லுவர் புலவர்.

தவத்தின் பெயர் = நோன்பென் கிளவி தான்றவ மாகும்.

மற்றும்தவத்தின் பெயர் = உவ்வென் கிளவியு மோதுவ ரதற்கே.

நல்வினையின் பெயர் = தானமு மறமுந் தருமமுஞ் சீலமு = மருளு மங்கலமுஞ் சுபமுஞ் சுகிர்தமும் = புண்ணியமும் பாக்கியமு நல்வினை யாகும்.

அருச்சனையின் பெயர் = ஆரா தனையே வழிபா டருச்சனை.

பூசையின் பெயர் = பூசனை யென்ப பூசையின் பெயரே.

யாகத்தின் பெயர் = சித்து யாகம் வேள்விகிரு தாகும்.

வெறுப்பின் பெயர் = வெறுப் பொல்லாமையும் வேண்டாமை யுமுனிவு = மொறுத்தலு முவர்த்தலு முவர்ப்பு மாகும்.

துறவின் பெயர் = துறத்த னிவிர்த்தி துறவா கும்மே.

உறவின் பெயர் = உறவி விருப்ப முறவா கும்மே.

நாணத்தின் பெயர் = வெட்க மிலச்சை வெள்கல் சமழ்த்தல் = வட்க லிருளை மானமு மன்றி = யுட்கு நாணத் துரையெனப் படுமே.

செல்வப்பகுதியின் பெயர் = மல்லுந் தடமும் வளமும் வாரியுஞ் செல்வப் பகுதிக்குச் செப்பிய பெயரே.

நிலைபேற்றின் பெயர் = துஞ்சன் மன்ன றி திநிலைபேறே. .

மற்றும் நிலைபேற்றின் பெயர் = அங்கது திறமோ டேணந் தாணு = வென்பன மூன்று மிசைக்கப்பெறுமே.

மெய்யின் பெயர் = சாதம் வாய்மை சத்திய முண்மை = நீதி நிலைமை நியாய நிச்சயம் = வாய் திடமாணை மன்றஞ் சரதம் = வேளான்மை பட்டாங்கு மெய்யெனவுரைப்பர்.

பிழைப்பின் பெயர் = இழுக்கம் வழுக்குத் தப்பல் பிழைப்பென்ப = உஞற்றும் பணைத்தலு முளவப் பெயர்க்கே.

ஆதலின் பெயர் = ஆத னந்துதல்.

ஏவலின் பெயர் = ஆணையேவல்.

ஒற்றின் பெயர் = வேயென் கிளவி யொற்றாகும்மே.

செய்தியின் பெயர் = செயல்செய்கை செய்தியாகும்.

ஒழுக்கத்தின் பெயர் = சரியையாசார நடையியல் ஒழுக்கம்

நீதியின் பெயர் = நெறியு நியாயமுந் தருமமு நீதி.

மற்றும்நீதியின் பெயர் = விதியு நிழலும் வரைவின் றென்ப.

உள்ளின் பெயர் = அகணி யகடே யகமே கோட்டை, யுரைசெயி லின்னவை யுள்ளா கும்மே.

சூழ்ச்சியின் பெயர் = சூழ்ச்சி யுசாவே தேர்ச்சி விசாரம் = யாப்பே யெண்ண மந்திர நூலே.

மற்றுஞ் சூழ்ச்சியின் பெயர் = ஆய்தலுந் தேர்தலு மாகலு முரித்தே.

உண்டாதலின் பெயர் = விளைதல் பூத்தல் படுதலுண் டாதல்.

தோற்றுதலின் பெயர் = பிறப்பித்தலும் படைத்தலு நாறலும் வெளிப்படலுந் = தோற்றலு முருத்தலுந் தோற்றுதலாகும்.

காத்தலின் பெயர் = நிலைபெறுத்தலும் புரத்தலு மளித்தலுங்

காப்பு நோக்கலுந் திதியுங் காத்தலென்ப.

பாதுகாத்தலின் பெயர் = போற்ற லோம்பல் நோக்கல் பாதுகாத்தல்.)

காவலின் பெயர் = சிறையு மரணுஞ் சேமமுஞ் செயலுங் = காப்பும் வேலியும் கடியுந் தட்டியுங் = கட்டுந்தட்டுங் காவற்பெயரே.

கொள்கையின் பெயர் = தெவ்வு வரைத றேர்த லேற்றலெனக்கூறிய பிறவுங் கொள்கை யாகும்.

மேற்கோளின் பெயர் = பூட்கையென்பது மேற்கோ ளாகும்.

உய்தலின் பெயர் = ஆற்றுதல் வலித லுய்த லாகும்.

தூய்மைசெய்தலின் பெயர் = உவளித்த றூய்மை செய்தலையுரைக்கும்.

உடன்பாட்டின் பெயர் = வலித்த லொட்ட னேர்த லிசைதலென் = றுரைத்த பலவு முடன் பாடாகும்.

விதிமுறையின் பெயர் = நியமமென் கிளவி விதிமுறையாகும்.

குற்றலின் பெயர் = நவித்தலுந் துப்பலுந் துற்றலுங் குற்றல்.

அவியலின் பெயர் = அவைத்தலு மவித்தலு மவிய லாகும்.

ஒட்டுதலின் பெயர் = அணவ லொட்டுதல்.

தெரிதலின் பெயர் = தெள்ளுத றெரிதல்.

தெளிதலின் பெயர் = தேறுதல் தெளித லாகச் செப்புவர்.

கேளாவென்றலின் பெயர் = வேளாவென்பதுகேளாவென்றல்.

தவிர்தலின் பெயர் = வாளாவென் கிளவி தவிர்த.லாகும்.

தேற்றத்தின் பெயர் = மன்ற தேறு தேற்ற.மாகும்.

ஆமென்னும் பெயர் = அன்றென லின்றென லாமெனலு மாகும்.

சரண்புகலின் பெயர் = மறைபுகல் கிளவி சரண்புகலாகும்.

எண்ணலின் பெயர் = கரணமுங்கணிதமுங்கணக்குமெண்ணல்.

நிமித்தத்தின் பெயர் = சோதனஞ்சோதிட நிமித்தச் சொல்லே.

உடனிகழ்வின் பெயர் = ஒடுவெண்கிளவி யுடனிகழ்வாகும்.

பெயரின் பெயர் = அபிதானமாக்குவயநாமமும் பெயரே.

ஆதாரநிலையின் பெயர் = கந்துமா லம்பமு மாலம்பனமும் = தஞ்சமுந் தூவு மாதார நிலையே.

பேரறிவின் பெயர் = முதுக்குறைவு பேரறிவு முகரிமையுமாகும்.

உள்ளதுசிறத்தலின் பெயர் = கூர்ப்புங் களிப்பு முள்ளது சிறத்தல்.
= = = = = = = = = =

= வது உள்ளத்தின்தீயவகை.

தீவினையின் பெயர் = பவமும் பாவமும் பாதகமுந் தீவினை.

தாழ்வின் பெயர் = சாய்ப்பு மிழிவுந் தண்மையுந் தஞ்சமுந் = தாழ்வென் கிளவித் தன்மைய தாகும்.

கூம்புதலின் பெயர் = சாம்புத லொடுங்குதல் கூம்புதலாகும்.

அச்சத்தின் பெயர் = உருமு முருவு முட்கும் பனிப்பும் = வெருவும் புலம்பும் வெறியும் பயமும் = பிறப்புங் கொன்னும் பேமு நாமும் = வெறுப்புஞ் சூரும் பீரும் வெடியுங் = கவலையு மடுப்புங் கலக்கமு மச்சம்.

குலைதலின் பெயர் = ஒடல்வெய்துற லுலமர றேங்கல் = கூசறிட்கல் குலைய றுணுக்கெனல் = வெள்க றுண்ணென றெருமர லளுக்கல் = ஞொள்கல் பிறவுங் குலைதலி னுவல் பெயர்.

நடுக்கத்தி் பெயர் = விதிர்ப்புப் பனிப்பு விதலை கம்பம் = அதிர்ப்புப் பொதிர்ப்பு விதப்பு நடுக்கம்.

கலக்கத்தின் பெயர் = கதனமுந் துரிதமும் பிரமமும் கலக்கம்.

மற்றுங்கலக்கத்தின் பெயர் = வெறியென் றுரைப்பதுமப் பெயர்.

எளிமையின் பெயர் = எண்மை பரிபவ மிழிதகவு மெளிமை.

மற்றுமெளிமையின் பெயர் = தண்மை யென்பது மதன்பாற் சாற்றும்.

பேதைமையின் பெயர் = பேதைமை மடமை வெறியே மருட்சி.

மாசின் பெயர் = கசடு மலினமும் கறையு மழுக்கும் = மலமுங்க ளங்கமு மாசாகும்மே.

குற்றத்தின் பெயர் = காசுந் தவறுங் கறையுங் களங்கமு = மாசும் வசையு மறுவும் வடுவு = மாசும் புகரு மரிலுங் களையு = மேசும் பழியும் போக்கு மேதமு = நறையும் வண்டுங் கடவையு நவையு = மிறையும் பிழையும் விடலுங் கரிலுந் = தோமுந்தப்புந் துகளும் புரையுங் = கோதுஞ் செயிரும் மையுங் குற்றம்.

மற்றுங்குற்றத்தின் பெயர் = இழுக்குஞ் சோர்வும் புன்மையு மிகழ்ச்சியும் = வழுக்குங் கீழு மறிவியும் பொல்லாங்கும் = பொச்சாப் பென்பதும் புகலுமப் பெயர்க்கே.

வெம்மையின் பெயர் = உருமமுங் கருமமு முருப்பமும் வெப்பமு = மழனமுங் கோரமு மழலும் வெம்மை.

தோல்வியின் பெயர் = நிலையழி வோட்டம் பின்னிட றோல்வே = தொலைத றோற்ற லஞ்ச றோல்விப் பெயர்.

கொடுமையின் பெயர் = கடுமை கோடணை சண்டங் கடினங் = கொடுமையின் பெயரிவை கூரமுமாகும்.

மற்றுங்கொடுமையின் பெயர் = உக்கிரங் கோர முறைப்புப்பூதி = வக்கிரம் வஞ்சஞ் சடங்கரிலு மாமே.

மறப்பின் பெயர் = வழுக்கு மறவியு மயர்ப்புமிவறலு = மறப்பென் கிளவி மறலு மாகும்.

வறுமையின் பெயர் = மிசைகுறை மிடியே தரித்திர மொற்க = மிலம்பா டிலாமை நல்குரவும் வறுமை.

மற்றும் வறுமையின் பெயர் = மறலு மின்மையு நிரப்புமற் றதன்

பெயர்.

பகையின் பெயர் = முனையு முரணு முறழ்வுந் தூவும் = படியுந் தெவ்வுந் துப்பும் பகையென்ப.

மற்றும்பகையின் பெயர் = இகலுஞ் செறலு மதன்பெய ரென்ப.

வெகுளியின் பெயர் = கறுவங் கோபங் கலாமறங் குரோதம் = வெகுளி யென்பர் வேரமு மாகும்.

சினத்தின் பெயர் = முனிவுஞ் செயிருஞ் சீற்றமும் வியர்ப்புஞ் = சினமென் கிளவி தெரிக்குங் காலே.

சினக்குறிப்பின் பெயர் = கறுப்புஞ் செவப்புங் கனுறலுங் கன்றலும் = வியர்ப்பும் வெதிர்ப்பும் புழுங்கலும் கொதித்தலும் = வெய்துறலும் புகைதலும் வயிரமு மினைத்தும் = சினத்தின் குறிப்பினைத் தெரிக்குங் கிளவி.

தணியாக்கோபத்தின் பெயர் = கோம்பலுங் கொந்தலுங் கனிதலும் வெம்பலும் = வெதும்பலுந் தணியாக் கோபமுமென்ப.

பெருஞ்சினத்தின் பெயர் = உடற்றல் சீற லுருத்தல் காய்தன் = முனைதல் விடைத்தல் பைத்தல் பெருஞ்சினம்.

தணியாமுனிவின் பெயர் = சலமும் வயிரமுஞ் செற்றமு மற்றிவை = கறுவுகொள் நெஞ்சங் கடைமுடி வளவுந் = தணியா முனிவு தானாகும்மே.

இகழ்தலின் பெயர் = எள்ள னகுத னிந்தை யிகழ்தல்.

வருத்தத்தின் பெயர் = உயவே யனுக்கங் கவற்சி யுயங்க = லயர்வே கசிவே யாகுல மணங்கு = வயாவே யழுங்கல் வருத்த மாகும்.

குணமின்மையின் பெயர் = சீரணஞ் சிதம்பு சீத்தை செடியெனக் = கூடிய பலவுங் குணமின்மை யாகும்.

துக்கத்தின் பெயர் = அல்லல் பீடை யரந்தை கோட்டாலை = செல்லல் கலக்கஞ் சிறுமை யுறுகண் = கவ்வை மம்மர் விழுமங் கவலை = யெவ்வ மின்ன லிடும்பை யிடுக்கண் = படர்சூர் பைதல்

பருவரல் பழங்கண் = னிடரஞு ரேதம் யாதனை யிட்டளங் = கலக்கம் புன்கண்பனிநோய் கம்பலை = யலக்கண் வெய்துறலழுங்கல் பீழை = யலமர னடலை யுறுவல் வெறுப்பே = கிலேசந் துயர்துனி துன்பந் துக்கமாம்.

மற்றுந்துக்கத்தின் பெயர் = துரிசு மல்ல கண்டமுந் துராலுஞ் = சிலுகு மலந்தலையுஞ் செப்பற்குரித்தே.

சந்தேகத்தின் பெயர் = அனுமானமுஞ்சங்கையுஞ்சந்தேகமாகும்.

மற்றுஞ்சந்தேகத்தின் பெயர் = ஐயுறல் கடுத்தலு மப் பெயர்க் குரித்தே.

மயக்கத்தின் பெயர் = களிப்பு மறமுங் கழுமலு பிறப்பு = மாலு மறலு மையலு மான்றலு = மிருளு மைந்து மேமமு மிளமையு = மருளு மயர்வு மயக்க மென்ப.

மற்றுமயக்கத்தின் பெயர் = மோகமு முணராமையு முன்மத்தமுங் = களனெனன் கிளவியு மப் பெயர்க் கட்டுரை.

தீதின் பெயர் = தீங்குங் கோளு மூறுந் தீதெனல்.

மற்றுந்தீதின் பெயர் = ஆங்கது மாயமு மந்தரமுமென்ப.

பொய்யின் பெயர் = படிறு மிச்சையும் பெட்டும் பழுதும் = வழுதுந் தத்தி காரமுமாயமும் = பொக்கமும் பிசியும்நடலையும் பொய்யே.

பொறாமையின் பெயர் = நோனாமை வக்கிர மழுக்கா றவ்வியம் கூரமென்பது பொறாமையின் கூற்றே.

சோம்பலின் பெயர் = தூங்க லசைத லலைசுதல் சோம்பே.

மற்றுஞ்சோம்பலின் பெயர் = சடமடிதள்ளாவாரமுந் தகுமே.

வஞ்சனையின் பெயர் = கூடம் புள்ளுவங் குத்திரங் கஞ்ச = மாயைதொடுப் பட்டிமை வஞ்சனை யாகும்.

வேறுபாட்டின் பெயர் = வீற்று விகிர்தம் விகடம் விரூபம் = வேற்றுமை விபரீதம் வேறுபா டாகும்.

மற்றும் வேறுபாட்டின் பெயர் = திரிபும் விள்ளலும் செப்புமப் பெயர்க்கே.

தளர்வின் பெயர் = எளிமை யுடைத லிட்டளந் தளர்வே.

தனிமையின் பெயர் = கேவலமும் புலம்புந் தனிமையைக் கிளக்கும்.

பாவத்தின் பெயர் = தீவினை மறமே செடியே யகமே = துரிதங்கலுடம் பாவமாமே.

விருப்பத்தின் பெயர் = மாதர் காதல் வயாவே வேட்கை யாதரவாசை யவாவே யார்வ = நச்சு நசைவிழைவு நயப்புக் காம = மிச்சை பெட்பு மோக மேட்டை = வெப்பம் பற்று விழுப்பம் வீழ்தல் = இவர்தல் கவர்தல் வேண்டல் பேணல் = வேட்ட றாழ்தல் வெஃகலும் விருப்பம்.

வேட்கைப்பெருக்கத்தின் பெயர் = வேட்கைப் பெருக்கம் வேணவா வாகும்.

நோயின் பெயர் = மடங்கல் பிணிமடி மாரியையபு = ளணங்குவியாதி யவல நீழல் = உறுகண் புன்கண் உரோகஞ் சூர்நோய்.

மற்றுநோயின் பெயர் = சிறுமையுங் குத்துமப் பெயர்தெரிக்கும்.

வேதனைநோயின் பெயர் = ஈதி வாதை வேதனை நோயே.

காமநோயின் பெயர் = விரக மதனங் காமக் கவலை = காம நோயின் கட்டுரை யாகும்.

களவின் பெயர் = காப்புக்கட்டல் பட்டிமை சோர்வு = கயவு படிறு கரவடங் களவே.

பயனின்மையின் பெயர் = வறிதுங் கொன்னும் விழலும் விதாவு = மல்லவை பயனில் சொல்லா கும்மே.

மரணத்தின் பெயர் = முஞ்சலுந் துவன்றலு முடிதலும் விளிதலுந் = துஞ்சலுந் தவறலு மிறப்பும் பொன்றலும் = வீய்வு முலப்பும் வீடலு மாய்தலு = மாண்டலு மரித்தலுஞ் சாவு மரணம்.

மற்றுமரணத்தின் பெயர் =
இல்லெனலென்பதுவுஞ்சொல்லப்படுமே.

சாய்தலின் பெயர் = இரிதல் நெரிதல் இடைத லுடைதல் = கெடுதல்
சரிதல் சாய்தலாகும்.

பிணக்கின் பெயர் = அரின்மற லபரந் துவக்கென வமைந்த =
பெயரிவை நான்கும் பிணக்கென மொழிப.

முறிதலின் பெயர் = ஒடித லொசிதன் ஞெமிர் தலிடிதன் = முரித
லிறுதன் முறிதற் பெயரே.

கேட்டின் பெயர் = வழுவு சிதைவு மங்குதல் சேத = மழிவு சிந்துதல்
நந்துதன் முரித = லிறுதல் சுதமடி யொருங்கல்கே டென்ப.

கொலையின் பெயர் = கோளே யணங்கு
வேட்டங்கொலையெனல்.

வெளிற்றின் பெயர் = வெண்மையுந் தண்மையும்
வெளிறெனலாகும்.

புன்மையின் பெயர் = நவிர மென்பது புன்மை யாகும்.

இரங்குதலின் பெயர் = இனைத லெற்றித்த லிரங்குத லாகும்.

அருவருப்பின் பெயர் = வாலாமை சூதகம் பயிர்ப்பரு வருப்பே.

ஒழிதலின் பெயர் = ஓவு மன்னு மொழிதற் சொல்லே.

மற்றும்ஒழிதலின் பெயர் = ஏனையு மப்பெய ரியல்பா கும்மே.

கலங்குதலின் பெயர் = கதுவே கலுழல் கலங்குதல் மலங்குதல்.

குலுங்குதலின் பெயர் = குலைத னடுங்குதல் குலுங்குத லாகும்.

வாட்டத்தின் பெயர் = தேம்பலுங் குழைதலு மனுங்கலு முளியும் =
வாடலுந் தளர்தலும் வாட்டமென லாகும்.

குழைதலின் பெயர் = சுனைதல் களைதல் குழைத லாகும்.

மாறுபாட்டின் பெயர் = தெற்றே மாறுபா டாகத் தெரிக்கும்.

நிலையின்மையின் பெயர் = வம்பென் கிளவி நிலையின்மை யின் பெயர்.

மேன்மையின் பெயர் = கயவுஞ் சாயலு ஞெள்ளலு மேன்மை.

மனக்கோட்டத்தின் பெயர் = அழுக்காறு மனத்தழுக்குமவ்வியமு மனக்கோட்டம்.
= = = = = =

= வது மெய்வகை.

பருமையின் பெயர் = மெய்வகைக் கியன்றன விளம்புங் காலைப் பரூஉம் பீனமுந் தடித்தலும் பருமை.

இளைப்பின் பெயர் = தேம்பலும் பழங்கணுஞ் சிங்கலுந் தேய்வு = நாம்பலு ஞொள்கலு மெலிவு மிளைப்பே.

வெண்மையின் பெயர் = சுவேதந் தவளஞ் சுக்கிலங் குருத்து = விளர்வால் வெள்ளை நரைசிதம் வெண்மை.

மற்றும்வெண்மையின் பெயர் = குருகு பால் சுப்பிர மென்னவுங் கூறும்.

பொன்மையின் பெயர் = பீதகம் பசப்புப் பிங்கலம் ரிதம் = நாலுங் சாஞ்சனியும் பொன்மையின் பெயரே.

செவப்பின் பெயர் = அத்து மருணமு மரத்தமுஞ் சேப்புஞ் = சோணமுங் குருதியுந் துவருஞ் சிந்தூரமும் = பூவலும் படீரமும் சேத்தும் மரக்கும் = செக்கருஞ் செம்மையுஞ் சேந்துபா டலமுங் = கிஞ்சுகமுங் குலிகமுந் துப்புஞ் செவப்பே

பச்சையின் பெயர் = பாசும் பையு மரியும் பசுமையும் = பலாசுஞ் சாமமு மரிதமும் பச்சை

கருநிறத்தின் பெயர் = காளமுங் காழகமுங் காளிமமுங் காரிமால் = மாவு மிருளு நீலமு மசிதமுங் = காருமஞ் சனமு நல்லமுங் கருளு = மாகுங் கருநிறத் தபிதா னம்மே

புற்கெனுநிறத்தின் பெயர் = கபிலங் குரால் புகர் புற்கெனுநிறமே

ஒளியின் பெயர் = வெயிலு நிலவும் வில்லும் வாளு = நிழலு மெல்லு நீமமு நகையும் = கானலுங் கிரணமுங் கதிருஞ் செடியுஞ் = சோதியு மின்னுந் துணியு மரியுங் = கேழுங் கரமுந் தேசுங் கிளரொளி

மற்றும்ஒளியின் பெயர் = ஆதவ மென்பது மதன்பாற் படுமே

ஒளிவிடுதலின் பெயர் = விளங்குத னகுதன் மின்னன் மிளிர்த = றுளங்குதனிகழ்தல் சுடர்தல் பிறழ்த = லிலங்கல் வயங்க லிலகுத லிமைத்த = லலங்க றயங்க லவிர்த னிலவ = லொளிர்த லென்றிவை யொளிவிட லாகும்

ஒளிமழுங்குதலின் பெயர் = மட்கல் புல்லெனன் மழுங்குத லழுங்குதல் = ஒளி மழுங்குதலென வுரைத்தல் வேண்டும்

அழகின் பெயர் = *ஏ/எரும் வனப்பு மெழிலு மிராமமுங் = காரிகையு மாவு மம்மையுங் கவினுஞ் = செழுமையும் பந்தமுந் தேசிகமு நோக்கு = மணியு மணங்கு மியாணரும் பாணியு = மாதரு மாழையுஞ் சாயலும் வகுப்பும் = வண்ணமும் வளமும் பூவும் பொற்புஞ் = சேடும் பொன்னுஞ் சித்திரமும் பத்திரமு = மாமையுந் தளிமமு மயமு மஞ்சு = மதனும் பாங்கு மம்முஞ் சொக்குஞ் = சுந்தரமுந் தோட்டியு மையு மொப்பு = மந்தமு மொண்மையும் விடக்கமு மமலமுங் = குழருங் கோலமும் வாமமுங் காந்தியு = மழகின் பெயரலங் காரமு மாகும்

மற்றுமழகின் பெயர் = கொம்மையு மனோகரமுஞ் சாருவுங் கூறுப.

கட்டழகின் பெயர் = சித்திர மனோகரஞ் சுந்தரங் கட்டழகே

நிறத்தின் பெயர் = குருவுங் கொழுமையுங் குணமுங் கொழுமையு = மரியுஞ் சாயலும் வருணமு மன்றிப் = பயப்புங் கறையும் கருவு நிறமே

வடிவத்தின் பெயர் = செண்ணம் படிவம் வடிவமென்ப

வண்ணத்தின் பெயர் = வண்ணஞ் சந்தம்

வளைதலின் பெயர் = குடிலந் தடவு கூன்கோண் கோட்டம் = வசிவு கோணல் வாங்கல் குலாவல் = வளாவலென் றின்னவை வளைத

லாகும்

இளைமையின் பெயர் = மழவு முருகுந் தருணமு மஞ்சுங் = குழவும் விளருங் கொம்மையும் புருவையுங் = கோமளமும்போதகமு மிளைமையின் கூற்றே

முதுமையின் பெயர் = முதுமை மூப்பு முரஞ்சுதன்முற்றுதல்.

மற்றுமுதுமையின் பெயர் = விளைவும் சாம்பலும் விதந்துகொளப்படுமே

கலியாணத்தின் பெயர் = வதுவை மன்றல் மணங்கலி யாணம்

மற்றுங்கலியாணத்தின் பெயர் = கடியும் வேட்டலுங் கைப்பற்றலு மாகும்

கொண்டாடுதலின் பெயர் = குலாவல்பாராட்டுக்கொண்டாடுதலே

அலங்கரித்தலின் பெயர் = புனைதலு மண்ணலும் பொற்புறுத்துதலு = மணிதலுங் கைசெய்தலு மலங்கரித்தல்

சிங்காரத்தின் பெயர் = அணியே பொற்புக் கையலங் காரந் = தெரியி னொப்பனையுஞ் சிங்காரமாகும்

புதுமையின் பெயர் = புதைபுணர் விருந்து புத்தேள் கடிநவ நூதனங் கோடகம் வம்பிவை புதுமை

மகளிர்விளையாட்டின் பெயர் = தொடலையுந்தகுளமு மகளிர் விளையாட்டே

சூடுதலின் பெயர் = மிலைதலு மலைதலும் வேய்தலுஞ் சூடுதல்

இகுத்தலின் பெயர் = செகுத்த லிகுத்தல்

மீளுதலின் பெயர் = திரிதல் மீளுதல்

புறத்தின் பெயர் = புறணியும் புடமும் புறமெனலாகும்

பதுங்கலின் பெயர் = பழகலு மொடுங்கலும் பாந்தலும் பதுங்கல்

தங்குதலின் பெயர் = அசைத றெவிட்ட லிறுத்த லார்தல்

மற்றுந்தங்குதலின் பெயர் = வதிதல் வைக லிறையுமப் பெயர்

அடக்கத்தின் பெயர் = முடக்கமுநொறிலு மடங்கு முணங்கு = மொடுக்கமு மடக்க மொருங்குமாமே

கூடலின் பெயர் = விழைச்சும் பிணைச்சும் விழைவுமை துனமும் = புணர்ச்சியுங் கூடலும் புகலுங் கிளவி = அணைதல் கலவிசை யோகமுமாகும்

மற்றுங்கூடலின் பெயர் = மணத்தல் பயினி மற்றிவை கூடுதல்

பிரிதலின் பெயர் = நீத்த றவிர்த லகல லுணர்தல் = தணத்தல் வல்லி பகலிவை பிரிதல்

புலத்தலின் பெயர் = புலவி யூடல் புலத்த லாகும்

புலவிநீடுதலின் பெயர் = துனியென் கிளவி புலவி நீடுதல்

கலத்தலின் பெயர் = புணர்தல் படித றோய்தல் சார்தல் = கலவன் மேவல் கலத்தலாகும்

அளவளாவலின் பெயர் = கலாவலுந் துழாவலும் வளாவலுஞ் சிவணலும் = புணர்தலும் பொருந்தலு மளவளா வற் பெயர்

வணங்கலின் பெயர் = வந்தனை பணித றண்டன் வணக்கம் = பரவலிறைஞ்ச றாழ்தல் காண்டல் = வந்தித்தல் போற்றல் வணங்கலாகும்

சிறைப்படலின் பெயர் = வலைப்பட றளைப்படல் சிறைப்பட லாகும்

சருச்சரைவடிவின் பெயர் = பிணரேசருச்சரை வடிவினதாகும்

தாழ்தலின் பெயர் = இறைஞ்சலுங் குரங்கலுந் தாழ்தலை யிசைக்கும்

அலைதலின் பெயர் = நடுங்க லாஞ்சி ஞெகிழ்தல் ஞொள்கல் = அழுங்குதல் சோம்பென லலைதலுமாகும்

சுமத்தலின் பெயர் = பரித்தல் பொறுத்த றரித்தல் சுமத்தல்

ஏறுதலின் பெயர் = எக்க லிவரன் மீக்கோ ளேறுதல்

எதிர்தலின் பெயர் = முட்டல் கிடைத்தன் முடுக னேர்த = லேற்றறலைப்பட லெதிர்த லாகும்

மீதூரலின் பெயர் = இடங்கழி நெருங்குதல் மீதூ லாகும்

ஒருங்கின் பெயர் = உடங்கொருங் காகும்

வடுப்படுத்தலின் பெயர் = கதுவாய்வடுப்படுத்தலாகக் கருதுவர்

சொறியின் பெயர் = கண்டூதி தினவு சொறியெனக் கழறும்

பொங்குதலின் பெயர் = பூரித்தன் மிகுதல் பொங்குதலாகும்

வேர்த்தலின் பெயர் = வேர்த்தல் வியர்ப்பு

விடுதலின் பெயர் = விடுதல் உயிர்த்தல்

மூடுதலின் பெயர் = போர்வை மூய்தல் கவித்தன் மூடுதல்

பூணலின் பெயர் = புனைத லார்த்தல் பூணலாகும்

இயைபின் பெயர் = இயைபே புணர்ச்சி யிசைப்பிவை யாகும்

மஞ்சனத்தின் பெயர் = நான மென்பது மஞ்சன மாகும்

குளித்தலின் பெயர் = தோய்தலும் படிதலு மாடலு மன்றிக் குடைதலு மூழ்கலுங் குளித்தலின் கூற்றே

பிறகிடலின் பெயர் = பின்றல் பிறக்கிடல் பிறகிட லாகும்

கருவுளமைப்புமெய்படுபருவமுமாவன = பேறிழ வின்பம் பிணி மூப்புச் சாக்காடென் = றாறுள வந்நா ளமைந்தன வறியக் = கூறிய புலவர் கோட்பாடன்றியும் = பாளை பாலன் காளை யிளையோன் = முதியோ னென்ன விதிவழி வந்த = மெய்யே மெய்யின் மேம்படுகுணமே

= = = = = = = = =

= வது வாய்வகை.

இன்சுவையின் பெயர் = வாய்வகை யியல்பு வகுக்குங் காலைத் = தீமென் கிளவியொ டிரதமின்சுவை

அழைத்தலின் பெயர் = கேத லுளைத்த லிகுத்தல் விளித்தல் = மாவெனல் கூவுதல் வாவெனன் மத்தல் = கரைதலா கருடணை யிவையே யன்றி = யகவ லென்பது மழைத்தலாகும்

சிரிப்பின் பெயர் = மூரலு மிளியு முறுவலு நகையும் = ஆசமுஞ் சிரிப்பென லார்ப்புமாகும்

உண்டலின் பெயர் = அயிறல் மிசைத லருந்துதல் நுகர்தல் = துவ்வல் துய்த்தல் துற்றல் துறுவல் = ஆர்தல் மாந்தல் கைதொடலுண்டல்

மற்றுமுண்டலின் பெயர் = பானகம்போனகம்பண்பொடுவருமே

குடித்தலின் பெயர் = பருகல் மாந்தல் பானங் குடித்தல்

விழுங்கலின் பெயர் = நுங்கல் நுகர்தல் விழுங்கலென் றாகும்

இயம்பலின் பெயர் = கதையு நுவலும் காதையுங் கிளவியும் = பனுவலு மறையும் பறையும் வாணியும் = கூற்றுமொழியுங் குயிறலும் புகறலும் = மாற்றமு மறையு நொடியும் பரவலும் = இசையு மியமும் பேச்சு முரையும் = எதிர்ப்பு மென்றிவை யியம்பலாகும்

வாசகத்தின் பெயர் = வசனம் பாசுரம் வார்த்தையும் வாசகம்

பதத்தின் பெயர் = பாழியு முரையும் பதமெனலாகும்

பேசுதலின் பெயர் = இசைத்த லிறுத்தல் இயம்பல் புகறல் = பிதற்ற லென்றிவை பேசுதலாகும்

பல்கால்விளம்புதலின் பெயர் = மீதுரை பல்கால் விளம்புதலாகும்

துதித்தலின் பெயர் = பரவல் வழுத்தல் ஏத்தல் போற்றல் = பழிச்சல் வாழ்த்தல் துதித்தலாகும்

வாழ்த்தின் பெயர் = ஆசிடை யாசி வாழ்த்தா கும்மே

சொல்லுதலின் பெயர் = இயம்பல் விரித்தன் மொழிதல் விளம்பல் = பகர்தல் பன்னல் நவிறல் கத்துதல் = உரைத்தல் கூறல் வழங்கல் குயிலல் புகலல் பேசல் நொடிதல் பிறழ்தல் = பறைதல் செப்ப லதிர்த்தல் பணித்தல் = சொற்ற லாடல் சொல்லுதலென்ப

படித்தலின் பெயர் = பாடலோதல் வாசித்தல் படித்தல்

பெருஞ்சொல்லின் பெயர் = பெருஞ்சொல் பலரறி சொல்லெனப் பெயர்பெறும்

சிறுசொல்லின் பெயர் = சிறுசொ லிழிச்சொற் றீச்சொற் பழிச்சொல்

பழிமொழியின் பெயர் = அம்பலுங்கௌவையுமலரும்பழிமொழி

திசைச்சொல்லின் பெயர் = தேசிக மென்பது திசைச் சொல்லாகும்

மறைத்துமொழிகிளவியின் பெயர் = இடக்கர் மறைமொழி யெக்கரு மாகும்

சிலரறிந்துதம்முள்தூற்றலின் பெயர் = அம்பல்சில ரறிந்துதம் முட்புறங் கூறுதல்

பலரறிந்துதூற்றலின் பெயர் = அலரேபலரு மறிந்தலர் தூற்றுதல்

உறுதிக்கட்டுரையின் பெயர் = கழறலு மிடித்தலு நெருங்கலு மென்றிவை = யுறுதிக் கட்டுரை யெனவுரைத்தனரே

நயச்சொல்லின் பெயர் = முகமன் சம்மான முபசார நயச்சொல்

குறளைமொழியின் பெயர் = கொடுவாய் பிசுனம் தொடுப்புக் குஞ்சம் = குறளை மொழிகொண் டியமு மாகும் ( )

அசதியாடலின் பெயர் = அசதிநகல்நயக் கிளவியாகும்

நிரம்பாமென்மொழியின் பெயர் = குதலை மழலை கொஞ்சலுல் லாபம் = மிழலை நிரம்பா மென்மொழியாகும்

சத்தியத்தின் பெயர் = ஆணை வஞ்சினஞ் சபதஞ் சத்தியம்

மற்றுஞ்சத்தியத்தின் பெயர் = சூளே விதரஞ் சூளுறவு மாகும்

முதுசொல்லின் பெயர் = மொழிமை மூதுரை முன்சொற்
பழஞ்சொல் = முதுசொல் லென்பர் பழமொழியு மாமே

நன்னிமித்தத்தின் பெயர் = விரிச்சியும் வாய்ப்புள்ளு நற்சொனி
மித்தம்

கதையின் பெயர் = கதையென் றுரைப்பது காரணச்
சொல்லெனல்

வினாவலின் பெயர் = வினாவல் கடாவல்

எதிர்மொழியின் பெயர் = விடையதற் கெதிர்மொழி

வினாவும்விடையும்கூடியபொருளின் பெயர் = வினாவொடு
விடையும் விளம்புதல் சல்லாபம்

பாயிர்தின் பெயர் = அணிந்துரைபெய்துரை புனைந்துரைநூன்
முகம் = முகவுரை தந்துரை புறவுரை பாயிரம்

சத்திபண்ணலின் பெயர் = உமிழ்தல் தெவிட்டல் கான்ற
லோங்கல் = * உக்காரஞ் சத்தி யன்றிக் கக்கல்
= = = =
*உற்காரம் எனவும் பாடம்

மற்றுஞ்சத்திபண்ணலின் பெயர் = அபன மென்பது
மதன்பெயராகும்.

எச்சிலின் பெயர் = மிச்சில் பேளிகை யுச்சிட்டம் விசதம் =
எச்சிலென்றற் கிழவுமாகும்.

கொட்டாவியின் பெயர் = ஆவித்தல் கொட்டாவி யாகு மென்ப.
= = = = = = = = = = =

= வது கண்வகை.

கண்ணோட்டத்தின் பெயர் = கண்ணிற்கமைந்த கடனெறிகூறிற்
கண்மைநா கரிகம் பார்வை கண்ணோட்டம்.

மற்றும் கண்ணோட்டத்தின் பெயர் = கண்ணென் பதுமக் கட்டுரையாகும்.

உற்சவத்தின் பெயர் = சாறு முருகு துணங்கறல் விழாவுடன் = ஓதுஞ் சேறு முற்சவ மாகும்.

தூங்கலின் பெயர் = கனவே துயிலே கண்படை யனந்தல் = படலே நித்திரை பள்ளி யுறக்கந் = துஞ்ச லுறங்க றூங்க லாகும்.

நிரம்பாத்துயிலின் பெயர் = தூங்கல் நிரம்பத் துயிலு மாமே.

அழுகையின் பெயர் = கலக்க முரோதனங் கலுழ்ச்சி யழுகை.

மற்றுமழுகையின் பெயர் = அரற்ற லிரங்கல் விம்மல் பொருமு = லேங்க லிராவண மாங்கத னிலையே.

துயிலொழிதலின் பெயர் = சாகரமென்பது துயிலொழிதலாகும்.

கண்பார்வையின் பெயர் = விழித்தல் கண்பார்வை.

கண்மூடலின் பெயர் = சிமிழ்த்தல் கண்மூடல்.

காண்டலின் பெயர் = நோக்க றெரிசித்தல் பார்த்தல் காண்டல்.

கண்ணுறலின் பெயர் = காட்சி யென்பது கண்ணுற லாகும்.

கண்ணிமையின் பெயர் = கண்ணிமை யிதழ்விளிம் பென்னவும் பெறுமே.
= = = = = = = = = = = =

= வது மூக்கின்வகை.

கந்தித்தலின் பெயர் = மூக்கி னியல்பு மொழியுங் காலை – மணமு முருகு மன்றலும் வாசமும் = விரையும் வதுவையு நானமும் வேரியுங் = கடியுந் தேனும் வம்புங் கானு = நறையுங் கந்தமு கோதமு நாற்றமுங் = கமழலும் வெறியுங் கந்தித்தலாகும்.

நறுமணத்தின் பெயர் = சுகந்த நறுமணம்.

பெருமணத்தின் பெயர் = பரிமளம் பெருமணம்.

மூச்சின் பெயர் = தும்மன் மூச்சுச் சுவாதங் கொறுக்கை = யிரேசக பூரகங் கும்பக மன்றிச் = சுவாச நிசுவாசஞ் சொல்லப் பெறுமே.
= = = = = = = = = = = = = =

= வது செவிவகை

கல்வியின் பெயர் = செவியிற் றேறுந் திறனினி துரைக்கி = லுறுதியுங் கேள்வியு மோதியுங் கலையும் = பனுவலுங் கல்விப் பெயரெனப் பகரும்.

சொன்மாலையின் பெயர் = தோற்றஞ் சீரொளி சுலோகஞ்சொன்மாலை.

புகழின் பெயர் = ஏற்றங் கியாத மிசை மெய்ப்பாடு = சீர்த்தி கீர்த்திசொல் திகழ் புகழாகும்

மற்றும்புகழின் பெயர் = மீக்கூற் றென்று விளம்பவும்பெறுமே

நூலின் பெயர் = அதிகாரம் பிடக மாரிடந் தந்திரம் = பனுவலாகமஞ் சூத்திர நூலே

நற்பொருளின் பெயர் = ஞாபகம் பிசியிவை நற்பொருளாகும்

வேதத்தின் பெயர் = இருக்குச் சுருதிமறை யெழுதாக் கிளவி = ஆதிநூல் சாகை யாரணம் வேதம்

முதல் வேதத்தின் பெயர் = பௌடிகமிருக்கு முதல் வேதமாகும்

இரண்டாம் வேதத்தின் பெயர் = இரண்டாம்வேதம் யசுதைத்திரியம்

மூன்றாம் வேதத்தின் பெயர் = மூன்றது சாம வேதங் கீதநடை

நான்காம் வேதத்தின் பெயர் = நான்காம்வேத மதர்வணமென்ப

வேதத்துட்பொருளின் பெயர் = உபநிடதம் வேதத்தி னுட் பொருளாகும்

வேத மார்க்கத்தின் பெயர் = வைதிகம் வேதமொழி மார்க்கமாகும்

உதாரணத்தின் பெயர் = இதிகாச மிலக்கிய மெடுத்துக்காட்டல் = உதாரணமென வுமுரைக்கப் படுமே

ஆகமத்தின் பெயர் = ஆகம ஞானம்

அத்தியாயத்தின் பெயர் = படல மிலம்பகஞ் சருக்கங் காண்டம் = பரிச்சேத மத்தியாய மாகும்

நூற்பாவகவலின் பெயர் = அடிவரை யின்றி விழுமிதி னடக்கு = நூற்பா வகவல் சூத்திர மென்ப

ஒத்தென்பது = நிரல்பட வைப்ப தோத்தென மொழிப

படலமென்பது = பொதுமொழி தொடர்வது படலமாகும்

பொழிப்புரையென்பது = பொழிப்புரை பிண்டப் பொருள தென்ப
= = = = = = = = =
*அதர்வம் எனவும்வழங்கும்

விரித்துரையென்பது = விரித்துரை பதவுரை விரித்த சூரணை = தொகுதி பகுதிப் பொருளதாகும்

கீர்த்தியினேற்றத்தின் பெயர் = ஏற்றங்கியாதமிசைப் பாடென்ப

தன்மேம்பாடுதானிகழ்தலின் பெயர் = நெடுமொழி தன்மேம் பாட்டுரை யென்ப

சோபனத்தின் பெயர் = பல்லாண்டு சோபனம்

பழிச்சொல்லின் பெயர் = பழிச்சொல் பரிவாதம்

பிடித்தொன்றைப்பேசுதலின் பெயர் = பிடித்தொன்றைப் பேசுதல் பிதற்றுதலாகும்

வெண்பாவின் பெயர் = முதற்பா வெண்பா

கலிப்பாவின் பெயர் = விகற்பங் கலிப்பா

ஆசிரியப்பாவின் பெயர் = அகவலுந் தொகையு மாசிரியப்பா

வஞ்சிப்பாவின் பெயர் = *அதனின் விகற்பம் வஞ்சி யாகும்

= = = =
* "ஆசிரியநடைத்தே வஞ்சியேனை = வெண்பாநடைத்தே கலியெனமொழிப" என்னும், தொல்காப்பியம்பொருள்அதிகாரம், செய்யுளியல் சூ = ஆல் = அறிக

அராகத்தின் பெயர் = அராக முடுகியல் வண்ண மாகும்

குளகச்செய்யுளென்பது = குற்றெழுத்துத் தொடரினது குளகச் செய்யுள்

கணக்கின் பெயர் = எழுத்துமெண்ணுங் கணக்கென்றாகும்

எண்ணின் பெயர் = எண்ணே கரணமுங் கணிதமு மென்ப

நால்வகையெழுத்தாவன = †வடிவு பெயர் தன்மை முடிவுநான் கெழுத்தே
= = = =
†வடிவெழுத்து செவிப்புலவொலியைக் கண்களுக்குப்புலப்படவெழுதும் எழுத்து. பெயரெழுத்து, வடிவெழுத்து முதலாகவழங்கு மெழுத்துகளுக்கு இடும்பெயரெழுத்து. தன்மையெழுத்து, செவிப்புலனாகிய ஒலியெழுத்து, தன்மையெழுத்து முடிவுஎழுத்து வடிவெழுத்துமுதலாகவுள்ளஎழுத்தினை மனத்தாற்றுணிவது முடிவெழுத்து.

ஒற்றெழுத்தின் பெயர் = விராமமும் புலுதமு மெய்யுமொற் றெழுத்தே

இருவகைப்பாயிரத்தின் பெயர் = பாயிரம் பொதுச்சிறப் பெனவிருபாற்றே

முதல்வன்வாக்கின் பெயர் = ஆகம முதல்வன் வாக்கதாகும்

அந்தணர்க்குரியமார்க்கத்தின் பெயர் = அந்தண ரவர்க்கே வேத மார்க்கம்

தந்திரத்தின் பெயர் = மிருதி யாரிடம் பனுவ றந்திரம்

பாவின் பெயர் = தூக்கு மியாப்புஞ் செய்யுளுங் கவியும் = பாட்டுந் தொடர்பும் பாவென்றாகும்.

உலக்கைப்பாட்டின் பெயர் = உலக்கைப் பாட்டே வள்ளைப்பாட்டென்ப .

இடத்தின்சந்தேகச்சொல்லின் பெயர் = யாண்டையு மியாங்கு மிடத்தினை யுறற்சொல். ))

ஐயச்சொல்லின் பெயர் = யாதெவனென்னை யேதுகொல்லையம்.

இசைநிறையசைச்சொல்லின் பெயர் = ஏயுங் குரையு மிசை நிறையசைச்சொல்.

முன்னிலையசைச்சொல்லின் பெயர் = மியாலிக மோமதி யிகுஞ்சின் னென்னு = மின்னவை முன்னிலை யசைச்சொ லென்ப.

சுட்டின் பெயர் = அஇ உஅம் மூன்றுஞ் சுட்டே.

வினாவின் பெயர் = ஆஏ ஓஅம் மூன்றும் வினாவே.

சாரியைச்சொல்லின் பெயர் = இன்னே வற்றேயிக்கேயம்மே = யொன்னே யானேயக் கேயன்னே = யின்னவை யெல்லாஞ் சாரியைச் சொல்லே.

எழுத்தின்சாரியையின் பெயர் = கரமுங் கானுங் காரமு மகரமு = மேனமும் பிறவு மெழுத்தின் சாரியை.

இடைச்சொல்லின் பெயர் = அரோபோ மாதோ வல்லா லுறைகெழு = வாங்குத் தெய்ய வெனவே ஞான்று = அந்தி லோரு மினைய விடைச்சொல்.

அதிசயமொழியின் பெயர் = ஆஅ ஓஒ வத்தோ வந்தோ = வன்னோவையோ வக்கோ வச்சோ = வென்னோ வெற்றே யிவையதி சயமொழி.

இகழ்ச்சிக்குறிப்பின் பெயர் = ஏஎ சீச்சீ யெல்லெ னிகழ்மொழி.

வேற்றுமையுருபின் பெயர் = ஐயொடு குஇன் அதுகண் ணென்னு = மவ்வா றென்ப வேற்றுமை யுருபே.

ஒலியின் பெயர் = ஆர வாரங் கம்பலை யரவங் = கோடணை

புலம்பு கோசணை யுளையே = நாத மோதை யாகுலந் துழனி = யிடியிசை சும்மை யோசை தொனியே = யுரையே பாடு சத்த மொலியெனல்.

ஆபரணஓசையின் பெயர் = சிஞ்சித மாபரண வோசை யாகும்.

எடுத்தலோசையின் பெயர் = முரல்வு நரல்வு முக்கலும் பயிறலுந் = தெளிறலு ஞெளிர்தலுஞ் சிரற்றலும் பிரற்றலுங் = குளிறலுங் குமுறலுங் குருமித்தலும் நெளிர்தலும் = அகவலு மெடுத்த லோசைப் பெயரே.

மற்றுமெடுத்தலோசையின் பெயர் = உளையென் றுரைத்தலு மப் பெயர்க் குரித்தே.

தொனித்தலின் பெயர் = கலித்தல் கனைத்தல் கறங்கல் கதித்தல் = சிலைத்தல் சிலம்ப லிரைத்த லிரட்ட = லிடித்த லிசைத்த லுளைத்த லுரப்ப = லுரற்ற லுழம்பன் முரற்ற லிரற்றன் = முழங்க றழங்கல் கத்தல் புலம்ப = லழுங்கலியம்ப றுவைத்த லிரங்க = றெழித்தல் குரைத்தல் கொழித்த னரற்ற = றெ*லி/விட்ட லாலித்த லிமிழ்த்தல் குமுற = லேங்கல் விம்மல் பிளிற றொனித்தல்.

பேரொலியின் பெயர் = திமிலங் குமிலந் திமிர்தந் திமிதங் = களகள மென்பன பேரொலிக் கட்டுரை.

மற்றும்பேரொலியின் பெயர் = குமுத மென்பது மப் பெயர்க் கூற்றே.

ஆரவாரத்தின் பெயர் = அலம்ப லுளற லரற்ற லேம்ப = றழங்கல் பிளிறல் கலித்தல் குமுறல் = பூச றமரங் கோசனை யுலம்ப = லாகுலங் கோலாகல மாரவார மென்ப.

கதறலின் பெயர் = அரற்றலு முரற்றலு மழைத்தலுங் கத்தலுங் = கதற லென்னுங் கட்டுரை யாகும்.

அனுகரணவோசையின் பெயர் = இம்மெனல் கல்லென லிழுமெனல் வல்லெனல் = பொம்மென லொல்லெனல் பொள்ளெனன் ஞெரேலெனல் = கொம்மெனல் சரேலெனல் ஞொள்ளெனல் கொல்லென = லம்மெனல் பிறவு மனுகரண வோசை

அனுகரணவுபயவோசையின் பெயர் = வெடுவெடெனறிடுதி டெனல் களகளெனல் கொளகொளென = னெடுநெடெனன் மொகமொகென னெறுநெறெனல் படபடெனன் = மொடுமொடெனல் சடசடெனல் சளசளெனல் கலகலெனல் = சலசலெனல் கிடுகிடென லாமன்ன பிறவு = மனுகரண வுபயவோசைப் பெயரே.

கலப்புக்கட்டோசையின் பெயர் = உளற றெழித்த லுலப்ப லலப்பல் = பூசல் குமுற றுவைவர றுவைத்த = லாகுலங் கோடணை கோலா கலமே = யார்ப்புத் தமரங் கலப்புக் கட்டோசை.

அடரொலியின் பெயர் = அதிர்த்த றெழித்த லதட்ட லுறைத்த = லுரப்ப லடரொலிப் பெயர தாகும்.

செவியறிவின் பெயர் = சத்தம்$பரிச ரூப ரச கந்தமென் = றொத்த வைம்புலனுஞ் செவியறி வென்ப.
= = = = = = = = = =
$பரிச முதலிய நாற்புலங்களின்குணங்களைச் செவிகேட்டுணர்தலால் சத்தத்தையும் அடக்கி ஐம்புலனும் என்றார்.
= = = = = = = = = =

= வது கைவகை.

பறித்தலின் பெயர் = கைக்கட னாய காரண முரைப்பின் = பரூஉவுங் குற்றலும் பறித்தன் மேற்றே

கடைதலின் பெயர் = கடைதல் குடைதல் கவர்த லன்றி = மதனமந் துருவலு மற்றதன் பெயரே.

தேய்த்தலின் பெயர் = அரைத்தலு மரக்கலுஞ் சிரத்தலுஞ் சிதைத்தலுந் = தேய்த்தலின் பெயரென்ன வழங்கும்.

எழுதலின் பெயர் = தெரித்தல் வரித நீட்டல் பொறித்தல் = வரைதல் கீறல் கிறுக்குத லெழுதல்.

எழுத்தின் பெயர் = வரியும் பொறியு மக்கரமு மன்றி = யிரேகையு மெழுத்தின் பெயரா கும்மே.

கொல்லுதலின் பெயர் = காதுத றொலைத்த லெற்றல் களைதல் = சவட்டல் கோறல் செறித்தல் செவிட்ட = லடுத றெறுதல் செறுத்தல் முருக்குதல் = செகுத்தல் வதைத்தல் கொல்லுதல் செப்பும்.

எற்றலின் பெயர் = எறித லள்ள லெற்றலின் மேற்றே .

கொடையின் பெயர் = ஈகை தான மிடுகை கவிகை = வேள்வி வண்மை தியாகம் வேளாண்மை = யுதாரங் கடப்பா டுபகாரங் கொடையெனல்.

பெருங்கொடையின் பெயர் = ஈதல் வீச லிசைத்த னீட்டல் = புதரத்தனல்க லருளல் பகுத்தல் = கொடுத்தல் வழங்க லளித்தல் பெருங்கொடை.

வரையாதுகொடுத்தலின் பெயர் = கொடைமட மென்பது வரையாது கொடுத்தல்.

கொடாமையின் பெயர் = மாற்றலுங் கரத்தலுமறுத்தலுங் கொடாமை.

இரத்தலின் பெயர் = ஏற்றல் குறைகோ ளிரத்தல் வேண்டுதல்.

பிச்சையின் பெயர் = பலியும் படிகமும் பாகமும்பயிக்கமும் = பிண்டமுஞ் சரியையு மையமும் பிச்சை.

கும்பிடுதலின் பெயர் = தொழுதலஞ்சலி சோத்தங் கும்பிடல்.

மெய்கோட்டிக் கைகுவித்தலின் பெயர் = குடந்த மெய்கோட்டிக் கைகுவித்த லென்ப.

தொடுதலின் பெயர் = திவள லூறு பரிசந் தீண்ட = றுவள றொட்ட றொடுதலாகும்.

அடித்தலின் பெயர் = புடைத்த லெற்ற லெறிதல் மொக்கல் = குத்தன் மோதன் மொத்த லறைத = லடித்த லென்ப அகைத்தலு மாகும்.

மற்றும் அடித்தலின் பெயர் = வழுக்கலுமப் பெயர்வரைவின்றாகும்.

குத்தலின் பெயர் = அவைத்தலென் கிளவி குத்த லாகும்.

கட்டலின் பெயர் = விசித்த லிசைத்தல் வீக்கல் கட்டல்.

மற்றுங்கட்டலின் பெயர் = அசைத்த லிமிழ்த்த லார்த்தல்யாப்பு = சிமிழ்த்தல் பிணித்தல் சுருக்க றொடுத்தல் = கிட்டல் துவக்கல் கட்டுதலாகும்.

தீட்டலின் பெயர் = தீட்டலறுக்கல்.

வெட்டலின் பெயர் = துழாவல் வெட்டல்.

துணித்தலின் பெயர் = துமித்தலு மெற்றலுந் துணித்த லாகும்.

அறுத்தலின் பெயர் = கடிதல் றடிதல் பரிதல் கண்டித்தல் = சேதித்தல் கொய்த லறுத்த லாகும்.

முகத்தலின் பெயர் = தோண்டன் முகத்தல்.

நிறுத்தலின் பெயர் = நோன்ற னிறுத்தல். (

கிண்டலின் பெயர் = கிண்டல் கிளைத்தல்.

கிளறுதலின் பெயர் = நோண்டல் கிளறுதல்.

தெள்ளுதலின் பெயர் = வறண்ட றெள்ளுதல்.

கொழித்தலின் பெயர் = வரன்றல் கொழித்தல்.

தொளைத்தலின் பெயர் = தொள்கலுங்குயிறலுந்தொளைத்தலாகும்.

தோண்டலின் பெயர் = சூறல் சூன்ற றொட்ட றோண்டல் = ஆகுந் தொடுதலு மகழ்தலு மதற்கே.

கிழித்தலின் பெயர் = கீறல் கிண்டல் கிள்ளல் கிழித்தல்.

மற்றுங்கிழித்தலின் பெயர் = பீற லென்பது மப் பெயர்மேற்றே.

அடைக்கலத்தின் பெயர் = கையடையில் லடைய பயமடைக்கலம். (

பிடுங்குதலின் பெயர் = புய்த்தலும் பறித்தலும் பிடுங்குதலாகும்.

களைதலின் பெயர் = கட்டலென்பது களைதலாகும்.

மற்றுங்களைதலின் பெயர் = சிதைத்தல் குத்தல் சிந்துதல் விலங்கல்.

உருவுதலின் பெயர் = சிதக வுருவுதல்.

முடைதலின் பெயர் = வலத்தன் முடைத னிணத்த லாகும்.

எறிதலின் பெயர் = விலகல் செலவிடல் வீசல்ஓச்சுதல் = விடுதலெறித லாகுமென்ப.

மாற்றுதலின் பெயர் = மாற்றுதல் விலக்கல்.

பிடித்தலின் பெயர் = தொடலும் பற்றலும் பிடித்தலாகும்.

நெரித்தலின் பெயர் = தெறுத்த னெரித்தல்.

கூட்டுதலின் பெயர் = அடுத்தல் பொருத்தல் கூட்டுதலாகும்.

எழுப்புதலின் பெயர் = எடுத்த லெற்ற லெழுப்புதலாகும்.

தடுத்தலின் பெயர் = வாரித்தல் வாரணை தகைத்த றடுத்தல்.

பகுத்தலின் பெயர் = பகிர்தல் பாத்தி பகுத்தலாகும்.

சிந்துதலின் பெயர் = சிதர்த்தல் சிந்துதல்.

வாரலின் பெயர் = வாரல் கவரல் வெளவலென்ப.

வகிர்தலின் பெயர் = வகிர்தறுவர்தல்.

தடவலின் பெயர் = தடவ றைவர னீவல் வருடல்.

அசைதலின் பெயர் = துயில்வரலசைதல்.

சொரிதலின் பெயர் = சொரிதல்பொழிதல்.

மூட்டலின் பெயர் = மாட்டலும் பொருத்தலு மூட்டலாகும்.

தள்ளுதலின் பெயர் = நோன்ற லூன்ற னூக்கறள்ளுதல்.

செறித்தலின் பெயர் = அளித்தலும் பெய்தலுஞ்செறித்தலாளுகும்.

பரப்புதலின் பெயர் = விரியல் விளம்பல் பாரித்தல் பரப்புதல்.

அடுக்குதலின் பெயர் = ஏற்றலடுக்குதல்

புதைத்தலின் பெயர் = பொத்தல் கனிதல் புதைத்தலாகும்
.
குட்டலின் பெயர் = குட்டல் புடைத்தல் தகர்த்தலாகும்.
= = = = = = = = = =

= வது கால்வகை

கடத்தலின் பெயர் = காலிற் கமைந்த கடனெறி கூறி = லிறத்தலுங்கழிதலு மிகத்தலுங் கடத்தல் = நடத்தலு மீளலு மவ்வியல் பாகும்.

சுழலலின் பெயர் = உழிதரல் கொட்புத்திரிதர லுழலல் = பிரமரி யலமர றெருமரன் மறுகல் = சொரிதரல் கறங்கல் சுழலற் பெயரே.

தாண்டலின் பெயர் = தாண்டலும் வரவலுந் தாவலு மன்றித் = தத்தலுங் கடத்தலுமப் பெயர் மேற்றே.

மற்றுந்தாண்டலின் பெயர் = உறுக்கலும் பாய்தலு முகளலு மன்றிக் = குதித்தலுந் தவறலுங் குப்புறலுமாமே.

எழுச்சியின் பெயர் = கஞறலுங் கதித்தலு மும்பலு மேர்பும் = பொலிவுங் கலித்தலு மொழுக்கலும் பாச்சலு = மறலுமோங்கலு மெழுச்சிப் பெயரே .

நடத்தலின் பெயர் = இல்ல லொதுங்க லேகலிவர்தல் = செல்லல் படர்தல் கழித னடத்தல்.

செலவின் பெயர் = தாவுங் கதியும் படருஞ் செலவெனல்.

ஓடலின் பெயர் = நீளல் பாற னிமிர்த லென்றிவை = யோடலின் பெயருக் குரித்தாகும்மே.

இரிதலின் பெயர் = உடைதல் கெடுத லிரித லாகும்.

நேரோடுதலின் பெயர் = ஆதியும் வீதியு நோரோ டுதலே.

மண்டிலமா யோடலின் பெயர் = மாதி சுற்றுச் சாரிகை வாளி = யாயவை மண்டில வரவா கும்மே.

விரைவின் பெயர் = கதழ்வும் வல்லையு மொல்லையுங் கடுப்புங் = கடுகலுந் = தாரையுந் துனைவு நொறிலும் = விசையுமுடுகலும் வேகமும் விரைவே.

மற்றும் விரைவின் பெயர் = கவனமுந்துரிதமுமப் பெயர்க்கட்டுரை.

விரைவுக்குறிப்பின் பெயர் = பொள்ளென லையெனல் பொருக்கென னொய்தெனல் = வெய்தெனல் கதுமெனல் விரைவின் பண்பே.

உராய்தலின் பெயர் = உரோச லுரிஞ்ச லுரோஞ்ச லுராய்தல்.

உலாப்போதலின் பெயர் = பவனியென்பது முலாப்போதலாகும்.

உலாவலின் பெயர் = அசைதலுமியங்கலும் வழங்கலுமுலாவுதல்.

உழக்குதலின் பெயர் = உழுதன் மடித்த லுழக்குத லாகும்.

கொடுபோதலின் பெயர் = போதரல் கொடுபோதல்.

மீளுதலின் பெயர் = மறிதரல் திரிதரன் மடங்கன் மீளுதல்.

ஒதுங்கலின் பெயர் = ஒடுங்கலென் கிளவி யொதுங்க லாகும்.

செலுத்தலின் பெயர் = ஓய னடவல் கடவ லோச்சல் – ஏவுதல் தாண்டல் தூண்ட லுகைத்தல் = ஊர்தல் உய்த்தல் செலுத்த லொருபொருள்.

போதலின் பெயர் = படர்தல் சேற லொதுங்க றீர்த = றிரித லியங்க னீங்க லிறத்த = றுரத்த லேகல் செல்லல் விடுதல் = கடத்த னடத்தல் போதலின் பெயரே.
= = = = = = = = = = =

= வது முறைமைவகை.

முறைமையின் பெயர் = முறைமையுமூழும் பாவமுந் தன்மமு = முறையும் வாழும் வழியுமா மென்ப.

கோத்திரத்தின் பெயர் = குடியே யும்பல் கோத்திரமாகும்.

பழைமையின் பெயர் = ஒல்லை புராண முதுமை முறையூழ் = தொல்லை முந்தை தொன்று பண்டு = தொன்மை முன்னை புராதனம் பழைமை.

முற்பிறப்பின் பெயர் = உம்மைமுற் பிறப்பு.

இப்பிறப்பின் பெயர் = இம்மையிப் பிறப்பு.

வருபிறப்பின் பெயர் = அம்மையு மறுமையும் வருபிறப்பாகும்.

பிறப்பின் பெயர் = பிறந்தையும்பவமும் யோனியும் பிறப்பெனல்.

மற்றும்பிறப்பின் பெயர் = சூதக மென்ன வோதவும் பெறுமே.

உரிமையின் பெயர் = உரிமை கிழமை யாட்சியு மாகும்.

பயிறலின் பெயர் = நவிறல் கெழுமல் பயிறலாகும்.

அடைவின் பெயர் = ஆம்ப லடைவே.
= = = = = = = = = =

= வது அளவின்வகை.

விரிவின் பெயர் = அளவின் வகையை யளந்தீங் குரைப்பின் = விசாலமும் விபுலமும் விரிவென லாகும்.

பரப்பின் பெயர் = பாய்தல் விரியல் பப்புப் பரவை = தாவ லென்றிவை தாம்பரப் பாகும்.

தூரத்தின் பெயர் = சேணு நீளமுஞ் சேய்மையுந் தூரம்.

அகலத்தின் பெயர் = நனவே கண்ணறை வியலிவை யகலம்.

கனத்தின் பெயர் = கனமே யடையு ஞாட்பு மாகும்.

எல்லையின் பெயர் = அவதியுஞ் சிம்முங் காடும்பரியந்தமும் = ஏணியும் வரைப்புங் கொத்தமு மெல்லை.

அளவின் பெயர் = தனையுங் காறுந் தாறுந் துணையும் = வரையும் பிரமாணமு மாத்திரையு மட்டு = மளவின் பெயரென் றறைந்தனர் புலவர்.

அளவின்மையின் பெயர் = அபரி மிதமு மநந்தமு மபாரமு = மெல்லையில் பொருளு மளவின்மை யென்ப.

பெருமையின் பெயர் = இருமையும் பொழிலு மேந்தலு மீடுங் = கருமையுந் தடவுங் கயவு மணியும் = பகடு மண்ணலுஞ் செம்மலும் பரியு = மிறையும் பேழுங் கொன்னும் விபுலமும் = வியலுந் தலையு நெய்தையு மாவுந் = தகையு முடலையு மூரியும் வீறு = நளியு மீளியு நன்றும் பாடும் = நனியும் பணையும் விறலுஞ் சேடும் = பீடுங்க தழ்வும் பெருமைப் பெயரே.

நுண்மையின் பெயர் = ஐயு நுணுக்கமு மணுவு முளரியும் = நுவணையு நுட்பமு நுணங்கு நூழையும் = நுணுகு நுழையு நுண்மைப் பெயரே.

சிறுமையின் பெயர் = அற்பமுங் கன்றுந் தன்னமு மாசும் = பேடும் வறிது மிறையுஞ் சிறுமை.

நிறைவின் பெயர் = மலித றுவன்றன் மல்க லார்த = றெகுள றதும்ப றேக்கல் கிளைத்த = னிரம்பல் பூரணங் கமமே நிறைவு.

பெருக்கத்தின் பெயர் = பிறங்கலும்பெருகலும் பெருக்கமாகும்.

குறைபாட்டின் பெயர் = ஊனமு நிரப்பும் விகலமுந் தவலு = மீனமுங் குறைபாடென் றியம்பல் வேண்டும்.

குறைதலின் பெயர் = சுருங்கலுங் குறையு மருகலுங் குன்றலு = மெஞ்சலுங் குறைதலி னியன்ற பெயரே.

மிகுதியின் பெயர் = அமலை நனியே யாற்ற லிறப்புப் = பெருகல் கழிவு சிறப்புப் பிறங்க = லுருப்பந் தவமத ரூக்க மதிகம் = விதப்புச் செறிதல் பொங்கன் மிகுதி.

பொலிவின் பெயர் = துப்புக் கலிப்புக் களுறல் பொம்மல் =

பொறியே பொக்கம் பூப்பொலி வாகும்.

செறிவின் பெயர் = துறுத லுறுப்புப் பிறப்புத் துதைதல் = மிடைதல் துற்று வெறிதலோதி = செற்று வெறுப்புக் கஞற லடர்தல் = நெருங்குதல் திணுங்குத லென்றிவை செறிவின்பெயரே.

கூட்டத்தின் பெயர் = கூளியுங் கூட்டமுங் குழுமலுந் தோடுந் = தொழுதியுந் தொறுவுந் தொகையுங் குழாமுந் = துற்று நளியு முகையு மொய்யுங் = கணமுஞ் சரியு மீண்டலுஞ் சங்கமுந் = திரளையுஞ்சவையு மவையுமீட்டம்.

திரளின் பெயர் = கொம்மையு முண்டையுங் குழியமுங் குப்பையு = முத்தையும் பூகமுஞ் சோகமும் புஞ்சமும் = பந்தமு மாழையும் வட்டும் பிண்டமும் = வழியுஞ் சேடுஞ் சேர்வுந் திரளே.

ஐம்மையின் பெயர் = அரியுந் தகடு மடரு *மைம்மை.
= = = = = = = =
*ஐம்மை = தகட்டுவடிவு

எல்லாம்என்றலின் பெயர் = அடையவு மடங்கலு மனைத்தும் யாவையு = முழுவது முற்றுஞ் சமத்தமு முட்டவு = மெவையு மெல்லா மென்றலின் பெயரே.

மற்றும்எல்லாம்என்றலின் பெயர் = அகிலமு மகண்டமு மப்பெயராகும்.

பாதியின் பெயர் = பாயல்பய லருத்தம் பங்கு பாதி.

மற்றும்பாதியின் பெயர் = கூறும் பாகமுங் கூறு மதற்கே.

பாரத்தின் பெயர் = சீருங் கனமுங் குருவு ஞாட்பும் = பார மாகும் பரமு மதற்கே.

நொய்மையின் பெயர் = நொய்வு மிலேசு நொய்மை யாகும்.

பொழுதுபோக்கலின் பெயர் = நெடித்தல் பாணித்தல் பொழுது போக்கல்.

மீறுதலின் பெயர் = திருகலு முறுகலு மீறுத லென்ப.

குவிதலின் பெயர் = குவையுங் குவாலு மிராசியுங் குப்பையுங் =

குலவு நூழிலுங் குவிதற்பெயரே.

முதலின் பெயர் = ஆதி தலைதா ளடிமுன் னெழுவாய் = மோனை பிராசய முதலெனப் படுமே.

நடுவின் பெயர் = இடை சம மத்திமம் நாப்பண் பகனடு.

மற்றும்நடுவின் பெயர் = நள்ளென் பெயரு நனந்தலையு மாகும்.

கடையின் பெயர் = இறுதிபின் னெல்லை கடையீ றந்த = முடிவுமுற்று முடித லாகும்.

மிகுத்தலின் பெயர் = தெறுத லுறுத்தல் மிகுத்தலாகும்.

மிக்கதன் பெயர் = மிஞ்சுதல் விஞ்சுதல் மீமிசை மிக்கது.

நெருக்கத்தின் பெயர் = எக்கல் குவித்தனளி நிபிட நெருக்கம்.

தூக்கின் பெயர் = தூக்குத்தலாங் கா.

தூக்கினிறையின் பெயர் = தூற்றுப் பலநிறை.

ஒருபலத்தின் பெயர் = தொடியென் கிளவி யொருபல மாகும்.

துலாமிருபஃதின் பெயர் = பாரமென்பது துலா மிருபஃதே.

காற்பலத்தின் பெயர் = கஃசுகாற்பலம்

மாகாணிப்பலத்தின் பெயர் = வீசமாகாணிப்பலம்.

ஒன்றன் பெயர் = ஏகமொன்றே.

பத்தின் பெயர் = தசம்பத்தாகும்.

நூற்றின் பெயர் = சதநூறாகும்.

ஆயிரத்தின் பெயர் = சகசிரமாயிரம்.

பதினாயிரத்தின் பெயர் = அயுதம்பதினாயிரம்.

நூறாயிரத்தின் பெயர் = நியுதநூறாயிரம்.

பத்துநூறாயிரத்தின் பெயர் = பிரயுதம்பத்துநூறாயிரமே.

கோடியின் பெயர் = பிரயுதம் பத்தே கோடி யென்ப.

அற்புதத்தின் பெயர் = கோடி பத்தே யற்புத மாகும்.

நிகர்ப்புதத்தின் பெயர் = அர்ப்புதம் பத்தே நிகர்ப்புத மாகும்.

கும்பத்தின் பெயர் = நிகர்ப்புதம் பத்தே கும்ப மாகும்.

கணகத்தின் பெயர் = கும்பம் பத்தே கணக மாகும்.

கற்பத்தின் பெயர் = கணகம் பத்தே கற்ப மாகும்.

நிகற்பத்தின் பெயர் = கற்பம் பத்தே நிகற்ப மாகும்.

பதுமத்தின் பெயர் = நிகற்பம் பத்தே பதும மாகும்.

சங்கத்தின் பெயர் = பதுமம் பத்தே சங்க மாகும்.

சமுத்திரத்தின் பெயர் = சங்கம் பத்தே சமுத்திர மாகும்.

அந்தியத்தின் பெயர் = சமுத்திரம் பத்தே யந்தியமாகும்.

மத்தியத்தின் பெயர் = அந்தியம் பத்தே மத்திய மாகும்.

பரார்த்தத்தின் பெயர் = மத்தியம் பத்தே பரார்த்த மாகும்.

பூரியத்தின் பெயர் = பரார்த்தம் பத்தே பூரிய மாகும்.

பிரமகற்பத்தின் பெயர் = பூரியம் பத்தே பிரம கற்பமெந்றோதின
ரெண்ண ருறுமப் பெயரே.
= = = = = = = = = = =

= வது காரணவகை பல்பொருள்வகை.

காரணத்தின் பெயர் = காரண வகையும் பலபொருள் வகையுஞ் =
சேர வுரைப்பன் றெள்ளதிற் றெளிந்தே.

காரணத்தின் பெயர் = நிபமும் பொருட்டு மேதுவு
நிமித்தமுந்திறனும் வாயிலு மூலமு மென்றிவை = கருதுங்

காலைக் காரண மாகும்.

உட்டொளையின் பெயர் = சுகிர் குழனாழி தசிரந் தூம்பு = புழைபுரை வேய்வேணு வுட்டொளை பொள்ளே.

மற்றுமுட்டொளையின் பெயர் = நாளமுஞ் சுரையு மதற்குநாமம்.

வட்டத்தின் பெயர் = வலய நேமி கடக மண்டிலம் – பரிதியாழி பாண்டில் விருத்தம் = படலிகை கோளகை பாலிகை கொம்மை – திகிரி மல்லை வல்லை சக்கரந் = தட்டு வட்டணை யென்றிவை பிறவும் = வட்ட வடிவிற் கொட்டிய பெயரே.

அதிசயத்தின் பெயர் = வியப்பே யிறும்பு விசித்திரம் விம்மிதம் = விபரீத மிறும்பூ ததிசய மாகும்.

மற்றுமதிசயத்தின் பெயர் = சித்திர மென்பது மற்றதற் குரித்தே.

உவமையின் பெயர் = புரையு மானும் பொருவுங் கடுப்பு – நிகரு மேய்வு நேரும் போலு = மொப்பு முவமமு மேரு மாங்கு = மெனவெதி ரன்னவு மிணையு முறழ்வும் = சமமுந் துல்லியமு முவமைக் காகும்.

வினையின் பெயர் = கருமமுந் தொழிலும் விதியும் பணியும் = வினையமுஞ் செயலும் வினையின் பெயரே.

செய்தலின் பெயர் = அயர்தலுங் குயிறலும் பண்ணலும் வனைதலும் = புரிதலு மாடலுஞ் செய்த லாகும்.

விற்றலின் பெயர் = மாறுதல் பகர்தல் கூறுதல் விற்றல்.

விலையின் பெயர் = நொடையென் கிளவி விலையென நுவல்வர்.

கூட்டுதலின் பெயர் = ஆற்றலும் போற்றலு மீட்டலுங் கூட்டுதல்.

மற்றுங்கூட்டுதலின் பெயர் = ஓம்ப லென்பது மாங்கதன் மேற்றே.

இலாஞ்சனையின் பெயர் = ஆணை பொறிகுறி யச்சடை யாளம் = சாதனஞ் சின்ன முத்திரை யிலிங்கமென் = றேயவை பலவு மிலாஞ்சனையாகும்.

தலைக்காவலின் பெயர் = இளையு முக்கிரமு மிவைதலைக்

காவல்.

படர்தலின் பெயர் = படலை படர்ச்சி பம்பல் படர்தல்.

அறியாமையின் பெயர் = எய்யாமை யறியாமை.

ஒழியாமையின் பெயர் = ஓவாமை யொழியாமை.

வழிப்பறியின் பெயர் = அதர்கோள் வழிப்பறி யாறலையு மாகும்.

தைத்தலின் பெயர் = அத்தும் பொல்லமுந் தைத்தல் துன்னம்.

தண்டலின் பெயர் = தப்பலென் கிளவி தண்டலாகும்.

காய்தலின் பெயர் = உலறுதல் காய்தல் வறளுதன் முளிதல்.

பில்குதலின் பெயர் = பிலிற்றல் தூவுதல்.

குடியிறையின் பெயர் = கறைவரி யாயங் கடன்கரமென்றிவை = குடியிறைப் பெயரா மிறுப்புமதற்கே.

சுங்கவிறையின் பெயர் = உல்கு சாரிகை சுங்கவிறை யாகும்.

தீர்தலின் பெயர் = ஓவ றீர்தல்.

முடிவின் பெயர் = முடிவு வீடே.

கலத்தலின் பெயர் = கலவை கலப்புக் கலத்தலாகும்.

ஏழாவது = பண்பிற்செயலிற்பகுதிவகை முற்றிற்று
ஆக சூத்திரம்
= = = = = = = = = = = = = =

---

பிங்கல நிகண்டு = பெயர்ப்பிரிவு

ஆறாவது அநுபோகவகை / பெயர்ப்பிரிவு

உணவின்வகை.

சோற்றின் பெயர் = அன்னம் அயினி அடிசில் ஓதனம் பொம்மல்

போனகம் மடை புன்கம் மூரல் புழுக்கல் மிதவை அமலை புற்கை உணவு சரு பாளிதம் நிமிரல் வல்சி அசனம் துற்று கவளம் உதரகம் சொன்றி பாத்து கூழ் பதம் புகா

கஞ்சியின் பெயர் = யவாகு காடி மோழை

பாற்சோற்றின் பெயர் = பாயசம்

அவிழின் பெயர் = பதம்

ததியுணவின் பெயர் = தயிரிற்றிமிரல்

வழியுணவின் பெயர் = பொதி தோட்கோப்பு சம்பளம்

பிட்டின் பெயர் = ஆவி வெந்தை

மோதகத்தின் பெயர் = இலட்டுகம்

அடையின் பெயர் = அப்பம்

உக்காரியின் பெயர் = அஃகுல்லி

பில்லடையின் பெயர் = சஃகுல்லி

தினைமாவின் பெயர் = நுவணை

நென்மாவின் பெயர் = இடி

தோசையின் பெயர் = கஞ்சம்

பூரிகையின் பெயர் = நொலையல்

மாவின் பெயர் = பிண்டி அருப்பம் பிட்டம் நுவணை இடி

அப்பவருக்கத்தின் பெயர் = அபூபம் கஞ்சம் இலையடை மெல்லடை நொலையல் பூரிகை சஃகுல்லி போனகம் மண்டிகை பொள்ளல்

சிற்றுண்டியின் பெயர் = அப்பம் பிட்டு அஃகுல்லி இடி

கறிவர்க்கத்தின் பெயர் = கூட்டமை

கறியின் பெயர் = நீடாணம்

பொரியலின் பெயர் = கருனை

புளிங்கறியின் பெயர் = துவை

குழம்பின் பெயர் = ஆணம்

பச்சடியின் பெயர் = அவித்துவையல்

வறையலின் பெயர் = ஓச்சை

பிண்ணாக்கின் பெயர் = மலாவகம்

சூட்டுறைச்சியின் பெயர் = சூசியம் படித்திரம்

மீன்முள்ளரிந்திடுங்கருவியின் பெயர் = அயிரி

பாலின் பெயர் = பயசு கீரம் அமிழ்து பயம்

தயிரின் பெயர் = ததி அளை பெருகு

நெய்யின் பெயர் = ஆதிரம் கிருதம் ஆச்சியம் இழுது நேயம் துப்பு

மற்றுநெய்யின் பெயர் = அவி ஆகாரம் ஆக

வெண்ணெயின் பெயர் = ஐயம் கவீனம் நவநீதம்

மோரின் பெயர் = மதிதம் தக்கிரம் காலகேயம்

மற்றுமோரின் பெயர் = அருப்பம் அளை முசர் மச்சிகை ஆக

எண்ணெயின் பெயர் = தைலம் நேயம்

தேனின் பெயர் = பிரசம் மது

குழம்பின் பெயர் = பாகு

செறிகுழம்பின் பெயர் = செச்சை

கண்டசருக்கையின் பெயர் = கண்டம் பாளிதம் )

மணற்பாகின் பெயர் = கட்டிகம் விசயம் கன்னல்

சருக்கரையின் பெயர் = குளம் அக்காரம் குடம்

மற்றும்ஓர்வகைச்சருக்கரையின் பெயர் = அயிர் புல்லகண்டம்

கற்கண்டின் பெயர் = கன்னல் கட்டி

கள்ளின் பெயர் = பாலி பிழி படு மது தணியல் சாலி ஆலி ஆலை சாறு மாதவம் சாதி சுரை மாரி மதுவம் வேரி தொப்பி தேறல் நறவு பிரசம் ஆம்பல் இரேயம் தொண்டி நனை மாலி அரிட்டம் ஆசபம் கௌவை சுவிகை சுலோகி சுன்டை வெறி அம்மியம் வாருணம் பானம் அளி மேதை முண்டகம் பாரி மட்டு காலி சாயனம் காதம் பரி எலி வாணிதம் கொங்கு மகரந்தம் குந்தி சொல்விளம்பி அருப்பம் களி கல்லியம் சுமாலி ஞாளி தேம் நாற்றம் வடி நறை மதுகரம்

மற்றுங்கள்ளின் பெயர் = பழை மந்திரம் ஆக

கோற்றேனின் பெயர் = பிரசம்

தேன்கூட்டின் பெயர் = இறால்

பலபண்டத்தின் பெயர் = பண்ணியம் வளம் பட்டம் பண்டம் பண்ணிகாரம் கூலம்

அரும்பண்டத்தின் பெயர் = தாரம்

எச்சிலின் பெயர் = மிச்சில் உச்சிட்டம்

உணவின் பெயர் = உணா வல்சி உண்டி ஓதனம் அசனம் பதம் இசை ஆகாரம் உறை ஊட்டம்

பேருண்டியின் பெயர் = பிரப்பு

உண்பனவற்றின் பெயர் = துற்றி

தின்பனவற்றின் பெயர் = திற்றி

பருகுவனவற்றின் பெயர் = பானம் துவை

அடிசில்என்பது = அடப்படுவது

புழுங்கல்என்பது = புழுக்குவது

தித்திப்பின் பெயர் = இழும் மதுரம் இனிமை தேம் அமுது சுவை

கைப்பின் பெயர் = கைத்தல் தித்தம்

புளிப்பின் பெயர் = ஆமிலம் ஆம்பிரம்

காழ்த்தலின் பெயர் = கரில் காயம் கடுகம்

துவர்ப்பின் பெயர் = துவரம்

உவர்த்தலின் பெயர் = உவர்
= = = = = = = = = = =

= வது பூணின்வகை

ஆபரணத்தின் பெயர் = அணி அணிகலம் பூடணம் வள்ளி இழை கலம்

மணிமுடியின் பெயர் = மகுடம் கிரீடம் மௌலி

மற்றும்மணிமுடியின் பெயர் = சூடிகை சுடிகை சேகரம் ஆக

முடியுறுப்பைந்தின் பெயர் = கோடகம் கிம்புரி முகுடம் தாமம் பதுமம்

முடிமாலையின் பெயர் = பாடம் கோடி கரோடி

பதக்கத்தின் பெயர் = கண்டிகை மதாணி ஆரம்

தோளணியின் பெயர் = அங்கதம் கேயூரம்

குண்டலத்தின் பெயர் = மஞ்சிகை குழை

காதணியின் பெயர் = வல்லிகை கொட்டை கடிப்பம்

குணுக்கின் பெயர் = கடிப்பிணை

தோட்டின் பெயர் = தாடங்கம்

கங்கணத்தின் பெயர் = வளை தொடி கடகம்

கைவளையின் பெயர் = சரி தொடி சூடகம் சங்கு குருகு வண்டு கன்று

பிள்ளைக்கைவளையின் பெயர் = பிடிகம்

சுட்டியின் பெயர் = சுடிகை

பட்டத்தின் பெயர் = ஓடை

பாதகிண்கிணியின் பெயர் = பரிபுரம் நூபுரம்

சதங்கையின் பெயர் = சிறுமணி கிண்கிணி

சிலம்பின் பெயர் = அரி தளை ஞெகிழி நூபுரம்

மற்றுஞ்சிலம்பின் பெயர் = அரவம் ஆக

காற்சரிக்குங்கைச்சரிக்கும் பெயர் = பரியகம்

காலணியின் பெயர் = பாதசாலம்

பாடகத்தின் பெயர் = பாதகடகம்

ஓசைசெய்தளையின் பெயர் = ஞெகிழம் குடச்சூல்

ஆடவர்கோடைவீரத்தாலணிவதின் பெயர் = கழல்

மாதரிடையணியின் பெயர் = காஞ்சி மேகலை கலாபம் பருமம் விரிசிகை அவற்றுள் காஞ்சி = எண்கோவை மேகலை = எழுகோவை கலாபம் – பதினாறு கோவை, பருமம்பதினெட்டுகோவை, விரிசிகை முப்பத்திரண்டுகோவை

சரிமணிக்கோவையின் பெயர் = கலாபம் தோரை

அரைப்பட்டிகையின் பெயர் = அத்து மனா

அரைஞாணின் பெயர் = இரதநம்

செவிமலர்ப்பூவின் பெயர் = கன்னாவதஞ்சம்

ஆபரணத்தொங்கலின் பெயர் = உத்தி மதலிகை தூக்கம்

மோதிரத்தின் பெயர் = வீகம் ஆழி இலச்சினை

மணிவடத்தின் பெயர் = சரம் ஆரம் தாமம்

பூணுநூலின் பெயர் = உபவீதம்

நுதலணியின் பெயர் = இலம்பகம் புல்லகம் சூட்டு

தெய்வவுத்தியின் பெயர் = திரு

தலைக்கோலத்தின் பெயர் = பங்குசம் பிஞ்ஞகம்

தலைப்பாளையின் பெயர் = தொய்யகம்

கிம்புரியின் பெயர் = தாங்கி கோளகை பூண்

பெருஞ்சூட்டின் பெயர் = சிவளிகை

சரப்பணியின் பெயர் = வயிரச்சங்கிலி

பேரணியின் பெயர் = மதாணி ஆரம் பெரும்பூண்

பூண்கடைப்புணர்வின் பெயர் = கடை கயில்

மாதரணிவடத்தின் பெயர் = ஆரம் கண்டிகை தாமம் கோவை மாலை இழை
= = = = = = =

= வது இரத்திநவகை

மாணிக்கத்தின் பெயர் = மாமணி செம்மணி பதுமராகம்

வைடூரியத்தின் பெயர் = வாலவாயம்

வயிரத்தின் பெயர் = வச்சிரம்

மரகதத்தின் பெயர் = அரி பச்சை

நீலமணியின் பெயர் = மணி

பவளத்தின்; பெயர் = துப்பு பிரவாளம் துவர் துகிர்

மற்றும்பவளத்தின் பெயர் = வித்துருமம் அரத்தம் ஆக

முத்தின் பெயர் = நித்திலம் ஆரம் தரளம்

கடவுண்மணியின் பெயர் = நிதி நிதானம்

மணிப்பொதுப் பெயர் = மனவு காசு

ஐவகைத்தெய்வமணியின் பெயர் = சிந்தாமணி சூளாமணி சிமந்தகமணி சூடாமணி கௌத்துவமணி

சங்கநிதியென்பது = சங்கின்வடிவினது

பதுமநிதியென்பது = தாமரைவடிவினது

சந்திரகாந்தமாவது = சந்திரகிரணத்தானீர்கால்வது

சூரியகாந்தமாவது = சூரியனொளியாற்றீக்கால்வது

இருப்புக்காந்தத்தின் பெயர் = சும்பகம்

பளிங்கின் பெயர் = படிகம் பருக்கை காழ் உபலம்

வளைமணியின் பெயர் = மனவு அக்கு

செங்கல்லின் பெயர் = தாது காரிகம்

சிந்தூரத்தின் பெயர் = திலகம்

சாதிலிங்கத்தின் பெயர் = இங்குலிகம் குலிகம்

அகன்மணிபொதுப் பெயர் = அரதநம் சலாகை
= = = = = = = = = =

= வது உலோகவகை

பொன்னின் பெயர் = ஆடகம் வேங்கை அரி செந்தாது காணம்

தேசிகம் காஞ்சனம் கர்ப்பூரம் சாரம் தொடுக்கம் கனகம் சாமீகரம் ஈழம் சுவணம் இரணியம் ஏமம் ஆசை செங்கொல் ஆக்கம் கோவம் பீதகம் மாழை ஈகை சாக்கு பந்தம் தமனியம் அத்தம் பூரி சந்திரம் வித்தம் நிதி வெறுக்கை

மற்றும் பொன்னின் பெயர் = அனந்தம் வசு அருத்தம் பொருள் தனம் பண்டம் திரவியம் ஆக

வெள்ளியின் பெயர் = தாரம் இரசிதம் களதௌதம்

செம்பின் பெயர் = தாமிரம் எருவை வடு சுற்பம் உதும்பரம் சீருள் சீருணம்

வெள்ளீயத்தின் பெயர் = சீருள் வங்கம்

காரீயத்தின் பெயர் = நாகம்

தராவின் பெயர் = மதுகம்

துத்தநாகத்தின் பெயர் = நாகம்

பித்தளையின் பெயர் = இரதி மாயாபுரி ஆரகூடம்

வெண்கலத்தின் பெயர் = கஞ்சம் உறை

இரும்பின் பெயர் = கருங்கொல் அகி கருந்தாது அயில் அயம்

உலோகக்கட்டியின் பெயர் = மாழை சுவணம் வங்காரம் தகணை ஆடகம்

பஞ்சலோகத்தின் பெயர் = தமனியம் இரும்பு தாமிரம் ஈயம் இரசிதம்

நவலோகங்களின் பெயர் = இரதி மதுகம் நாகம் கஞ்சம்

பண்டாரத்தின் பெயர் = கோசம் தண்டம்

பொற்கலனிருக்கையின் பெயர் = பொற்பண்டாரம்

உண்கலத்தின் பெயர் = தாலம் தட்டம் தளிகை பாசனம்

வட்டிலின் பெயர் = கரகம் கோரம் வள்ளம் சகடம் சிகரம் சாகை

சிறுவட்டிலின் பெயர் = கிண்ணம் வள்ளம்

மற்றுஞ்சிறுவட்டிலின் பெயர் = கிராணம் ஆக

நாழிகைவட்டிலின் பெயர் = கன்னல் கிண்ணம்

கண்ணாடியின் பெயர் = புளகம் அத்தம் ஆடி படிமக்கலம் ஒளி = வட்டம் கஞ்சனை தருப்பணம்

மற்றுங்கண்ணாடியின் பெயர் = ஆதரிசனம் உருவங்காட்டி கஞ்சனம் ஆக

படிக்கத்தின் பெயர் = படியகம்

கலசப்பானையின் பெயர் = கஞ்சனை

துடுப்பின் பெயர் = கசிதம்

நெய்த்துடுப்பின் பெயர் = சுருவை

சட்டுவத்தின் பெயர் = தவ்வி சிலகம் தறுவி

கைம்மணியின் பெயர் = படலிகை வட்டம்

பெருமணியின் பெயர் = கண்டை யானைமணி

எறிமணியின் பெயர் = சேகண்டி.

தூபமணியின் பெயர் = கைம்மணி.

தாளத்தின் பெயர் = கிட்டி, சீர், பாண்டில், கஞ்சம்.

கிண்கிணிமாலையின் பெயர் = குரல். தார்.

காளத்தின் பெயர் = காகளம்.

சிறுசின்னத்தின் பெயர் = பீலி.

கொம்பின் பெயர் = கோடு, இரலை, வயிர்.

மற்றுங்கொம்பின் பெயர் = ஆம்பல்.

பரணியின் பெயர் = கோய்.

கமண்டலத்தின் பெயர் = குண்டிகை, காண்டகம், கரகம்.

கெண்டியின் பெயர் = கடிப்பம், கோடிகம்.
= = = = = = = = = = = =

= வது. ஆடைவகை.

கூறையின் பெயர் = ஆடை, கோடி, சூடி, வட்டம், காடகம், புட்டம், கலிங்கம், காழகம், படம், தூசு, புடைவை, துகில்,பரிவட்டம், ஆவரணம், தானை, உடை, சாரம், உம்பரம், நீலி, அறுவை, உடுக்கை, சம்படம், பட்டி, சாடி, சேலை, மடி, சீரை, வட்டுடை, கோசிகம், கலை, வாசனம்.

சிறுதுகிலின் பெயர் = கந்தை, விரிபம், கண்டை, பிடியல், வேதகம், புங்கம், பங்கம், கத்தியம், தூரியம், சிற்றில்.

நல்லாடையின் பெயர் = நாகம்,பாரி.

பட்டுவருக்கத்தின் பெயர் = பாளிதம், கோசிகம்.

மற்றும்பட்டுவருக்கத்தின் பெயர் = காம்பு, நேத்திரம்.

பணித்தூசின் பெயர் = பாளி, தேவாங்கு.

மயிர்ப்படாத்தின் பெயர் = மயிரகம், வயிரியம்.

அத்தவாளத்தின் பெயர் = வடகம், உல்லாசம்.

சித்திரப்படத்தின் பெயர் = புத்தகம்.

உத்தரீயத்தின் பெயர் = உத்தராசங்கம், ஏகாசம்.

கொய்சகத்தின் பெயர் = நீவி.

போர்வையின் பெயர் = மீக்கோள்.

உடுத்தலிறுக்கலின் பெயர் = சுற்றல், (க*) தற்றல்.

.முன்றானையின் பெயர் = தோகை.

முகபடாத்தின் பெயர் = சூழி.

கம்பளிப்படாத்தின் பெயர் = கம்பலம் கம்பளம்

செம்படாத்தின் பெயர் = சிம்புளி

முலைக்கச்சின் பெயர் = வம்பு வார் விசிகை பட்டிகை

கச்சின்றலைப்பின் பெயர் = கஞ்சகம் சார்வாரம்

மேற்கட்டியின் பெயர் = விதானம் கம்பலம் படங்கு வானி

சட்டையின் பெயர் = கஞ்சுகம் குப்பாயம் மெய்ப்பை காஞ்சுகி அங்கி வாரணம்

இடுதிரையின் பெயர் = அவிடி, கஞ்சிகை, அவளிகை, காண்டம், எழினி, கண்டம், பாரகம், கழனி, படம், படாம்

மெத்தையின் பெயர் = தவிசு அணை தளிமம்

மற்றும்மெத்தையின் பெயர் = காகுளி ஆக

தலையணையின் பெயர் = உபதானம்

பெருங்கொடியின் பெயர் படம் வானி பதாகை கேதனம், துவசம் சத்தி தோகை துகில் படங்கு விலோதனம் படாகை

மற்றும்பெருங்கொடியின் பெயர் = கேது

வீதியிற்கட்டியகொடியின் பெயர் = விடங்கம்

தேரிற்கட்டுங்கொடியின் பெயர் = கூவிரம்

சிறுகொடியின் பெயர் = கத்திகை

மரவுரியின் பெயர் = வற்கலை இறைஞ்சி சீரை

சும்மாட்டின் பெயர் = சுடுவு சுமடு சுமையடை

துணியின் பெயர் = சிதர் சிதலை சீரை

பரிவட்டத்தின் பெயர் = வத்திரம் ஆசாரம் வாசம்
= = = = = = = = = = = = =

= வது பூச்சுவகை

சாந்தின் பொதுப் பெயர் – கலவைச்சேறு, காலேக வண்ணம், களபம், விரை, கலவை

நால்வகைச்சாந்தின் பெயர் = பீதம் கலவை வட்டிகை புலி

கருப்பூரத்தின் பெயர் = பாளிதம்

கத்தூரியின் பெயர் = மான்மதம்

புழுகின் பெயர் = வாசநெய்

பூசுவனவற்றின் பெயர் = அங்கராகம்

மயிர்ச்சாந்தின் பெயர் = ஏலம் தகரம் காசறை

செஞ்சாந்தின் பெயர் = செங்குங்குமம்

மற்றும்செஞ்சாந்தின் பெயர் = தளம்

வெண்சாந்தின் பெயர் = தளம்

சந்தனத்தினம் பெயர் = சந்து சாந்து சந்தம்

கலவையின் பெயர் = களபம்

பனிநீரின் பெயர் = கந்தசாரம் இமசலம்

செறிகுழம்பின் பெயர் = தேய்வை செச்சை

அப்புதலின் பெயர் = கொட்டல்

பூசுதலின் பெயர் = புலர்த்தல்

மகளிராகத்தெழுதுகோலத்தின் பெயர் = தொய்யில்

நுதற்குறியின் பெயர் = புண்டரம் திலகம்

அச்சுதமென்பது = அறுகும் வெள்ளரிசியுங்கூட்டியணிவது
= = = = = = = = = = 

= வது சூட்டுவகை

மாலையின் பெயர் – சுக்கை, தொடையல், தொங்கல், கத்திகை, அலங்கல், கண்ணி, தெரியல், தார், அணியல், தாமம், ஒலியல், சூட்டு, கோதை, மஞ்சரி

நுதலணிமாலையின் பெயர் = சூட்டு இலம்பகம்

கோத்தமலரின் பெயர் = மத்தகமாலை

பின்னியமாலையின் பெயர் = பிணையல்

கோத்தமாலையின் பெயர் = சிகழிகை படலை வாசிகை தொடையல்

வாகைமாலையின் பெயர் = கல்வியிலும் கேள்வியிலும் கொடையிலும் படையிலும் வென்றவரணிவது
= = = = = = = = = = = 

= வது இயல்வகை

மூவகைத்தமிழின் பெயர் = இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழ்

எண்வகைக்கணத்தின் பெயர் = அறமும் பொருளும் இன்பமும் வீடும் என்று சொல்லப்பட்ட இவற்றினது பாகுபாடமைய ஒருநூலைச் சொல்லுங்காலத்து நீர் நிலம் தேயு வாயு அந்தரம் இயமானன் சந்திரன் சரியன் என்றுசொல்லப்பட்ட எட்டுவகைக் கணங்களு முதற்செய்யுளின் முதலிலமையக்கூற வேண்டும்.

அவற்றுள் நீரின் கணவகை = நேர் நிரை நிரை

நிலத்தின் கணவகை = நிரை நிரை நிரை

தேயுவின் கணவகை = நிரை நேர் நிரை

மாருத கணவகை = நேர் நேர் நிரை

அந்தர கணவகை = நிரை நிரை நேர்

இயமானன் கணவகை = நேர் நேர் நேர்

மதியின் கணவகை = நிரை நேர் நேர்

எரிகதிர்க் கணவகை = நேர் நிரை நேர்

அவ்வெட்டினுணற் கணவகை = நிலன் நீர் மதி இயமானமன் இந்நான்கும் முன்வரில் நன்று

தீக்கணவகை = மற்றைத்தேயு வாயு அந்தரம் சூரியன் இந்நான்கு கணமுந்தீது

நன்கண்தீக்கண வரலாற்றுவகை = தேமாங்காய் புளிமாங்காய் கருவிளங்கனி கூவிளங்கனி தீக்கணவரலாற்றின்வகை = தேமாங்கனி புளிமாங்கனி கருவிளங்காய் கூவிளங்காய்

எழுத்துப்பொருத்தவகை = நன்கண வகையில் வருமூவகைச்சீர் நான்கும் வல்லெழுத்தேயன்றி மெல்லெழுத்து முதற் சீராகவரத் தொடுக்கக்கூடா, எவ்வகைப்பட்ட செய்யுளுக்கு நன்கணவகையால்வரு மூவகைச்சீரே முதற் சீராய்ப் பாடவேண்டும்

தானப்பொருத்தவகை = குற்றெழுத் தைந்தும் அவற்றிற் கினமாகிய நெட்டெழுத்துகளேழும் பாட்டுடைத்தலைவனியற் பெயர் முதலெழுத்தெந்தஎழுத்தோ அந்த எழுத்தே பாலதானமாகக் கொண்டு மற்றை எழுத்துகளைக் குமாரன், ராசன், மூப்பு ,மரணம் ஆகஎண்ணுதலால் தன்னெழுத்தைப் பாலனாகவும், இரண்டாம் எழுத்தைக் குமாரனாகவும் மூன்றாம் எழுத்தை ராசனாகவும் நான்காம் எழுத்தை மூப்பாகவும், ஐந்தாம் எழுத்தை மரணமாகவும் காப்பியத்தின் முதற் செய்யுளின் முதற்சீரிற் கொள்க

நற்றானந்தீத்தானமாவன = தானப்பொருத்தம் நன்று தீது என்றிருவகைப் படுதலால் தலைவனியற் பெயரின் முதலெழுத்து முதல் மூன்றும் நற்றானம் ஆகவும், ஏனை இரண்டுந் தீத்தானம் ஆகவுங்கொள்க

நாட்பொருத்தவகை = உயிரும் உயிர்மெய்யும் இருபத்தேழு நட்சத்திரங்களாக வகுக்கப்பட்டிருத்தலால் தலைவனியற் பெயரின் முதலெழுத்துக்கமைந்த முதற்பாவின் முதற்சீரிலுள்ள எழுத்தை விதித்த அந்நட்சத்திரமாகக் கொண்டு பின்வரும் எழுத்திற்கமைந்த நட்சத்திரம் நன்மையாம், அந்த முதலெழுத்திற்கு நான்காமெழுத்திற்கும் ஆறாம் எழுத்திற்கும் எட்டாம் எழுத்திற்கும் ஒன்பதாம் எழுத்திற்கும் உரிய நட்சத்திரங்களும் பகைவரை நட்பினராக்கும் நட்சத்திரங்கள் என்பர்

முன்னர்க்கூறியகணங்களெட்டினுள் நீர்க்கணத்திற்குரிய நேர் நிரை நிரை என்னுஞ் சீர்க்குச்சதய நட்சத்திரம்; இயமானன்கணத்திற்குரிய நேர் நேர் நேர் என்னுஞ் சீர்க்குப்பரணி நட்சத்திரம்; நிலக்கணத்திற்குரிய நிரை நிரை நிரை என்னுங் சீர்க்குக்கேட்டை நட்சத்திரம்; சந்திரகணத்திற்குரிய நிரை நேர்நேர் என்னுஞ் சீர்க்குமக நட்சத்திரம் எனவும் இங்கு அமைத்த நாளாகச்சொல்லு.

வாயுகணத்திற்குரிய நேர் நேர் நிரை என்னுஞ்சீர் சுவாதி நட்சத்திரம் எனவும்; தீக்கணத்திற்குரிய நிரை நேர் நிரை என்னுஞ் சீர்கார்த்திகை நட்சத்திரம் எனவும், சூரியகணத்திற்குரிய நேர் நிரை நேர் என்னுஞ்சீர் புநர்பூச நட்சத்திரம் எனவும்; ஆகாயகணத்திற்குரிய நிரை நிரை நேர் என்னுஞ்சீர் திருவோண நட்சத்திரம் எனவுங் கூறுவர்

நற்கணத்தின்பயன் = நிலக்கணம் பெருக்கஞ் செய்தலாலும், சந்திரகணம் வாழ்நாள்தருதலாலும், நீர்க்கணம் கீர்த்தியைத்தருதலாலும், இயமானன்கணம் செல்வத்தைத்தருதலாலும், அரசர்க்கும் பிறர்க்கும் இவைதக் கனவென்று நூல்கூறினாலும்; தலைவனியற்பெயரின்முதலெழுத்திற்கு இயைந்த சீர்க்குரிய நட்சத்திரத்தொடு சென்மநட்சத்திரம் ஆயினும் நாம நட்சத்திரம் ஆயினும் பொருந்தாதவிடத்துக்கொள்ளத்தகா.

தீக்கணத்தின் பயன் = அந்தரகணம் வேறுதேசத்திற் செலுத்தலும், வாயுகணம் செல்வத்தைப்போக்கலும், சூரியகணம் சூனியஞ்செய்தலும், தீக்கணம் நோய்செய்தலுமாகிய குற்றத்தைத்தருமென்று நூலினையாராய்ந்து தெளிவாகவுணர்ந்தபுலவர்கள் கூறுவார்கள்.

உண்டிப்பொருத்தவகை = ஒகரநீங்கிய உயிர்க்குற்றெழுத்து நான்கும், கசதபநமவஎன்னும் மெய்யெழுத்து ஏழுமஅமுதெழுத்தாகக்கூறலால் இவ்வெழுத்துகளுளொன்றை முதலாகவுடைய முதற்சீர்க்குக்கூறிய கணத்திற்குரிய நட்சத்திரத்தோடு பாடவேண்டுதல் முறையாம். இதுவும் அன்றித் தலைவன்பிறந்த நாளேனும் பெயர் நாளேனுமிரண்டிலொன்று பொருந்தக்கூறிய அடியை முதலெடுத்துச்சொன்னால் அப்பாட்டுடைத்தலைவனுக்குச்செல்வம் எந்நாளும் வளரும் என்றுபுலவர் கூறுவர்.

புள்வகை = அகரம்வல்லூறு; இகரம் ஆந்தை; உகரம் காக்கை; எகரம் கோழி; ஒகரம் மயில்.

கன்னல்வகை = அகரம் தோற்றமாக இகரம் இன்பத்தையுண்டாக்கும; உகரம் அரசாகும், எகரம் உறங்கும், ஒகரம் மரணம்.

அவ்வப்பாட்டுடைத்தலைவன் பெயர் முதலெழுத்தே அவ்வப்பட்சியாகக் கொண்டுஉதிப்பு முதல் அரசீறாகப்பாடின், அப்பாட்டுடைத்தலைவனுக்குச் செல்வமுண்டாகும்.

பால்வகை = எழுத்தென்று சொல்லப்படுவன ஆண், பெண், அலி என மூன்றுவகைப்படும்.

அவற்றுள் ஆண்பாலெழுத்தின் பெயர் = அகரமுதல் ஒளகாரமிறுதியாகிய உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு மாணெழுத்துக்களாம்.

பெண்பாலெழுத்தின் பெயர் – உயிர்மெய்யெழுத்துக்களிரு நூற்றுப்பதினாறும் பெண்ணெழுத்துகளாம்.

அலியெழுத்து = மெய்யெழுத்துப் பதினெட்டு மலியெழுத்தாம்.

ஆண்முதலியபகுதிகளின் எழுத்துக்குரியவள் நாமகளாதலாற் பெண்பாலெழுத்தை முதற்சீரின் முதலெழுத்தாகக்கொண்டுகூறல்வேணண்டும்.

மங்கலச்சொல்வகை = திரு, களிறு, தேர், பரி, கடல், பொலிவு, மணி, பூ, புகழ், சீர்.

வேதியர்க்குரிய பாவகைப் பெயர் = பிள்ளைக்கவி பாடத்தொடங்கும்வழி அதற்குமுன் வெண்பாகூறுதல் அந்தணர்க்கு உரியது.

அரசர்க்குரிய பாவகைப் பெயர் = அக்கவி முன் நேரிசையாசிரியப்பா ஆயினும் கொச்சகக்கலிப்பாவாயினுங்கூறுதல் அரசர்க்குஉரித்து.

வணிகர்க்குரிய பாவகைப் பெயர் = அக்கவி முன்வஞ்சிப் பாவாயினும் இன்னிசைவெண்பா வாயினும் கூறுதல் வணிகர்க்கு உரித்து.

சூத்திரர்க்குரிய பாவகைப் பெயர் = அக்கவிமுன் நெடுவெண்பாட்டாயினும் நேரிசையாசிரியப்பாவாயினும் கூறுதல் சூத்திரர்க்கு உரித்து.

காப்புக்குரியகடவுள் = காப்பாக நூன்முகத்துரைக்கப்படும் கடவுள் மலர்களாற் கமழுந் தண்ணிய துழாய்மாலை சூடிய திருமால்; அத்திருமால் காத்தற்குத் திருமகளைப் புணர்தலையுடையவனாதலாலும், கிரீடமுங்கடகமும் நெருங்கிய மலர்மாலையும், குண்டலமும் உபலீதமும் நிறந்தங்கிய கௌத்தாபரணமுமாகிய இவற்றையணியும் இறைவனாதலாலும், நிலைபெற்ற பிரமனைத் தந்தமையாலும் நூன்முகத்துக் கூறுதற்குரியவனாமென்று நூல் வல்லோர் கூறுவர்.

ஆண்பாற் பிள்ளைப்பாட்டின் வகை = பிள்ளைக்கவியி னிலக்கணத்தைத் தெளிவாகக்கூறில் இரண்டா மாதத்திற் காப்புக் கூறுதலும் ஐந்தா மாதத்தில் செங்கீரை கூறுதலும், ஆறாமாதத்தில் சொல்லுவதைப் பழகுதலோடு ஏழா மாதத்திலமுதூட்டலும், எட்டா மாதத்தில் தாலாட்டுதலும், ஒன்பதா மாதத்திற் சப்பாணி கொட்டலும், பதினோரா மாதத்தில் முத்தங் கூறுதலும், பன்னிரண்டா மாத்தில் வாரானை கூறுதலும், பதினெட்டா மாதத்திற் சந்திரனை யழைத்தலும், இரண்டாமாண்டிற் சிறுபறை கொட்டலும் மூன்றா மாண்டில் சிற்றில் சிதைத்தலும், நாலாமாண்டில் சிறுதேருருட்டலும், பத்தாமாண்டில் பூணணிதலும், பன்னிரண்டாம் ஆண்டில் கச்சினோடு உடைவாளை விரும்பத்தரித்தலுமென்று சொல்லப்பட்டவையும் இவை ஒழிந்த பிறவுமாம். இவைகளுள்

கூறுதல் கற்றலோடு அமுதூட்டலும் பூணணிதலும் கச்சொடு சுரிகைபுனைதலும் என்னும் இவற்றையொழிந்த காப்புமுதல் பத்தும் ஆண்பாற் பிள்ளைக்கவியில் வரும்; இவற்றுள் ஓராண்டுகாறுங்கூறிய நிலங்கள் இருபாலுக்கும் உரியனவாம்.

பெண்பாற் பிள்ளைப்பாட்டுவகை = பெண்பாற் பிள்ளைக்கவியாயின் மூன்றாம் ஆண்டில் தான்விளையாடும் பாவைக்கு மணம்பேசுதலும், ஐந்தாம் ஆண்டுமுதல் ஒன்பதாம் ஆண்டுகாறும் மன்மதனையொத்த புருடனைப் பெறத் தவஞ்செய்தலும், குளிர்ந்தநீராடலும், பதுமைவைத்து விளையாடலும், அம்மனையாடலும், *கழங்காடலும் பந்தடித்தலும், சிறுசோறடுதலும், சிற்றிலிழைத்தலும், ஊசலாடலும் என்றுசொல்லப்பட்ட இவற்றை யுள்ளிட்டு முற்சூத்திரத்தில் ஆண்டுகாறுங்கூறிய நிலமேழில் ஏற்பனகூறுதல் முறையாம்.
= = = = = = = = = = = =
*கழங்கு = கழற்காய்

கவியரங்கேற்றிய பாட்டுடைத்தலைவன் செய்யும் வழிபாடு = உருவகவணி, உவமையணி, வழிநிலையணி, மடங்குதனவிற்சியணி, தீவகவணி, வேற்றுமையணி, வெளிப்படையணி, கருத்துடையடையணி, குறிப்புநிலையணி, சுருங்கச்சொல்லலணி, மிகுதிநவிற்சியணி, சிறப்பணி, சிலேடையணி, எதிர்மறுத்தலணி, உடனிலைக் கூட்டவணி, உவமானவுருவகவணி, பிறிதினவிற்சியணி, ஒப்புமைக் கூட்டவணி, நிதரிசனவணி, புகழ்ச்சியணி, பலபொருட் சொற்றொடர்நிலையணி, ஐயவணி, உயர்வுநவிற்சியணி, கலவையணி, வாழ்ந்தணியென்னும் இருபத்தெட் டலங்காரங்களாலும், எழுத்து, சொல், பொருள், யாப்பு என்னும் நான்குவகையாலும் குற்றமறச் செய்யுள் பாடும்புலவனும், அவைக்களத்திலுள்ளாரும் அரசனும் வியக்கப்பாடுகின்றவனும், இயலிசை நாடகமென்னு முத்தமிழில் வல்லவனும் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரமென்னும் பாக்களைப்பாடுகின்றவனும், உயர்குடியிற்பிறந்து மேம்பட்டவனும், எல்லாவுறுப்புகளுங் குறைவின்றிநிறைந்து நல்லொழுக்கமுடையானும், முப்பது வயதிற்கு மேற்பட்டு எழுபது வயதளவிலுள்ளவனுமாகிய கவிஞனொருவன் தன்மேற்பாடுங் கவிதையை யாவருமாராய்ந்தறியத்தான் கொள்ளுங்கால், அவைக்களத்தில் தோரணத்தைக் கட்டித் துவசத்தை நாட்டி மங்கலமுரசியம்ப

அந்தணரொருபால் வாழ்த்த, இவ்வாறு மேன்மைமிக்க கோலத்தோடு விரித்த அழகிய ஆடையில் பலதானியங்களாலமைந்த புகழ்ச்சி வாய்ந்த முளைப்பாலிகையோடு தீபமு நல்ல பூரணகலசமுநிறைந்த மேற்கட்டியையுடைய பந்தலின் கீழ், சலித்தலில்லாத தூண்வரிசையினெருக்கத்தாலும் பலவகைப்பட்ட தமதுறவினர் நெருக்கத்தாலும் பெண்கள்பாடும் பல்லாண்டினாலும் நிறைந்த அழகுஅமைந்த செல்வம்வாய்ந்த தன் கோயில் நடுவில் தான் வெள்ளாடையுடுத்தி வெள்ளிய மலரைச் சூடித்தனதாசனத்தில் தன்மேற்பாடிய புலவனிருக்கச்செய்து தான் பக்கத்திலிருந்து மங்கலமைந்த செய்யுளை மகிழ்கூர்ந்து கேட்டுப், பொன்னும் ஆபரணமும் கடகமுமிவைபோன்ற பிறவும் அக்கவிஞனுக் கொடுத்து அவன்பின் ஏழடிசென்று அவனிற்கவெனக் கூறத்தானிற்றல், மலர்களாற் பரந்த நறுமணங்கமழு மாலையையணிந்த அரசனது கடமையாம்.

பரிசில்பெறாவகை = தான்பாடியபாட்டிற்குத் தலைவன் தனக்குப் பரிசு கொடானாகில், வேறொருவன் பெயரினைத் தன்னூலிலமைத்து, அவன் ஊரையும் பெயரையும் ஒருசேர அதனின்றும் நீக்கி, சீரினையுந் தளையினையும் பின்பு தன்னாற் பாடப்பட்டவன் பாட்டுக்கியைய நாட்டுவனாயின் முன்புள்ள தலைவன் செல்வமிழந்து துன்பப்பட இலக்குமியும் பின்புள்ளவனைச் சாருவாள், அவனுக்குச் செல்வமுண்டாகாது.

மற்றும் பாவலன் பரிசு பெறாக்காற் செய்யும்வகை = தனக்குப் பரிசுகொடாத பாவிநூலை வேறுபடவெழுதிச் செவந்த பூவினைச்சூடித், தன்மனைக்குப்புறத்திலும் காளிகோவிலிலும் பாம்பு வாழும் புற்றிலிடத்திலும் சுடுகாட்டிலும் வீதியிலும்தான் வழிபடுகடவுளைத் தியானஞ் செய்திருந்து அவன் மேற்பாடியநூலை நெருப்பிற் கொளுத்தினால் பன்னிரண்டு மாதத்தில் மரணமடைவானென்பது முதற்புலவனாகிய அகத்தியன் கூறிய வாய்மைமொழியாம்.

இதுவும்அது = பாடியபுலவன் பரிசுபெறாமையால் மயங்கிய மனத்தோடு நிலைகலங்கிச் சுழல்வானாகில், அப்பாடலுக்குத் தலைவனாயுள்ளவன் கெடுதலுமின்றி அப்பாடலை அவைக்களத்திற் கேட்டிருந்த அவனுறவினருங் கெடுவார்.

காமரப்பாட்டின் பெயர் = கானம், கொளை வரி, கந்தருவம், கீதம்,

இராகம், கேயம், பாணி, நாதம், இசை, பண்.

நால்வகைப்பண்ணின் பெயர் = பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி.

பாலையாழ்த்திறத்தின் பெயர் = அராகம், நேர்திறம், உறுப்பு, குறுங்கலி, ஆசான்.

குறிஞ்சியாழ்த்திறத்தின் பெயர் = நைவளம், காந்தாரம், படுமலை, மருள், அயிர்ப்பு, பஞ்சுரம், அரற்று, செந்திறம்.

மருதயாழ்த்திறத்தின் பெயர் = நவிர், வடுகு, வஞ்சி, செய்திறம்.

செவ்வழியாழ்த்திறத்தின் பெயர் = நேர்திறம், பெயர்திறம், சாதாரி, முல்லை.

பெரும்பண்ணின்வகை = பாலையாழ், செந்து, மண்டலியாழ், பௌரி, மருதயாழ், தேவதாளி, நிருபதுங்கராகம், நாகராகம், குறிஞ்சியாழ், ஆசாரி, சாயவேளர்கொல்லி, கின்னரராகம், செவ்வழி, மௌசாளி, சீராகம், சந்தி

பாலையாழ்த்திறன் வகையின் பெயர் = தக்கராகம், அந்தாளி பாடை, அந்தி, மன்றல், நேர்திறம், வராடி, பெரியவராடி, சாயரி, பஞ்சமம், திராடம், அழுங்கு, தனாசி, சோமராகம், துக்கராகம், கொல்லிவராடி, காந்தாரம், சிகண்டி, தேசாக்கிரி, சுருதி காந்தாரம்.

குறிஞ்யாழ்த்திறன் வகையின் பெயர் = நட்டபாடை, அந்தாளி, மலகரி, விபஞ்சி,
காந்தாரம்,செருந்தி,கௌடி,உதயகிரி,பஜ்சுரம்,பழம்பஞ்சுரம், மேகராகக்குறிஞ்சி, கேதாளி, குறிஞ்சி, கௌவாணம், பாடை, சூர்துங்கராகம், நாகம், மருள், பழந்தக்கராகம், திவ்வியவராடி, முதிர்ந்தவிந்தளம், அநுத்திர பஞ்சமம், தமிழ்க்குச்சரி, அருட்புரி, நாராயணி, நாட்டராகம், ராமக்கிரி, வியாழக்குறிஞ்சி, பஞ்சமம், தக்கணாதி, சாவகக்குறிஞ்சி, ஆநந்தை.

மருதயாழ்த்திறன்வகையின் பெயர் = தக்கேசி, கொல்லி, ஆரியகுச்சரி, நாகதொனி, சாதாளி, இந்தளம், தமிழ்வேளர்கொல்லி, காந்தாரம், கூர்ந்த பஞ்சமம், பாக்கழி, தத்தளபஞ்சமம், மாதுங்கரரகம், கௌசிகம், சீகாமரம், சாரல்,

சாங்கிமம்.

செவ்வழியாழ்த்திறன் வகையின் பெயர் = குறண்டி, ஆரியவேளர் கொல்லி, தனுக்காஞ்சி, இயந்தை, யாழ்பதங்காளி, கொண்டைக்கிரி, சீவனி, யாமை, சாளர், பாணி, நாட்டம், தாணு, முல்லை, சாதாரி, பைரவம், காஞ்சி.

மற்றுந்திறத்தின் பெயர் = தாரப்பண்டிறம், பையுள் காஞ்சி படுமலை, இம்மூன்றும் நூற்றுமூன்று வகைப்படும்.

நேர்திறத்தின் பெயர் = துக்காரகம்.

காந்தாரபஞ்சமத்தின் பெயர் = உறழ்ப்பு.

சோமராகத்தின் பெயர் = குறுங்கலி.

காந்தாரத்தின் பெயர் = சாரல்.

நட்டபாடையின் பெயர் = நைவளம்.

பழம்பஞ்சுரத்தின் பெயர் = பஞ்சுரம்.

கவ்வாணத்தின் பெயர் = படுமலை.

அநுத்திரபஞ்சமத்தின் பெயர் = அயிர்ப்பு.

குறிஞ்சியின் பெயர் = அரற்று.

செந்துருதியின் பெயர் = செந்திறம்.

தக்கேசியின் பெயர் = நவிர்.

வடுகின் பெயர் = இந்தளம்.

பாக்கழியின் பெயர் = வஞ்சி.

சிகண்டியின் பெயர் = செய்திறம்.

சாதாரியின் பெயர் = முல்லை.. நேர்திறத்தின் பெயர் = புறநீர்மை.

நால்வகையாழின் பெயர் = பேரியாழ், சகோடயாழ், மகரயாழ்,

செங்கோட்டியாழ்.

ஏழிசையின் பெயர் = குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்.

அவற்றுட்செம்பாலைவகை = குரலே குரலாகிற் செம்பாலை.

படுமலைப்பாலைவகை = துத்தமே குரலாகிற்படுமலைப் பாலை.

செவ்வழிப்பாலைவகை = கைக்கிளையே குரலாகிற் செவ்வழிப் பாலை.

அரும்பாலைவகை = உழையே குரலாயி னரும்பாலை.

கொடிப்பாலைவகை = இளியே குரலாகிற் கொடிப்பாலை.

விளரிப்பாலைவகை = விளரியே குரலாகின் விளரிப்பாலை.

மேற்செம்பாலையின்வகை = தாரமே குரலாயின் மேற்செம்பாலை

ஏழ்பாலைகளுள் இதனினிது வலிதெனல் = அவற்றுள் கூறிய செம்பாலைக்குப் படுமலைப்பாலைவலிது, படுமலைப்பாலைக்குச் செவ்வழிப் பாலைவலிது,< செவ்வழிப்பாலைக்கு அரும்பாலைவலிது, அரும்பாலைக்குக் கொடிப்பாலைவலிது, கொடிப்பாலைக்கு விளரிப்பாலைவலிது, விளரிப்பாலைக்கு மேற்செம்பாலைவலிது.

ஏழிசைதம்மிற் பிறக்கும்வகை = தாரத்துள் உழையும், உழையுட் குரலும், குரலுள் இளியும், இளியுள் துத்தமும், துத்தத்துள் விளரியும், விளரியுட் கைக்கிளையும் பிறப்பதுதகுதி.

இவற்றின் பெறப்பிடத்தின் பெயர் = மிடற்றால்குரல், நாவினாற்றுத்தம், அண்ணத்தாற் கைக்கிளை, சிரத்தாலுழை, நெற்றியாலிளி, நெஞ்சால் விளரி, மூக்காற்றாரம்; இவ்வாறு தனித்தனி பிறக்குமென்பர்.

இவற்றின் மாத்திரைகளாவன = மாத்திரை கூறுமிடத்து குரல், துத்தம் , கைக்கிளை , உழை, இளி , விளரி , தாரம்

ஏழிசை யோசையாவன = வண்டு, கிளி, குதிரை, யானை, குயில்,

தேனு, ஆடு.

இவற்றினெழுத்தாவன = ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஒ, ஔ.

ஏழிசைகக்குரிய மணங்களாவன = மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், தாமரை, புன்னை.

இவைகளின்சுவை = பால், தேன், கிழான், நெய், ஏலம், வாழை, மாதுளங்கனி.

இவைகளுக்கிறைவர் பெயர் = விசுவாமித்திரன், இயமன், அங்கி, சந்திரன், சூரியன், கௌதமன், காசிபன்.

மந்தவிசையின் பெயர் = மந்தரம், காகுளி.

சமனிசையின் பெயர் = மதுரம், துத்தம், மத்திமம் .

வல்லிசையின் பெயர் = தாரம், உச்சம்.

இசைவிகற்பத்தின் பெயர் = ஏனை.

குரற்குரிய திறத்தின் பெயர் = ஆசான்றிறம்.

இருதுறையின்வகை = செந்துறை, வெண்டுறை.

பண்ணென்பது = நிறைந்த நரம்புள்ளது.

திறமென்பது = குறைந்தநரம்புள்ளது.

யாழெழுமின்னிசையின் பெயர் = எழால்.

இசைக்குழலின் பெயர் = வாரி, வங்கியம்.

வீணையின் பெயர் = கின்னரம், தண்டு.

யாழின் பெயர் = தந்தி, வீணை, கின்னரம், கோட்டம், கோடவதி, விவஞ்சி.

மற்றும்யாழின் பெயர் = கலம், கருவி.

யாழ்வலிக்கட்டின் பெயர் = திவவு.

முறுக்காணியின் பெயர் = மாடகம்.

நரம்பின் பெயர் = கோல், தந்திரி, குரல்.

ஆதியாழாவது = ஆயிர நரம்புள்ளது.

உள்ளோசையின் பெயர் = முரல்வு, நரல்வு, தெளிர், ஞெளிர், விழைவு, நுணுக்கம்.

பல்லியந்தழுவு பாடலின் பெயர் = சங்கீதம்.

ஆடற்கேற்கும் பாட்டின் பெயர் = செந்துறைப்பாட்டு.

பாடற்கேற்கும் பாட்டின் பெயர் = வெண்டுறைப்பாட்டு.

அகமார்க்கமாவது = அருமையிற்பாடல்.

யாழ் நரம்போசையின் பெயர் = கலித்தல், சும்மை, கம்பலை, அழுங்கல், சிலைத்தல், துவைத்தல், சிலம்பல், இரங்கல், இமிழ்தல், விம்மல், இரட்டல், ஏங்கல், கனைத்தல், தழங்கல், கறங்கல், அரற்றல், இசைத்தல்.

ஒலியின் பெயர் = ஓதை, நாதம், கம்பலை, சும்மை, ஆகுலம், புலம்பல், கோடணை, அரவம், ஓசை, கர்ச்சனை.

திரட்டோசையின் பெயர் = அலறல், கூப்பிடல், தெழித்தல், உரப்பல், பிளிறல்.

நாடகவகை.

கூத்தின் பெயர் = நடம், நாடகம், நடனம், நட்டம், படிதம், மண்டிலம், தாண்டவம், பரதம், நிலையம், நிருத்தம், ஆடல், தூக்கு, ஆலுதல், துணங்கல், அவிநயம், இலையம், பாணி, குரவை.

கூத்தின் விகற்பத்தின் பெயர் = கரணம், உப்பிதம், மலைப்பு, புரியம், பிரமரி, வீரட்டானம், குனிப்பு, உள்ளானம், கடகம், இலையம்.

சிரமஞ் செய்தலின் பெயர் = பருமித்தல்.

சிவனாடலின் பெயர் = பாண்டரங்கம், காபாலம், கொடுகொட்டி.

பதினேருருத்திர ராடலின் பெயர் = = கொட்டி,குரவை, குடம், குடை, வெறி, மல், பேடு, பாவை, கடையம், பாண்டரங்கம், மரக்கால்.

மாயோனாடலின் பெயர் = அல்லியம், குடம், மல், மரக்கால்.

திருமகளாடலின் பெயர் = = பாவை.

முருகனாடலின் பெயர் = கொட்டி, குடை, துடி.

காமனாடலின் பெயர் = பேடு.

அயிராணியாடலின் பெயர் = கடையம்.

துர்கையாடலின் பெயர் = மரக்கால்.

சத்தமாதராடலின் பெயர் = துடி.

கைக்கோத்தாடலின் பெயர் = குரவை.

முடக்கிய விருகை பழுப்புடை யொற்றியாடலின் பெயர் = துணங்கை.

வேலனாடலின் பெயர் = அணங்கு,வெறி,கழங்கு.

ஒத்தறுத்தலின் பெயர் = வட்டித்தல், தட்டல், வட்டணை.

கைக்குவித்துக்கொட்டலின் பெயர் = கொம்மை.

ஆர்த்துவாய் கொட்டலின் பெயர் = ஆவலங்கொட்டல்.

குந்திநிற்றலின் பெயர் = = குஞ்சித்தல்.

கைகூப்பி மெய்கோட்டி நிற்றலின் பெயர் = குடந்தம்.

கூத்தாடலின் பெயர் = அகவல், தாண்டல், ஆடுதல், நடித்தல், அசைதல், பெயர்தல், அடுத்தல்.

மற்றுங் கூத்தாடலின் பெயர் = மாறல். *

தாளவொத்தின் பெயர் = = சதி, சீர்.

நாடகம்ஆவது – அத்தாளவொத்தின்றிறத்துக்கியையநடிப்பது நடம்.
= = = = = = = = = =

= வது மண்டிலவகை.

விற்றொடுத்தம்பினையெய்வார்க்குரியநால்வகைநிலையின் பெயர் = பைசாசம், மண்டிலம், ஆலீடம், பிரத்தியாலீடம்ம்

அவற்றுள் பைசாசநிலைவகை = ஒருகால்நிலைநின் றொருகான் முடக்கல் பைசாசநிலை.

மண்டிலநிலைவகை = இருகாலும் பக்கல் வளையமண்டி லித்தலே மண்டிலநிலை.

ஆலீடநிலைவகை = வலக்கான் மண்டிலித் திடக்கான் முந்துறலே யாலீடநிலை.

பிரத்தியாலீடநிலைவகை = வலக்கான் முந்துற் றிடக்கான் மண்டிலித்தலே பிரத்தியாலீட நிலை.
= = = = = = = = = = =

= வது படைவகை.

போரின் பெயர் = யுத்தம், ஆகவம், தும்பை, சமரம், கணையம், செரு, சங்கிராமம், இகல், எதிர், ஞாட்பு, பூசல், ஆயோதனம், அடல், அமர், இரணம், மலைதல்.

புறவகை = வெட்சி=பகைவர் பசுக்கவர்தல், கரந்தை = பகைவர் கவர்ந்த தன்னிரை மீட்டல், வஞ்சி=பகைமேற் செல்லல், காஞ்சி = வரும்பகைவர் முன்னெதி ரூன்றல், நொச்சி=தன்னரண் காத்தல், உழிஞை = பகையரண் வளைத்தல், தும்பை=பொருதல், வாகை=போர் வெல்லல்.

புறப்புறவகை = வாகை, பாடாண், பொதுவியல்.

நால்வகைப்படையின் பெயர் = தேர், யானை, குதிரை, காலாள்.

தேரின் பெயர் = குயவு, வையம், கொடிஞ்சி, சயந்தனம்,
திகிரியந்திரம் = கவரி, அரி, இரதம்.

மற்றுந்தேரின் பெயர் = கூவிரம். ஆக

தேருருளின் பெயர் = உருளி, கால், ஆழி, பரிதி, உந்தி, திகிரி,
சில்லி, நேமி.

தேரி னகத்திற் செறிகதிரின் பெயர் = ஆர்.

தேர்க் கொடிஞ்சியின் பெயர் = கூவிரம்.

தேர்மொட்டின் பெயர் = கூம்பு.

தேர்முட்டியின் பெயர் = பிரம்பு.

தேர்நடுவின் பெயர் = நாப்பண், தட்டு.

தேர்மரச்சுற்றின் பெயர் = கிடுகு

தேர்ப்பலகைப்பாவின் பெயர் = பார்

தேர்ப்பரப்பின் பெயர் = பார்

அச்சுருவாணியின் பெயர் = அச்சு

பரிபூண்டதேரின் பெயர் = பாண்டில், கஞ்சிகை, வையம்

பண்டியின் பெயர் = சகடம், ஒழுகை, சாகாடு

பண்டியுள்ளிருசின் பெயர் = கந்து

அரசுவாவினிலக்கணம் = நான்குகாலும் துதிக்கையுங் கோசமும்
வாலும் ஆகியஏழுறுப்புநிலத்திற்றோய்வதும்,
பாலையுஞ்சங்கையுமொத்த வெண்ணிறம்வாய்ந்த
கால்நகமுடையதுமாய், காலினாலுந் தனதுதுதிக்கையினாலும்
சரீரத்தாலும் வாலினாலுங் கொம்பினாலுக் கொல்லவல்லதாய்
ஏழுமுழ முயர்ந்து ஒன்பதுமுழநீண்டு பதின்மூன்றுமுழஞ்
சுற்றுடைத்தாய் சிறியகண்ணையுஞ்
செவந்தபுள்ளிகளையுமுடையதாய், முன்புமுற்கூறிய
வாறுயர்ந்துபின்பு தாழ்ந்தது அரசியானையென்று

அறிவுடையோர்சொல்வர்

அரசர்க்குரிய பரியினிலக்கணம் = பெண்களது மணம் போலமிக் கமணத்ததாய், வாழைமடலைப்போலச் செவியினையுடையதாய், நான்குகாலும்பி டருமுகமுமுதுகும் முன்புறமும் வெண்ணிறமுடையதா யெண்பத்திரண்டு விரலுயர்ந்த குதிரைதத்தமக்குரிய குணங்களையுடைய அரசர்க்குரியது.

பரியின்கதிவகைப் பெயர் = மல்லகதி, வாநரகதி, மயூரகதி, வல்லியகதி, விடைக்கதி

காலாள்வகை

பகைவர்மேற்செல்லல் = ஊராண்மை

பகைவரிடத்தில்செய்யும்அரியசெயல் = பேராண்மை

புறங்கொடுத்தார்மேலாயுதம்எறியாமை = தழிஞ்சி

வெற்றிப்பூவின் பெயர் = பூளை

கொள்ளையின் பெயர் = சூறை, கொண்டி

வாரலின் பெயர் = கவரல், வௌவல், கொளல்

படையின் பெயர் = தானை, பதாதி, தண்டம், பதாகினி, வானி, அநிகம், வாகினி, தந்திரம், சேனை, பகுதி, பாடி, பலம்.

மற்றும்படையின் பெயர் = நிதானம், ககனம், தளம் . ஆக

படைவகுப்பின் பெயர் = = ஒட்டு, யூகம், உண்டை, அணி.

படையுறுப்பின் பெயர் = = தூசி, கூழை, நெற்றி, கை, அணி.

பேரணியின் பெயர் = = கூழை.

கொடிப்படையின் பெயர் = = தார்.

கீழறுத்தலின் பெயர் = = அறைபோதல், படைமறுத்தல்.

பொரவழைத்தலின் பெயர் = = அறைகூவல்.

தோற்கருவி வகை.

முழவின் பெயர் = = குளிர்.

குடமுழாவின் பெயர் = = மண்கணை, முழவம்.

படகத்தின் பெயர் = = பணவம், திண்டிமம், ஆனகம்.

கடிப்பின் பெயர் = = குணில்.

சிறுபறையின் பெயர் = = ஆகுளி.

திமிலையின் பெயர் = = சல்லரி.

ஒருகட்பறையின் பெயர் = = மொந்தை.

நிசாளத்தின் பெயர் = = தண்ணுமை.

ஒருபறைவிகற்பத்தின் பெயர். = = பீலி.

பன்றிப்பறையின் பெயர் = = குடப்பறை. .

கரடிப்பறையின் பெயர் = = தட்டை.

ஒருகட்பகுவாய்ப் பறையின் பெயர் = = பதலை.

.. துந்துபியின் பெயர் = = சகண்டை, முரசு, பணை, சகடம், துந்துபி, தூரியம்.

.. மற்றுந்ததுந்துபியின் பெயர் = = பேரி, தகணிதம். ஆக

உவகைப்பறையின் பெயர் = = தூரியம்.

உடுக்கையின் பெயர் = = துடி.

பம்பைப்பறையின் பெயர் = = தடாரி.

தம்பட்டத்தின் பெயர் = = முரசு, முழவு.

தலைவிரிபறையின் பெயர் = = கத்திரி.

மரக்காற்பறையின் பெயர் = கோதை.

.பலவகைப்பறையின் பெயர் = பணவம், திண்டிமம், தக்கை, இடக்கை, திமிலை, கண்டிகை, கண்டை, குறடு, பணை, சிந்தூரம், பாண்டிகம், பீலி,கரடிகை, துடிகை, கடுவை, ஊமை, சகடை, கிடுகு.

வாச்சியப்பொதுப் பெயர் = தூரியம், உழவம், வைரம், கோடணை , முரசு, பீலி, முருடு, தடாரி, இயம், பணை.

குடை வகை.

குடையின் பெயர் = கவிகை, சத்திரம், பிச்சம், கவிப்பு, ஆதபத்திரம், தொங்கல்.

செங்குடையின் பெயர் = மீயை, சிந்தூரம்.

பீலிக்குடையின் பெயர் = சுழல்.

பீலிக் குஞ்சக் குடையின் பெயர் = தழை, தொங்கல் சமாலம், பிச்சம், குளிரி.

ஆயுதவகை.

வில்லின் பெயர் = கோதண் டம்,சிலை, கொடுமரம், கார்முகம், சாபம், துரோணம், தனு.

மற்றும்வில்லின் பெயர் = தடி,முனி ,சிந்துவாரம், சராசனம், தவர், வேணு, சார்ங்கம். ஆக

நாணின் பெயர் = பூரி, ஆவம், பூட்டு, தொடை, வடம், நரரி, நரம்பு. குணம்.

நாணினொலியின் பெயர் = மருமராஞ்சம்.

அம்பின் பெயர் = பகழி, வாளி, தோணி, பாணம், கதிரம், பல்லம், கணை, கோல், சரம், வண்டு, பத்திரம், சிலீமுகம், விசிகம்.உடு.

அம்புத்தலையின் பெயர் = உடு.

மொட்டம்பின் பெயர் = உதண்.

அம்புக்குப்பியின் பெயர் = புழுகு.

அம்புக்கட்டின் பெயர் = புதை.

அம்புக்குதையின் பெயர் = பகழி, புங்கம்.

அம்புத்திரள்கட்டுங்கயிற்றின் பெயர் = பற்றாக்கை.

அம்பறாத்தூணியின் பெயர் = தூணி, புட்டில்.

மற்றுமம்பறாத்தூணியின் பெயர் = ஆவம், ஆவநாழிகை.

குதையின் பெயர் = குலை.

அம்பினிறகின் பெயர் = = உடு

பிண்டிபாலத்தின் பெயர் = = பீலித்தண்டு, எஃகம்

நாராசத்தின் பெயர் = = சலாகை \

இருப்புமுள்ளின் பெயர் = = தாறு

கழுமுள்ளின் பெயர் = = கழுக்கடை

வாளின் பெயர் = = நவிர், ஏதி, நாட்டம், கடுத்தலை, நாந்தகம், வசி, கட்கம், வஞ்சம்

மற்றும் வாளின் பெயர் = = மட்டாயுதம், தூவத்தி .ஆக

கூன்வாளின் பெயர் = = கோணம்

சிறுவாளின் பெயர் = = முசுண்டி

கொடுவாளின் பெயர் = = குயம், புள்ளம்

அரிவாளின் பெயர் = = மேற்கூறிய பெயர்கள் அரிவாட்குமாகும்.

சுழல்படையின் பெயர் = = வட்டம், பாராவளையம்

ஈர்வாளின் பெயர் = = வேதினம், கரபத்திரம்.

உடைவாளின் பெயர் = = சுரிகை, பத்திரம், குறும்பிடி

கைவாளின் பெயர் = கண்டம்

கணையத்தின் பெயர் = = எழு, பரிகம்.

சூலத்தின் பெயர் = = காளம், நல்வசி, சூலம், கழுமுள், மூவிலை வேல், முத்தலைவேல், கழுவு

பூங்கருவியின் பெயர் = = சன்னகம்

மழுவின் பெயர் = = பரசு, கணிச்சி, நவியம்.

மற்றுமழுவின் பெயர் = பாலம், தண்ணம் ஆக

இலைமூக்கரி கத்தியின் பெயர் = = குளிர், கணிச்சி

கோடாலியின் பெயர் = குடாரம், நவியம்

தோட்டியின் பெயர் = = சரணம், கணிச்சி, அங்குசம்

மற்றுந்தோட்டியின் பெயர் = = கோணம் ஆக

வேலின் பெயர் = = உடம்பிடி, எஃகம், அயில், சத்தி, விட்டேறு, அரணம், ஞாங்கர்

வச்சிராயுதத்தின் பெயர் = = வயிரப்படை, சம்பம், குலிசம், அசனிய

மற்றும் வச்சிராயுதத்தின் பெயர் = = சதகோடி ஆக

தண்டாயுதத்தின் பெயர் = தடி, கதை, சீர்

மற்றுந்தண்டாயுதத்தின் பெயர் = வயிரம், முளை, எறுழ், ஆக

கிளிகடிகருவியின் பெயர் = தழல், தட்டை

குறுந்தடியின் பெயர் = குணில்.

ஈட்டியின் பெயர் = இட்டி.

கவணின் பெயர் = கவணை, ஒடிசில், குணில், குளிர்

சிறுசவளத்தின் பெயர் = குந்தம்.

பெருஞ்சவளத்தின் பெயர் = குந்தம், தோமரம், பீலி.

சக்கரத்தின் பெயர் = திகிரி, நேமி, ஆழி, எஃகம், வளை, பரிதி, ஒளிவட்டம், சுதரிசனம்

கைக்கட்டியின் பெயர் = கோதை, கைப்புடை.

கைவிடுபடையின் பெயர் = அத்திரம்.

கைவிடாப்படையின் பெயர் = சத்திரம்.

சுவரகழ்கருவியின் பெயர் = கன்னம்.

தறிகைக்கும் உளிக்கும் பெயர் = கணிச்சி.

கைவேலின் பெயர் = கப்பணம், தோமரம்.

கயிற்றின் பெயர் = பாசம், கச்சை, நாண், வடம், பழுதை, தாமம், இரச்சு, தாம்பு

தாமணியின் பெயர் = கண்ணி, தாம்பு.

வலைக்கயிற்றின் பெயர் = சாலம்.

அஞ்சனமெழுதுங்கருவியின் பெயர் = கோல்.

எழுதுங்கருவியின் பெயர் = கண்டம், ஊசி, ஆணி.

ஊசியின் பெயர் = சூசி.

ஊசித்தொளையின் பெயர் = பாசம், துன்னம்.

நுனியின் பெயர் = நுதி, நுனை.

முசுண்டியின் பெயர் = தானை, படை, முற்கரம்.

இருப்புலக்கையின் பெயர் = முசலம்.

சங்கிலியின் பெயர் = துவக்கு, தொடர், இடங்கணி.

பற்றிரும்பின் பெயர் = கற்பொறி, அள், வலி.

கூர்மையின் பெயர் = = வயிரம், வள், வசி, வை,அயில், நிசிதம், அள், பூ, ஆர்.

ஆயுதப்பொதுப் பெயர் = = தானை, படை, படைக்கலம், கருவி, எஃகு, வேல்.

மற்றும் ஆயுதப்பொதுப் பெயர் = = துப்பு, ஏதி, சுதன்மம். ஆக

படையுறையின் பெயர் = = தட*து, கருவிப்புட்டில்.

செயற்கைவகை.

கவசத்தின் பெயர் = = ஆசு, தசனம், சடாரி, அரணம், பாசம், கண்டம், பருமம், கச்சை, சாலிகை. மாடிகை, கந்தளம், பாரம், மேழகம், கசை, மெய்புகுகருவி, சடாரி.

மற்றுங்கவசத்தின் பெயர் = = அந்தளம், அபரம், சுரிகை. ஆக

கேடகத்தின் பெயர் = = கேடகம், வட்டம், தட்டி, கடகம், வேதிகை, கடுகு, பலகை.

மாவட்டணத்தின் பெயர் = = தட்டியம், பலகை, தட்டு.

தோற்பலகையின் பெயர் = = தோற்பரம், தட்டு, தோல்.

யானைப்புரசைக்கயிற்றின் பெயர் = = தூசு, கவடு.

யானைமுகபடாத்தி பெயர் = = சூழி, படம்.

மற்றும்யானைமுகபடாத்தின் பெயர் = = மந்தனம். ஆக

யானைகட்டுந்தறியின் பெயர் = = ஆளானம், வெளில்.

யானைக்கச்சையின் பெயர் = = கண்டம்.

யானைமேற்றவிசின் பெயர் = = இலகடம், பலகாரம்.

மற்றும்யானைமேற்றவிசின் பெயர் = = மணை, பலகை. ஆக

குதிரைக்கலணையின் பெயர் = = பருமம், பண், படை, பல்லணம், பரம்.

மற்றும்குதிரைக்கலணையின் பெயர் = = சூழி. ஆக

குதிரையங்கவடுயின் பெயர் = கச்சம், படி.

குதிரைச்சம்மட்டியின் பெயர் = மத்திகை, கோல்.

குதிரைக்கயிற்றின் பெயர் = வற்கம், வாய்வட்டம், குசை.

குதிரைக்கடிவாளத்தின் பெயர் = கலியம், மூட்டு, கிராம், கலினம், கறுழ்.

கலப்பையின் பெயர் = படை, அலம், தொடுப்பு, படைவாள், நாஞ்சில, இலாங்கலி, ஆலம், உழுபடை.

மற்றும்கலப்பையின் பெயர் = கலனை.

மேழியின் பெயர் = கொடுநுகம்.

குறுந்தறியின் பெயர் = போதிகை.

வேள்வித்தறியின் பெயர் = யூபம்.

தூணின் பெயர் = பெயர்தாணு, கால், கம்பம், தம்பம், ஆளானம், மதலை, எழு, வெளில், தறி, கந்து.

தொழுவின் பெயர் = தோழம்.

யானைத் தோட்டியின் பெயர் = குடாரி, அங்குசம், தோட்டி, கோணம், யானைவணக்கி.

அடைகுரட்டின் பெயர் = பட்டடை.

பெருங்குறட்டின் பெயர் = முருடு

சம்மட்டியின் பெயர் = கூடம்.

சுட்டுக்கோலின் பெயர் = ஆணி.

கொழுவின் பெயர் = கோல்.

ஒண்டியின் பெயர் = ஊற்றாணி.

பாரைக்கோலின் பெயர் = மீன்குத்தி.

அக்குரோணிவகை.

பதாதியென்பது = ஓரியானையும், ஓர்தேரும், மூன்றுபரியும், ஐந்து காலாளுங் கொண்டது.

சேனாமுகமென்பது = பதாதிமூன்றுபங்குகொண்டது.

குமுதமென்பது = சேனாமுகமூன்றுபங்குகொண்டது.

கணகமென்பது = குமுதமூன்றுபங்குகொண்டது.

வாகினியென்பது = கணகமூன்றுபங்குகொண்டது.

பிரளயமென்பது = வாகினிமூன்றுபங்குகொண்டது.

சமுத்திரமென்பது = பிரளய மூன்று பங்குகொண்டது சமுத்திரம்.

சங்கமென்பது = சமுத்திரமூன்றுபங்குகொண்டது.

அநீகமென்பது = சங்கமூன்றுபங்குகொண்டது.

அக்குரோணியென்பது = அநீகம்மூன்றுபங்குகொண்டது.

வெள்ளவகை.

அக்குரோணி எட்டுப்பங்குகொண்டது = ஏகம்.

ஏகம் எட்டுப்பங்குகொண்டது = கோடி.

கோடிஎட்டுப்பங்குகொண்டது = சங்கம்.

சங்கம்எட்டுப்பங்குகொண்டது = விந்தம்.

விந்தம்எட்டுப்பங்குகொண்டது = குமுதம்.

குமுதம்எட்டுப்பங்குகொண்டது = பதுமம்.

பதுமம்எட்டுப்பங்குகொண்டது = நாடு.

நாடுஎட்டுப்பங்குகொண்டது = சமுத்திரம்.

சமுத்திரம்எட்டுப்பங்குகொண்டது = வெள்ளம்.

இல்லணிவகை.

கருமபூமியியல் = கருமபூமியாவது = உழவு, தொழில், வரைவு, வாணிகம், விச்சை, சிற்பம் என அறுவகைப்படுந் தொழிற் பாகுபாட்டினை யுடையது.

போகபூமியியல் = போகபூமியாவது = பதினாறுவயதுடைய குமரனும், பன்னிரண்டுவயதுடைய குமரியுமாய், தம்முளொத்தமரபும் தம்முளொத்த அன்புமுடையவராகிய தலைவனும் தலைவியும் கற்பகம்போலச் செல்வம் வந்து வாய்ப்பத்தாம் செய்தத‌வங்காறும் அப்பூமியில் இன்ப நுகர்வது.

ஆசிரிர்கூற்று = = அந்தணர்க்குரிய வேதத்திற்கூறிய பிரம முதலிய எட்டு வகைக்குட்பட்ட கல்யாணத்தில் ஒருவகைமணமுடையவராய் அவர்கள் வாழும் இல்வாழ்க்கைக்குரிய பொருள்களுள் முன்பு சொல்லா தொழிந்தவைகளை இங்கே கூறுவன்.

கட்டிலின் பெயர் = = பாரி,மஞ்சம், பரியங்கம், பாண்டில்.

விசியின் பெயர் = = அரி.

பீடத்தின் பெயர் = = பீடிகை, தவிசு, விட்டரம்.

சிங்காதனத்தின் பெயர் = = பத்திராதனம்.

உரலின் பெயர் = = கறை, உலூகலம், திட்டை.

உலக்கையின் பெயர் = = முசலம், தடி, உரோங்கல்.

உறியின் பெயர் = = சிமிலி, தூக்கு, சிக்கம், சிதர்.

ஊஞ்சலின் பெயர் = = ஊசல், தூரி.

ஏணியின் பெயர் = = இறைவை, கடவை.

கண்ணேணியின் பெயர் = = மால்பு.

, அளவையின் பெயர் = = கச்சம், கடன்.

மரக்காலின் பெயர் = = அம்பணம், தூம்பு, கால்.

தூக்குக்கோலின் பெயர் = = நிறை, கட்டளை, வாணிகன், நிறுப்பான், துலை, கோல்.

கொத்தளிப்பாயின் பெயர் = = ஆரை.

புற்பாயின் பெயர் = = சாப்பை.

பிரப்பம்பாயின் பெயர் = = சாதி.

தோற்பாயின் பெயர் = = சருமம்.

தடுக்கின் பெயர் = = தவிசு.

குழாயின் பெயர் = = தண்டு.

பூந்தட்டின் பெயர் = = பீடிகை, படலிகை, கோடிகம்.

விளக்குத்தண்டின் பெயர் = = கௌசிகம், மல்லிகை, கம்பம், மத்திகை, தீபம்.

முறத்தின் பெயர் = = சின்னம், தட்டு, சேட்டை முச்சில்.

சுளகின் பெயர் = = சூர்ப்பம்.

புட்டிலின் பெயர் = = இறைவை.

கூடையின் பெயர் = வட்டிகை.

துடைப்பத்தின் பெயர் = சோதனி, மாறு, அலகு, வாருகோல்.

நாழியின் பெயர் = வட்டி,குஞ்சம், படி.

தயிர்கடைதறியின் பெயர் = வெளில்.

தயிர்க்கோலின் பெயர் = மத்து.

காராம் பியின் பெயர் = அம்பி.

நீர்ப்பத்தலின் பெயர் = அம்பணம்.

கரண்டியின் பெயர் = கரண்டம்.

அம்மியின் பெயர் = அரைசிலை.

அம்மிக்கல்லின் பெயர் = குழவி.

சாணையின் பெயர் = சிலாவட்டம்.

சந்தனமரைகல்லின் பெயர் = சாணம், சிலாவட்டம்.

நாடாவின் பெயர் = நூனாழி.

இறைகூடையின் பெயர் = இடார்.

சும்மாட்டின் பெயர் = சுமடு,சுடு,சுமையடை.

பேராலவட்டத்தின் பெயர் = உக்கம், தாலவிருந்தம்.

மற்றும்பேராலவட்டத்தின் பெயர் = கால்செய்வட்டம். ஆக

சிற்றாலவட்டத்தின் பெயர் = சிவிறி.

சாந்தாற்றின் பெயர் = பீலி.

சீப்பின் பெயர் = சிக்கம், மயிர்வாரி, கங்கம்.

திரிகையின் பெயர் = வட்டம், பந்து, தட்டு.

பந்தின் பெயர் = கந்துகம்.

அம்மானையின் பெயர் = அம்மனை.

மகளிர்விளையாட்டுக்கலத்தின் பெயர் = ஓரை.

கூத்தர்கருவியின்* பெயர் = கலப்பை.

நீர்சிதறும்துருத்தியின் பெயர் = சிவிறி.

செருப்பின் பெயர் = தொடுதோல், கழல்

மிதியடியின் பெயர் = பாதுகை, பாவல்.

மிதியடியின்மேலிட்டகொட்டையின் பெயர் = குடை, கல்லை.

உலைத்துருத்தியின் பெயர் = உதி, அத்திரி, சிவை.

கொல்லுலைமூக்கின் பெயர் = குருகு, சிவை.

சுண்ணச்சாந்தின் பெயர் = சுதை, களபம்.

நெருப்புறுவிறகின் பெயர் = ஞெகிழி, கொள்ளி.

விறகின் பெயர் = இந்தனம், காட்டம், துவர்.

ஓமவிறகின் பெயர் = சமிதை.

அரிவாண்மணையின் பெயர் = புள்ளம், கூர்வாயிரும்பு.

சுக்கின் பெயர் = நாகரம், சுண்டி.

மிளகின் பெயர் = திரங்கல், கலினை, கோளகம், மிரியல், காயம், மரீசம், கறி.

மஞ்சளின் பெயர் = நிசி, அரிசனம், பீதம், காஞ்சனி, அரித்திரம்

அரிசியின் பெயர் = அரி, வீயம், தண்டுலம்.

தவிட்டின் பெயர் = முட்டை, முடை, பொதி.

பெருங்காயத்தின் பெயர் = இங்கு.

குங்குலியத்தின் பெயர் = குக்கில்.

, கடுகின் பெயர் = ஐயவி.

உப்பின் பெயர் = இலவணம்.

பருப்பின் பெயர் = முதிகை, முற்கம்.

அரக்கின் பெயர் = அரத்தம், துப்பு.

செத்தையின் பெயர் = காடு, துரால், மயல்.

பாடையின் பெயர் = வெள்ளில், ஆசந்தி.

தாழியின் பெயர் = அகளம், சாடி, பதலை, தளம்.

நீர்ச்சாலின் பெயர் = நிறை, வட்டம், இடங்கர்.

கொப்பரையின் பெயர் = கொப்பரி, கடராம், தசும்பு.

குடத்தின் பெயர் = கடம், இடங்கர், தாழி, இறங்கர், குணம், இரும்பை, கும்பம், குடங்கர், குடந்தம், கலசம், இடக்கர்.

மிடாவின் பெயர் = கரீரம், குழிசி, முகை, தடா.

பானையின் பெயர் = குண்டம், மிடா, குழிசி.

தயிர்கடைதாழியின் பெயர் = குடார், மந்தினி.

கரகத்தின் பெயர் = கர்க்கரி, சிரகம், கன்னல்.

மட்கலத்தின் பெயர் = கடிஞை, பாத்திரம்.

தகழியின் பெயர் = இடிஞ்சில், பாண்டில்.

குடுவையின் பெயர் = குண்டம்.

சட்டியின் பெயர் = விசளை.

அகலின் பெயர் = சராவம், சுத்திகை, இடிஞ்சி.

கொள்கலத்தின் பெயர் = இடுங்கலம், பாண்டம்.

வெற்றிலையின் பெயர் = நாகவல்லி, தாம்பூலம்.

பாக்கின் பெயர் = கோலம், துவர்க்காய், பாகு.

சுண்ணாம்பின் பெயர் = சுண்ணம், நீறு.

திருநீற்றின் பெயர் = பூதி, ஓமப்பொடி, விபூதி காப்பு, புண்ணியசாந்தம், வெண்டாது.

சாணியின் பெயர் = புண்ணியசாந்தம், சாணாகம்.

சாம்பலின் பெயர் = அடலை, வெண்பலி.

பெட்டியின் பெயர் = மஞ்சிகம்.

பேழையின் பெயர் = மஞ்சிகை.

அணிகலச்செப்பின் பெயர் = கண்டிகை, பீடிகை, காண்டம், கடிப்பம், கோடிகம்.

அநுபோகவகை முற்றிற்று.
= = = = = = = = = = = = =

பிங்கலநிகண்டு = பெயர்ப்பிரிவு
ஏழாவது = பண்பிற்செயலிற்பகுதிவகை.

உள்ள நல்வகை.

குணத்தின் பெயர் = மாலை, பெற்றி, மரபு, கிழமை, பால், விதி, பான்மை, இயல்பு, தகவு, தகுதி, தகைமை, தன்மை, பரிசு, படி, முறை, பண்பு, நிலை, வண்மை, நீர், சால்பு, கொள்கை.

உயர்வின் பெயர் = உவப்பு, புரை, சேண், உன்னதம், துங்கம், நிவப்பு, மேடு, நீள், வரி, பிறங்கல், ஏந்தல், ஒழுகல், போகல், ஓச்சல், ஓங்கல், வார்தல், உறை.

வலியின் பெயர் = முரண், மறம், முன்பு, நோன்மை, உரம், பாழி, ஊக்கம், மதுகை, முடலை, உம்பல், மூரி, தோற்றம், மிடல், மள்ளம், கூளி, ஈடு, திறம், எழில், எறுழ், திண்மை, வயம், விறல், மைந்து, துப்பு, மீளி, அடல், தா, ஆண்மை, ஆற்றல், கோள், இகல், மொய்ம்பு, மதன், கலி.

மாட்சிமையின் பெயர் = மாணல், மாண், சால்பு, மதன், ஆன்றல், வாய்த்தல்.

கொழுமையின் பெயர் = செழுமை, வளமை, கொழுப்பு.

குளிரின் பெயர் = நளி, பனி, சீதம், தண், சீதளம், நளிர்.

செவ்விதின் பெயர் = செவ்வை, செப்பம், செம்மை, செவ்வன்.

அறிவின் பெயர் = உணர்வு, காட்சி, உரன், மேதை, தெளிவு, புலன், தெருட்சி, போதம், புத்தி, ஞானம்.

வெற்றியின் பெயர் = வலன், கொற்றம், வாகை, முல்லை, சயம், ஆடு, புகல், படினம், விசயம், வெற்றம், வென்றி.

செல்வத்தின் பெயர் = சீர், வெறுக்கை, விபவம், திரு, மா, ஆக்கம், வாழ்க்கை, பொறி.

பற்றின் பெயர் = பரிவு, ஆர்வம், ஈரம்.

அன்பின் பெயர் = அளி, நார், சங்கம், நேயம்.

மற்றுமன்பின் பெயர் = பாசம். ஆக

அருளின் பெயர் = தகவு, கருணை, இரக்கம், தயவு, கிருபை, அபயம்.

மனத்தின் பெயர் = முன்னம், அகம், உள்ளம், உன்னம், இதயம், நெஞ்சு, உள்.

குறிப்பின் பெயர் = சிந்தை, நினைவு, தெளிவு, தியானம், இங்கிதம், கருத்து, எண்ணம்.

மற்றுங்குறிப்பின் பெயர் = நாட்டியம். ஆக

குறித்தலின் பெயர் = கண்ணல், நுதலல், காணல், புகறல், எண்ணல், பேணல், கருதல், சுட்டல், உன்னல்.

வரையறுத்தலின் பெயர் = குணித்தல், கணித்தல், குறித்தல், மதித்தல்.

தேடலின் பெயர் = நாடல், நேடல்.

மற்றுந்தேடலின் பெயர் = கூடல், கையரிக்கொளல். ஆக

நினைத்தலின் பெயர் = உன்னல், படர்தல், ஊழத்தல், கருதல், முன்னல், அறிதல், வலித்தல், சிந்தித்தல், எண்ணல்.

ஏமாப்பின் பெயர் = செம்மாப்பு.

இறுமாப்பின் பெயர் = ஏக்கழுத்தம்.

களிப்பின் பெயர் = மதர்ப்பு, மதர்வை, மதம், தருக்கு, ஏமம், பெருமிதம், செருக்கு.

இன்பத்தின் பெயர் = நகை, ஏமம், நயம், மகிழ்ச்சி, சுகம், கடி, தொய்யல்.

பேரின்பத்தின் பெயர் = அகமலர்ச்சி, ஆநந்தம்.

சுகத்தின் பெயர் = சந்தம், தருமம், அழகு, மகிழ்வு.

தெளிவின் பெயர் = தெருள், மானவு, உணர்வு, தேறல், தேற்றம், துணிவு.

நயத்தின் பெயர் = நறுமை, விழுப்பம், நன்னர்.

நன்மையின் பெயர் = உறுதி, யாணர், ஒண்மை, உத்தமம், நன்றி, சேடு, நன்று.

பொறுத்தலின் பெயர் = சமித்தல், நோன்றல், கமித்தல்

முயற்சியின் பெயர் = ஊக்கம், இயற்றி, ஆள்வினை, உஞற்று, தாள், துப்பு.

உற்சாகத்தின் பெயர் = உஞற்று, தாள் வினை, துப்பு, ஊக்கம்.

இலாபத்தின் பெயர் = பலன், ஊதியம், பயன், ஆக்கம், பேறு, பலித்தல்.

ஒற்றுமையின் பெயர் = ஒருமை, குறிப்பு.

துணையின் பெயர் = இணை, துப்பு, சகாயம். புகல்.

தவத்தின் பெயர் = நோன்பு.

மற்றும்தவத்தின் பெயர் = உவ்வு. ஆக

நல்வினையின் பெயர் = தானம், அறம், தருமம், சீலம், அருள், மங்கலம், சுபம், சுகிர்தம், புண்ணியம், பாக்கியம்.

அருச்சனையின் பெயர் = ஆராதனை, வழிபாடு.

பூசையின் பெயர் = பூசனை.

யாகத்தின் பெயர் = சித்து, வேள்வி, கிருது.

வெறுப்பின் பெயர் = ஒல்லாமை, வேண்டாமை, முனிவு, ஒறுத்தல், உவர்த்தல்.

துறவின் பெயர் = துறத்தல், நிவிர்த்தி.

உறவின் பெயர் = உறவி, விருப்பம்.

நாணத்தின் பெயர் = வெட்கம், இலச்சை, வெள்கல், சமழ்த்தல், வட்கல், இருளை, மானம், உட்கு.

செல்வப்பகுதியின் பெயர் = மல், தடம், வளம், வாரி.

நிலைபேற்றின் பெயர் = துஞ்சல், மன்னல், திதி.

மற்றும் நிலைபேற்றின் பெயர் = திறம், ஏணம், தாணு. ஆக

மெய்யின் பெயர் = சாதம், வாய்மை, சத்தியம், உண்மை, நீதி, நிலைமை, நியாயம், நிச்சயம், வாய், திடம், ஆணை, மன்றம், சரதம், வேளாண்மை, பட்டாங்கு.

பிழைப்பின் பெயர் = இழுக்கம், வழுக்கு, தப்பல், உஞற்று, பணைத்தல்.

ஆதலின் பெயர் = நந்துதல்.

ஏவலின் பெயர் = ஆணை.

ஒற்றின் பெயர் = வேய்.

செய்தியின் பெயர் = செயல், செய்கை, செய்தல்.

ஒழுக்கத்தின் பெயர் = சரியை, ஆசாரம், நடை, இயல்பு.

நீதியின் பெயர் = நெறி, நியாயம், தருமம்.

மற்றும்நீதியின் பெயர் = விதி, நிழல்.

உள்ளின் பெயர் = அகணி, அகடு, அகம், கோட்டை.

சூழ்ச்சியின் பெயர் = உசா, தேர்ச்சி, விசாரம், யாப்பு, எண்ணம் மந்திரம், நூல்.

மற்றுஞ்சூழ்ச்சியின் பெயர் = ஆய்தல், தேர்தல்.

உண்டாதலின் பெயர் = விளைதல், பூத்தல், படுதல்.

தோற்றுதலின் பெயர் = பிறப்பித்தல், படைத்தல், நாறல், வெளிப்படல், தோற்றல், உருத்தல்.

காத்தலின் பெயர் = நிலைபெறுத்தல், புரத்தல், அளித்தல், காப்பு, நோக்கல், திதி.

பாதுகாத்தலின் பெயர் = போற்றல்,ஓம்பல், நோக்கல்.

காவலின் பெயர் = சிறை, அரண், சேமம், செயல், காப்பு, வேலி, கடி, தட்டி, கட்டு, தட்டு.

கொள்கையின் பெயர் = தெவ்வு, வரைதல், தேர்தல்,ஏற்றல்.

மேற்கோளின் பெயர் = பூட்கை.

உய்தலின் பெயர் = ஆற்றுதல், வலிதல்.

தூய்மைசெய்தலின் பெயர் = உவளித்தல்.

உடன்பாட்டின் பெயர் = வலித்தல், ஒட்டல், நேர்தல், இசைதல்.

விதிமுறையின் பெயர் = நியமம்.

குற்றலின் பெயர் = நவித்தல், துப்பல், துற்றல்.

அவியலின் பெயர் = அவைத்தல், அவித்தல்.

ஒட்டுதலின் பெயர் = அணவல்.

நெரிதலின் பெயர் = தெள்ளுதல்.

தெளிதலின் பெயர் = தேறுதல்.

கேளாவென்றலின் பெயர் = வேளா.

தவிர்தலின் பெயர் = வாளா.

தேற்றத்தின் பெயர் = மன்ற, தேறு.

ஆமென்னும் பெயர் = அன்றெனல், இன்றெனல்.

சரண்புகலின் பெயர் = மறை, புகல்.

எண்ணலின் பெயர் = கரணம், கணிதம், கணக்கு.

நிமித்தத்தின் பெயர் = சோதனம், சோதிடம்.

உடனிகழ்வின் பெயர் = ஒடு.

பெயரின் பெயர் = அபிதானம், ஆக்குவயம், நாமம்.

ஆதாரநிலையின் பெயர் = கந்து, ஆலம்பம், ஆலம்பனம், தஞ்சம்,தூவு.

பேரறிவின் பெயர் = முதுக்குறைவு, முகரிமை.

உள்ளதுசிறத்தலின் பெயர் = கூர்ப்பு, களிப்பு.

உள்ளத்தின்தீயவகை.

தீவினையின் பெயர் = பவம், பாவம், பாதகம்.

தாழ்வின் பெயர் = சாய்ப்பு, இழிவு, தண்மை, தஞ்சம்.

கூம்புதலின் பெயர் = சாம்புதல், ஒடுங்குதல்.

அச்சத்தின் பெயர் = உரும், உருவு உட்கு, பனிப்பு, வெருவு, புலம்பு, வெறி, பயம், பிறப்பு, கொன், பேம், நாம், வெறுப்பு, சூர், பீர், வெடி, கவலை, அடுப்பு, கலக்கம்.

குலைதலின் பெயர் = ஓடல்,வெய்துறல், உலமர,ல் தேங்கல், கூசல், திட்கல், குலையல், துணுக்கெனல், வெள்கல், துண்ணெனல், தெருமரல், அளுக்கல், ஞொள்கல்.

நடுக்கத்தின் பெயர் = விதிர்ப்பு, பனிப்பு, விதலை, கம்பம், அதிர்ப்பு, பொதிர்ப்பு, விதப்பு.

கலக்கத்தின் பெயர் = கதனம், துரிதம், பிரமம்.

மற்றுங்கலக்கத்தின் பெயர் = வெறி. ஆக

எளிமையின் பெயர் = எண்மை, பரிபவம், இழிதகவு.

மற்றுமெளிமையின் பெயர் = தண்மை. ஆக

பேதைமையின் பெயர் = மடமை, வெறி. மருட்சி.

மாசின் பெயர் = கசடு, மலினம், கறை, அழுக்கு, மலம், களங்கம்.

குற்றத்தின் பெயர் = காசு, தவறு, கறை, களங்கம், மாசு, வசை, மறு, வடு, ஆசு, புகர், அரில், களை, ஏசு, பழி, போக்கு, ஏதம், நறை, வண்டு, கடவை, நவை, மிறை, பிழை, விடல், கரில், தோம், தப்பு, துகள், புரை, கோது செயிர், மை.

மற்றுங்குற்றத்தின் பெயர் = இழுக்கு, சோர்வு, புன்மை, இகழ்ச்சி, வழுக்கு, கீழ், மறவி, பொல்லாங்கு, பொச்சாப்பு.

வெம்மையின் பெயர் = உருமம், கருமம், உருப்பம், வெப்பம், அழனம், கோரம், அழல்.

தோல்வியின் பெயர் = நிலையழிவு, ஓட்டம், பின்னிடல், தோல்வு தொலைதல், தோற்றல், அஞ்சல்.

கொடுமையின் பெயர் = கடுமை, கோடணை, சண்டம், கடினம், கூரம்.

மற்றுங்கொடுமையின் பெயர் = உக்கிரம், கோரம், உறைப்பு, பூதி, வக்கிரம், வஞ்சம், சடம், கரில். ஆக

மறப்பின் பெயர் = வழுக்கு, மறவி, அயர்ப்பு, இவறல், மறல்.

வறுமையின் பெயர் = மிசை, குறை, மிடி, தரித்திரம், ஒற்கம், இலம்பாடு, இலாமை, நல்குரவு.

மற்றும்வறுமையின் பெயர் = மறல், இன்மை, நிரப்பு. ஆக

பகையின் பெயர் = முனை, முரண், உறழ்வு, தூவு, படி, தெவ்,துப்பு.

மற்றும்பகையின் பெயர் = இகல், செறல். ஆக

வெகுளியின் பெயர் = கறுவம், கோபம், கலாம், மறம், குரோதம், வேரம்.

சினத்தின் பெயர் = முனிவு, செயிர், சீற்றம், வியர்ப்பு.

சினக்குறிப்பின் பெயர் = கறுப்பு, செவப்பு, கனுறல், கன்றல், வியர்ப்பு, வெதிர்ப்பு, புழுங்கல் ,கொதித்தல், வெய்துறல், புகைதல், வயிரம்.

தணியாக்கோபத்தின் பெயர் = கோம்பல், கொந்தல், கனிதல், வெம்பல், வெதும்பல்.

பெருஞ்சினத்தின் பெயர் = உடற்றல், சீறல், உருத்தல், காய்தல், முனைதல், விடைத்தல், பைத்தல்.

தணியாமுனிவின் பெயர் = சலம், வயிரம், செற்றம்.

இகழ்தலின் பெயர் = எள்ளல், நகுதல், நிந்தை,

வருத்தத்தின் பெயர் = உயவு, அனுக்கம், கவற்சி, உயங்கல், அயர்வு, கசிவு, ஆகுலம், அணங்கு, வயா, அழுங்கல்.

குணமின்மையின் பெயர் = சீரணம், சிதம்பு, சீத்தை, செடி.

துக்கத்தின் பெயர் = அல்லல், பீடை, அரந்தை, கோட்டாலை, செல்லல், கலக்கம், சிறுமை, உறுகண், கவ்வை, மம்மர், விழுமம், கவலை, எவ்வம், இன்னல், இடும்பை, இடுக்கண், படர், சூர்,

பைதல், பருவரல், பழங்கண், இடர், அஞர், ஏதம், யாதனை, இட்டளம், கலக்கம், புன்கண், பனி, நோய், கம்பலை, அலக்கண், வெய்துறல், அழுங்கல், பீழை, அலமரல், நடலை, உறுவல், வெறுப்பு, கிலேசம், துயர் துனி, துன்பம்.

மற்றுந்துக்கத்தின் பெயர் = துரிசு, அல்லகண்டம், துரால், சிலுகு, அலந்தலை.

சந்தேகத்தின் பெயர் = அனுமானம், சங்கை.

மற்றுஞ்சந்தேகத்தின் பெயர் = ஐயுறல், கடுத்தல். ஆக

மயக்கத்தின் பெயர் = களிப்பு, மறம், கழுமல், பிறப்பு, மால், மறல், மையல், மான்றல், இருள், மைந்து, ஏமம், இளமை, மருள், மயர்வு.

மற்றுமயக்கத்தின் பெயர் = மோகம், உணராமை, உன்மத்தம்,களன். ஆக

தீதின் பெயர் = தீங்கு, கோள், ஊறு.

மற்றுந்தீதின் பெயர் = மாயம், அந்தரம். ஆக

பொய்யின் பெயர் = படிறு, மிச்சை, பெட்டு, பழுது, வழுது, தத்திகாரம், மாயம், பொக்கம், பிசி, நடலை.

பொறாமையின் பெயர் = நோனாமை, வக்கிரம், அழுக்காறு, அவ்வியம், கூரம்.

சோம்பலின் பெயர் = தூங்கல், அசைதல், அலைசுதல்.

மற்றுஞ்சோம்பலின் பெயர் = சடம், மடி, தள்ளாவாரம் ஆக

வஞ்சனையின் பெயர் = கூடம், புள்ளுவம், குத்திரம், கஞ்சம், மாயை, தொடு, பட்டிமை.

வேறுபாட்டின் பெயர் = வீற்று, விகிர்தம், விகடம், விரூபம், வேற்றுமை விபரீதம்

மற்றும்வேறுபாட்டின் பெயர் = திரிபு, விள்ளல். ஆக

தளர்வின் பெயர் = எளிமை = உடைதல், இட்டளம்.

தனிமையின் பெயர் = கேவலம், புலம்பு

பாவத்தின் பெயர் = தீவினை, மறம், செடி, அகம், துரிதம், கலுடம்

விருப்பத்தின் பெயர் = மாதர் காதல், வயாவு வேட்கை, ஆதரவு, ஆசை, அவா, ஆர்வம், நச்சு, நசை, விழைவு, நயப்பு, காமம், இச்சை, பெட்பு, மோகம், ஏட்டை, வெப்பம், பற்று, விழுப்பம், வீழ்தல், இவர்தல், கவர்தல், வேண்டல், பேணல், வேட்டல், தாழ்தல், வெஃகல்

வேட்கைப்பெருக்கத்தின் பெயர் = வேணவா

நோயின் பெயர் = மடங்கல், பிணி, மடி, மாரி, பையுள், அணங்கு, வியாதி, அவலம், நீழல், உறுகண், புன்கண், உரோகம், சூர்.

மற்றுநோயின் பெயர் = சிறுமை குத்து ஆக

வேதனைநோயின் பெயர் = ஈதி வாதை

காமநோயின் பெயர் = விரகம், மதனம், காமக்கவலை

களவின் பெயர் = கரப்பு, கட்டல், பட்டிமை, சோர்வு, கயவு, படிறு, கரவடம்.

பயனின்மையின் பெயர் = வறிது, கொான், விழல், விதா, அல்லவை.

மரணத்தின் பெயர் = முஞ்சல், துவன்றல், முடிதல், விளிதல், துஞ்சல், தவறல், இறப்பு, பொன்றல், வீய்வு, உலப்பு, வீடல், மாய்தல், மாண்டல், மரித்தல், சாவு

மற்றுமரணத்தின் பெயர் = =இல்லெனல் ஆக

சாய்தலின் பெயர் = இரிதல், நெரிதல், இடைதல், உடைதல், சரிதல்.

பிணக்கின் பெயர் = அரில், மறல், அபரம், துவக்கு.

முறிதலின் பெயர் = ஒடிதல், ஒசிதல், ஞெமிர்தல், இடிதல், முரிதல், இறுதல்.

கேட்டின் பெயர் = வழுவு, சிதைவு, மங்குதல், சேதம், அழிவு, சிந்துதல், நந்துதல், முரிதல், இறுதல், சுதம், மடி, ஒருங்கல்.

கொலையின் பெயர் = கோள், அணங்கு, வேட்டம்.

வெளிற்றின் பெயர் = வெண்மை, தண்மை.

புன்மையின் பெயர் = நவிரம்.

இரங்குதலின் பெயர் = இனைதல், எற்றித்தல்.

அருவருப்பின் பெயர் = வாலாமை, சூதகம், பயிர்ப்பு.

ஒழிதலின் பெயர் = ஓவு, மன்.

மற்றும்ஒழிதலின் பெயர் = ஏனை. ஆக

கலங்குதலின் பெயர் = கதுவு, கலுழ்தல், மலங்குதல்.

குலுங்குதலின் பெயர் = குலைதல், நடுங்குதல்.

வாட்டத்தின் பெயர் = தேம்பல், குழைதல், அனுங்கல், முளி, வாடல், தளர்தல்.

குழைதலின் பெயர் = சுனைதல், களைதல்.

மாறுபாட்டின் பெயர் = தெற்று.

நிலையின்மையின் பெயர் = வம்பு

மேன்மையின் பெயர் = கயவு, சாயல், ஞெள்ளல்.

மனக்கோட்டத்தின் பெயர் = அழுக்காறு, மனத்தழுக்கு, அவ்வியம்.

மெய்வகை.

பருமையின் பெயர் = பரூஉ, பீனம், தடித்தல்.

இளைப்பின் பெயர் = தேம்பல், பழங்கண், சிங்கல், தேய்வு, நாம்பல், ஞொள்கல், மெலிவு.

வெண்மையின் பெயர் = சுவேதம், தவளம், சுக்கிலம், குருத்து, விளர், வால், வெள்ளை, நரை, சிதம்.

மற்றும்வெண்மையின் பெயர் = குருகு, பால், சுப்பிரம். ஆக

பொன்மையின் பெயர் = பீதகம், பசப்பு, பிங்கலம், அரிதம், காஞ்சனி

செவப்பின் பெயர் = அத்து, அருணம், அரத்தம், சேப்பு, சோணம், குருதி, துவர், சிந்தூரம், பூவல், பஉரம், சேத்து, அரக்கு, செக்கர், செம்மை, சேந்து, பாடலம், குஞ்சுகம், குலிகம், துப்பு.

பச்சையின் பெயர் = பாசு, பை, அரி, பசுமை, பலாசு, சாமம், அரிதம்.

கருநிறத்தின் பெயர் = காளம், காழகம், காளிமம், காரி, மால், மாஇருள் நீலம், அசிதம், கார்,அஞ்சனம், நல்லம், கருள்.

புற்கெனுநிறத்தின் பெயர் = கபிலம், குரால், புகர் .

ஒளியின் பெயர் = வெயில், நிலவு, வில், வாள், நிழல், எல், நீமம், நகை, கானல், கிரணம்,கதிர், செடி, சோதி, மின், துணி, அரி, கேழ், கரம், தேசு, கிளர்.

மற்றும்ஒளியின் பெயர் = ஆதவம் ஆக

ஒளிவிடுதலின் பெயர் = விளங்குதல், நகுதல், மின்னல், மிளிர்தல், துளங்குதல், நிகழ்தல், சுடர்தல், பிறழ்தல், இலங்கல், வயங்கல், இலகுதல், இமைத்தல், அலங்கல், தயங்கல், அவிர்தல், நிலவல், ஒளிர்தல்.

ஒளிமழுங்குதலின் பெயர் = மட்கல், புல்லெனல், மழுங்குதல், அழுங்குதல்.

அழகின் பெயர் = ஏர், வனப்பு, எழில், இராமம், காரிகை, மா, அம்மை, கவின், செழுமை, பந்தம், தேசிகம், நோக்கு, அணி, அணங்கு, யாணர், பாணி, மாதர், மாழை, சாயல், வகுப்பு, வண்ணம், வளம், பூ, பொற்பு, சேடு, பொன், சித்திரம், பத்திரம், மாமை, தளிமம், மயம், மஞ்சு, மதன், பாங்கு, அம், சொக்கு, சுந்தரம், தோட்டி, ஐ, ஒப்பு, அந்தம், ஒண்மை, விடங்கம், அமலம்,

குழகு, கோலம், வாமம், காந்தி, அலங்காரம்.

மற்றும்மழகின் பெயர் = கொம்மை, மனோகரம், சாரு .

கட்டழகின் பெயர் = சித்திரம், மனோகரம், சுந்தரம்.

நிறத்தின் பெயர் = குரு, கொழுமை, குணம் , **கொழுமை, அரி, சாயல், வருணம், பயப்பு, கறை, கரு.

வடிவத்தின் பெயர் = செண்ணம், படிவம்.

வண்ணத்தின் பெயர் = சந்தம்

வளைதலின் பெயர் = குடிலம், தடவு, கூன், கோண், கோட்டம், வசிவு, கோணல், வாங்கல், குலாவல், வளாவல்.

இளைமையின் பெயர் = மழவு, முருகு, தருணம், மஞ்சு, குழவு, விளர், கொம்மை, புருவை, கோமளம், போதகம்.

முதுமையின் பெயர் = மூப்பு, முரஞ்சுதல், முற்றுதல்.

மற்றுமுதுமையின் பெயர் = விளைவு, சாம்பல். ஆக

கலியாணத்தின் பெயர் = வதுவை, மன்றல், மணம்,

மற்றுங்கலியாணத்தின் பெயர் = கடி, வேட்டல், கைப்பற்றல். ஆக

கொண்டாடுதலின் பெயர் = குலாவல், பாராட்டு.

அலங்கரித்தலின் பெயர் = புனைதல், மண்ணல், பொற்புறுத்தல், அணிதல், கைசெய்தல்.

சிங்காரத்தின் பெயர் = அணி, பொற்பு ,கை, அலங்காரம், ஒப்பனை.

புதுமையின் பெயர் = புதை, புணர், விருந்து, புத்தேள், கடி, நவம் ,நூதனம், கோடகம், வம்பு.

மகளிர்விளையாட்டின் பெயர் = தொடலை, தகுளம்.

சூடுதலின் பெயர் = மிலைதல், மலைதல், வேய்தல்.

இகுத்தலின் பெயர் = செகுத்தல்.

மீளுதலின் பெயர் = திரிதல்.

புறத்தின் பெயர் = புறணி, புடம்.

பதுங்கலின் பெயர் = பழகல், ஒடுங்கல், பாந்தல்.

தங்குதலின் பெயர் = அசைதல், தெவிட்டல், இறுத்தல், ஆர்தல்.

மற்றுந்தங்குதலின் பெயர் = வதிதல், வைகல், இறை. ஆக

அடக்கத்தின் பெயர் = முடக்கம், நொறில், மடங்கு, முணங்கு, ஒடுக்கம், ஒருங்கு.

கூடலின் பெயர் = விழைச்சு, பிணைச்சு ,விழைவு, மைதுனம், புணர்ச்சி, அணைதல், கலவி, சையோகம்.

மற்றுங்கூடலின் பெயர் = மணத்தல், பயினி. ஆக

பிரிதலின் பெயர் = நீத்தல், தவிர்தல், அகலல், உணர்தல், தணத்த, வல்லி, பகல்.

புலத்தலின் பெயர் = புலவி, ஊடல்.

புலவிநீடுதலின் பெயர் = துனி.

கலத்தலின் பெயர் = புணர்தல், படிதல், தோய்தல், சார்தல், கலவல், மேவல்.

அளவளாவலின் பெயர் = கலாவல், துழாவல், வளாவல், சிவணல், புணர்தல், பொருந்தல்.

வணங்கலின் பெயர் = வந்தனை, பணிதல், தண்டன், வணக்கம், பரவல், இறைஞ்சல், தாழ்தல், காண்டல், வந்தித்தல், போற்றல்.

சிறைப்படலின் பெயர் = வலைப்படல், தளைப்படல்.

சருச்சரைவடிவின் பெயர் = பிணர்

தாழ்தலின் பெயர் = இறைஞ்சல், குரங்கல்

அலைதலின் பெயர் = நடுங்க, ஆஞ்சி, ஞெகிழ்தல், ஞொள்கல், அழுங்குதல், சோம்பு .

சுமத்தலின் பெயர் = பரித்தல், பொறுத்தல், தரித்தல்.

ஏறுதலின் பெயர் = எக்கல், இவரல், மீக்கோள்.

எதிர்தலின் பெயர் = முட்டல், கிடைத்தல், முடுகல், நேர்தல், ஏற்றல், தலைப்படல்.

மீதூரலின் பெயர் = இடங்கழி, நெருங்குதல் .

ஒருங்கின் பெயர் = உடங்கு.

வடுப்படுத்தலின் பெயர் = கதுவாய்.

சொறியின் பெயர் = கண்டூதி, தினவு.

பொங்குதலின் பெயர் = பூரித்தல், மிகுதல்.

வேர்த்தலின் பெயர் = வியர்ப்பு.

விடுதலின் பெயர் = உயிர்த்தல்.

மூடுதலின் பெயர் = போர்வை, மூய்தல், கவித்தல்.

பூணலின் பெயர் = புனைதல், ஆர்த்தல்.

இயைபின் பெயர் = இயைபு, புணர்ச்சி, இசைப்பு.

மஞ்சனத்தின் பெயர் = நானம்.

குளித்தலின் பெயர் = தோய்தல், படிதல், ஆடல், குடைதல், மூழ்கல்.

பிறகிடலின் பெயர் = பின்றல். பிறக்கிடல்.

கருவுளமைப்பு மெய்படு பருவமும் ஆவன = பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு.

மெய்படுபருவம் = பாளை, பாலன், காளை, இளையோன், விருத்தன்.

வாய்வகை

இன்சுவையின் பெயர் = தீம், இரதம்.

அழைத்தலின் பெயர் = கேதல், உளைத்தல், இகுத்தல், விளித்தல், மாவெனல், கூவுதல், வாவெனல், மத்தல், கரைதல், ஆகருடணை, அகவல்.

சிரிப்பின் பெயர் = மூரல், இளி, முறுவல், நகை, ஆசம், ஆர்ப்பு.

உண்டலின் பெயர் = அயிறல், மிசைதல், அருந்துதல், நுகர்தல், துவ்வல், துய்த்தல், துற்றல், துறுவல், ஆர்தல், மாந்தல், கைதொடல்.

மற்றும்உண்டலின் பெயர் = பானகம், போனகம். ஆக

குடித்தலின் பெயர் = பருகல், மாந்தல், பானம்.

விழுங்கலின் பெயர் = நுங்கல், நுகர்தல்.

இயம்பலின் பெயர் = கதை, நுவல், காதை, கிளவி, பனுவல், அறை, பறை, வாணி, கூற்று, மொழி, குயிறல், புகறல், மாற்றம், மறை, நொடி, பரவல், இசை, இயம், பேச்சு, உரை, எதிர்ப்பு.

வாசகத்தின் பெயர் = வசனம், பாசுரம், வார்த்தை.

பதத்தின் பெயர் = பாழி, உரை.

பேசுதலின் பெயர் = இசைத்தல், இறுத்தல், இயம்பல், புகறல், பிதற்றல்.

பல்கால்விளம்புதலின் பெயர் = மீதுரை

துதித்தலின் பெயர் = பரவல், வழுத்தல், ஏத்தல், போற்றல், பழிச்சல், வாழ்த்தல்.

வாழ்த்தின் பெயர் = ஆசிடை, ஆசி.

சொல்லுதலின் பெயர் = இயம்பல், விரித்தல், மொழிதல், விளம்பல், பகர்தல், பன்னல், நவிறல் = கத்துதல், உரைத்தல், கூறல், வழங்கல், குயிலல், புகலல், பேசல், நொடிதல், பிறழ்தல், பறைதல், செப்பல், அதிர்த்தல்,,பணித்தல், சொற்றல், ஆடல்.

படித்தலின் பெயர் = பாடல், ஓதல், வாசித்தல்.

பெருஞ்சொல்லின் பெயர் = பலரறிசொல்

சிறுசொல்லின் பெயர் = இழிச்சொல், தீச்சொல், பழிச்சொல்.

பழிமொழியின் பெயர் = அம்பல், கெளவை, அலர்.

திசைச்சொல்லின் பெயர் = தேசிகம்.

மறைத்துமொழிகிளவியின் பெயர் = இடக்கர், எக்கர்.

சிலரறிந்துதம்முள்தூற்றுதலின் பெயர் = அம்பல்.

பலரறிந்துதூற்றுதலின் பெயர் = அலர்.

உறுதிக்கட்டுரையின் பெயர் = கழறல், இடித்தல், நெருங்கல்.

நயச்சொல்லின் பெயர் = முகமன், சம்மானம், உபசாரம்.

குறளைமொழியின் பெயர் = கொடுவாய், பிசுனம், தொடுப்பு, குஞ்சம், கொண்டியம்.

அசதியாடலின் பெயர் = நகல், நயக்கிளவி.

நிரம்பாமென்மொழியின் பெயர் = குதலை, மழலை, கொஞ்சல், உல்லாபம், மிழலை.

சத்தியத்தின் பெயர் = ஆணை, வஞ்சினம், சபதம்.

மற்றுஞ்சத்தியத்தின் பெயர் = சூள், விரதம், சூளுறவு. ஆக

முதுசொல்லின் பெயர் = மொழிமை, மூதுரை, முன்சொல், பழஞ்சொல், பழமொழி.

நன்னிமித்தத்தின் பெயர் = விரிச்சி, வாய்ப்புள்.

கதையின் பெயர் = காரணச்சொல்.

வினாவின் பெயர் = கடாவல்.

எதிர்மொழியின் பெயர் = விடை.

வினாவும்விடையுங்கூடியபொருளின் பெயர் = சல்லாபம்.

பாயிரத்தின் பெயர் = அணிந்துரை, பெய்துரை, புனைந்துரை, நூன்முகம், முகவுரை, தந்துரை, புறவுரை.

சத்திபண்ணலின் பெயர் = உமிழ்தல், தெவிட்டல், கான்றல், ஓங்கல், உக்காரம், கக்கல்.

மற்றுஞ்சத்திபண்ணலின் பெயர் = அபனம் ஆக

எச்சிலின் பெயர் = மிச்சில், பேளிகை, உச்சிட்டம், விசதம், இழவு.

கொட்டாவியின் பெயர் = ஆவித்தல்

கண்வகை

கண்ணோட்டத்தின் பெயர் = கண்மை, நாகரிகம், பார்வை.

மற்றும்கண்ணோட்டத்தின் பெயர் = கண் ஆக

உற்சவத்தின் பெயர் = சாறு, முருகு, துணங்கறல், விழாவு, சேறு.

தூங்கலின் பெயர் = கனவு, துயில், கண்படை, அனந்தல், படல் நித்திரை, பள்ளி, உறக்கம், துஞ்சல், உறங்கல்.

நிரம்பாத்துயிலின் பெயர் = தூங்கல்

அழுகையின் பெயர் = கலக்கம், உரோதனம், கலுழ்ச்சி.

மற்றுமழுகையின் பெயர் = அரற்றல், இரங்கல், விம்மல், பொருமல், ஏங்கல், இராவணம். ஆக

துயிலொழிதலின் பெயர் = சாகரம்

கண்பார்வையின் பெயர் = விழித்தல்

கண்மூடலின் பெயர் = சிமிழ்த்தல்

காண்டலின் பெயர் = நோக்கல், தெரிசித்தல், பார்த்தல்.

கண்ணுறலின் பெயர் = காட்சி

கண்ணிமையின் பெயர் = இதழ், விளிம்பு.

மூக்கின்வகை

கந்தித்தலின் பெயர் = மணம், முருகு, மன்றல், வாசம், விரை, வதுவை, நானம், வேரி, கடி, தேன், வம்பு, கான், நறை, கந்தம், மோதம், நாற்றம், கமழல், வெறி.

நறுமணத்தின் பெயர் = சுகந்தம்.

பெருமணத்தின் பெயர் = பரிமளம் .

மூச்சின் பெயர் = தும்மல், சுவாதம், கொறுக்கை, இரேசகம், பூரகம், கும்பகம், சுவாசம், நிசுவாசம் .

செவிவகை

கல்வியின் பெயர் = உறுதி ,கேள்வி, ஓதி, கலை, பனுவல்.

சொன்மாலையின் பெயர் = தோற்றம், சீர், ஒளி, சுலோகம்.

புகழின் பெயர் = ஏற்றம், கியாதம், இசை, மெய்ப்பாடு, சீர்த்தி, கீர்த்தி, சொல். ஆக

மற்றும்புகழின் பெயர் = மீக்கூற்று

நூலின் பெயர் = அதிகாரம், பிடகம், ஆரிடம், தந்திரம், பனுவல், ஆகமம், சூத்திரம்.

நற்பொருளின் பெயர் = ஞாபகம், பிசி.

வேதத்தின் பெயர் = இருக்கு, சுருதி, மறை, எழுதாக்கிளவி,

ஆதிநூல், சாகை, ஆரணம்.

முதல்வேதத்தின் பெயர் = பௌடிகம், இருக்கு.

இரண்டாம்வேதத்தின் பெயர் = யசு, தைத்திரியம்.

மூன்றாம்வேதத்தின் பெயர் = சாமம், கீதநடை.

நான்காம்வேதத்தின் பெயர் = அதர்வணம்.

வேதத்துட்பொருளின் பெயர் = உபநிடதம்.

வேதமார்க்கத்தின் பெயர் = வைதிகம்

உதாரணத்தின் பெயர் = இதிகாசம், இலக்கிய, எடுத்துக்காட்டல் .

ஆகமத்தின் பெயர் = ஞானம்.

அத்தியாயத்தின் பெயர் = படலம், இலம்பகம், சருக்க, காண்டம், பரிச்சேதம்.

நூற்பாவகவலின் பெயர் = சூத்திரம்.

ஓத்தென்பது = ஓரினப்பொருளை வரிசைப்படவைப்பது

படலமென்பது = ஒருவழிப்படாமல், பலபொருள்களைத்தரும் பொதுச் சொற்றொடர்வது.

பொழிப்புரையென்பது = பலபொருளைப்பிண்டமாக்கிக்கூறுவது.

விரித்துரையென்பது = பதவுரை, கருத்துரை, தொகுத்துரை முதலிய பகுதிப் பொருளையுடையது.

கீர்த்தியினேற்றத்தின் பெயர் = கியாதம், இசைப்பாடு.

தன்மேம்பாடுதானிகழ்தலின் பெயர் = நெடுமொழி.

சோபனத்தின் பெயர் = பல்லாண்டு.

பழிச்சொல்லின் பெயர் = பரிவாதம்.

பிடித்தொன்றைப்பேசுதலின் பெயர் = பிதற்றுதல்.

வெண்பாவின் பெயர் = முதற்பா.

கலிப்பாவின் பெயர் = வெண்பாவிகற்பித்துவருவது.

ஆசிரியப்பாவின் பெயர் = அகவல், தொகை .

வஞ்சிப்பாவின் பெயர் = ஆசிரியப்பா விகற்பித்துவருவது.

அராகத்தின் பெயர் = முடுகியல், வண்ணம் .

குளகச்செய்யுளென்பது = குற்றெழுத்துத் தொடர்ந்துவருவது

கணக்கின் பெயர் = எழுத்து, எண்.

எண்ணின் பெயர் = கரணம், கணிதம் .

நால்வகையெழுத்தாவன = வடிவெழுத்து, பெயரெழுத்து, தன்மையெழுத்து, முடிவெழுத்து.

ஒற்றெழுத்தின் பெயர் = விராமம், புலுதம், மெய்.

இருவகைப்பாயிரத்தின் பெயர் = பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரயம்.

முதல்வன்வாக்கின் பெயர் = ஆகமம்.

அந்தணர்க்குரியமார்க்கத்தின் பெயர் = வேதமார்க்கம் .

தந்திரத்தின் பெயர் = மிருதி, ஆரிடம், பனுவல்.

பாவின் பெயர் = தூக்கு, யாப்பு, செய்யுள், கவி, பாட்டு, தொடர்பு.

உலக்கைப்பாட்டின் பெயர் = வள்ளைப்பாட்டு.

இடத்தின்சந்தேகச்சொல்லின் பெயர் = யாண்டை, யாங்கு.

ஐயச்சொல்லின் பெயர் = யாது,எவன்,என்னை,எது,கொல்.

இசைநிறையசைச்சொல்லின் பெயர் = ஏ, குரை.

முன்னிலை யசைச்சொல்லின் பெயர் = மியா, இக, மோ, மதி, இரும், சின்,

சுட்டின் பெயர் = அ,இ, உ,

வினாவின் பெயர் = ஆ,ஏ, ஓ.

சாரியைச்சொல்லின் பெயர் = இன், வற்று, இக்கு, அம்,ஒன்,ஆன், அக்கு, அன்.

எழுத்தின்சாரியையின் பெயர் = கரம், கான், காரம், அகரம், ஏனம்,

இடைச்சொல்லின் பெயர் = அரோ, போ,மாது, ஓ,அல், ஆல், உறை, கெழு, ஆங்கு, தெய்ய, என, ஏ, ஞான்று, அந்தில், ஒரும். .

அதிசயமொழியின் பெயர் = ஆஅ,ஓஒ, அத்தோ, அந்தோ. அன்னோ, ஐயோ, அக்கோ, அசேசோ, என்னோ, எற்றே.

இகழ்ச்சிக்குறிப்பின் பெயர் = ஏஎ.சீச்சி, எல்,என்.

வேற்றுமையுருபின் பெயர் = ஐ,ஒடு, கு, இன், அது, கண்.

ஒலியின் பெயர் = ஆரவாரம், கம்பலை, அரவம், கோடணை, புலம்பு, கோசணை, உளை, நாதம், ஒதை, ஆகுலம், துழனி, இடி, இசை, சும்மை, ஓசை, தொனி, உரை, பாடு, சத்தம்.

ஆபாணவோசையின் பெயர் = சிஞ்சிதம்.

எடுத்தலோசையின் பெயர் = முரல்வு, நரல்வு, முக்கல், பயிறல், தெளிறல், ஞெளிர்தல், சிரற்றல், பிரற்றல், குளிறல், குமுறல், குருமித்தல், நெளிர்தல், அகவல்.

மற்றுமெடுத்தலோசையின் பெயர் = உளை. ஆக

தொனித்தலின் பெயர் = கலித்தல், கனைத்தல், கறங்கல், கதித்தல், சிலைத்தல், சிலம்பல், இரைத்தல், இரட்டல், இடித்தல், இசைத்தல், உளைத்தல், உரப்பல், உரற்றல், உழம்பல், முரற்றல், இரற்றல், முழங்கல், தழங்கல், கத்தல், புலம்பல், அழுங்கல், இயம்பல், துவைத்தல், இரங்கல், தெழித்தல், குரைத்தல், கொழித்தல், நரற்றல், தெவிட்டல், ஆலித்தல், இமிழ்த்தல், குமுறல்,

ஏங்கல், விம்மல், பிளிறல்.

பேரொலியின் பெயர் = திமிலம், குமிலம், திமிர்தம், திமிதம், களகளம்.

மற்றும்பேரொலியின் பெயர் = குமுதம். ஆக

ஆரவாரத்தின் பெயர் = அலம்பல், உளறல், அரற்றல், ஏம்பல், தழங்கல், பிளிறல், கலித்தல், குமுறல், பூசல், தமரம், கோசணை, உலம்பல், ஆகுலம், கோலாகலம்.

கதறலின் பெயர் = அரற்றல், முரற்றல், அழைத்தல், கத்தல்.

அனுகரணவோசையின் பெயர் = இம்மெனல், கல்லெனல், இழுமெனல், வல்லெனல், பொம்மெனல், ஒல்லெனல், பொள்ளெனல், ஞெரேலெனல், கொம்மெனல், சரேலெனல், ஞொள்ளெனல், கொல்லெனல், அம்மெனல்.

அனுகரணவுபயவோசையின் பெயர் = வெடுவெடெனல், திடுதிடெனல், களகளெனல், கெளகொளெனல், நெடுநெடெனல், மொகமொகெனல், நெறுநெறெனல், படபடெனல், மொடுமொடெனல், சடசடெனல், சளசளெனல், கலகலெனல், சலசலெனல், கிடுகிடெனல்.

கலப்புக்கட்டோசையின் பெயர் = உளறல், தெழித்தல், உலப்பல், அலப்பல், பூசல், குமுறல், நுவைவரல், துவைத்தல், ஆகுலம், கோடணை, கோலாகலம், ஆர்ப்பு, தமரம்.

அடரொலியின் பெயர் = அதிர்த்தல், தெழித்தல், அதட்டல், லுறைத்தல், உரப்பல்.

செவியறிவின் பெயர் = சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம்.

கைவகை

பறித்தலின் பெயர் = பரூஉ, குற்றல்.

கடைதலின் பெயர் = குடைதல், கவர்தல், மதனம், துருவல்.

தேய்த்தலின் பெயர் = அரைத்தல், அரக்கல், சிரத்தல், சிதைத்தல்.

எழுதலின் பெயர் = தெரித்தல், வரிதல், தீட்டல், பொறித்த, வரைதல், கீறல், கிறுக்குதல்.

எழுத்தின் பெயர் = வரி, பொறி, அக்கரம், இரேகை.

கொல்லுதலின் பெயர் = காதுதல், தொலைத்தல், எற்றல், களைதல், சவட்டல், கோறல், செறித்தல், செவிட்டல், அடுதல், தெறுதல், செறுத்தல், முருக்குதல், செகுத்தல், வதைத்தல்.

எற்றலின் பெயர் = எறிதல், அள்ள.

கொடையின் பெயர் = ஈகை, தானம், இடுகை, கவிகை, வேள்வி, வண்மை, தியாகம், வேளாண்மை, உதாரம், கடப்பாடு, உபகார.

பெருங்கொடையின் பெயர் = ஈதல், வீசல், இசைத்தல், நீட்டல், புரத்தல், நல்கல், அருளல், பகுத்தல், கொடுத்தல், வழங்கல், அளித்தல்.

வரையாதுகொடுத்தலின் பெயர் = கொடைமடம்,

கொடாமையின் பெயர் = மாற்றல், கரத்தல், மறுத்தல்.

இரத்தலின் பெயர் = ஏற்றல், குறைகோள், வேண்டுதல்.

பிச்சையின் பெயர் = பலி, படிகம், பாகம், பயிக்கம், பிண்டம், சரியை, ஐயம்.

கும்பிடுதலின் பெயர் = தொழுதல், அஞ்சலி, சோத்தம்.

மெய்கோட்டிக்கைகுவித்தலின் பெயர் = குடந்தம்.

தொடுதலின் பெயர் = திவளல். ஊறு. பரிசம். தீண்டல். துவளல், தொட்டல்.

அடித்தலின் பெயர் = புடைத்தல், எற்றல், எறிதல், மொக்கல், குத்தல், மோதல், மொத்தல், அறைதல், அகைத்தல்.

மற்றும்அடித்தலின் பெயர் = வழுக்கல். ஆக

குத்தலின் பெயர் = அவைத்தல்.

கட்டலின் பெயர் = விசித்தல், இசைத்தல், வீக்கல்.

மற்றுங்கட்டலின் பெயர் = அசைத்தல், இமிழ்த்தல், ஆர்த்தல், யாப்பு, சிமிழ்த்தல், பிணித்தல் சுருக்கல், தொடுத்தல், கிட்டல், துவக்கல். ஆக

தீட்டலின் பெயர் = துலக்கல்.

வெட்டலின் பெயர் = துழாவல்.

துணித்தலின் பெயர் = துமித்தல், எற்றல்.

அறுத்தலின் பெயர் = கடிதல், தடிதல், பரிதல், கண்டித்தல், சேதித்தல், கொய்தல்.

முகத்தலின் பெயர் = தோண்டல்.

நிறுத்தலின் பெயர் = நோன்றல்.

கிண்டலின் பெயர் = கிளைத்தல்.

கிளறுதலின் பெயர் = நோண்டல்.

தெள்ளுதலின்பெயஇர் = வறண்டல்.

கொழித்தலின் பெயர் = வரன்ற.ல்

தொளைத்தின் பெயர் = தொள்கல், குயிறல்.

தோண்டலின் பெயர் = சூறல், சூன்றல், தொட்டல், தொடுதல், அகழ்தல்.

கிழித்தலின் பெயர் = கீறல், கிண்டல், கிள்ள.

மற்றுங்கிழித்தலின் பெயர் = பீறல்.

அடைக்கலத்தின் பெயர் = கையடை, இல்லடை, அபயம்.

பிடுங்குதலின் பெயர் = புய்த்தல், பறித்த.

களைதலின் பெயர் = கட்டல்.

மற்றுங்களைதலின் பெயர் = சிதைத்தல், குத்தல், சிந்துதல், விலங்கல்.

உருவுதலின் பெயர் = சிதகல்.

முடைதலின் பெயர் = வலத்தல், நிணத்தல்.

எறிதலின் பெயர் = விலகல், செலவிடல், வீசல், ஓச்சுதல், விடுதல்.

மாற்றுதலின் பெயர் = விலக்கல் .

பிடித்தலின் பெயர் = தொடல், பற்றல்.

நெரித்தலின் பெயர் = தெறுத்தல்.

கூட்டுதலின் பெயர் = அடுத்தல், பொருத்தல்.

எழுப்புதலின் பெயர் = எடுத்தல், ஏற்றல்.

தடுத்தலின் பெயர் = வரித்தல், வாரணை, தகைத்தல்.

பகுத்தலின் பெயர் = பகிர்தல், பாத்தி.

சிந்துதலின் பெயர் = சிதர்த்தல்.

வாரலின் பெயர் = கவரல், வெளவல்.

வகிர்தலின் பெயர் = துவர்தல்.

தடவலின் பெயர் = தைவரல், நீவல், வருடல்.

அசைதலின் பெயர் = துயில்வரல்.

சொரிதலின் பெயர் = பொழிதல்.

மூட்டலின் பெயர் = மாட்டல், பொருத்தல்.

தள்ளுதலின் பெயர் = நோன்றல், ஊன்றல், நூக்கல்.

செறித்தலின் பெயர் = அளித்தல், பெய்தல்.

பரப்புதலின் பெயர் = விரியல், விளம்பல், பாரித்தல்.

அடுக்குதலின் பெயர் = ஏற்றல்.

புதைத்தலின் பெயர் = பொத்தல், கனிதல்.

குட்டலின் பெயர் = புடைத்தல், தகர்த்தல்.

கால்வகை.

கடத்தலின் பெயர் = இறத்தல், கழிதல், இகத்தல், நடத்தல், மீளல்.

சுழலலின் பெயர் = உழிதரல், கொட்பு, திரிதரல், உழலல், பிரமரி, அலமரல், தெருமரல், மறுகல், சொரிதரல், கறங்கல்.

தாண்டலின் பெயர் = வாவல், தாவல்,தத்தல், கடத்தல்.

மற்றுந்தாண்டலின் பெயர் = உறுக்கல், பாய்தல், உகளல், குதித்தல், தவறல்.

எழுச்சியின் பெயர் = கஞுறல், கதித்தல், உம்பல், ஏர்பு, பொலிவு, கலித்தல், ஒழுக்கல், பாச்சல், மறல், ஓங்கல்.

நடத்தலின் பெயர் = இல்லல், ஒதுங்கல், ஏகல், இவர்தல், செல்லல், படர்தல், கழிதல்.

செலவின் பெயர் = தாவு, கதி, படர்.

ஓடலின் பெயர் = நீளல், பாறல், நிமிர்தல்.

இரிதலின் பெயர் = உடைதல், கெடுதல்.

நேரோடுதலின் பெயர் = ஆதி, வீதி.

மண்டிலமாயோடலின் பெயர் = மாதி, சுற்று, சாரிகை, வாளி.

விரைவின் பெயர் = கதழ்வு, வல்லை, ஒல்லை, கடுப்பு, கடுகல், தாரை, துனைவு, நொறில், விசை, முடுகல், வேகம்.

மற்றும்விரைவின் பெயர் = கவனம், துரிதம்.

விரைவுக்குறிப்பின் பெயர் = பொள்ளெனல், ஐயெனல், பொருக்கெனல், நொய்தெனல், வெய்தெனல், கதுமெனல்.

உராய்தலின் பெயர் = உரோசல், உரிஞ்சல், உரோஞ்சல்.

உலாப்போதலின் பெயர் = பவனி.

உலாவலின் பெயர் = அசைதல், இயங்கல், வழங்கல்.

உழக்குதலின் பெயர் = உழுதல், மடித்தல்.

கொடுபோதலின் பெயர் = போதரல்.

மீளுதலின் பெயர் = மறிதரல், திரிதரல், மடங்கல்.

ஒதுங்கலின் பெயர் = ஒடுங்கல்.

செலுத்தலின் பெயர் = ஓயல், நடவல், கடவல், ஓச்சல், ஏவுதல், தாண்டல், தூண்டல், உகைத்தல், ஊர்தல், உய்த்தல்.

போதலின் பெயர் = படர்தல், சேறல், ஒதுங்கல், தீர்தல், திரிதல், இயங்கல், நீங்கல், இறத்தல், துரத்தல், ஏகல், செல்லல், விடுதல், கடத்தல், நடத்தல்.

முறைமைவகை.

முறைமையின் பெயர் = ஊழ், பாவம், தன்மம், முறை, வாழ், வழி.

கோத்திரத்தின் பெயர் = குடி, உம்பல்.

பழைமையின் பெயர் = ஒல்லை, புராணம், முதுமை, முறை, ஊழ், தொல்லை, முந்தை, தொன்று, பண்டு, தொன்மை, முன்னை, புராதனம்.

முற்பிறப்பின் பெயர் = உம்மை.

இப்பிறப்பின் பெயர் = இம்மை.

வருபிறப்பின் பெயர் = அம்மை, மறுமை.

பிறப்பின் பெயர் = பிறந்தை, பவம், யோனி.

மற்றும்பிறப்பின் பெயர் = சூதகம். ஆக

உரிமையின் பெயர் = கிழமை, ஆட்சி.

பயிறலின் பெயர் = நவிறல், கெழுமல்.

அடைவின் பெயர் = ஆம்பல்.

அளவின்வகை.

விரிவின் பெயர் = விசாலம், விபுலம்.

பரப்பின் பெயர் = பாய்தல், விரியல், பப்பு, பரவை, தாவல்.

தூரத்தின் பெயர் = சேண், நீளம், சேய்மை.

அகலத்தின் பெயர் = நனவு, கண்ணறை, வியல்.

கனத்தின் பெயர் = அடை, ஞாட்பு.

எல்லையின் பெயர் = அவதி, சிம், காடு, பரியந்தம், ஏணி, வரைப்பு, கொத்தம்.

அளவின் பெயர் = தனை, காறு, தாறு, துணை, வரை, பிரமாணம், மாத்திரை, மட்டு.

அளவின்மையின் பெயர் = அபரிமிதம், அகந்தம், அபாரம், எல்லையின்மை.

பெருமையின் பெயர் = இருமை, பொழில், ஏந்தல், ஈடு, கருமை, தடவு, கயவு, அணி, பகடு, அண்ணல், செம்மல், பரி, இறை ,பேழ், கொன், விபுலம், வியல், தலை, நெய்தை, மா, தகை, முடலை, மூரி, வீறு, நளி, மீளி, கதழ்வு, நன்று, பாடு, நனி, பணை, விறல், சேடு, பீடு.

நுண்மையின் பெயர் = ஐ, நுணுக்கம், அணு, முளரி, நுவணை, நுட்பம், நுணங்கு, நூழை, நுணுகு, நுழை.

சிறுமையின் பெயர் = அற்பம், கன்று, தன்னம், ஆசு, பேடு, வறிது, இறை.

நிறைவின் பெயர் = மலிதல், துவன்றல், மல்கல், ஆர்தல், தெகுளல், ததும்பல், தேக்கல், கிளைத்தல், நிரம்பல், பூரணம், கமம்.

பெருக்கத்தின் பெயர் = பிறங்கல், பெருகல்.

குறைபாட்டின் பெயர் = ஊனம், நிரப்பு, விகலம், தவல், ஈனம்.

குறைதலின் பெயர் = சுருங்கல், குறை, அருகல், குன்றல், எஞ்சல்.

மிகுதியின் பெயர் = அமலை, நனி, ஆற்றல், இறப்பு, பெருகல், கழிவு, சிறப்பு, பிறங்கல், உருப்பம், தவ, மதர், ஊக்கம், அதிகம், விதப்பு, செறிதல், பொங்கல்.

பொலிவின் பெயர் = துப்பு, கலிப்பு, கஞற, பொம்மல், பொறி, பொக்கம் பூ.

செறிவின் பெயர் = துறுதல், உறுப்பு, பிறப்பு, துதைதல், மிடைதல், துற்று, வெறிதல், ஓதி, செற்று, வெறுப்பு, கஞறல், அடர்தல், நெருங்குதல், திணுங்குதல்.

கூட்டத்தின் பெயர் = கூளி, கூட்டம், கழுமல், தோடு, தொழுதி, தொறு, தொகை, குழாம், துற்று, நளி, முகை, மொய், கணம், சரி, ஈண்டல், சங்கம், திரளை, சவை, அவை, ஈட்டம்.

திரளின் பெயர் = கொம்மை, உண்டை, குழியம், குப்பை, முத்தை, பூகம், சோகம், புஞ்சம், பந்தம், மாழை, வட்டு, பிண்டம், வழி, சேடு, சேர்வு.

ஐம்மையின் பெயர் = அரி, தகடு, அடர்.

எல்லாமென்றலின் பெயர் = அடைய,அடங்கல், அனைத்தும் , யாவை, முழுவதும், முற்றும், சமத்தம், முட்ட, எவை.

மற்றுமெல்லாமென்றலின் பெயர் = அகிலம், அகண்டம். ஆக

பாதியின் பெயர் = பால், பயல், அருத்தம், பங்கு.

மற்றும்பாதியின் பெயர் = கூறு, பாகம்.

பாரத்தின் பெயர் = சீர், கனம், கு, ஞாட்பு, பரம்.

நொய்மையின் பெயர் = நொய்வு, இலேசு.

பொழுதுபோக்கலின் பெயர் = நெடித்தல், பாணித்தல்.

மீறுதலின் பெயர் = திருகல், முறுகல்.

குவிதலின் பெயர் = குவை, குவால், இராசி, குப்பை, குவவு, நூழில்.

முதலின் பெயர் = ஆதி, தலை, தாள், அடி, முன், எழுவாய், மோனை, பிராசயம்.

நடுவின் பெயர் = இடை, சமம், மத்திமம், நாப்பண், பகல்.

மற்றும்நடுவின் பெயர் = நள், நனந்தலை. ஆக

கடையின் பெயர் = இறுதி, பின், எல்லை, ஈறு, அந்தம், முடிவு, முற்று, முடிதல்.

மிகுத்தலின் பெயர் = தெறுதல், உறுத்தல்.

மிக்கதன் பெயர் = மிஞ்சுதல், விஞ்சுதல், மீமிசை.

நெருக்கத்தின் பெயர் = எக்கல், குவித்தல், நளி, நிபடம்.

தூக்கின் பெயர் = துலாம், கா.

தூக்கினிறையின் பெயர் = நூற்றுப்பலம்.

ஒருபலத்தின் பெயர் = தொடி.

துலாமிருபஃதின் பெயர் = பாரம்.

காற்பலத்தின் பெயர் = கஃசு.

மாகாணிப்பலத்தின் பெயர் = வீசம்.

ஒன்றன் பெயர் = ஏகம்.

பத்தின் பெயர் = தசம்.

நூற்றின் பெயர் = சதம்.

ஆயிரத்தின் பெயர் = சகசிரம்.

பதினாயிரத்தின் பெயர் = ஆயுதம்.

நூறாயிரத்தின் பெயர் = நியுதம்.

பத்துநூறாயிரத்தின் பெயர் = பிரயுதம்.

கோடியின் பெயர் = பிரயுதம் பத்து.

அற்புதத்தின் பெயர் = கோடி பத்து.

நிகர்ப்புதத்தின் பெயர் = அர்ப்புதம் பத்து.

கும்பத்தின் பெயர் = நிகர்ப்புதம் பத்து.

கணகத்தின் பெயர் = கும்பம் பத்து.

கற்பத்தின் பெயர் = கணகம் பத்து.

நிகற்பத்தின் பெயர் = கற்பம் பத்து.

பதுமத்தின் பெயர் = நிகற்பம் பத்து.

சங்கத்தின் பெயர் = பதுமம் பத்து.

சமுத்திரத்தின் பெயர் = சங்கம் பத்து.

அந்தியத்தின் பெயர் = சமுத்திரம் பத்து.

மத்தியத்தின் பெயர் = அந்தியம் பத்து.

பரார்த்தத்தின் பெயர் = மத்தியம் பத்து.

பூரியத்தின் பெயர் = பரார்த்தம் பத்து .

பிரமகற்பத்தின் பெயர் = பூரியம்பத்து.

காரணவகை = பல்பொருள்வகை.

காரணவகையும் பல்பொருள்வகையும் ஒருசேரக் கூறாநிற்பன்.

காரணத்தின் பெயர் = நிபம், பொருட்டு, ஏது, நிமித்தம், திறன், வாயில், மூலம்.

உடடொளையின் பெயர் = சுகிர், குழல், நாழி, தசிரம், தூம்பு, புழை, புரை, வேய், வேணு, பொள்.

மற்றுமுட்டொளையின் பெயர் = நாளம், சுரை. ஆக

வட்டத்தின் பெயர் = வலயம், நேமி, கடகம், மண்டிலம், பரிதி, ஆழி, பாண்டில், விருத்தம், படலிகை, கோளகை, பாலிகை, கொம்மை, திகிரி, மல்லை, வல்லை, சக்கரம், தட்டு, வட்டணை.

அதிசயத்தி பெயர் = வியப்பு, இறும்பு, விசித்திரம், விம்மிதம், விபரீதம், இறும்பூது.

மற்றுமதிசயத்தின் பெயர் = சித்திரம். ஆக

உவமையின் பெயர் = புரை, மான், பொருவு, கடுப்பு, நிகர், ஏய்வு, நேர், போல், ஒப்பு, உவமம், ஏர், ஆங்கு, என, எதிர், அன்ன, இணை, உறழ்வு, சமம், துல்லியம்.

வினையின் பெயர் = கருமம், தொழில், விதி, பணி, வினையம், செயல்.

செய்தலின் பெயர் = அயர்தல், குயிறல், பண்ணல், வனைதல், புரிதல், ஆடல்.

விற்றலின் பெயர் = மாறுதல், பகர்தல், கூறுதல்.

விலையின் பெயர் = நொடை.

கூட்டுதலின் பெயர் = ஆற்றல், போற்றல், ஈட்டல்.

மற்றுங்கூட்டுதலின் பெயர் = ஓம்பல். ஆக

இலாஞ்சனையின் பெயர் = ஆணை, பொறி, குறி, அச்சு, அடையாளம், சாதனம், சின்னம், முத்திரை, இலிங்கம்.

தலைக்காவலின் பெயர் = இளை, உக்கிரம்.

படர்தலின் பெயர் = படலை, படர்ச்சி,பம்பல்.

அறியாமையின் பெயர் = எய்யாமை.

ஒழியாமையின் பெயர் = ஓவாமை.

வழிப்பறியின் பெயர் = அதர்கோள், ஆறலை.

தைத்தலின் பெயர் = அத்து ,பொல்லம், துன்னம்.

தண்டலின் பெயர் = தப்பல்.

காய்தலின் பெயர் = உலறுதல், வறளுதல், முளிதல்.

பில்குதலின் பெயர் = பிலிற்றல், தூவுதல்.

குடியிறையின் பெயர் = கறை, வரி, ஆயம், கடன், கரம், இறுப்பு.

சுங்கவிறையின் பெயர் = உல்கு, சாரிகை.

தீர்தலின் பெயர் = ஓவல்.

முடிவின் பெயர் = வீடு.

கலத்தலின் பெயர் = கலவை, கலப்பு.

அன்னத்தின்பெயர்= அன்ன மெகின மஞ்ச மோதிமமென்னடை வக்கி ராங்கம் விகங்கம்.

மற்றுமன்னத்தின்பெயர்= பிணிமுக மராள மென்னவும் பேசுவர்.

அன்னத்திறகின்பெயர்= தூவி யன்னத் திறகெனச் சொல்லும்.

மயிலின்பெயர்= சிகியே நவிர மஞ்ஞை பிணிமுகஞ்= சிகண்டி மயூரங் கேதார மொகரஞ்= சிகாவள ஞமலி கலாபி பீலி= தோகை கேகய மயிலெனச் சொல்லும்.

மயிற்றோகையின்பெயர்= சரணஞ் சிகண்டங் கூந்தல் சந்திரகந்= தொங்க றோகை தூவியு மாகும்.

மற்றுமயிற்றோகையின்பெயர்= பீலியுங் கலாபமுங்

கூழையுமதற்கே.

விரிதருதோகையின்பெயர்= மேசக மென்பது விரிதருதோகை.

மயிற்குரலின்பெயர்= அகவ லால லேங்கன் மயிற்குரல்.

மயிற்சிகையின்பெயர்= அநந்தர மயூர விரிசிகை யாகும்.

இறகினடிமுள்ளின்பெயர்= முருந்தே யிறகின் முதன்முள்ளாகும்.

கருடன்பெயர்= வைன னுவணன் வைன தேயன்= பறவை
வேந்தன் பன்னக வைரி= கலுழன் றார்க்கியன் சௌரி கருடன்.

மற்றுங்கருடன்பெயர்= இமையிலி யெனவு மியம்பப் பெறுமே.

கழுகின்பெயர்= பவணை யுவணஞ் சகுந்தம் புண்டர= மெருவை
கங்கமுங் கழுகென விசைப்பர்.

மற்றுங்கழுகின்பெயர்= பூக மென்பது மப்பெயர் புகலும்.

சக்கரவாகப்புள்ளின்பெயர்= நேமிப்புள் சக்கரவாகப்புள்சகோரம்.

பெருங்குருகின்பெயர்= யானையுண் குருகு பெருங்குருகென்ப.

எண்காற்புள்ளின்பெயர்= சிம்புள் வாருண்ட மம்பர வாணஞ்=
சம்பரம் வருடை துரோணஞ் சரப= மெண்காற் பறவைக் கெய்தும்
பெயரே.

பருந்தின்பெயர்= பாறு சேனங் கங்கம் பருந்தே.

மற்றும்பருந்தின்பெயர்= கூறிற் பார சிகையுங் கூறும்.

நிலாமுகியின்பெயர்= சகோரம் பேராந்தை நிலாமுகி யாகும்.

பொய்யாப்புள்ளின்பெயர்= சலாங்கென் கிலவி
பொய்யாப்புள்ளே.

அசுணமாவின்பெயர்= அசுணமா விசையறி பறவைகே கயப்புள்.

சாதகப்புள்ளின்பெயர்= நவில்சா ரங்கஞ் சாதகப் புள்ளெனல்.

வானம்பாடியின்பெயர்= கலிங்கம் வானம் பாடி யாகும்.

மற்றும்வானம்பாடியின்பெயர்= மேகப்புள் ளென்றும் விளம்பலாகும்.

கிளியின்பெயர்= சாரு வன்னி யவந்திகை தத்தை= கீரங் கிள்ளை கிளிப் பெயராகும்.

மற்றுங்கிளியின்பெயர்= அரி சுவாகதஞ் சுகமு மாகும்.

குயிலின்பெயர்= காளக கண்டங் கோரகை பரபுட்டங்= கோகிலம் பிகத்தொடு குயிலின் பெயரே.

கோட்டான்பெயர்= கூகை குடிஞை குரா அல் கௌசிகம்= ஊம னிசாசரியு லூகங் கோட்டான்.

பெருங்கோட்டான்பெயர்= கௌசிக மூமன் குடிஞை கூகை= பெரும்பு ளென்ப பெருங்கோட் டான்பெயர்.

அன்றிலின்பெயர்= கவுஞ்ச மன்றில் கிரவுஞ் சமுஞ் சாற்றும்.

காடையின்பெயர்= கபிஞ்சலங் குரும் பூழ்காடை யாகும்.

கரிக்குருவின்பெயர்= காரி பிள்ளை கபிலங் கஞ்சனங்= கயவாய் கரிக்குரு விப்பெய ராகும்.

வலியன்பெயர்= கஞ்சனங் கிகிணி கஞ்ச ரீடம்= வயவன் பாரத்து வாசம் வலியன்.

காரிப்பிள்ளையின்பெயர்= வஞ்சுளன் வயவன் வயான் காரிப்பிள்ளை.

கோழியின்பெயர்= குக்குடங் குருகு வாரணங் கோழி.

மற்றுங்கோழியின்பெயர்= ஆண்டலைப் புள் காலாயுத மாகும்.

சம்பங்கோழியின்பெயர்= கம்பு ளென்ப சம்பங் கோழி.

நிலங்கின்பெயர்= நிலங்கு பூழ்.

கானாங்கோழியின்பெயர்= காதம்பம் கானாங் கோழி.

கருங்கிளியின்பெயர்= கீரங் கிள்ளையரி கருங்கிளிக் கேற்கும்.

கரும்புறாவின்பெயர்= கபோதம் பாரா வதங் கரும் புறாவே

புறாப்பொதுவின்பெயர்= தூதுணங் கபோதங் களரவம் புறாவே.

கவுதாரியின்பெயர்= சிரவங் கவுதாரி.

பகண்டையின்பெயர்= சில்லை பகண்டை.

நாகணவாய்ப்புள்ளின்பெயர்= பூவை சாரிகை நாகண வாய்ப்புள்.

விரிமலரின் பெயர் = இகமலர் வெதிர்தொடர்ப்பூவிரிமலரே.

பழம்பூவின் பெயர் = செம்மல் சாம்பறேம்பலும் பழம்பூ.

விதையின் பெயர் = வீசம்பரலே விச்சுவிரைவிதை.

மற்றும் விதையின் பெயர் = காழுங் கொட்டையு மாகு மென்ப.

பிஞ்சின் பெயர் = வடுவெலுப்பிஞ்சு.

பசுங்காயின் பெயர் = தீவிளிபசுங்காய்.

பழத்தின் பெயர் = பலமுங் கனியும் பழமென்றாகும்.

கனித்தோலின் பெயர் = கனித்தோல்செகிளுங் காழு மாகும்.

காய்மரத்தின் பெயர் = பலினங்காய்மரம்.

காயாதமரத்தின் பெயர் = அவகேசியலாமரம்.

தழைமரத்தின் பெயர் = மலினந்தழைமரம்.

உலர்மரத்தின் பெயர் = வானமுலர்மரம்.

ஆண்மரத்தின் பெயர் = அகக்காழ் வன்மர மாண்மர மாகும்.

பெண்மரத்தின் பெயர் = புறக்காழ் புன்மரம் பெண்மரமென்ப.

அலிமரத்தின் பெயர் = இருதிறத் தலாதன மரமலி வெளிறே.

இலைக்கறியின் பெயர் = அடைசாகம் பன்னமடகு மிலைக்கறி.

சோலையின் பெயர் = அரிநந் தனவனந் தண்டலை பொழிலே = யாராமந் துடவை தோட்டமுய் யான = முபவன முத்தியானஞ் செய்கான்மரச் செறிவு = சோலை யிளமரக் காவெனச் சொல்லும்.

ஊரொடுசேர்ந்த சோலையின் பெயர் = ஊரொடு சேர்ந்த சோலை வன மென்ப.

மலையிடு சேர்ந்த சோலையின் பெயர் = மலையொடு சேர்ந்த சோலையா ராமம்.

கழிக்கரைச்சோலையின் பெயர் = கான லென்பது கழிக்கரைச் சோலை.

செய்குன்று சேர்ந்தசோலையின் பெயர் = செய்குன்று சேர்ந்த சோலை தோப்பாகும்.

வயல்சூழ் சோலையின் பெயர் = வயல்சூழ்சோலை யிளமரக் காவே.

சிறுதூற்றின் பெயர் = அரிலு மறலும் பதுக்கையுஞ் சிறுதூறு.

குறுங்காட்டின் பெயர் = குறுங்காட்டின் பெய ரிறும்பென மொழிப.

பெருங்காட்டின் பெயர் = பெருங்காடு வல்லை யெனப்பெயர் பெறுமே.

காவற்காட்டின் பெயர் = கணைய மிளையரண் காவற் காடே.

முதுகாட்டின் பெயர் = முதையே யிலை யுதிர் வுமுதுகாடென்ப.

கரிகாட்டின் பெயர் = பொச்சையுஞ் சுரமும் பொதிகரி காடே.

வேலியின் பெயர் = அடைப்புங் காப்பும் வேலியாகும்.

மரப்பொந்தின் பெயர் = பொக்குப் பொத்துப்பொய் பொதும்பு பொள்ளல் = பொந்தாமரமெனப் புகன்றனர் புலவர்.

முள்ளின் பெயர் = கண்டகமுள்ளே கடுவுமாகும்.

தூற்றின் பெயர் = இறும்பே மிடைதூ றெனவிளம் பினரே.

மரச்செறிவின் பெயர் = பொதும்பர் கோடர முலவைமரச்செறிவே.

விறகின் பெயர் = முளரி கறலே முருடுகாழ் காட்ட – ஞெகிழி யிந்தனஞ் சமிதைநீள் விறகே.

முட்செடிப்பொதுவின் பெயர் = முளரி முண்டக முட்செடிப் பொதுவே.

விரிதூற்றின் பெயர் = அதிரல், விரிதூறு.

சுண்டியின் பெயர் = சுச்சுச்சுண்டி.

வறட்சுண்டியின் பெயர் = சுமங்கை வறட்சுண்டி.

ஆவிரையின் பெயர் = பகரியாவிரை.

வஞ்சியின் பெயர் = வானீரம், வஞ்சளம், வஞ்சியாகும்.

துத்தியின் பெயர் = கோளியந்துத்தி.

ஆடாதோடையின் பெயர் = ஆடா தோடை வாசை யாகும்.

சித்திரமூலத்தின் பெயர் = சித்திர மூலங் கொடிவேலி யாகும்.

தும்பையின் பெயர் = துரோணந்தும்பை.

ஆதொண்டையின் பெயர் = தொண்டையாதொண்டை.

மரலின் பெயர் = அரலை மரலாம்.

கற்றாழையின் பெயர் = குமரிகற்றாழை.

நாயுருவியின் பெயர் = கரமஞ் சரிநா யுருவியாகும்.

கொழிஞ்சியின் பெயர் = கொழிஞ்சியின் பெயர்
கோளியென்றாகும்.

ஊமத்தையின் பெயர் = உன்மத்த மூமத்தை.

கஞ்சாவின் பெயர் = கஞ்சங் குல்லை கஞ்சாவாகும்.

பொன்னூமத்தையின் பெயர் = மதமத்தை
பொன்னூமத்தையாகும்.

நீலியின் பெயர் = அவுரி பத்திய நீலி யாகும்.

துழாயின் பெயர் = குல்லைமுடி துளவம் வனமுந் துழாயெனல்.

மற்றுந்துழாயின் பெயர் = பிருந்தமு மப்பெயர் பேசப் பெறுமே.

தூதுளையின் பெயர் = தூதுளந் தூதுளை.

வீழியின் பெயர் = விழிமிவீழி.

காஞ்சொறியின் பெயர் = கண்டூதிகாஞ்சொறி.

கிலுகிலுப்பையின் பெயர் = பகன்றைகிலுகிலுப்பை.

தண்ணீர்க்குடத்தின் பெயர் = கான வாழை தண்ணீர்க்குடமே.

பிரம்பின் பெயர் = சாதி வேத்திரஞ் சூரல் பிரம்பே.

கழற்கொடியின் பெயர் = கழங்கு முழல் கர்ச்சூரங் கொடிக்கழல்.

கழற்காயின் பெயர் = கழற்காய் முழலுங் கழங்கு மாகும்.

இண்டின் பெயர் = இண்டை புலிதொடக்கி யீகை யீங்கை = யிண்டென மொழிப வியல் வல்லோரே.

சூரியின் பெயர் = விந்தஞ்சூரி.

புனற்றுளசியின் பெயர் = குல்லைபுனற் றுளசி.

சிறுபூளையின் பெயர் = உழிஞைசிறுபூளை.

பாற்சொற்றிச் செடியின் பெயர் = பாற்சொற்றிபாயசம்.

செங்காந்தளின் பெயர் = தோன்றி பற்றையிலாங்கலி செங்காந்தள்.

வெண்காந்தளின் பெயர் = கோட றோன்றி கோடை வெண்காந்தள்.

வெண்கிடையின் பெயர் = கோடல் வெண் கிடை பூசைவெரு காகும்.

காக்கணத்தின் பெயர் = கிகிணி கன்னி காக்கணங் கருவிளை.

வெண்காவிளையின் பெயர் = உயவை வெண்காவிளை.

தாளியின் பெயர் = மஞ்சிகந்தாளி.

சிவேதையின் பெயர் = சிவேதை பகன்றை.

குன்றியின் பெயர் = குஞ்சங்குன்றி.

கொத்தான் பெயர் = நத்தைகொத்தான்.

சத்திக்கொடியின் பெயர் = தாடி மஞ்சஞ் சத்திக் கொடியே.

சாறணையின் பெயர் = திரிபுரி சாறடை சாறணையாகும்.

சீந்திற்கொடியின் பெயர் = அமுதவல்லி சீந்தில் சீவந்தி யாகும்.

பாலையின் பெயர் = பாலை சீவந்தி சீவனி யாகும்.

கூதாளியின் பெயர் = துடிகூ தாளங் கூதாளி யென்ப.

கோவையின் பெயர் = விம்பமுந் தொண்டையுங் கொவ்வையுங் கோவை.

சிலந்திக்கொடியின் பெயர் = தலைச்சுருள்வள்ளி சிலந்திக்கொடியே.

வள்ளிக்கொடியின் பெயர் = வள்ளியிலதை வள்ளிக்கொடியே.

பிரண்டையின் பெயர் = வச்சிர வல்லி பிரண்டையாகும்.

இசங்கின் பெயர் = இசங்கு குண்டலி முத்தா பலமே.

கக்கரியின் பெயர் = கக்கரிவாலுங்கி.

செங்கிடையின் பெயர் = கந்தூரிசெங்கிடை.

மற்றுஞ்செங்கிடையின் பெயர் = முதலையு மதன்பால் மொழியப் பெறுமே.

முந்திரிகையின் பெயர் = மதுரசங்கோத்தனி முந்திரிகையாகும்.

முள்ளுடைமூலமெல்லாவற்றிற்கும் பெயர் = முண்டக முள்ளுடை மூலமென்ப.

இஞ்சியின் பெயர் = நல்ல மல்ல நறுமருப்பிஞ்சி.

வழுதலையின் பெயர் = வழுதுணைவங்கம் பிருகதிவழுதலை.

கையாந்தகரையின் பெயர் = கோகண மறுபதங் கையாந்தகரை.

பொன்னாங்காணியின் பெயர் = சீதை பொன்னாங்காணியாகும்.

சிறுகீரையின் பெயர் = சில்லிசாகினி மேகநாதஞ்சிறு கீரை.

சேம்பின் பெயர் = சாகினி சேம்பு சகுடமாகும்.

வள்ளையின் பெயர் = நாளிகம்வள்ளை.

பசிரியின் பெயர் = பசிரிபாவிரி.

வெள்ளரியின் பெயர் = உருவாரம்வெள்ளரி.

சிறுகிழங்கின் பெயர் = சுரசஞ்சிறுகிழங்கு.

கருணைக்கிழங்கின் பெயர் = கந்தஞ் சூரணங் கருணைப்பெயரே.

பாகலின் பெயர் = கார வல்லி கூலம் பாகல்.

பீர்க்கின் பெயர் = பீரம்பீர்க்கு.

பெரும்பீர்க்கின் பெயர் = படலிகைபெரும்பீர்க்கு.

கொடிக்கொத்தான் பெயர் = நூழில் கொடிக்கொத்தான்.

சுரையின் பெயர் = தும்பியுமலாபமுஞ் சுரையாகும்மே.

பேய்ச்சுரையின் பெயர் = புற்கொடிபேய்ச்சுரை.

கொடியின் வகைப்பெயர் = கோற்கொடி மென்கொடி கொடியென் றாகும்.

கொடியின் பெயர் = இலதை வல்லி நூழில் கொடிப்பெயர்.

வெற்றிலையின் பெயர் = நாகவல்லி மெல்லிலை தாம்பூல மூல வல்லியிலைக் கொடிவெற்றிலை.

மிளகின் பெயர் = கறியு மரீசியுங் காயமுங் கலினையுங் – கோளகமுந் திரங்கலு மிரியலுமிளகே.

ஏலத்தின் பெயர் = இலாஞ்சி துடியே யேல மாகும்.

மஞ்சளின் பெயர் = பீதங் காஞ்சனி நிசியரி சனமுட – னோது மரித்திராபமு மஞ்சட்குறுபெயர்.

வெண்கடுகின் பெயர் = அந்தில் கடிப்பகை யையவி சித்தார்த்தம் = வெண்சிறு கடுகென விளம்பலாகும்.

திப்பிலியின் பெயர் = பிப்பிலி காமன் சிறுமூ லகமே – மாகதி கலினி திப்பிலி யாகும்.

கொத்துமலியின் பெயர் = உருளரிசி கொத்துமலியென் றுரைப்பர்.

வெண்காயத்தின்பெயர் = காய முள்ளி வெண்காயமாகும்

வாசந்தருபலபண்டத்தின்பெயர் = தகரந்தக்கோலங்கோட்டஞ் சாதிக்கா யிலவங்க மேலங் கச்சோல மாஞ்சி பகரும்வா சந்தரும் பண்டப் பெயரே

மல்லிகையின்பெயர் = மாலதி யநங்கம் பூருண்டி மல்லிகை

வனமல்லிகையின்பெயர் = மௌவ லென்பது வனமல் லிகையே

இருவாட்சியின்பெயர் = மயிலை யநங்க மிருவாட்சி

சாதிப்பூவின்பெயர் = கருமுகை பித்திகை சாதியாகும்

முல்லையின்பெயர் = தளவமுல்லை சாதி பிச்சி

ஊசிமுல்லையின்பெயர் = தளவுமாகதிகை திகை யூசிமுல்லை

கொடிமல்லிகையின்பெயர் = விசலிகை யென்ப கொடிமல் லிகையே.

நந்தியாவர்த்தத்தியின்பெயர் = வலம்புரி நந்தியா வர்த்தமாகும்

மருக்கொழுந்தின்பெயர் = தமனக மருக்கொழுந்து

மலைப்பச்சையின்பெயர் = குளவிமலைப்பச்சை

அடம்பின்பெயர் = அடம்புபாலிகை

வெட்டுவேரின்பெயர் = முடிவாழைவெட்டுவேர்

துவரையின்பெயர் – ஆடகிதுவரை.

அவரையின்பெயர் – அவரைசிக்கடி.

உழுந்தின்பெயர் – மாடமுழுந்து.

கடலையின்பெயர் – மஞ்சூரங்கடலை.

காராமணியின்பெயர் = காரா மணியிதை கூலமு மாகும்.

பசும்பயற்றின்பெயர் = பாசி முற்கம் பசும்பய றாகும்.

கொள்ளின்பெயர் = காணங் குலுத்தங் கொள்ளெனக் கருதுவர்.

துவரைஅவரைமுதலியவற்றின்பெயர் = இனையவை முதிரை யென்னவு மாகும்.

சோளத்தின்பெயர் = சொன்னலு மிறுங்குஞ் சோளமாகும்

வரகின்பெயர் = மருவுகோத்திரவம் வரகெனலாகும்

கருந்தினையின்பெயர் = இறடியுங் கங்குங் கருந்தினையென்ப

செந்தினையின்பெயர் = கம்புங்கவலையுஞ்செந்தினை யென்ப

பைந்தினையின்பெயர் = ஏனல்குரனுவணை பைந்தினை யென்ப

தினைத்தாளின்பெயர் = அருவி தினைத்தாளிருவியு மாகும்

எள்ளின்பெயர் = எண்ணுந் திலமு நூவுமெள்ளாகும்

இளையெள்ளின்பெயர் = குமிகை யிளையெள்

எள்ளிளங்காயின்பெயர் = கவ்வையெள்ளிளங்காயாகும்மே

நெல்லின்பெயர் = சொல்லும் விரீகியும் வரியுஞ் சாலியும் = யவமு நெல்லின் பொதுப்பெயராகும்

குளநெல்லின்பெயர் = நீர்வாரங்குள நெல்லாகும்மே

மலைச்சாரல் விளை நெல்லின்பெயர் = ஜவன மலைச்சாரல் விளை நெல்லாகும்

செஞ்சாலியின்பெயர் = செந்நெனன்னெல் செஞ்சாலிப் பெயர்.

பயிரின்பெயர் = பயிரே பசும்புல் பைங்கூழாகும்.

பதரின்பெயர் = பதடிபதரே பொல்லு மாகும்.

இளஞ்சூலின்பெயர் – இளஞ்சூல்பீட்டை.

இளங்கதிரின்பெயர் – பீளிளங்கதிரே.

கதிரின்பெயர் = எனலுங் குரலுங் கொழுங்கதிரென்ப.

கோதுமையின்பெயர் – கோதிகோதுமை..

தோரைநெல்லின்பெயர் = இயவை தோரை.

போரின்பெயர் = போர் சும்மை சூடும் போர்ப்பு மாகும்.

தூற்றாநெற்சூட்டின்பெயர் = பொலி பொங்கழி தூற்றா நெற்சூடாகும்.

வைக்கோலின்பெயர் = வையே பலாலம் வழுது வைக்கோலே.

நெல்லினாற்றின்பெயர் = நாறுநெல்லி னாற்றாகும்மே.

விழலின்பெயர் = விழலே விரணம் விளம்புங்காலே.

வேயரிசியின்பெயர் = வேரல்வேயரிசி தோரையுமாகும்.

தருப்பையின்பெயர் = குசை குமுதங் கூர்ச்சங்கு முதந்தருப்பை.

நாணலின்பெயர் = கானசரமே காமவேழம் = நவையில்சரவண நாகணற் பெயரே.

மற்றுநாணலின்பெயர் = சிவேதை காசை நாணலெனச் செப்புவர்.

கொறுக்கையின்பெயர் = எருவை வேழங் கொறுக்கை கொறுக்கச்சி.

திரட்கோரையின்பெயர் = எருவைசாய் பஞ்சாய் திரட்கோரையென்ப

வாட்கோரையின்பெயர் = செருந்தி வாட்கோரையென்னச் செப்புவர்.

பச்சறுகின்பெயர் = பதமுந் தூர்வையும் பச்சறுகாகும்.

பசும்புல்லின்பெயர் = சட்பம் பசும்பல்.

உலர்ந்தபுல்லின்பெயர் – திரணமுலர்ந்தபுல்.

புற்பிடியின்பெயர் – காசைபுற்பிடி.

இளம்புல்லின்பெயர் – இளம்புல்பதமே.

ஒருவகைப்புல்லின்பெயர் = புதவொருவிகற்பப்புல்லாகும்மே

நீர்முள்ளியின்பெயர் = நீர்முள்ளி முண்டகம்

நீர்க்குளிரியின்பெயர் = கல்லார நீர்க்குளிரி.

கத்தூரிமஞ்சளின்பெயர் – சுவாங்கிகத்தூரி.

கிடையின்பெயர் = சடையே கிடையெனல்.

பாசியின்பெயர் = நாரஞ் செவிரஞ் சடைசவ்சி சைவலம் = பாசியென்பர் பதியமுமாகும்.

தாமரையின்பெயர் = அம்புய மம்போ ருகமர வெந்தம் = பங்கயம் புண்ட ரீகம் பதுமம் = முண்டக நளின முளரி சரோருகஞ் = சதபத்திரிகோ கன
தஞ் சலசம் = வனசங் கமலம் வாரிசங் கஞ்சந் = திருமால் கொப்பூழ்திருமலரிண்

டை = பங்கேருகந் தாமரைப்பெயராகும்

தாமரைமலரின்பெயர் = இறும்பிரா சீவநறுந்தண்பூவே.

தாமரைக்கொட்டையின்பெயர் = பூவினுட் கொட்டை பொருட்டே கன்னிகை.

தாமரைச்சுருளியின்பெயர் = விசியும் வளையமுஞ் சுருளெனப் பேசுவர்

தாமரைக்காயின்பெயர் = வராடகம் வராண்டம் வண்காயாகும்.

செங்குவளையின்பெயர் = அரத்தமுற்பல மாஞ்செங்குவளை.

மற்றும்செங்குவளையின்பெயர் = எருமணங் கல்லாரஞ் செங்கழு நீருமாமே.

கருங்குவளையின்பெயர் = பானல் கருங்குவளை

மற்றுங்கருங்குவளையின்பெயர் = நீலமுற்பலம் நீலோற்பலமுமாம்.

கருநெய்தலின்பெயர் = நீல மிந்தீ வரங்கரு நெய்தல்

மற்றுங்கருநெய்தலின்பெயர் = நீலோற்பலமும் நிகழ்த்தப் பெறுமே

வெண்ணெய்தலின்பெயர் = வெள்ளாம்பல் குமுதம் வெண்ணிற நெய்தல்.

செவ்வாம்பலின்பெயர் = சேதாம்பலரக்காம்பல் செவ்வாம்பல் செங்குமுதம்.

மற்றுஞ்செவ்வாம்பலின்பெயர் = செவ்வல்லி செவ்வாம்பல்.

வெள்ளாம்பலின்பயர் = அல்லி வெள்ளாம்பல் கைரவமாகும்.

மற்றும்வெள்ளாம்பலின்பெயர் = வெள்ளல்லி வெள்ளாம்பல்.

குமுதவகைப்பெயர் = வெள்ளாம்பல் சேதாம்ப லென்றிரு விகற்பங் = கொள்ப மன்னோ குமுதப்பெயரே.

குமுதத்தின்பெயர் = ஆம்பலு நெய்தலு மல்லியுங் குமுதம்.

செங்கழுநீரின்பெயர் = கல்லாறமுற்பலஞ் செங்கழுநீரே.

சிகைமாலையின்பெயர் = சிகழிகை படலிகை வாசிகை சிகைமாலை.

மார்பிலணிமாலையின்பெயர் = மஞ்சரி யிலம்பக மார்பிலணிமாலை.

தோளணிமாலையின்பெயர் = தொடைய றாமந் தோளணிமாலை.

கொண்டைமாலையின்பெயர் = கோதை தொங்கல் கொண்டைமாலை.

மயிர்ச்சூட்டுமாலையின்பெயர் = வாசிகை யலங்கன் மயிர்ச்சூட்டு மாலை.

ஒன்பதாவது மரப்பெயர் சூத்திரங்கள் முற்றிற்று.
ஆக சூத்திரம் .
= = = = = = = = = = = =

ஒன்பதாவது மரப்பெயர்வகை = பெயர்ப்பிரிவு

ஐந்தருவருக்கமாவன= சந்தானம், தேவதாரம், கற்பகம், மந்தாரம், பாரிசாதம்

இவ்வைவகைமரத்தின்பெயர்= தெய்வமரம்என்றுகூறுவர்

கற்பகஞ்சேர்கொடியின்பெயர்= காமவல்லி

சந்தனமரத்தின்பெயர்= சாந்தம், மலயசம், சந்திரதிலகம், ஆரம், சந்து

செஞ்சந்தனத்தின்பெயர்= பிசனம்

அகிலின்பெயர்= அகரு, பூழில், காழ்வை

மற்றும்அகிலின்பெயர்= காகதுண்டம் ஆக )

குங்குமமரத்தின்பெயர்= மரவம், துருக்கம்

சண்பகத்தின்பெயர்= சம்பகம், செண்பகம்

சிறுசண்பகத்தின்பெயர்= சாதி, மாலதி

செவ்வந்தியின்பெயர்= பட்டிகை

புரசைமரத்தின்பெயர்= பிரமதரு, பலாசம்

மற்றும்புரசைமரத்தின்பெயர்= புனமுருக்கு ஆக

ஆலமரத்தின்பெயர்= வடமரம், தொன்மரம், பூதவம், கான்மரம், பழுமரம், நியக்குரோதம், கோளி

தேக்கின்பெயர்= சாதி, சாகம்

வேங்கைமரத்தின்பெயர்= பீதசாலம், கணி, திமிசு, திமில்

கொன்றைமரத்தின்பெயர்= இதழி, கடுக்கை ,தாமம்

மற்றுங்கொன்றைமரத்தின்பெயர்= மதலை, ஆர்க்குவதம். *ஆக

அரசின்பெயர்= சுவலை, அச்சுவத்தம், பிப்பலம், போதி, திருமரம், குஞ்சராசனம், பணை, கணவம்.

ஆச்சாமரத்தின்பெயர்= சாலம், மராமரம், ஆ.

மகிழமரத்தின்பெயர்= வகுளம், இலஞ்சி, கேசரம்.

அசோகின்பெயர்= பிண்டி, செயலை, காகோளி.

மருதின்பெயர்= அருச்சுனம், பூதவம்.

இறலியின்பெயர்= இரத்தி.

தான்றியின்பெயர்= கலித்துருமம்.

குராவின்பெயர்= கோட்டம், குடிலம்.

மற்றுங்குராவின்பெயர்= கோபிதாரம். *ஆக

நாவலின்பெயர்= ஆருகதம், சம்பு, நேரேடம்.

குழிநாவலின்பெயர்= சாதேவம்.

வேம்பின்பெயர்= நிம்பம், பிசிதம்.

அனிச்சமரத்தின்பெயர்= நறவம், சுள்ளி, அருப்பலம்.

பாதிரியின்பெயர்= பாடலம், புன்காலி.

ஞாழலின்பெயர்= நாகம், பலினி.

கோங்கின்பெயர்= கன்னிகாரம், துருமோற்பலம், குயா, பிணர்.

நாரத்தையின்பெயர்= நாரம், நரந்தம், நாரங்கம்.

குமிழின்பெயர்= கூம்பல், கடம்பல்.

அதிமதுரத்தின்பெயர்= யட்டி, மதுகம், அதிங்கம், சல்லி.

மஞ்சாடிமரத்தின்பெயர்= திலகம்.

குடைவேலின்பெயர்= உடை.

புன்னையின்பெயர்= புன்னாகம்.

சுரபுன்னையின்பெயர்= வழை.

வெட்சியின்பெயர்= சிந்தூரம், குல்லை, செச்சை.

செருந்தியின்பெயர்= பஞ்சரம், செங்கோடு.

அலரியின்பெயர்= கவீரம், கணவீரம், கரவீரம்.

மற்றுமலரியின்பெயர்= அயமரம், அடுக்கு. *ஆக

முண்முருக்கின்பெயர்= கவிர், கிஞ்சுகம்.

பெருங்குறிஞ்சியின்பெயர் = கோரண்டம், குரண்டகம்.

பொன்வண்ணக்குறிஞ்சியின்பெயர் = பீதை.

வாடாக்குறிஞ்சியின்பெயர் = குரவகம்.

மழைவண்ணக் குறிஞ்சியின்பெயர் = பாணம், நீலி.

பவளக்குறிஞ்சியின்பெயர் = தீண்டியம்.

மகரவாழையின்பெயர் = மருகு, தானம்.

இருவேலியின்பெயர் = வேரி, பீதகம், மூலகந்தம்.

குருக்கத்தியின்பெயர் = அதிகம், முத்தகம், மாதவி, வாசந்தி, குருகு, நாகரி.

பலாவின்பெயர் = பாகல், வருக்கை, பனசம்.

ஈரப்பலாவின்பெயர் = ஆசினி, பலாசம்.

மாமரத்தின்பெயர் = மாந்தி, சூதம், கொக்கு, மா, ஆமிரம், *மாழை.

புளிமாவின்பெயர் = நாளினி, இபங்கம், மாழை , சிஞ்சம், *ஆம்பிரம், எகினம், சூதம்.

தேமாவின்பெயர் = ஆமிரம், சக்காரம், சேதாரம்.

புளியமரத்தின்பெயர் = சிந்தூரம், சிந்தகம், திந்திருணி, எகினம், சஞ்சீவகரணி, ஆம்பிலம்.

இலவின்பெயர் = பொங்கர், சான்மலி, பூரணி.

.இலந்தையின்பெயர் = குல்லரி, குவலி, கோற்கொடி, கோலி, *ரத்தி, வதரி.

இலந்தைப்பழத்தின்பெயர் = கோலம், கோண்டை.

அத்தியின்பெயர் = அதவு, கோளி, உதும்பரம்.

விளாவின்பெயர் = விளவு, கபித்தம், வெள்ளில்.

.காயாவின்பெயர் = பூவை, அஞ்சனி, அல்லி, புன்காலி, காசை,
*ச்சி.

களாவின்பெயர் = களவு.

நுணாவின்பெயர்= தணக்கு.

எலுமிச்சையின்பெயர்= சம்பீரம், முருகு, சதாபலம், சம்பளம்,
அருணம், இலிகுசம்.

நெல்லியின்பெயர்= ஆமலகம்.

கடுக்காய்மரத்தின்பெயர்= அரிதகி, கடு, பத்தியம்.

மாதுளையின்பெயர்= மாதுளங்கம், மாதுளம், கழுமுள்.

தாதுமாதுளையின்பெயர்= தாடிமம்.

வில்வத்தின்பெயர்= கூவிளம், மாலூரம், கூவிளை.

மற்றும்வில்வத்தின்பெயர்= மாவிளம், வில்லுவம். ஆக

வஞ்சியின்பெயர்= வானீரம், பிசின்.

செங்கருங்காலியின்பெயர்= சிறுமாரோடம்.

கருங்காலியின்பெயர்= கதிரம்.

ஈந்தின்பெயர்= கர்ச்சூரம்.

வெட்பாலையின்பெயர்= குடசம், கிரிமல்லிகை.

அழிஞ்சிலின்பெயர்= சேமரம், அங்கோலம்.

கடம்பின்பெயர்= கதம்பம், விசாலம், நீபம்.

மற்றுங்கடம்பின்பெயர்= இந்துளம், மரா. ஆக

குருந்தமரத்தின்பெயர்= குந்தம்.

செம்பரத்தையின்பெயர்= மந்தாரம்.

வெண்ணொச்சியின்பெயர்= சிந்துவாரம், நீர்க்குண்டி.

தேற்றுமரத்தின்பெயர்= சில்லம், இல்லம், கதலிகம்.

ஆத்தியின்பெயர்= ஆர், தாதகி, சல்லகி.

அகத்தியின்பெயர்= அச்சம், முனி, கரீரம்.

பச்சிலைமரத்தின்பெயர்= தமாலம், பசும்பிடி.

முருங்கையின்பெயர்= கருஞ்சனம், சிக்குரு.

எட்டியின்பெயர்= காளம், காஞ்சிரை, கோடரம்.

சதுரக்கள்ளியின்பெயர்= வச்சிராங்கம், கண்டீரவம், அயிலி, வச்சிர விருக்கம்.

வாகையின்பெயர்= சிரீடம், பாண்டில்.

ஓடையின்பெயர்= உலவை.

உழிஞ்சிலின்பெயர்= உன்னம்.

சிக்கிரியின்பெயர்= முன்னம், துரிஞ்சில், உசிலை.

இலுப்பையின்பெயர்= குலிகம், இருப்பை, மதூகம்

மற்றுமிலுப்பையின்பெயர்= சந்தானகரணி ஆஷக

தெங்கின்பெயர்= தாழை, இலாங்கலி, தென்னை

மற்றுந்தெங்கின்பெயர்= நாளிகேரம் ஆக

பன்னாடையின்பெயர்= நாரி, நெய்யரி

கமுகின்பெயர்= கந்தி, பூகம், பூக்கம்

கூந்தற்கமுகின்பெயர்= தாலம்

பாக்கின்பெயர்= கோலம் துவர்க்குய் பாகு

பனையின்பெயர்= போந்து, தாலம், பெண்ணை, புற்பதி, தாளி, கரும்புறம், புற்றாளி

இளம்பனையின்பெயர்= போந்தை

கூந்தற்பனையின்பெயர்= தாளி

வாழையின்பெயர்= கதலி, அரம்பை, கவர், சேகிலி, திரணபதி, ஓசை

மூங்கிலின்பெயர்= வெதிர், வேய், விண்டு, விண்டல், பணை, நெடில், வரை, அரி, தட்டை, திகிரி, தடம், அமை, வேரல், கழை, தூம்பு, வேழம், காம்பு, கிளை, கீசகம், வேணு, ஓங்கல், முளை, முடங்கல், சந்தி, மூந்தூழ்

மற்றுமூங்கிலின்பெயர்= சானகி, திரிகண், நேமி, பாதிரி, ஆம்பல், தொளை, சபம். ஆக

மூங்கிலரிசியின்பெயர்= வேரல், தோரை

தாழையின்பெயர்= முண்டகம், மடி, கைதை, முடங்கல், கண்டல், கேதகை, முசலி

பட்டிகையின்பெயர்= பறிவை

கரும்பின்பெயர்= கழை, வேழம், இக்கு, கன்னல்

பூவாதுகாய்க்குமரத்தின்பெயர்= கோளி

மற்றும்பூவாதுகாய்க்குமரத்தின்பெயர்= வானப்பிரத்தி, பத்தியம்

வண்டுணாமலர்மரமாவன= சண்பகம், வேங்கை

வன்னிமரத்தின்பெயர்= கலிசம், சமி, குலிசம்

ஓமைமரத்தின்பெயர்= உகா

புனமுருங்கையின்பெயர்= புன்கு

ஒடுவின்பெயர்= உடுப்பை

புன்கின்பெயர்= நத்தமாலம், காஞ்சனம்

ஆண்மரத்தின்பெயர்= எகின், சேமரம்

பராய்மரத்தின்பெயர்= பசுநா ,விட்டில், புக்கு

நறுவிலியின்பெயர்= அலி, செலு, வலி

செம்புளிச்சையின்பெயர்= தேவதாரம்

புனவெலுமிச்சையின்பெயர்= குருந்து

எருக்கின்பெயர்= அருக்கம், சல்லியகரணி

ஆமணக்கின்பெயர்= ஏ*ரண்டம், சித்திரம்

பருத்தியின்பெயர்= பரி, பன்னல், கார்ப்பாசம்

மருந்தென்னும்பெயர்= புல், மரம், புதல், பூடு, வல்லி= கொடி சஞ்சீவி

நால்வகைமருந்தாவன= சல்லியகரணி, சந்தானகரணி, சமனியகரணி, மிருதசஞ்சீவனி

அத்திரசத்திரந்தைத்த புண்மாற்றுமருந்தின்பெயர்= சல்லியகரணி

துணிபட்ட வுறுப்பினைப்பொருத்து மருந்தின்பெயர்= சந்தானகரணி

விரணந்தழும்புகளைநீக்குமருந்தின்பெயர்= சமனியகரணி

உயிர்தருமருந்தின்பெயர்= மிருதசஞ்சீவனி

மற்றுமுயிர்தருமருந்தின்பெயர்= அதகம், அமுது, சீவனி. ஆக

நோய்தீர்க்குமருந்தின்பெயர்= உறை

மருந்தின்பெயர்= உறை, குளியம், ஓடதி, ஔடதம், அதகம், யோகம்

மரப்பொதுவின்பெயர்= பாதபம், தாரு, தரு, தாவரம், மூலம்

மற்றுமரப்பொதுப்பெயர்= அகம், அங்கிரி, விருக்கம், துருமம், அகலியம், சாதி

மரக்கன்றின் பெயர் = போதகம், பிள்ளை, போத்து, குழவி, கால்.

மரவுரியின் பெயர் = மரத்தோல், வற்கலை, சீரை.

மற்றுமரவுரியின் பெயர் = இறைஞ்சி. ஆக
மரக்கொம்பின் பெயர் = கோடு, விடபம், கோடரம், பொங்கர், சாகை, கவடு, உலவை, தாரு, சினை, பணை, கொம்பர், கவலை.

சேகின் பெயர் = சம்பம், ஆசினி, காழ், காழ்ப்பு, சாரம், வயிரம், கலை, அரி.

தழையின் பெயர் = உலவை.

கப்பின் பெயர் = கவை, கவர்.

இளங்கொம்பின் பெயர் = வளார், மெல்லியல்.

தளிரின் பெயர் = வல்லரி, குழை, முறி, மஞ்சரி, கிசலயம், பல்லவம்,
அலங்கல், கிளை.

தளித்தலின் பெயர் = இலிர்தல், சிலிர்த்தல், குழைத்தல்.

அடிவெண்குருத்தின் பெயர் = முருந்து.

மலர்க்கொத்தின் பெயர் = தொத்து, மஞ்சரி, துணர், இணர்,

தொடர்ச்சி.

இலையின் பெயர் = பலாசம், பன்னம், பத்திரம், தகடு, பாசடை, தண்ணடை, சாகை, தமாலம், ஓலை, தழை, பச்சிலை, உலவை, அடை.

மற்றுமிலையின் பெயர் = சதனம், சதம், பத்திரி, தலம். ஆக

பரலினுட்படுகுருத்தின் பெயர் = பயின்.

மொட்டின் பெயர் = கலுவடம், நனை, முகை, கன்னிகை, அரும்பு, முகிளம், கலிகை, சாலகம், கோரகம், போகில், நகை, மொக்குள்.

மலரின் பெயர் = தாமம், குசுமம், தார், அலர், வீ, போது, சுண்ணம், சுமனசம், பூ, சுமம், துணர், அலரி, ஆலம்.

மலர்த்தாதின்பெயர் = கோசரம், சிதர், கொங்கு, கேசரம், துணர், இணர், கிளர்.

தாதின்றூளின்பெயர் = மகரந்தம், சுண்ணம்.

மற்றுந்தாதின்றூளின்பெயர் = பராகம்.

மலர்த்தேனின்பெயர் = மகரந்தம்.

பூவிதழின்பெயர் = தாது, அதழ், தண்டு, தோடு, எடு.

அகவிதழின்பெயர் = அல்லி.

புறவிதழின்பெயர் = புல்லி.

மரத்தின்குலையின்பெயர் = தாறு, படு, சாறு, குடும்பு, கோடு,கொத்து.

முளையின்பெயர் = கால், அங்குரம்.

வேரின்பெயர் = தூர், சடை, சிவை.

கிழங்கின்பெயர் = மூலம், மூங்கம், கந்தம்.

மற்றுங்கிழங்கின்பெயர் = சகுனம்.

சிற்றரும்பின்பெயர் = முகை, முகிழ், மொக்குள், முகிளம்.

உலர்ந்தபூவின்பெயர் = உணங்கல், சாம்பல், வாடல்.

மலர்ச்சியின்பெயர் = அலர்தல், அவிழ்தல், விள்ளல், நகுதல், மலர்தல், விரிதல்.

விரிமலரின்பெயர் = இகமலர், வெதிர், தொடர்ப்பூ.

பழம்புவின்பெயர் = செம்மல், சாம்பல், தேம்பல்.

விதையின்பெயர் = வீசம், பரல், விச்சு, விரை.

மற்றும்விதையின்பெயர் = காழ், கொட்டை. *ஆக

பிஞ்சின்பெயர் = வடு, எலு.

பசுங்காயின்பெயர் = தீவிளி.

பழத்தின்பெயர் = பலம், கனி.

கனித்தோலின்பெயர் = செகிள், காழ்.

காய்மரத்தின்பெயர் = பலினம்.

காயாதமரத்தின்பெயர் = அவகேசி.

தழைமரத்தின்பெயர் = மலினம்.

உலர்மரத்தின்பெயர் = வானம்.

ஆண்மரத்தின்பெயர் = அகக்காழ், வன்மரம்.

பெண்மரத்தின்பெயர் = புறக்காழ், புன்மரம்.

அலிமரத்தின் பெயர் = வெளிறு.

இலைக்கறியின் பெயர் = அடை, சாகம், பன்னம், அடகு.

சோலையின் பெயர் = அரி, நந்தனவனம், தண்டலை, பொழில், ஆராமம், துடவை, தோட்டம், உய்யானம், உபவனம், உத்தியானம், செய்கால், மரச்செறிவு, இளமரக்கா.

ஊரோடுசேர்ந்த சோலையின் பெயர் = வனம்.

, மலையோடு சேர்ந்த சோலையின் பெயர் = ஆராமம்.

, கழிக்கரைச் சோலையின் பெயர் = கானல்.

, செய்குன்றுசேர்ந்த சோலையின் பெயர் = தோப்பு.

வயல்சூழ் சோலையின் பெயர் = இளமரக்கா.

சிறுதூற்றின் பெயர் = அரில், அறல், பதுக்கை.

குறுங்காட்டின் பெயர் = இறும்பு.

பெருங்காட்டின் பெயர் = வல்லை.

காவற்காட்டின் பெயர் = கணையம், இளை, அரண்.

முதுகாட்டின் பெயர் = முதை, இலையுதிர்வு.

கரிகாட்டின் பெயர் = பொச்சை, சுரம், பொதி.

வேலியின் பெயர் = அடைப்பு, காப்பு.

மரப்பொந்தின் பெயர் = பொக்கு, பொத்து, பொய், பொதும்பு, பொள்ளல்.

முள்ளின் பெயர் = கண்டகம், கடு.

தூற்றின் பெயர் = இறும்பு, மிடை.

மரச்செறிவின் பெயர் = பொதும்பர், கோடரம், உலவை.

விறகின் பெயர் = முளரி, கறல், முருகு, காழ், காட்டம், ஞெகிழி, இந்தனம், சமிதை.

முட்செடிப்பொதுவின் பெயர் = முளரி, முண்டகம்.

விரிதூற்றின்பெயர் = அதிரல்.

சுண்டியின்பெயர் = சுச்சு.

வறட்சுண்டியின்பெயர் = சுமங்கை.

ஆவிரையின்பெயர் = பகரி.

வஞ்சியின்பெயர் = வானீரம், வஞ்சுளம்.

துத்தியின்பெயர் = கோளியம்.

ஆடாதோடையின்பெயர் = வாசை.

சித்திரமூலத்தின்பெயர் = கொடிவேலி.

தும்பையின்பெயர் = துரோணம்.

ஆதொண்டையின்பெயர் = தொண்டை.

மரலின்பெயர் = அரலை.

கற்றாழையின்பெயர் = குமரி.

நாயுருவியின்பெயர் = கரமஞ்சரி.

கொழிஞ்சியின்பெயர் = கோளி.

ஊமத்தையின்பெயர் = உன்மத்தம்.

கஞ்சாவின்பெயர் = கஞ்சம், குல்லை.

பொன்னூமத்தையின்பெயர் = மதமத்தை.

நீலியின்பெயர் = அவுரி, பத்தியம்.

துழாயின்பெயர் = குல்லை, முடி, துவளம், வனம்.

மற்றுந்துழாயின்பெயர் = பிருந்தம். *ஆக

தூதுளையின்பெயர் = தூதுளம்.
வீழியின்பெயர் = விழிமி.

காஞ்சொறியின்பெயர் = கண்டூதி.

கிலுகிலுப்பையின்பெயர் = பகன்றை.

தண்ணீர்குடத்தின்பெயர் = கானவாழை.

பிரம்பின்பெயர் = சாதி, வேத்திரம், சூரல்.

கழற்கோடியின்பெயர் = கழங்கு, முழல், கர்ச்சூரம்.

கழற்காயின்பெயர் = முழல், கழங்கு.

இண்டின்பெயர் = இண்டை, புலிதொடக்கி, ஈகை, ஈங்கை,

சூரியின்பெயர் = விந்தம்.

புனற்றுளசியின்பெயர் = குல்லை.

சிறுபூளையின்பெயர்= உழிஞை

பாற்சொற்றிற்செடியின்பெயர்= பாயசம்

செங்காந்தளின்பெயர்= தோன்றி, பற்றை, இலாங்கலி

வெண்காந்தளின்பெயர்= கோடல், தோன்றி, கோடை

வெண்கிடையின்பெயர்= கோடல், பூசை, வெருகு

காக்கணத்தின்பெயர்= கிகிணி, கன்னி, கருவிளை

வெண்காலிளையின்பெயர்= உயவை

தாளியின்பெயர்= மஞ்சிகம்

சிவேதையின்பெயர்= பகன்றை

குன்றியின்பெயர்= கஞ்சம்

கொத்தான்பெயர்= நந்தை

சத்திக்கொடியின்பெயர்= தாடிமஞ்சம்

சாறணையின்பெயர்= திரிபுரி, சாறடை

சீந்திற்கொடியின்பெயர்= அமுதவல்லி, சீவந்தி

பாலையின்பெயர்= சீவந்தி, சீவனி

கூதாளியின்பெயர்= துடி, கூதாளம்

கோவையின்பெயர்= விம்பம், தொண்டை, கொவ்வை

சிலந்திக்கொடியின்பெயர்= தலைச்சுருள்வள்ளி

வள்ளிக்கொடியின்பெயர்= வள்ளி, இலதை

பிரண்டையின்பெயர்= வச்சிரவல்லி

இசங்கின்பெயர்= குண்டலி முத்தாபலம்

கக்கரியின்பெயர்= வாலுங்கி

செங்கிடையின்பெயர்= *கந்தூரி

மற்றுஞ்செங்கிடையின்பெயர்= முதலை

முந்திரிகையின்பெயர்= மதுரசம், கோத்தனி

முள்ளுடைமூலமெல்லாவற்றிற்கும்பெயர்= முண்டகம்

இஞ்சியின்பெயர்= நல்லம், அல்லம், நறுமருப்பு

வழுதலையின்பெயர்= வழுதுணை, வங்கம், பிருகதி

கையாந்தகரையின்பெயர்= கோகணம், அறுபதம்

பொன்னாங்காணியின்பெயர்= சீதை

சிறுகீரையின்பெயர்= சில்லி, சாகினி, மேகநாதம்

சேம்பின்பெயர்= சாகினி, சகுடம்

வள்ளையின்பெயர்= நாளிகம்

பசிரியின்பெயர்= பாவிரி

வெள்ளரியின்பெயர்= உருவாரம்

சிறுகிழங்கின்பெயர்= சுரசம்

கருணைக்கிழங்கின்பெயர்= கந்தம், சூரணம்

பாகலின்பெயர்= காரவல்லி, கூலம்

பீர்க்கின்பெயர்= பீரம்

பெரும்பீர்க்கின்பெயர்= படலிகை

கொடிக்கொத்தான்பெயர்= நூழில்

சுரையின்பெயர்= தும்பி, அலாபு

பேய்ச்சுரையின்பெயர்= புற்கொடி

கொடியின்வகைப்பெயர்= கோற்கொடி, மென்கொடி

கொடியின்பெயர்= இலதை, வல்லி, நூழில்

வெற்றிலையின்பெயர்= நாகவல்லி, மெல்லிலை, தாம்பூலம், மூலவல்லி இலைக்கொடி

மிளகின்பெயர்= கறி, மரீசி, காயம், கலினை, கோளகம், திரங்கல், மிரியல்

ஏலத்தின்பெயர்= இலாஞ்சி, துடி

மஞ்சளின்பெயர்= பீதம், காஞ்சனி, நிசி, அரிசனம், அரித்திராபம்

வெண்கடுகின்பெயர்= அந்தில், கடிப்பகை, ஐயவி, சித்தார்த்தம்

திப்பிலியின்பெயர்= பிப்பிலி, காமன், சிறுமூலகம், மாகதி, கலினி

கொத்துமலியின்பெயர்= உருளரிசி

வெண்காயத்தின் பெயர் = காயம், உள்ளி.

வாசந்தருபலபண்டத்தின் பெயர் = தகரம், தக்கோலம், கோட்டம், சாதிக்காய், இலவங்கம், ஏலம், கச்சோலம், மாஞ்சி.

மல்லிகையின் பெயர் = மாலதி, அநங்கம், பூருண்டி.

வனமல்லிகையின் பெயர் = மௌவல்.

இருவாட்சியின் பெயர் = மயிலை, அநங்கம்.

சாதிப்பூவின் பெயர் = கருமுகை, பித்திகை.

முல்லையின் பெயர் = தளவம், சாதி, பிச்சி.

ஊசிமுல்லையின் பெயர் = தளவு, மாகதி, நைதிகை.

கொடிமல்லிகையின் பெயர் = விசலிகை.

நந்தியாவர்த்தத்தின் பெயர் = வலம்புரி.

மருக்கொழுந்தின் பெயர் = தமனகம்.

மலைப்பச்சையின் பெயர் = குளவி*.

அடம்பின் பெயர் = பாலிகை.

வெட்டுவேரின் பெயர் = முடிவாழை.

துவரையின் பெயர் = ஆடகி.

அவரையின் பெயர் = சிக்கடி.

உழுந்தின் பெயர் = மாடம்.

கடலையின் பெயர் = மஞ்சூரம்.

காராமணியின் பெயர் = இதை, கூலம்.

பசும்பயற்றின் பெயர் = பாசி, முற்கம்.

கொள்ளின் பெயர் = காணம், குலுத்தம்.

துவரையவரையின்முதலியவற்றின் பெயர் = முதிரை.

சோளத்தின் பெயர் = சொன்னல், இறுங்கு.

வரகின் பெயர் = கோத்திரவம்.

கருந்தினையின் பெயர் = இறடி, கங்கு.

செந்தினையின் பெயர் = கம்பு, கவலை.

பைந்தினையின் பெயர் = ஏனல், குரல், நுவணை.

தினைத்தாளின் பெயர் = அருவி, இருவி.

எள்ளின் பெயர் = எண், திலம், நூவு.

இளையெள்ளின் பெயர் = குமிகை.

எள்ளிளங்காயின் பெயர் = கவ்வை.

நெல்லின் பெயர் = சொல், விரிகீ, வரி, சாலி, யவம்.

குளநெல்லின் பெயர் = நீர்வாரம்.

மலைச்சாரல்விளைநெல்லின் பெயர் = ஐவனம்.

செஞ்சாலியின் பெயர் = செந்நெல், நன்னெல்.

பயிரின் பெயர் = பசும்புல், பைங்கூழ்.

பதரின் பெயர் = பதடி, பொல்.

இளஞ்சூலின் பெயர் = பீட்டை.

இளங்கதிரின் பெயர் = பீள்.

கதிரின் பெயர் = ஏனல், குரல்.

கோதுமையின் பெயர் = கோதி

தோரைநெல்லின் பெயர் = இயவை.

போரின் பெயர் = சும்மை, சூடு, போர்ப்பு.

தூற்றாநெற்சூட்டின் பெயர் = பொலி, பொங்கழி.

வைக்கோலின் பெயர் = வை, பலாலம், வழுது.

நெல்லினாற்றின் பெயர் = நாறு.

விழலின் பெயர் = விரணம்.

வேயரிசியின் பெயர் = வேரல், தோரை.

தருப்பையின் பெயர் = குசை, குமுதம், கூர்ச்சம், குசம்.

நாணலின் பெயர் = கானரசம், காமவேழம், சரவணம்.

மற்றுநாணலின் பெயர் = சிவேதை, காசை.

கொறுக்கையின் பெயர் = எருவை, வேழம், கொறுக்கச்சி.

திரட்கோரையின் பெயர் = எருவை, சாய், பஞ்சாய்.

வாட்கோரையின்பெயர்= செருந்தி

பச்சறுகின்பெயர்= பதம், தூர்வை

பசும்புல்லின்பெயர்= சட்பம்

உலர்ந்தபுல்லின்பெயர்= திரணம்

புற்பிடியின்பெயர்= காசை

இளம்புல்லின்பெயர்= பதம்

ஒருவகைப்புல்லின்பெயர்= புதவு

நீர்முள்ளியின்பெயர்= முண்டகம்

நீர்க்குளிரியின்பெயர்= கல்லாரம்

கத்தூரிமஞ்சளின்பெயர்= சுவாங்கி

கிடையின்பெயர்= சடை

பாசியின்பெயர்= நாரம், செவிரம், சடைச்சி, சைவலம், பதியம்

தாமரையின்பெயர்= அம்புயம், அம்போருகம், அரவிந்தம், பங்கயம், புண்டரீகம், பதுமம், முண்டகம், நளினம், முளரி, சரோருகம், சதபத்திரி, கோகனதம், சலசம், வனசம், கமலம்,

வாரிசம், கஞ்சம், திருமால்கொப்பூழ், திருமலர், இண்டை, பங்கேருகம்

தாமரைமலரின்பெயர்= இறும்பு, இராசீவம்

தாமரைக்கொட்டையின்பெயர்= பொகுட்டு, கன்னிகை

தாமரைச்சுருளின்பெயர்= விசி, வளையம்

தாமரைக்காயின்பெயர்= வராடகம், வராண்டம்

செங்குவளையின்பெயர்= அரத்தம், உற்பலம்

மற்றுஞ்செங்குவளையின்பெயர்= எருமணம், கல்லாரம், செங்கழுநீர் ஆக

கருங்குவளையின்பெயர்= பானல்

மற்றுங்கருங்குவளையின்பெயர்= நீலம், உற்பலம், நீலோற்பலம் ஆக

கருநெய்தலின்பெயர்= நீலம், இந்திவரம்

மற்றுங்கருநெய்தலின்பெயர்= நீலோற்பலம் ஆக

வெண்ணெய்தலின் பெயர் = வெள்ளாம்பல், குமுதம்.

செவ்வாம்பலின் பெயர் = சேதாம்பல், அரக்காம்பல், செங்குமுதம்.

மற்றுஞ்செவ்வாம்பலின் பெயர் = செவ்வல்லி. ஆக

வெள்ளாம்பலின் பெயர் = அல்லி, கைரவம்.

மற்றும்வெள்ளாம்பலின் பெயர் = வெள்ளல்லி. ஆக

குமுதவகைப் பெயர் = வெள்ளாம்பல், சேதாம்பல்.

குமுதத்தின் பெயர் = ஆம்பல், நெய்தல், அல்லி.

செங்கழுநீரின் பெயர் = கல்லாரம், உற்பலம்.

சிகைமாலையின் பெயர் = சிகழிகை, படலிகை, வாசிகை.

மார்பிலணிமாலையின் பெயர் = மஞ்சரி, இலம்பகம்.

தோளணிமாலையின் பெயர் = தொடையல், தாமம்.

கொண்டைமாலையின் பெயர் = கோதை, தொங்கல்.

மயிர்ச்சூட்டுமாலையின் பெயர் = வாசிகை, அலங்கல்.

அகப்பா = புரிசையு முள்ளுயர் நிலமு மகப்பா.

அகம் = மனமு முள்ளு மனையும் பாவமும் = புவியு மரப்பொதுப்பெயரு மகமே.

அகலுள் = ஊரு நாடு மகலு ளாகும்.

அகி = அரவு மிரும்பு மகியென லாகும்.

அக்காரம் = ஆடையுஞ் சருக்கரையு மக்கார மாகும்.

அக்கு = வளைமணியேற்றின் முரிப்பிவை யக்கெனல்.

அங்கணம் = தூம்பு வாயிலு முன்றிலு மங்கணம்.

அங்கதம் = அரவு தோளணி வசையிவை யங்கதம்.

அங்கம் = யாக்கையு முறுப்புஞ் சயனமு மங்கம் .

அங்கி = அனலுஞ் சட்டையு மங்கியாகும்.

அசனம் = பசியுங் கொழுப்பும் பகுதியு மளவும் – வேங்கைமரமு முணவு மசனம்.

அச்சம் = அகத்தியும் பயமு மச்ச மாகும்.

அஞ்சலி = தொழுதலும் வாவற் பறவையு மஞ்சலி.

அஞ்சனம் = காள நிறனு மையுந் திசைகளின் – யானையிலொன்று மஞ்சன மாகும்

அடல் = வலியுஞ் செருவு மடலென் றாகும்.

அடி = முதலுங் காலு மொறுத்தலு மடியெனல்.

அடுப்பு = தரும நாளு முத்தானமு மன்றி = யச்சப்பெயருமடுப்பென லாகும்.

அடை = இலையுங் கனமும் விலையும் வழியு – மப்பமுமற்றிவை யடையென லாகும்

அணங்கு = தெய்வமுந் தெய்வத் துவமைசொன் மாதரு – மைய னோயும் வருத்தமுங் கொலையு = மழகு மாசையு மணங்கென்றாமே.

அணி = படையின துறுப்பு மொப்பனையு மழகும் = பெருமையுங் கலனு மன்பு மணியெனல்

அணு = உயிரு நுண்மையு மணுவென லாகும்.

அணை = விடயமுஞ் சேதுவு மெத்தையுஞ் சயனமு – மணையென மொழிப வறிந்திசி னோரே.

அண்டசம் = அரவு தவளை முதலை யாமை = யானை யுடும்புமீ னோந்தியும் பறவையும் = பல்லியு மிப்பியு மண்டச மென்ப.

அண்டம் = அண்ட முட்டையு மாகா யமுமே

அண்டர் = உயர்நிலையும்ப ரொன்னல ருடனே = இடைய ரண்ட ரென்ன லாகும்

அத்தம் = ஒருநாண் மீனு மொள்ளிய பொன்னு – மருநெறியுங் கண்ணாடியும் பாதியுங் = கரமும் பகர்சொற் பொருளு மத்தம்.

அத்தி = யானையு மொருமரப் பெயரு மென்பு – மார்கலிப்பெயரு மத்தியென் றாகும் .

அத்து = அரைப்பட் டிகையுந் துன்னமு மசைச்சொலுஞ் – செந்நிறமும்மிவை தெரியிலத் தென்ப.

அத்தை = அசைநிலைச் சொல்லுங் குருவு மத்தை.

அந்தம் = அழகு மீறு மந்த மென்ப.

அந்தரம் = அந்தரமேகந் தளியாகாயம் = இறுதி திமிரங் கூட்டமாகும்.

அந்தரி = அம்பிகைப் பெயருந் துர்க்கையு மந்தரி.

அந்தி = பாலையாழ்த் திறத் தோரிசைப் பெயரு – மாலைக்காலமு மற்றிவை யந்தி.

அபரம் = நரகமும் பொய்யும் பிறகு மபரம்.

அமரர் = அடையலர் பெயருந் தேவரு மமரர்.

அமலம் = அமல மழுக்கின்மையு மறிவு மழகும்.

அமுதம் = சுவைபா னீர்மை சோறு தெய்வ = வுணவு நீர்மோக்க முப்பு மமுதம்.

அமை = அமை அழகு மூங்கிலு மமைவு மமையே.

அம்பணம் = அளவை காராம்பி கதலி யம்பணம்.

அம்பரம் = அம்பரங் கடலுமா டையுமா காயமும்.

அம்பல் = சிலரறிந்து புறங்கூறலும் பழறிமொழியு மம்பல்.

அம்மை = அழகும் வருபிறப்புந் தாயு மம்மை.

அயம் = அயமென் கிளவி யாடு மிரும்புங் = குளமு நீருங் குதிரையுங் கூறுவர்.

அயிராவதம் = அயிராவதந்திசை யானையி லொன்றும் = புரந்தரன் யானைப் பெயரும் புகலும்.

அயில் = வேலுங் கூர்மையு மயிலென விளம்புவர்.

அரணம் = காடு மெயிலுங் கவசமு மரணம்.

அரண் = காவல் வேல் காவற் காடிவை யரணே.

அரத்தம் = கடம்புஞ் சுடுவனுங் கழுநீர்ப் பெயரு = மரக்குஞ் செந்

நிறமு மரத்த மாகும்.

அரந்தை = குறிஞ்சியா ழிசையுந் துன்பமு மரந்தை.

அரம்பை = அரம்பை தெய்வப்பெண் வாழையு மாகும்.

அரலை = கழலை வீசங் கற்றாழை யரலை.

அரவம் = அரவநூ புரமும் பாம்பு மோசையுமாம்.

அரற்றல் = அழுகையு மொலித்தலு மரற்ற லென்ப

அராகம் = முடுகியல் செந்நிறம் பாலை யாழ்த்திற = மாடகந் தக்கராக மராகம்.

அரி = கிண்கிணிப் பரலுங் கிளரொளியும் பன்றியு – மிந்தி ரனும் வண்டும் பாம்புங் குரங்குங் = குதிரையுங் கிளியுந் தவளையு மூங்கிலுந் = திகிரியு நிறமுஞ் சிங்கமுந் தேருஞ் = சயனமுங் கண்ணின் வரியுந் துயிலு = மியமனு நெருப்புங் காற்றும் புகையும் = பகையுஞ் சேகும் பறையு மதுவு = மதியும் ஞாயிறும் பஞ்சா யுதனும் = பொள்ளலும் பௌவமும் பொன்னும் பசுமையும் = வரையு மைம்மையுஞ் செந்நெற் கதிருஞ் = சோலையும் படைக்கலப் பெயரும் விசியு = மரிசியும் வரியு மரியென லாகும்

அரிட்டம் = காகமுங் கள்ளும் பிறவியின் குற்றமு – மரிட்ட மென்ப வறிந்திசி னோரே

அருணம் = ஆடு மானு மருண மென்ப

அருணன் = அருணனருக்கனு மவன்றேர்ப் பாகனும் – புதனு மென்னப் புகலப் பெறுமே

அருப்பம் = ஊர்ப்பொதுப்பெயருமொருபெரும் பிணியு = மடவியின் பெயரு மருப்ப மென்ப

அருவி = மலையின்வீழ் புனலுந் தினைத்தாளு மருவி

அலகு = பலகறையு நுளம்பு மளவு மலகெனல்

அலங்கல் = பூவின் மாலையுந் தளிரு மசைவு = மிரங்கலு மொளிர்தலு மலங்க லாகும்

அலரி = அலரி மலருந் தப*னனு மழகுங் = கண்வரி யோர்மரம் என்மனார் புலவர்

அலர் = பழிமொழி யும்பல ரறிந்தலர் தூற்றலு = மலரு மகிழ்வு மலரென்றாகும்.

அலை = அலையே கொலையுந் திரையு மாகும்.

அல் = இரவு மிருளு மிவையல் லாகும்.

அல்கல் = அல்க லென்பது தங்கலு நாளும்.

அல்லி = வெண்ணிற வாம்பலுங் காயா மரமு = மகவித ழும் மிவை யல்லியென் றாகும்.

அவந்தி = கிளியு முஞ்சைப் பதியு மவந்தி.

அவலை = காடுங் கடுப்பு மவலையின் கண்ண.

அழனம் = அழலும் பிணமு மழன மென்ப.

அழுக்காறு = பொறாமையு மனத்தழுக்கு மழுக்கா றென்ப.

அளகம் = அளகம் புனலு மயிரு மாகும்.

அளக்கர் = கடலும் புவியுங் கார்த்திகை நாளு = மளமுஞ் சேறுமளக்க ரென்ப.

அளறு = நரகமுஞ் சேறு மளறென நவில்வர்.

அளி = அறுபதமு மன்புங் கள்ளு மளியெனல்.

அளித்தல் = கொடுத்தலுங்காத்தலுஞ் செறித்தலு மளித்தல். (

அளை = வளைதயிர் புற்று மளையா கும்மே.

அறல் = அறுதியு மப்பு மறலென மொழிப.

அறுவை = ஆடை சித்திரை நாளிவை யறுவை.

அனந்தம் = அளவில் பொருளும் பொன்னு மனந்தம்.

அனந்தன் = நாலிரு தெய்வ வரவிலொன்றும் நான்முகனருக = னாதியரன்மால் = சேடனநந்தனென்றிசி னோரே.

அனலி = தினகரன் பெயருந்தீப்பெயரு மனலி.

அன்றில் = அசுர நாளுமோர் பறவையும் மன்றில்.

அன்னம் = அடிசிலு மெகினமு மன்னமாகும்.

அன்னை = தாயு முன்பிறந் தாளுமன்னை.

ஆகரவருக்கம்

ஆகம் = யாக்கையு மார்பு மாகமென்றுரைப்பர்.

ஆகாரம் = அசனமுநெய்யும் படிவமு மாகாரம்.

ஆகு = எலியும் பெருச்சாளியு மாகு வாகும்.

ஆகுலம் = வருத்தமுஞ் சத்த வொலியு மாகுலம்.

ஆக்கம் = ஆக்கஞ் செல்வ முந்திருமகளு மாகும்.

ஆசாரம் = ஆடையு மொழுக்கமு மறாப்பெரு மழையு = மரசர்வாழ் கூடமு மாசார மாகும்.

ஆசினி = ஈரப் பலாமரச் சேகிவை யாசினி.

ஆசு = மெய்புகு கருவியுஞ் சடுதியுங் குற்றமு = மற்பமு மோர்கவியு மாசென லாகும்.

ஆசை = ஆர்வமும் பொன்னுந் திசையு மாசை.

ஆடல் = உரையுங் கூத்தும் வெற்றியு மாடல்.

ஆடவர் = ஆண்பெய ரிளையோ ரென்றிவ ராடவர்.

ஆடி = வாய்ந்த கண்ணாடியு மாதத் தொன்று = மாய்ந்தவுத் தராடமு மாடி யாகும்.

ஆடு = மேடமும் வெற்றியு மாடா கும்மே.

ஆணை = ஏவன் மெய்ப்பாடே விறல்செய றடுத்தல் = சூளுறவு மிலாஞ்சனையு மாணை யாகும்.

ஆண்மை = வலியும் வென்றியும் வாய்மையு மாண்மை.

ஆதி = ஆதி பழமையு மரனு மாலு = முதலு நேரோட்டமு மொழியப் பெறுமே.

ஆம்பல் = இசையின் குழலுங் கள்ளு மூங்கிலு = மல்லியும் யானையு மாம்ப லாகும்.

ஆரம் = சந்தன மணிவடந் தரளம் பதக்க = மாபரணப் பொதுவு மார மாகும்.

ஆரல் = கார்த்திகை நாளு மொருமீன் பெயரு = மங்கா ரகனு மதிலு மாரல்.

ஆரவாரம் = ஆகுலமுந் துக்கமு மாரவார மாகும்.

ஆரை = புரிசைபுற் பாயோர் புதலு மாரை.

ஆர் = ஆர்வுங் கூர்மையு மாத்தியு மாரெனல்.

மற்றும்ஆர் = தேராழி யகத்திற் செறியுறுப்பு மாகும்.

ஆர்தல் = அணிதலு நிறைதலு முண்டலு மார்தல்.

ஆர்ப்பு = அமருஞ் சிரிப்பு மார்ப்பென லாகும்.

ஆர்வம் = ஆசையு நரகத் தொன்று மார்வம்.

ஆர்வலர் = காதலர் வேட்டோர் கனிந்தோ ரார்வலர்.

ஆலம் = பூவு நீரு மொருமரப் பெயரு = மாழ்கடல் விடமு மாலமாகும்.

ஆலவன் = அம்புலிப் பெயரு மாசையு மாலவன்.

ஆலாலம் = அலர்ந்த பூவு நீருமோர் மரமு = மலைகடல் விடமும் வாவலு மாலாலம்.

ஆலி = துளியு நீர்கொளாலங் கட்டியு = மழையு மாலி யெனவகுத்தனரே

ஆலயம் = யானைக் கூடமு நகரமுந் தேவர் = கோட்டமு மாலயமென்னக் கூறும்

ஆவணம் = உரிமை யங்காடி தெருவு புனர்பூச – மிவையொரு நான்கு மாவண மென்ப.

ஆவலர் = காதலர் வேட்டோ ராவல ராகும்.

ஆழி நேழி = சாகரந் தேர்க்கால் சக்கரம் வட்ட = மோதிர மென்ன மொழிந்தவை யைந்து = நேமியு மாழியு மெனநிகழ்த் தினரே.

ஆறு = வழியு நதியுமோ ரெண்ணு மாறெனல்.

ஆற்றல் = வலியும் வென்றியும் வாய்மையு மாண்மையு = மிகுதியும் பரித்தலு ஞானமும் பொறையுங் = கூட்டுதலும்மிவை யாற்ற லாகும்.

ஆனி = அழிவு மூலமு மானியென் றாகும்.

இகரவருக்கம்

இகத்தல் = பொறுத்தலு நடத்தலு மிகத்த லாகும்.

இகல் = பகையும் வலியு மமரு மிகலெனல்.

இருளை = சுற்றமுந் தோழியு மிகுளை யென்ப.

இசை = இசையே புகழு மொழியு நாதமும்.

இடக்கர் = குடத்தின் பெயரு மறைமொழியு மிடக்கர்.

இடம் = வீடும் வலியும் படுப்பது மிடமெனல்.

இடி = உறுதிமொழி பிண்டி யுருமு மிடியே.

இடை = இடமு நுசுப்பு நடுவு மிடையெனல்.

இந்தளம் = நெருப்பிடு கலனு மிசையு மிந்தளம்.

இபம் = மரத்தின் கொம்பும் யானையு மிபமெனல்.

இரசதம் = அரைப்பட் டிகையும் வெள்ளியு மிரசதம்.

இரதம் = புணர்ச்சியுஞ் சூதமு மளியுந் தேரு – மரையாணுஞ் சுவைவு மிரத மென்ப.

இரலை = இரலைக் கிளவி மானி னேறுந் = தலைநாளு மூதுங் கொம்பு மாகும்.

இரவி = மலையு மருக்கனும் வாணிகத் தொழிலு = மிரவி யாமென் றிசைக்கப் படுமே.

இராகம் = இசைநிறங் கீதஞ் செம்மையு மிராகம்.

இருள் = நரகமு மயக்கமுங் கருமையு மிருளெனல்.

இரெளரவம் = ஆகமத்தொன்றுநரகு மிரெளரவம்.

இலஞ்சி = மகிழ்மரங் கொப்பூழ் மடுவிவை யிலஞ்சி.

இலம்பகம் = நுதலணி யத்தி யாயஇ மிலம்பகம்.

இலாங்கலி = நாளிநேரமுஞ் செங்காந்தளு மிலாங்கலி.

இலையம் = கூத்துங் கூத்தின் விகற்பமு மிலையம்.

இல் = மனையுங் குடியு மில்லை யென்றலு = மிடமு மிராசியு மில்லென்றாகும்.

இழுக்கு = பிழைத்தல் பொல்லாங் கிவையிழுக் காகும்.

இளி = யாழினோர் நரம்புஞ் சிரிப்பு மிளியெனல்.

இறப்பு = மிகுதியு மரணமும் போக்கு மிறப்பே.

இறால் = எரிநா டேன்கூ டெருதுமீ னிறாலே.

இறும்பு = குன்றுங் காடு மிடைதூறு மிறும்பே.

மற்றும் இறும்பு = தாமரை நறுந்தண் பூவுஞ் சாற்றும்.

இறை = சிறந்தோன் பெயருஞ் செம்மையுஞ் சிறுமையுந் = தலைவனுந் தலைமையும் பெருமையுந் தங்கலு = மயனு மரனு மாதியின் பெயரும் = புள்ளி னிறகுங் கடனும் வரையு = மில்லி னிறப்புங் கடமையு மிறையே.

இறைவை = ஏணியும் புட்டடிலு மிறைவை யாகும்.

ஈகாரவருக்கம்

ஈகை = ஈங்கையும் கொடுத்தலும் பொன்னு மீகை.

ஈழம் = இரணியஞ் சிங்கள மீழ மாகும்.

உகரவருக்கம்

உஞற்று = உற்சாகமுந் தப்பு முஞற்றென மொழிப.

உடல் = யாக்கையு மாட கமும்முட லென்ப.

உடு = அம்பு மாடு மம்புத் தலையு = மொளிவான் மீனுங் கிடங்கு நாவா = யோட்டுங் கோலு முடுவென லாகும்.

உடை = உடுக்கையுஞ் செல்வமுங் குடைவேலு முடையே.

உணர்வு = அறிவுந் தெளிவு மொழிவு முணர்வெனல்.

உண்டை = படையின் வகுப்புந் திரட்சியு முண்டை.

உத்தரம் = வடக்குமே லூழித்தீ வார்த்தையு முத்தரம்.

உத்தி = உரக படப்பொறி சுணங்குரையாட = லோர் திருவுறுப்பு முத்தி யாகும்.

உத்திரம் = உத்திர மென்ப வோர்நா ளுடனே = சித்திர மாளிகை சேர்ந்ததோ ருறுப்பே.

உந்தி = பேதையர் விரும்பியாடலு நீரு = நீரின் சுழியுந் தேரின்றட்டு = நாபியிங் கடலு நதியும் யாழி = னோது முறுப்பு முந்தி யாகும்.

உப்பளம் = அளமுங் கழிநிலமு முப்பள மாகும்.

உப்பு = வேலையு மதனில் விளையும் விளையாட்டு = மோது முவருமினிமையு முப்பே.

உம்பர் = உயர்நிலை யோரு மிசையு மும்பர்.

உம்பல் = யானையும் விலங்கி னாண்பாற் பெயருங் – குடியும் வழித்தோன்றலு மும்பலாகும்.

உயவை = கான்யாற்றுப்பெயர் கருவிளை யுயவை.

உரம் = வலிமார் பூக்க ஞானந் திடமுரம்.

உரை = சத்தவொலி விருத்தி யுரைத்தலு முரையே.

உலகம் = உலகம் புவி திசை யுயர்குண மாமே.

உலகு = அவனி திசையா காய முயர்ந்தோர் = குலமிவை யுலகெனக் கூற லாகும்.

உலக்கை = ஓண நாளு முரோங்கலு முலக்கை.

உலவை = மாக்களின் மருப்பு மரமு மரத்தின் = கோடுங் காற்று முலவையின் கூற்றே.

உவளகம் = பிரிதலு மிடையர் சேரியு மதிலு = மொருசிறை யிடமு மெயிலுறுப்பும் பள்ளமும் = வாவியும் விசாலமு முவளக மாகும்.

உவா = அநுமதி யானை யிளையோ னுவாவெனல்.

உழை = இடமும் மானும் யாழ்நரம் பும்முழை.

உளை = ஆண்பான் மயிரு மஃறிணை மயிரும் = பரியின் கழுத்தணி மயிரு மிசையுஞ் = சத்த வொலியு முளையென லாகும்.

உறுகண் = துக்கமு நோயு முறுக ணென்ப.

உறுவன் = அசோகமர் கடவுளு முனிவலு முறுவன்.

உறை = நீர்த்துளி முதலாந் துளியு நீணோய் = போக்கு மருந்தும் பொருளும் போர்வையும் = வெண்கலப் பெயரும் விழுமமும் பெருமையு = மெண்குறிப் பெண்ணிப் பொலிந்துழி யிடுவதும் = பாலுறு பிரையுங் காரமு முணவுங் = குறையுவர் நீரும் படையின் கூடு = மோரிடைச் சொல்லும் வாழ்நாளு முறையெனல்.

உறையுள் = ஊர்ப்பொதுப் பெயரு மகாரமு முறையுள்.

உன்னல் = மனமு நினைவு முன்ன லாகும்.

ஊகாரவருக்கம்

ஊக்கம் = உற்சாகம் வலிமன மிகுதி யூக்கம்.

ஊழ் = பழமையு மரபும் பகையு மூழெனல்.

ஊறு = தீதுங் கொலையுந் தீண்டலு மூறெனல்.

ஊனம் = பிணமுங் கேடு மூன மாகும்.

எகரவருக்கம்

எகினம் = அன்னமுங் கவரிமாவு மாண்மரமு நாயும் – புளியும் புளிமரப் பெயரு மெகினம்.

எக்கல் = குவித்தலுஞ் சொரிதலு மெக்க லென்ப.

எருவை = கழுகுஞ் செம்புங் கொறுக்கையு மெருவை.

எலி = ஆகுவு மதுவும் பூரநா ளும்மெலி.

எல் = நல்லொளிப்பெயரு ஞாயிறும் பகலு = மெல்லியு மிகழ்ச்சியு மெல்லென வைப்பர்.

எறுழ் = தண்டாயுதம் வலி யெறுழா கும்மே.

என்றூழ் = விரிகதி ரவனும் வெயிலு மென்றூழ்.

ஏகாரவருக்கம்

ஏதம் = குற்றமுந் துன்பமு மேத மாகும்.

ஏதி = ஆயுதமுந் துண்டமும் வாளு மேதி.

ஏந்தல் = பெருமையு முயர்வுந் தலைவனு மேந்தல்.

ஏமம் = இன்பமு நீறும் பொன்னுங் காவலு = மிரவுஞ் சேமமு
மேமாப்பு மயக்கமு = மென்பன வேமப் பெயரென வாகும்.

ஏரண்டம் = ஆமணக் குஞ்சித் திரமுமே ரண்டம்.

ஏல்வை = மடுவும் பொழுது மேல்வையென் றாகும்.

ஏறு = விடையு மெருதும் விலங்கினாண் பெயரு = மிடியு முதனா
ளேறெனப் படுமே.

எனல் = தினைப்புனமுந் தினையு மேன லாகும்.

ஏனாதியர் = மந்திரிப் பெயருஞ் சேனைகாப் போரு – மறவரு
மயிர்வினை ஞருமேனாதியர்.

ஐகரவருக்கம்

ஐயம் = பொழுதும் பிச்சையும் பிச்சைகொள் கலனு –
மனுமானமுமிவை யையமென் றாகும்.

ஐயன் = வானோர் முனிவர் மறையவ ராசான் = சாத்தன்
மூத்தோன் றகப்பனு மையன்.

ஐயை = ஆரியை விந்தை யலகைக் கொடியா = ளாசா ரியன்பெரு
மாட்டி யுமையை.

ஒகரவருக்கம்

ஒண்மை = அழகு நன்று மறிவு மொண்மை.

ஒலி = ஓசையு முருகுங் காற்று மொலியே.

ஒலியல் = அதழு மாடையு மாலையும் மாறு = மொலிய லென்னு

மொண் பெயர் பெறுமே.

ஒழுக்கம் = வழியுங் குலமுமா சாரமு மொழுக்கம்.

ஒளி = ஆதவன் மதிபுகழ் விளக்குட னொளிப்பிட – மோதுங் கனலுங் கேட்டையு மொளியெனல்.

ஒளிவட்டம் = சக்கரங் கண்ணாடி தானொளி வட்டம்.

ஓகாரவருக்கம்

ஓங்கல் = மலையுந் தலைவனும் வலியோன் பெயரி – முயர்வுமேடு மூங்கிலு மோங்கல்.

ஓடை = நீர்நிலைப் பெயரு மகழுங்கிரிநெறியு = மரமும் பட்டமு மற்றிவை யோடை. .

ஓட்டம் = ஓட்டமே லுதடுந் தோல்வியு முரைக்கும்.

ஓணம் = மாயோ னாளும் வருபுன லாறு = மோணமென்ப ருணர்ந்திசி னோரே.

ஓதம் = ஈரமுங் கடலின் றிரையுங் கடலு = மோத மென்னும் பெயர்க்குரி யனவே.

ஓதனம் = உணவுஞ் சோறு மோதன மென்ப.

ஓதி = மலையும் பெண்பான் மயிரும் பூசையு = மோதினவன் பெயரு மோதியென் றுரைப்பர்.

ஓதை = புரிசையு முள்ளுயர் நிலமு மகர = மாதியின் சத்தமு மொலியு மோதை.

ஓரி = அரிவையர் மயிரொழித் தெல்லா மயிரு = முதுநரியு முசுவும் விலங்கின் சேக்கையு = மோரி யென்பரோர் வள்ளலு முரைக்கும்.

ஓரை = மகளி ரீட்டமு மற்றவ ராடலு = மவர்விளை யாடுங் களமுமிராசியு = மோரிடைச் சொல்லுங் குரவையு மோரை.

ஓலம் = ஒலியும் பாம்பு மோல மென்ப.

ஓவியம் = கண்ணா ளருஞ்சித் திரரு மோவியர்.
= = = = = = = = = = = = = = =

ககனம் = காடுஞ் சேனையும் வெளியுங் ககனம்.

கங்கம் = பருந்துஞ் சீப்புங் கங்க மென்ப.

கங்கு = கருந்தினை யும்வரம் பினருகுங் கங்கெனல்.

கசடு = குற்றமு மழுக்கு மையமுங் கசடே.

கச்சம் = கவடு மளவையுங் காலுங் கச்சம்.

கச்சை = கயிறு மெய்புகு கருவியுந் தழும்புங் = கச்சை யென்று கருதப் படுமே.

கஞறல் = சிறுமையும் பொலிவுங் கஞற லென்ப.

கஞ்சம் = தாளம் வெண்கலந் தாமரை குல்லை = கஞ்சமென்ப ரப்பமுங் கழறுவர்.

கடகம் = வட்டமு மதிலு மலையின் பக்கமுஞ் = சேனையு மூரு மோரா றெண்ணுங் = கங்கணப் பெயரும் பலகையுங் கடகம்.

கடம் = அருஞ்சுரப் பெயரும் யாக்கையுங் கயிறுங் – குடமுங் கானமுங் குஞ்சரத் திரளு = மற்றதன் கொடிறு மதமுங் கடமே.

கடல் = மகரா லயமு மளவையிங் கடலெனல்.

கடவை = கவரிறுக் கேணி குற்றமுங் கடவை.

கடி = விரைவு கூர்மை வெருவுதல் காவல் = வரைவு சிறப்பு மணத்தொழில் விளக்கம் = புதுமை யைய மிகுதி கரிப்பு = நாற்றங் காலம் பேயிவை கடியே.

கடிகை = கடிகைக் கிளவி நாழிகை கபாடத் – திடுதாள்கண்ட முந்துண்டமு மிசைக்கும்.

கடிப்பம் = காதணி யணிகலச் செப்பிவை கடிப்பம்.

கடு = ஒருமரப் பெயரும் விடமுங் கடுவெனல்.

கடை = இடம்வாயி லாவண மீறுங் கடையே.

கட்சி = காடுங் கூடுங் கட்சி யாகும்.

கட்டளை = கட்டளை துலாமு நிறையறி கருவியு = முரையறி கருவியு மளவு மொப்புமாம்.

கணம் = கணமென் கிளவி கால நுட்பமுந் = திரளும்பேயுந் திப்பிலியு நோயு = முடுவும் வட்டமுங் கணமென லாகும்.

கணி = வேங்கை மரமு மருதமுங் கணியெனல்.

கணிச்சி = தோட்டியு மழுவுந் தறிகையுங் கணிச்சி.

கணை = அம்புந் திரட்சியும் பூரநா ளுங்கணை.

கண்டகம் = காடு முள்ளுங் கண்டக மாகும்.

கண்டம் = கழுத்து மெய்புகு கருவியும் வாளு = நாடு மிடுதிரையு நவிலுந் துண்டமுஞ் = சருக்கரைப் பெயரும் வெல்லமுங் கண்டம்.

கண்டிகை = அணிகலச் செப்பு மக்க மணியும் – வாச்சியத் தொன்றும் பதக்கமுங் கண்டிகை.

கண்டூதி = காஞ்சொறியுஞ் சொறியுங் கண்டூதி யாகும்.

கதலி = வாழையுந் தேறுங் கதலி யென்ப.

கதவு = காவலுங் கபாடமுங் கதவென லாகும்.

கதுப்பு = ஆண்பெண் மயிரு மாவின் றிரளுங் – கொடிறுங் கதுப்பெனக் கூறப்படுமே.

கதை = காரணந் தண்டா யுதமொழி கதையெனல்,

கந்தம் = நாற்றமுங் கிழங்கு மணுவின் கூட்டமுங் – கழுத்தடியு மிந்திரியமுங் கந்தமென்ப.

கந்தரம் = கழுத்து மலைமுழை முகிலுங் கந்தரம்.

கந்தருவம் = கானமுங் குதிரையுங் கந்தருவ மென்ப.

கந்து = யாக்கையின் மூட்டு மாதார நிலையுங் = கம்பமும் பண்டியு ளிருசுங் கந்தெனல்.

கந்துகம் = பந்துங் குதிரையுங் கந்துக மென்ப.

கமலம் = வனசமும் புனலுங் கமலமெனப்படும்.

கம் = சலமும் வெளுப்புந் தலையின் பெயருங் = ககனமும்விதியுங் கம்மென லாகும்.

கம்பம் = நடுக்கமுந் தூணு நடுத்தறியுங் கம்பம்.

கம்பலை = துன்பமுஞ் சத்தவொலியுங் கம்பலை.

கயம் = குளமு மாழமு நீருங் குறையுங் = களிறும் பெருமையு மேன்மையுங் கயமெனல்.

கயில் = பிடர்த்தலை பூணின் கடைப்புணர்வு கயிலே.

கயினி = அத்த நாளும் விதவையுங்கயினி.

கரகம் = துளியு மாலாங் கட்டியுங் கங்கையுங் = கமண்டலமுநீருங் கரக மாகும்.

கரணம் = காரணமுங் கூத்தின் விகற்பமு மனத்தின் = பகுதியுங் கணிதமுங் கரணமெனலாகும்.

கரண்டம் = அணிகலச் செப்புநீர்க் காக்கையுங் கரண்டம்.

கரம் = கழுதைகை கிரண நஞ்சிறை கரமெனல்.

கரிணி = கரியும் பிடியுங் கரிணி யென்ப.

கரில் = காழ்த்தலுங் குற்றமுங் கொடுமையுங் கரிலெனல்.

கரீரம் = அகத்தி மிடாவே யானைப் பல்லடி = கரீரமென்று கருதப் படுமே.

கலாபம் = மேகலை யும்மணிக் கோவையு மயிலின் = றோகையுங்

கலாபமெனச் சொல்லப் படுமே.

கலாம் = கொடுமையுஞ் சினமுங் கலாமென லாகும்.

கலி = வலியு மொலியுங் கடலுமோர் பாவுங் = கடையுகப் பெயருங் கலியென் றுரைப்பர்.

கலிங்கம் = வானம் பாடிப் புள்ளு மாடையு = மூர்க்குருவிப் பெயரு மோர்நாடுங் கலிங்கம்.

கலை = மகரமுந் துகிலு மரத்தின் கவடும் = பிறைநிரம் புதலு மாண்முசுப் பெயரு = மானி னேறுங் கல்வியுஞ் சேகுங் = கால நுட்பமு நூலுங் கலையெனல்.

கல் = அருவியினோசையுஞ் சிலையுங் கல்லெனல்.

கவடு = புரோசைக் கயிறுங் கப்புங் கவடு.

கவந்தம் = புனலுஞ் செக்கும் புகன்றிடு கடியுந் = தலைக்குறைப் பிணமுங் கவந்த மாகும்

கவலை = கவர்நெறி யச்சஞ் செந்தினை கவலை

கவனம் = காடும் விரைவுங் கவன மென்ப

கவி = குதிரை வாய்பெய் கருவியுங் குரங்கும் – புலமை யிலொன்றும் வெள்ளியுங் கவியெனல்

கவிகை = குடையுங் கொடுத்தலுங் கூறுப கவிகை

கவை = எள்ளிளங் காயு மாயிலிய நாளுங் = கவருங் காடுங் கவையென லாகும்

கழி = நுகத்தொளை கோப்பது மிகுதிப் பெயருங் = கடற்புறத் தமர்வதுங் கழியென்றாகும்

கழிவு = காலி மிகுதியுங் கழிவெல லாகும்

கழுது = பேயும் வண்டும் பரணுங் கழுதே

கழை = கரும்பு மூங்கிலும் புனர்தமுங் கழையெனல்

களபம் = களபமும் யானைக் கன்றுங் களபம்

களம் = கருநிற முஞ்செருக் களமுங் கழுத்துங் – களரும்விடமு மிடமுங் களமே.

களரி = காடுஞ் செருச்செய் களமுங் களரி

களிறு = ஏனமுஞ் சுறாமுத லிவற்றி னேறும் = யானையு மத்த நாளுங் களிறே

கள் = மதுவுந் தேனுஞ் சோர்வுங் கள்ளாம்

கள்வன் = கடகரிப் பெயருங் கருநிற மகனும் = கர்க்கடக விராசியு ளெண்டுங் கள்வன்

கறங்கு = சத்த வொலியுஞ் சுழலுங் கறங்கே

கறுப்பு = கருநிற முஞ்சினக் குறிப்புங் கறுப்பே

கறை = உதிரமு மாசு முரலு நிறமுங் = கடுவு மிறையுங் கருமையுங் கறையே.

கனம் = பாரமு மேகமுங் கனமெனப்படுமே

கனலி = தினகரனு மங்கியுங் கனலி யென்ப

கன்று = ஆன்கன் றினமுஞ் சிறுமையுங் கையின் = வளையு மிளைய மரமுங் கன்றே

கன்னல் = நாழிகையு நாழிகை வட்டிலுங் கட்டியுங் – கரகமுங் கரும்புங் கன்னலென் றாகும்

கன்னி = அழிவின் மாதரு மழிவில் பொருளு = மிளைமையு மத்த நாளு மிராசியுங் = கவரியுந் துர்க்கையும் யாறுங் கன்னி

கா = சோலையுந் தோட்சுமையுந் துலாமுங் காவெனல்

காகுளி = இசைமிடற் றோசை தவிசிவை காகுளி

காசு = குற்றமு மணியுங் கோழையுங் காசே

காசை = நாணல் புற்பிடி காசையென்ப

காஞ்சி = ஒருமரப் பெயரு மோரிசைப் பெயருங் – கச்சிப்பதியு மேகலையுங் காஞ்சி

காடு = கானு மிடமுங் காடெனலாகும்

காண்டம் = இடுதிரைப் பெயரும் படலமுங் காண்டம்

காண்டை = தவத்தோ ரிடமுங் கற்பாழியுங் காண்டை

காத்திரம் = யாக்கையு முறுப்பும் யானைமுன் காலுங் – சீற்றமுங் கனத்தலுங் காத்திர மாகும்

காந்தாரம் = காடுமோரிசையுங் காந்தாரமாகும்

காப்பு = புரிசையு முள்ளுயர் நிலமுங் காப்பெனல்

காமரம் = இசையிசைப் பொதுப்பெயரடுப்புபுங் காமரம்

காயம் = காழ்த்தலும் யாக்கையுங் காயமென்ப

காரி = வடுகக் கடவுளுஞ் சனியுஞ் சாத்தனுங் – கருமையுமொரு புள்ளுங் காரி யாகும்

கார் = கருதிய கருமங் கடைமுடி வளவுந் = தவிராச் சினமும் வெள் ளாடும் புனலு = நாகமு மேகமுந் தமமு மழைபடு = காலமுங் கருமையுங் காரெனுங் கட்டுரை.

மற்றுங்கார் = ஆகு மயிரு மழகுமற் றதற்கே

கார்த்திகை = கொற்றவை யோர்நாண் மாதமுங் கார்த்திகை

காலம் = காலையும் விடியலுங் காலமாகும்

கால் = காலே வலிமையுங் காற்றுங் கூற்றுந் = தாளும் பொழுதுந் றியும் வழியு = மளவையுந் தேரி னுருளு மாகும்

காவி = கள்ளுங் குவளையு மோர்கல்லுங் காவி

காழகம் = கருநிறமும் புடவையுங் கடாரமுங் காழகம்

காளம் = காளங் கழுவுங் கறுப்பு நஞ்சும் – வாத்தியத்தொன்றும் வகுக்கப்படுமே

காளை = பாலைத் தலைவனுஞ் சிறுவனுங் காளை

கானம் = காடு மிசையுங் கானமாகும்

கானல் = கழிக்கரைச் சோலையு மலைப்புறச் சோலையுங் = கதிரவனொளியுங் கழியும்பேய்த் தேரு = முவரு முரம்பு முப்பளமுங் கானல்

கான் = காடுங் கந்தமுங் கானென மொழிப

கிஞ்சுகம் = செந்நிற மும்முண் முருக்குங் கிஞ்சுகம்

கிடக்கை = தராதலப் பெயருஞ் சயனமுங் கிடக்கை

கிடுகு = பலகையுந் தேர்மரச் சுற்றுங் கிடுகெனல்

கிட்டி = தாளமுந் தலையீற்றுப் பசுவுங் கிட்டி

கிம்புரி = முடியின துறுப்புந் தாங்கியுங் கிம்புரி

கிழமை = வாரமுங் குணமுங் காணியும் கிழமை

கிளர் = ஒளியுங் கோட்டின் மலர்த்தாதுங் கிளராம்

கிளை = கேளு மூங்கிலும் யாழிசை யுங்கிளை

கிள்ளை = கிளியுங் குதிரையுங் கிள்ளை யெனப்படும்

கின்னரம் = யாழின் பெயருநீர்ப் பறவையுங் கின்னரம்

கீசகம் = குரங்கு மூங்கிலுங் கீசகமாகும்

கீரம் = கிளியும் பாலுங் கீரமாகும்

குக்குடம் = கோழியும் பறவை காகமுங் குக்குடம்

குசலம் = குணமு மாட்சிமையுங் குசலமென்ப

குஞ்சம் = குறளு நாழியுங் குறளையுங் குஞ்சம்

குஞ்சி = குன்றியு மாண்பான் மயிருங் குஞ்சி

குடம் = பதினொரா டலிலொன்றுங் கொட்டிக்கைகுவித்தலுங் கும்பமும் பசுவு நகரமுங் கரும்பின் = கட்டியு மிடங்கருங் குடமெனக் கழறும்

குடம்பை = குடம்பை முட்டையுங் கூடு மாகும்

குடி = ஊர்ப்பொதுப் பெயரும் புருவமு மன்றிக் – குலமுங் கோத்திரமுங் குடியென் றாகும்

குடிஞை = கூகையும் புட்பொதுவும் யாறுங் குடிஞை

குடுமி = கொற்றமு முச்சியு மயிருங் குடுமி

குணம் = குடமு நிறமு நூலுங் குணமெனல்

குணில் = குறுந்தடியுங் கடிப்புங் கவணுங் குணிலே

குணுங்கர் = தோற்கருவி யோரும் புலைஞருங் குணுங்கர்

குண்டலம் = குண்டலம் விசும்புங் குழையு மாகும்

குண்டு = துலையுங் குதிரையு மாழமுங் குண்டெனல்

குத்திரம் = மலையின் பெயரும் வஞ்சனையுங் குத்திரம்

குமரி = யாமனை விந்தை யழிவிலா மாத = ரேழ்மாதர்களி லெண்ணு மோரணங்கோர் நதிப் பெயருங் கற்றாழையுங் குமரி

குமுதம் = நெடுந்திசை யானையி லொன்று நெய்தலு – மடுப்பு மொலியுந் தருப்பையுங் குமுதம்

கும்பம் = வெங்கரி நெற்றியு மிக்கநீர்க் குடமுங் = கும்ப விராசியுங் கும்பமாகும்

கும்பி = யானையு நரகமுஞ் சேறுங் கும்பி

குயம் = கொங்கையு மரிவாளுங் குயமெனப்படுமே ))

குயில் = குறித்திடு முரையுங் கோகிலமுந்தொளையு – மெண்ணுமிம் மூன்றுங் குயிலென மொழிப

குரல் = கிண்கிணி மாலையுங் கிளர்நெற் கதிரும் = யாழினோர் நரம்புங் கோதையர் மயிரும் = புள்ளின் சிறகுங் குரலெனமொழிப

குரவை = கடலுங் கைகோத் தாடலுங் குரவை

குரு = குரவனு நோயு நிறமும் பாரமு = மரசனுங் குருவெனலாகுமென்ப

குருகு = கொல்லுலை முக்குங் குருக்கத்தி மரமும் = வெண்மையுமூல நாளு நாரையுங் கோழியுங் கையின் வளையுங் குருகெனல்

குருதி = செவப்புங் குசனு முதிரமுங் குருதி

குருந்து = குருந்து முருந்துங் குருக்கத்தியும் பிள்ளையும்

குலம் = இரேவதி நாளும் வருணமும் விலங்கின் = கூட்டமுங் கோயிலுங் குலமென்றாகும்

குவடு = மலையுங் கணமுங் கவடுங் குவடே

குவலயம் = குவளையும் புலியுங் குவலயமென்ப

குழல் = இருபான் மயிரு மிசையின் கருவியுந் – தொளையுடைப் பொருளுங் குழலென்றாகும்

குழை = ககனமுஞ் சங்குஞ் சேறுங் காடுங் = குண்டலமுந் தளிருங் குழலுங் குழையே

குளகம் = குற்றெழுத்துச் செய்யுளும் மரக்காலுங் குளகம்

குளம் = குட்டமு நுதலுஞ் சருக்கரை யுங்குளம்

குளிர் = இலைமூக்கரிகருவியுஞ் சீதமுங் கவணுங் = குடமுழவு*ஞெண்டுங் குளிரெனலாகும்

குறிஞ்சி = ஐவகை நிலத்திலோர் நிலமுமோர் மரமு = மோரி*ழையும் யாழுமோர் பண்ணுங் குறிஞ்சி

குறும்பொறை = குறிஞ்சிநிலத்தூருங் குன்றுங் காடுங் – குறும்பொறை யென்று கூறப்படுமே

குன்று = வருண நாளு மலையுங் குன்றே

கூடம் = மனையு மறைவுங் கொல்லன்சம் மட்டியுங் = குவட்டினுச்சியுங் கூடமாகும்

கூட்டம் = குழாமு மலையின் முடியுங் கூட்டம்

கூந்தல் = கோதையர் மயிரு மயிற்றோகையுங் கூந்தல்

கூரல் = கோதையர் மயிர்புட்சிறகிவை கூரல்

கூலம் = அங்காடியும் வரம்பும் புனற்கரையும் பாகலும் – பசுவும் பண்ணி காரமும் விலங்கின் = வாலுங்கூலமாகுமென்ப

கூவிரம் = கொடிஞ்சியுந் தேருங் கூவிளமுங் கூவிரம்

கூழை = பெண்ணின் மயிரும் புட்சிறகுங் கூழை

கூளி = ஏறும் பேயு மிடபமு மீட்டமுங் = கூளியென்பர் குடும்பமு மதற்கே.

கூளியர் = குறவரும் வீரருங் கூளியராகும்

கூற்று = கூற்றென் கிளவி யுரையுங் காலனும்

கேசம் = ஆண்பெ ணஃறிணை மயிரிவை கேசம்

கேசரம் = மலரின்றாது மகிழ்மரமுங் கேசரம்

கேடகம் = பலகையுங் கேடிலூரும் பரிசையுங் கேடகம்

கேழ் = ஒளிய நிறமு மொப்புங் கேழே

கை = ஒப்பனை படையுறுப் பொழுக்கஞ்சிறுமை =

கரமும்பின்பிறந் தாளுங்கையே

கொக்கு = ஒருமரப் பெயரு மூலநாளுங் குதிரையும் விருகமுங் குரண்டமுங் கொக்கெனல்

கொடி = வல்லியுங் கேதுவும் படமுங் கொடியெனல்

கொடிறு = கடைவாய்ப் புறமுங்; கருவிப்பற்றுங் = குருமகிழ்பூசமுங் கொடிறெனலாகும்

கொண்டல் = குணக்கெழு காற்று மேகமுங் கொண்டல்

கொண்டை = இலந்தைக் கனிமயிர் முடியிவை கொண்டை

கொண்மூ = கொண்மூ மேகமா காயமிரண்டே

கொந்தளம் = மாதர் மயிரு மற்றவர் சுருளுங் = குழலின் கொத்துங் கொந்தளமாகும்

கொம்மை = கொங்கையுங் கைகுவித்துக் கொட்டலு மழகும் = வலியு மார்புந் திடருங் கொம்மை

கொற்றி = கோவிளங் கன்று மோடியுங் கொற்றி

கொன் = ஓரிடைச் சொல்லும் வறிதும் பெருமையுங் – காலமுமச்சமுங் கொன்னெனுங் கட்டுரை

கோ = ஆவுந் தலைவனு மொளியு மண்டமும் – பாருஞ்சொல்லும் பகழியுங்கண்ணுங் = குலிசமுந் திக்குஞ் சலமுங் கோவே

கோகிலம் = குயிலுங் குரங்குங் கோகில மென்ப

கோசம் = மதிலுறுப் பும்பண் டாரமு முட்டையு = மாணின்குறியும்புத் தகமுங் கோசம்

கோசிக,ம் = பட்டும் புடவையுங் கோசிக மாகும்

கோடகம் = குதிரையும் புதுமையும் முடியுறுப்புங் கோடகம்

கோடரம் = எட்டி யும்மரக்கொம்பும் பொதும்பருங் – குதிரையுந் தேரின் மொட்டுங் கோடரம்

மற்றுங்கோடரம் = குரங்கின்பெயருங் கூறுவ ரதற்கே

கோடிகம் = பூவின் றட்டும் புடவையுங் கோடிகம்

கோடு = மலையதன் முகடும் வரம்புநீர்க் கரையு – மாக்களின் மருப்பு மூது கொம்புஞ் = சங்கு மரத்தின் கொம்புங் கோடெனல்

கோடை = வெயிலுங் காந்தளு மேற்றிசைக் காற்றுங் = குதிரையும் வேனிலுங் கோடையாகும்

கோட்டம் = மருத நிலத்தூர் பாசறை யிடமே = நாடு நகர மானிரை படப்பை = குரவு வளைவு கோவி லௌலிய = நறும்புதலு முண்பனவுங் கோட்ட மாகும் ( )

கோட்டி = கோட்டமும் வாயிலு மலைச்சலுங் கோட்டி

கோணம் = வளைவுந் தோட்டியுங் கூனிய வாளுங் = குதிரையு மூக்குங் கோணமாகும்

கோணல் = கூனும் வளைவுங் கோணமென்ப

கோதை = மாலையு மாதருங் கைத்தோற் கட்டியு = முடும்புங் குழலுங் காற்றுஞ் சேரனு = மொழுங்கு மியமுங் கோதை யென்ப

கோத்திரம் = குடியு மலையுங் கோத்திர மாகும்

கோரம் = கொடுமையும் வட்டிலுங் குதிரையுங் கோரம்

கோலம் = அழகு மிலந்தையு மாங்கதன் கனியும் – பன்றியும் பீர்க்கும் பாக்குநீ ரோட்டமுங் = கோல மென்னுங் குறியின வாகும்

கோளி = பூவாது காய்க்கு மரமு மத்தியுங் = கொழிஞ்சியு மென்றிவை கோளி யென்ப

கோள் = அலர்கதிர் முதலிய கிரக மொன்பதும் = வலியுங் கொள்கையும் வல்லிடை யூறுங் = கொலையும் பிசினமுங் கோளெனலாகும்

கௌசிகம் = மருதயா ழிசையும் கூகையும் பட்டுஞ் – சுடர்நிலைத் தண்டுஞ் சொல்லிற் கௌசிகம்

கௌவை = கள்ளுந் துன்பமும் பழமொழியுங் கௌவை

சகரவருக்கம்

சகடம் = சகடும்பண்டியுஞ் சிகரமுஞ் சகடம்

சகுந்தம் = புட்பொதுப் பெயருங் கழுகுஞ் சகுந்தம்

சகுனம் = புட்பொதுவு நிமித்தமுங் கிழங்குஞ் சகுனம்

சகுனி = பறவை நிமித்தம் பார்ப்பவன் சகுனி

சங்கம் = சங்குமோ ரெண்ணுங் கணைக்காலுஞ் சவையு = நுதலுங் கவிஞருஞ் சங்க மென்ப

சசி = சசியே யிந்திரன் றாரமு மதியமும்

சடம் = கொடுமையும் பொய்யு மெய்யுஞ் சடமெனல்

சடை = வேணியும் வேருங் கிடையுஞ் சடையெனல்

சதம் = எண்ணும் புள்ளி னிறகுஞ் சதமெனல்

சதி = தாள வொத்து மயனாளும் வட்டமுங் = கற்பாட்டியுஞ் சோறுஞ் சதியென லாகும்

சத்தி = ஓங்கிய வுமையும் வேலுங் குடையுங் = கான்றலும் வலி யுஞ் சூலமுஞ் சத்தி

சத்திரம் = அதிசயம் விடாப்படை குடையிரும் பூண்சாலை = வேள்வியும் வேலுஞ் சத்திர மாகும்

சந்தி = அந்திப் பெயருங் கழையுந் தெருவின் = சந்தியு மிசைப் புஞ் சந்தியாகும்

சமன் = நடுவு நமனுஞ் சமனா கும்மே

சமித்தல் = பொறுத்தலு நடத்தலுஞ் சமித்த லென்ப

சம்பு = சங்கரனு மாலு மயனு மருகனுஞ் = நரியு நாவலுஞ்

சம்புவாகும்

சரகம் = தே னீப்பெயரும் வண்டுஞ் சரகம்

சரணம் = தாளு நகரமு மறை புகலுஞ் சரணம்

சரபம் = தனிவரை யாடுஞ் சிம்புள் சரபம்

சரம் = மணிவட முங்கொறுக் கச்சியு மம்புந் = தனிமையு நடையுமோ ரிருதுவுஞ் சரமே

சரி = வழிதிரள் கைவளை சரியென லாகும்

சலாகை = நாராசமுஞ் சவளமு நன்மணியுஞ் சலாகை

சலாங்கு = பொய்யாப் புள்ளு மசகமுஞ் சலாங்கே.

சல்லியம் = சல்லியஞ் செஞ்சந் தெய்யென்பு பாணம்.

சவட்டல் = சுவைத்தலுங் கோறலுஞ் சவட்ட லாகும்.

சவம் = பிணமு மூங்கிலுஞ் சவமென லாகும்.

சவி = அழகு மணிக்கோவையுஞ் சுவையுஞ் செவ்வையுஞ் = சாறுவுங் காந்தியுஞ் சவியென லாகும்.

சாகம் = கொச்சை சிறுகீரை தேக்குச் சாகம்.

சாகினி = கீரைத் திரளுஞ் சேம்புஞ் சாகினி.

சாடி = சாடிகோண் மொழி தாழி புடைவையாம்.

சாதகம் = பூதமும் வானம் பாடிப் புள்ளுஞ் = சாதக மென்பர் சனனமு மதற்கே.

சாதம் = சாத மெய்யுஞ் சோறும் பிறப்பு மாம்.

சாதி = தேறலுங் குலமுஞ் சிறுசண் பகமுந் = தேக்கும் பிரம்புஞ் சாதி யென்ப.

சாபம் = சபித்தலும் வில்லுஞ் சாப மென்ப.

சாமம் = யாமமும் வேதமு மிரவும் பச்சையுஞ் = சாம மென்பர் கறுப்புஞ் சாற்றும்.

சாமி = குரவனும் பொன்னுந் தலைவனு முருகனு = மருகனு மிளமை யாட்டியுஞ் சாமி.

சாம்பல் = அடலை யொடுங்கல்பழம் பூவிவை சாம்பல்.

சாரங்கம் = சாதகப்புள்ளு மானுஞ் சாரங்கம்.

சாரம் = அதக மினிமை மரச்சேகுஞ் சாரம்.

சாரல் = மலையின் பக்கமு மருத யாழ்த்திறத் = தோரிசைப் பெயருஞ்சார லென்ப.

சாரிகை = மண்டில வரவு நாகணவாய்ப் புள்ளுஞ் = சுங்கமுஞ் சுழல்காற்றுஞ் சாரிகை யாகும்.

சார்ங்கம் = மாயோன் றனுவொடு வில்லுஞ் சார்ங்கம்.

சாலம் = மதிலாச் சாமரம் வலைசா லேகஞ் = சவையுங் குறளை மொழியுஞ் சாலம்.

சாலி = நெற்பொது வேரி யருந்ததி சாலி.

சாலேகம் = வாதா யனமு மலர்மொட்டுஞ் சாலேகம்.

சாலை = கோயிலுங் குதிரைப் பந்தியுஞ் சாலை.

சாறு = விழவுங் குலையும் வேரியுஞ் சாறே.

சானகி = மூங்கிலுந் திருவுஞ்சானகி யென்ப

சானு = மலையு மலைப்பக்கமு முழந்தாளுஞ் சானு

சான்றோன் = மிருகசீரிடமு மிக்கோன் பெயரும் = பெருகிய கதிரின் பெயருஞ் சான்றோன்

சிகண்டி = மயிலும் பாலையா ழ்த்திறத்தோ ரோசையு – மலியுஞ் சிகண்டி யாமென விளம்புவர்

சிகரி = எலியுங் கருநா ரையுமிவை சிகரி

சிகழிகை = மயிர்முடிவாசிகை கோவை சிகழிகை

சிகி = கேதுவு மயிலு நெருப்புஞ் சிகியே

சிக்கம் = குடுமியு முறியுஞ் சீப்புஞ் சிக்கம்

சிதடன் = குருடனு மறிவில் லோனுஞ் சிதடன்

சிதம் = சிதம்வான் மீனும் வெளுப்பு ஞானமு – மாகுஞ்சயமுறப் படலுமாகும்

சிதர் = துவலையும் வண்டுந் துணியுஞ் சிதரே

சிதலை = செல்லுந் துணியு நோயுஞ் சிதலை

சித்திரம் = அழகுங் காடுமா மணக்குஞ் செய்கோல் – வடிவும் பொய்யை மெய்யாப் புணர்த்தலுஞ் = சிறப்பும் விம்மிதமுமோர்பாடலுஞ் சித்திரம்

சிந்து = நீருந் தேசமும் யாறுங் கடலுங் = கூறுமுச் சீருங் குறளுஞ் சிந்து

சிந்தூரம் = திலகமுஞ் நெந்நிறமுஞ் செங்குடையும் புளியும் = யானையும் யானைமுகமுஞ் சிந்தூரம்

சிமிலி = சிள்வீடு முறியுங் குடுமியுஞ் சிமிலி

சிமையம் = சிகரமு மலையுஞ் சிமையமாகும் ( )

சிரகம் = வட்டிலுந் தலைத்தி ராணமுஞ் சிரகம்

சிலீமுகம் = அம்புமுலைக்கண்ணு மளியுஞ் சிலீமுகம்

சிலை = வின்மலை யோர்மரஞ் சிராவண முஞ்சிலை

சில்லி = தேருருளுங் கீரையும் வட்டமுஞ் சில்லி

சில்லை = பகண்டையுஞ் சிள்வீடுங் கிலுகிலுப்பையுஞ் சில்லை

செவப்பு = சினமுஞ் சினக்குறிப்புஞ் செந்நிறமுஞ் செவப்பே

சிவை = கொல்லுலை மூக்குங் கோமா னிடத்துறை = செல்விபெயரும் வேருஞ் சிவை யெனல்

சிறுமை = துக்கமு நோயு மற்பமுஞ் சிறுமை

சிறை = புள்ளி னிறகுங் கரையின் பக்கமு – மேரியுமிடமுங் காவலுஞ்சிறையே

சினை = கருவின் பெயரு முட்டையுமுறுப்புஞ் – செழுமரக் கோடுஞ்சினை யெனலாகும்

சீகரம் = மலையு மதன் சேண் முகடுஞ் சிரமுந் – திரையுந்து வலையுங் கரகமுஞ் சீகரம்

சீதம் = குளிரும் புனலு மேகமுஞ் சீதம்

சீப்பு = கதவின் றாழுங் கங்கமுஞ் சீப்பே

சீருள் = செம்பு மீயமுமாக்கமுஞ் சீருள்

சீர் = தாளமுஞ் செல்வமு ந்தண்டாயுதமுஞ் சீர்த்தியுங் காவும் பாரமுஞ் சீரெனல்

சீவனி = செவ்வழி யாழ்த்திறத் தோரிசைப்பெயரு = முயிர்தரு மருந்துஞ் சீவனியாகும்

சீவன் = வியாழமு முயிருஞ் சீவ னென்ப

சுகம் = இன்பமுங் கிளியுஞ் சுகமென விளம்புவர்

சுக்கை = மாலையும் வான மீனுஞ் சுக்கை

சுசி = சுசியே சுத்தமுங் கோடையு மன்றி – யனலின்பெயர்க்கு மபிதானம்மே

சுடர் = தழலும் விளக்குஞ் சந்திரா தித்தரு = மொளியுஞ் சுடரென்றுரைத்தனர் புலவர்

சுடிகை = சுட்டி மணிமுடி யுச்சி சுடிகை

சுண்டன் = சூரனுஞ் சதய நாளுஞ் சுண்டன்

சுதை = சுடுசுண்ணச் சாந்தும் புதல்வியு மமிழ்துங் = கறவாத் தேனுஞ் சுதையெனலாகும்

சுந்தரி = சூரனுஞ் சசியுந் துர்க்கையுஞ் சுந்தரி

சுபம் = தரும நன்மை மோக்கமுஞ் சுபமே

சும்மை = ஊர்ப்பொதுப்பெயரு நாடுஞ் சுமையு = மொலியு நென்முதற் போருஞ்சும்மை

சுரிகை = மெய்புகு கருவி பத்திரஞ் சுரிகை

சுரியல் = ஆண்பெண் மயிருஞ் சுழியுஞ் சுரியல்

சுருங்கை = நுழைவா யிலுநீர்ப்போகியுஞ் சுருங்கை

சுருதி = ஒலியும் வேதமுஞ் சுருதி யென்ப

சுரை = ஆவின் முலையு மலாபுந் தொண்டியு – முட்டொளைப் பெயருஞ் சுரையென வுரைப்பர்

சுவர்க்கம் = தெய்வலோகமு முலையுஞ் சுவர்க்கம்

சுவல் = மேடும் பிடருந் தோளின் மேலுங் = குரகதக் குசையுங் கூறுஞ் சுவலே

சுவவு = புத்தே ணாடும் புள்ளின் மூக்குஞ் = சுண்டன் பெயருஞ் சுவவென்றாகும்

சூதகம் = தோற்றமும் வாலாமையு முலைக்கண்ணுஞ் சூதகம்

சூரன் = சூரனென் கிளவி சூரன் பெயருந் = தீரனு நாயுந் தெரிக்கப் படுமே.

மற்றுஞ்சூரன் = அருக்கனுந்தீயு மாகுமற்றதற்கே

சூர் = சூரென் கிளவி யச்சமுந்துன்பமும் – பிணியுந்தெய்வப்

பெயருமாகும்

சூழி = சுனையுங் கரிமுக படாமுஞ் சூழி

செச்சை = வெட்சி வெள்ளாட் டாண்பெயர்செச்சை

செடி = பாவங் குணமின்மை நாற்றம் புதல்செடி

செந்து = ஓசையு நரகத் தொன்ற நரியுஞ் = சீவனு மணுவுஞ்செந்து வாகும்

செப்பம் = தெருவு நெஞ்சு நடுசெம்மையுஞ்செப்பம்

செம்புலம் = பறந்தலைபாலை நிலஞ்செம்புலமே

செம்மல் = பெருமையும் வலியும் பழம்பூவு மீசனுஞ் சிறுவனுந் தலைவனுஞ் செம்மலென்ப

செய்யல் = சேறு மொழுக்கமுங் காவலுஞ் செய்யல்

செல் = இடியு மேகமுஞ் சிதலையுஞ் செல்லெனல்

செவிலி = முன்பிறந்தாளுங் கோடாயுஞ் செவிலி

செவ்வி = போதும் பருவமும் பொழுதுஞ் செவ்வி

செழுமை = வனப்புங் கொழுப்பு மாட்சிமையுஞ் செழுமை

சேக்கை = சயனமு முலையுஞ் சேக்கையாகும்

மற்றுஞ்சேக்கை = விலங்கின் றுயிலிடப் பெயரும் விளம்புவர்

சேடன் = இளையோன் பெயரு மடிமையும் பாங்கனு = மனந்தனு மோர்சாதிப்பெயருஞ் சேடன்

சேடி = சிலதியும் விஞ்சையர் செரியுஞ் சேடி

சேடு = திரட்சி யழகு நன்று பெருமையுஞ் சேடே

சேண் = உயரமு நீளமு மகலமுஞ் சேணே.

சேதகம் = சேறுஞ் செந்நிறமுஞ் சேதக மென்ப.

சேத்து = செந்நிறப் பெயரு மொப்பு மசைச்சொலு – முறுப்புங் கருத்து மையமுஞ் சேத்தெனல்.

சேய் = குமரனுஞ் செவ்வாய்க் கோளுஞ் செவப்புஞ் = சிறுவனு நீளமுஞ் சேயெனலாகும்.

சொல் = நெல்லும் புகழுஞ் சொல்லுஞ் சொல்லே.

சோதி = இரவியுமெனையாளீசன்பெயரு = மொருநாண் மீனுமொளியுஞ் சோதி.

சோனை = ஓண மீனுமொழியாது சொரியு = மாரியுஞ் சோனையென்ன
வகுப்பர்.

சௌரி = கன்னன் பெயருங் கார்வண்ணன் பெயருஞ் = சனியின் பெயரு மியமனுஞ் சௌரி.

மற்றுஞ் சௌரி = கருதிலோர் நதிக்குங் கருதப்படுமே. (*)

ஞகர வருக்கம்.

ஞாட்பு = சமரும் பாரமுங் களமு ஞாட்பே.

ஞாளி = நாயுங் கள்ளு ஞாளி யென்ப.

ஞெகிழி = நூபுரந்தீயுறுவிறகு தீக்கடை கோல் = ஞெகிழி யென்னு நெறிய வாகும்.

ஞெள்ளல் = பள்ளமுந் தெருவுமேன்மையு ஞெள்ளல்.

தகர வருக்கம்.

தகடு = ஐமையு மிலையுந் தகடென லாகும்.

தகை = அருளுங் குணமுந்தளர்வுந் தகையே.

தகைமை = அழகும் பண்பும் பெருமையுந் தகைமை.

தடம் = தடாகப் பெயரு மலையடி யுந்தடம்.

தடவு = பகுதியும் வளைவும் பெருமையுந் தடவெனல்.

தடி = தனுவு முலக்கையுந் தசையு முடும்புந் = தண்டும்
வயலுமின்னலுந் தடியே.

தட்டி = நடுவட்டேரு மொண்டிரிகையும் பரிசையும் = வட்டப்
பெயருந் தட்டென லாகும்.

தட்டை = கரடிகை கிளிகடி கருவி சின்னந் = தினைத்தாண்
மூங்கிலென்றிவை தட்டை.

தண்டம் = தந்திரமுங் கரிசெல் வழியுந் தண்டம்.

தண்டு = தடியுந் தானையுங் குழாயும் வீளையு =
மிதுனமுமுலக்கையுந் தண்டெனலாகும்.

தண்ணடை = = நாடுமருதத் தூருந் தண்ணடை.

தண்ணம் = = மழுவு மொருகட் பறையுந் தண்ணம்.

தண்மை = = தாழ்வு மெளிமையுந் தண்மை யென்ப.

தத்தை = = முன்பிறந்தாளுங் கிளியுந் தத்தை.

தமம் = = இராகுவு மிருளுந் தமமென விசைப்பர்.

தமிழ் = = இனிமையு நீர்மையுந் தமிழெனலாகும்.

தம்பம் = = கம்பமு மெய்புகு கருவியுந் தம்பம்.

தரணி = = தலமு மலையுந் தபனனுந் தரணி.

தவிசு = = மெத்தையுந் தடுக்கும் பீடமுந்தவிசே.

தழல் = = கிளிகடி கருவியு நெருப்புந் தழலே.

தளம் = = தாழியுஞ் சாந்துந் தளமாகும்மே.

தளிமம் = = சயனமு ம*கு மெத்தையுந் தளிமம்.

தளை = = ஆண்பான் மயிர்தொடர்பு சிலம்புந்தளையே.

தனஞ்சயன் = = எவ்வமின் மாருதத் தொன்று நெருப்புஞ் = சவ்விய சாசியுந் தனஞ்சயனாகும்.

தனம் = = கோவிளங் கன்று முத்திரையுங் கொங்கையுஞ் சாந்தும் பொன்னுந் தனமெனலாகும்.

தனு = = யாக்கையும் வில்லுஞ் சிறுமையந் தனுவே.

தன்மம் = = புண்ணியமும் வேதமுந் தன்மமாகும்.

தன்மை = = தன்மையும் பெருமையு நன்மையுந் தன்மை.

தாணு = = துங்கமலையுந்தூணு நிலையுஞ் = சங்கரன் பெயருந் தாணுவாகும்.

தாண்டவம் = = தாவலு மாடலுஞ் செலுத்தலுந் தாண்டவம்.

தாதி = = அடிமையுஞ் செவிலியும் பரணியுந் தாதி.

தாமம = = மாலையு மலரு மணிவடப் பெயரு = நகரமு மொளியுங் கயிறுங்கொன்றையுந் = தாமமாகச் சாற்றினர் புலவர்.

தாரம் = = வல்லிசைப் பெயரும் வாழ்க்கைத்துணைவியும் = யாழினரம்பு
மரும்பண்டமும் வெண்டாதுந் = தராவு நாவுந் தார மென்ப.

தாரை = = வழியுங் கண்ணின் மணியுஞ் சுவடு = முடுவுநேரோடுதலுங்
கூர்மையும் = = வாத்தியத் தொன்றும்வீழ் மழையுந்தாரை.

தார் = = மாலையு மலருங் கொடிப்படைப் பெயருங் = கிண்கிணிமாலையுந்
தாரெனக்கிளந்துப.

தாலம் = = ஞாலமுங் கூந்தற் கமுகுநாவுங் = கோலிய கலமும் பனையுந் தாலம்.

தாழை = நாளி கேரமுங் கைதையுந் தாழை.

தாழ்மை = இளிவுங் கீழ்மையு மெண்மையுந் தாழ்மை.

தாள் = காலின் பெயரு முயற்சியுங் கபாடத் = தாளு நெல்லரி புல்லுந் தாளே.

தாறு = அளவுங் குலையுந் தாறென லாகும்.

தானம் = தந்தியின் மதமும் வலியுங் கொடுத்தலுஞ் – சுவர்க்கமும் வேட்டலு மறமுந் தானம்.

தானை = ஆடையும் படையு மாயுதமுந் தானை.

திகிரி = மலையுஞ் சக்கரமும் வட்டப் பெயருந் = தேருமுருளையு மூங்கிலுந் திகிரி.

திகை = திசையுஞ் சுணங்குந் திகையெனலாகும்.

திங்கள், மதி = சந்திரன் பெயரு மாதமுஞ் சாற்றிற் = றிங்களு மதியமு மிரண்டுஞ் செப்பும்.

திட்டை = மேடு முரலும் வேதிகையுந் திட்டை.

திணை = குலமு நிலமு மொழுக்கமுந் திணையே.

திதி = பக்கமுங் காத்தலு நிலைபேறுந்திதியே.

திரு = திருவிலக் குமியுஞ் செல்வமு மாகும்.

திலம் = எள்ளுமஞ் சாடியுந் திலமெனப்படுமே.

தீ = தீங்கு நெருப்புந் தீயென லாகும்.

தீங்கு = தீமையுங் குற்றமுந் தீங்கென லாகும்.

துகள் = தோமுநுண் பொடியுந் துகளெனலாகும்.

துங்கம் = அகலமும் பெருமையு முயரமுந் துங்கம்.

துஞ்சல் = துஞ்சன் மரணமு நிலைபேறு முறக்கமும்.

துடி = கால நுட்பமுங் குமரனாடலு = மேலமு மேழ்மாதர் நிருத்தமுஞ் சிறுபறையுந் = துடியென்கிளவி சொல்லுவர் புலவர்.

துணங்கறல் = இருளும் விழவுந்துணங்கற லென்ப.

துணி = சோதியுஞ் சீரையுந் துண்டமுந் துணியெனல்.

துண்டம் = துணிபடல் வதன மூக்குச் சாரை = துண்டம் புள்ளின் மூக்கு மாகும்.

துத்தம் = யாழி னரம்பு மொருகல் விகற்பமும் – பாலுமோரிசை யுமுதரமுந் துத்தம்.

துத்தி = அரவின் பொறியு மாங்கொரு புதலுந் = துதைதரு சுணங்குந் துத்தி யாகும்.

துப்பு = அரக்கும் பவளமு மாயுதப்பொதுவுந் = துணையும் வலியும் பொலிவு நெய்யு = மனுபவமுந்தூய்மையுந் துப்பெனலாகும்.

தும்பி = சுரையும் யானையும் வண்டுந் தும்பி.

துருக்கம் = குங்கும மரமுங் காடுந் துருக்கம்.

துருத்தி = தோலும் யாற்றிடைக் குறையுந் துருத்தி.

துரோணம் = சிம்புட் பறவையும் வில்லுங் காக்கையுந் = தும்பையும் பதக்குந் துரோணமாகும்.

துவக்கு = தோலும் பிணக்குந் துவக்கென மொழிப.

துளி = மழையுமாலியுஞ் சிதர்தலோடு = பெண்ணாமையுந் துளியென்னப் பேசுவர்.

துனி = துன்பமும் புலவி நீட்டலுந் துனியெனல்.

தூ = தூயதூற்றம்பகை தசையுந்தூவே.

தூக்கு = துலாமு முறியுங் கூத்தும் பாட்டு = முசாவுத லும்மிவை தூக்கென லாகும்.

தூங்கல் = சோம்புநிரம்பாத் துயிலுந்தூங்கல்.

தூசு = புடைவையும் யானைப்புரோசைக் கயிறும் = படையின துறுப்புந் தூசெனப்பகர்வர்.

தூபம் = புகையின் பெயர்நீர்க் கடம்பிவைதூபம்.

தூம்பு = வாயிலுமுட்டொளைப் பொருளுமூங்கிலு = மரக்காலு மதகுந் தூம்பென லாகும்.

தூரியம் = துகில்பறை முரசுபே ரெருதுந் தூரியம்.

மற்றுந்தூரியம் = வாத்தியப் பெயர்பொ தியெருதும்வரையார்.

தெய் = தெய்யென்கிளவி கோறலுந் தெய்வமும்.

தெரிவை = காரிகைப்பெயருங் கன்னியிராசியுந் = தேருங் காலைத் தெரிவையாகும்.

தெவ் = கொள்கையும் பகையுந் தெவ்வெனலாகும்.

தென் = தென்னிசை வனப்புந் தெற்குமோர் பாடலும்.

தே = தேயென் கிளவி கொளற்பாடுந் தெய்வமும்.

தேசிகம் = திசைச்சொலு மழகுங் காந்தியும் பொன்னு = மோர் கூத்தின் பெயருந் தேசிக மென்ப.

தேசிகன் = தேசாந் தரிகுரு வணிகன் றேசிகன்.

தேம் = தித்திப்புந் தேசமு நாற்றமுந் தேமெனல்.

தேயம் = காயமு நாடுந் தேய மென்ப.

தேயு = அனலு மருளுந் தேயு வாகும்.

தேர்தல் = ஆராய்தலுங் கொள்கையுந் தேர்த லாகும்

தேள் = விருச்சிக விராசியு மனுட நாளுந் = தெறுக்கா லதனொடுதேளென் றாகும்

தொங்கல் = மாலையும் பீலிக்குஞ்சமுந் தூக்கமு = மயிலின் றோகையு மயிருந் தொங்கல்

தொடி = கங்கணங் கைவளை யொருபலந் தொடியே

தொடு = மருத நிலமும் வஞ்சனைப் பெயருந் = தோட்டமு மென்றிவை தொடுவென லாகும்

தொண்டை = யானைத் துதிக்கையுங் கோவையுந் தொண்டை

தொத்து = தொழும்பு மலர்த்திரளுந் தொத்தெனப் படுமே

தொய்யல் = இன்பமுஞ் சோறுந் தொய்ய லென்ப

தொழு = தொழுவமு மிரேவதி நாளுந் தொழுவெனல்

தொறு = தொழுவு மானிரையுந் தொகுதியுந் தொறுவெனல்

தோடு = திரளும் பூவி னிதழுந் தோடெனல்

தோட்டி = கதவும் யானைக் கருவியுந் தோட்டி

தோணி = இரேவதியும் வங்கமு மெயிலின துறுப்பு – மம்புந் தோணியு மிதவையு மாகும்

தோல் = யானையும் வனப்பு மதளுந் தோல்வியுந் = தோலென்றுரைப்பர் தோற் பலகையு மாகும்

தோள் = புயமுங் கையுந் தோலெனப் புகல்வர்

தோற்றம் = வலியும் பிறப்புங் கண்டலுந் தோற்றம்

தோன்றல் = சுதனுந் தலைவனுந் தோன்ற லாகும்

நகரவருக்கம்

நகம் = உகிரு மலையு நகமென லாகும்

நகை = எயிறுஞ் சிரிப்பு மின்பமு மொளியு = நகையென் கிளவி நவிலப் பெறுமே

நடை = வழியு மொழுக்கமும் போக்கு நடையே

நந்தி = ஏறு மீசனு நந்தி யென்ப

நந்து = பறவையு நத்தையுஞ் சங்கு நந்தெனல்

நயந்தோர் = காதலரும் வேட்டோரு நயந்தோ ராகும்

நயம் = நன்று மின்பமு நியாயமு நயமெனல்

நரந்தம் = நாரத் தையுங்கத் தூரியு நரந்தம்

நரை = வெண்ணிற முமானேறு ங்கவரிமாவும் = பலிதமும் பறவையி லொன்று நரையே

நலம் = சொல்லிய விருச்சிக விராசியுஞ் சுகமு = நல்லுப காரமு நலமென்றாகும்.

நவம் = ஒன்பதும் புதுமையு மொண்கார் காலமு = மென்பன மூன்று நவமாகும்மே.

நவியம் = மழுவுங் கோடாலியு நவிய மாகும்.

நவிரம் = மலையும் புன்மையு மயிலு முச்சியு = மயிரு நவிர மென்ன வகுப்பர்.

நவிர் = ஆண்பான் மயிருந் தக்கேசி யிசையு = மருதயாழ்த்திறனும் வாளு நவிரெனல்.

நளி = திரளும் பெருமையு நளியெனச் சிறக்கும்.

நறவம் = அனிச்சமரமும் வேரியு நறவம்.

நற்றுடி = நாக மரமும் வேரு நற்றுடி.

நனை = பூவின் மொட்டுங் கள்ளு நனையே.

நாகம் = நாகமென் கிளவி நல்லிழை யாடையும் = வேழமு மொரு மரப் பெயரும் வெற்பும் = பாம்புங் குரங்கும் விசும்பும் புன்னையுங் = கடவுளரு லகுங்கா ரீயமு மாகும்.

நாஞ்சில் = கலப்பைப் படையெயி லுறுப்பிவை நாஞ்சில். (*)

நாட்டம் = நயனமும் பண்ணும் வாளு நாட்டம்.

நாப்பண் = நடுவு நடுவட் டேரு நாப்பண்.

நாரி = நறவுபெண்ணாணி பன்னாடை நாரி.

நாவிதன் = கார்த்திகை நாளும் பூரமு நாவிதன்.

நாழி = பூரட் டாதி நாளுமுட் டொளையுஞ் = சேருங் கடிகையு
மளவையு நாழி.

நானம் = அறிவும் பூசுவன யாவையு நாற்றமும் = நரையுநீராட்டுங்
கத்தூரியு நானம்.

நிசி = காஞ்சன மஞ்சள் கங்கு னிசியே.

நிதம்பம் = மலையின் பக்கமு மல்குலு நிதம்பம்.

நியமம் = நீதியுங் கோவிலு நிச்சயமுந் தெருவு = நகரமும் வீதியு
நியம மாகும்.

நிரஞ்சனம் = நிரஞ்சனம் வெளியு நிறைவு மோக்கமும்.

நிரியாணம் = யானையின் கடைக்கணு மரணமு நிரியாணம். (*)

நிருமித்தல் = படைத்தலு மாராய்தலு நிருமித்தல்.

நிறை = எடைபார்ப் பனவு மரிவையர் கற்பும் = நிகழ்துலா
விராசியு நிறையாகும்மே.

நீபம் = ஏதுவு முத்திரட் டாதி நாளு = நீர்க்கடம்பின் பெயருநீப
மென்ப

நீர் = புனலுங் குணமும் பூராடமுநீரே

நீலி = நீலியொரு மரமும் பாலைக்கிழத்தியுங் = கருமை நிறமு
மவுரியுமாகும்

நீவி = புடைவையுங் கொய்சகப் பெயரு நீவி

நுதல் = புருவமு நெற்றியு நுதலா கும்மே

நெறி = நீதியும் வழியு மொழுக்கமு நெறியெனல்

நெற்றி = படையின துறுப்பு நுதலு நெற்றி

நேத்திரம் = பட்டு நயனமு நேத்திர மாகும்

நேயம் = நெய்யு மன்பு மெண்ணெயு நேயம்

நொச்சி = எயிலுமோர்மரமுஞ் சிற்றூரு நொச்சி

பகரவருக்கம்

பகடு = பெருமை யானை யெருதிவை பகடெனல்

பகல் = பிரிவு நடுவும் பெரும்பகற் பொழுதும் = பகரு முகூர்த்தமும் பகலு நாளும் = பாகுநுகத்தாணியும் தேசும் பகலென்ப

பகவன் = பட்டார கன்மால் பங்கயன் பரம = னிரவி யருகன் புத்தனும் பகவன்

பகழி = அம்புக் குதையு மம்பும் பகழி

பக்கம் = அருகுந் திதியு மிறகும் பக்கம்

பங்கம் = சேறுந் துகிலு மிடரும் பங்கம் (

பங்கி = ஆண்பா லஃறிணை மயிரும் பங்கி

பங்கு = பகுதியுஞ் சனியு முடமும் பங்கே

பசு = உயிரு மாவும் பசுவென வுரைப்பர்

பச்சை = மரகதப் பெயரும் புதனுந் தோலும் = பரிமளப் புதலுமாலும் பச்சை

படங்கு = பெருங்கொடி மேற்கட்டி வானி படங்கெனல்

படம் = கொடியுங் கூரையுங் கோலக் கிழியும் = பணமும் யானை முகபடாமும் படமே

படலிகை = படலிகை யென்பபூந் தட்டுங் கைம்மணியும் – வட்டமும் பெரும் பீர்க்கும் வகுக்கும்

படலை = படர்தலும் வாசிகைக் கோவையும் படலை

படி = அவனியு மங்க வடிவுஞ் சோபானமும் = பகையுங் குணமு நாழியும் படியே

படிறு = பொய்யுஞ் சூதுங் களவும் படிறே

படு = மரத்தின் குலையுநீர் நிலையு மதுவு = முகரிமைப் பெயரும் படுவென மொழிப

படை = படைக்கலப் பெயரும் பரிமாக் கலணையும் – படுக்கையுஞ் சேனையுங் கலப்பையும் படையே

பட்டம் = வழியு நல்ல பதவியு மோடையும் = விலங்குதுயி லிடமுங் கவரிமாவும் = பாரதி வகுப்பும் படங்கமும் பட்டம்

பட்டி = இடமு நாயுந் தொழுவும் பட்டி

பட்டு = சிற்றூர்ப் பெயருந் துகிலும் பட்டே

பணவை = பரணுங் கழுகும் பணவை யென்ப ))

பணி = தொழிலுந் தொழில் படு கருவியுஞ் சொல்லும் = பணிதலும் பாம்பு மணியும் பணியே

பணிலம் = சலஞ்சலமு மொளிசேர் சங்கும் பணிலம்

பணை = முரசின்பெயரு மூங்கிலின்பெயரு மரத்தின் கோடு மருதநிலமு = மந்நிலப் பறையும் புரவியின் பந்தியும் = பருத்தலு வயலு மரசும் பணையெனல்

பண் = பாட்டினம்பெயரும் பரிமாக் கலணையு = நாட்டிய பண்ணும் பண்ணென நவில்வர்

பண்டம் = பண்ணி காரமு மாடகமும் பண்டம்

பண்ணவன் = பட்டாரகன்முனி திறலோன்பண்ணவன்

பண்ணை = மருத நிலமு நீர்நிலையும் வயலும் = விலங்கின் றுயிலிடமும் மகளிர் விளையாட்டுங் = கூட்டமுஞ் சவையும் புதலும் பண்ணை

பதங்கம் = புட்பொதுப் பெயரும் விட்டிற் பறவையும் = பதங்கமென்று பகரப் படுமே

பதம் = வரிசையுஞ் சோறு மொழியும் வழியு = முணவுஞ் செவ்வியு மறையினோ ருறுப்பும் = பாதமும் பொழுது மவிழும் பதமெனல்

பதலை = சைலப் பெயருந் தாழியு மோர்கட் = பகுவாய்ப் பறையும் பதலை யாகும்

பதி = தலைவனு மூரும் பதியெனத் தகுமே

பதுக்கை = பாறையு மேடுஞ்சிறு தூறும் பதுக்கை

பத்திரம் = எழிலும் புள்ளி னிறகு மிலையும் = பகழியும் சுரிகையும் பத்திர மென்ப

பத்திரை = பசுவுந் திதியுங் காளியும் பத்திரை

பந்தம் = அழகுந் திரட்சியு மிழையுங் கிளையுந் – தளையுங்கைத் தீபமும் பந்தமென்ப

பயசு = பயசு நீரும் பாலு மாகும்

பயம் = பாலு நீரும் பயமென லாகும்

பயம்பு = பகடு படுங்குழி நீர்நிலை பயம் பெனல்

பயல் = பாதியுஞ் சிற்றாளும் பள்ளமும் பயலெனல்

பயிர் = பைங்கூ ழும்புட் குரலும் பயிரெனல்

பயோதரம் = முலையு மேகமும் பயோதர மெனப்படும் )

பரசு = மழுவு மூங்கிலும் பரசென வகுப்பர்

பரதர் = தனவை சியருங் கழியரும் பரதர்

பரம் = மெய்யு மெய்புகு கருவியும் பாரமும் = பரிமாக் கலணையு முன்பும் பரமெனல்

பரவை = பரவைக் கிளவி பரப்புங் கடலுந் = திருமக ளாடலு முப்புஞ் செப்பும்

பரி = துலையு நொடியுந் துரகதப் பெயரும் = பெருமையுஞ் செலவு மாயமும் பரியெனல்

பரிகம் = புரிசையுள் ளுயர்ந்த நிலமுங் கணையமும் = பரிக மென்று பகரப்படுமே

பரிதி = இரத வுருளு மிடுபரி வேடமும் = பகலவன் பெயரும் வட்டமும் பரிதி

பருவம் = பக்குவமும் பொழுதும் பருவமாகும்

பலம் = பழமுங் கிழங்குங் காயுஞ் சேனையு = நிறையும் பேறும் பலமென் றுரைப்பர்

பலாசம் = பச்சை நிறமும் புரசும் பலாசம்

பலி = பலிதமுங் காகமும் பலியெனப் பகர்வர்

பலிதம் = நரையுங் காய்க்கு மரமும் பலிதம்

பவனம் = பார்காற் றிராசி மனையும் பவனம் (( )

பழங்கண் = துன்பமு மெலிவு மொலியும் பழங்கண்

பளிங்கு = பளிங்கே கல்லும் புகரும் பகரும்

பள்ளி = தவத்தோ ரிடமுஞ் சயனமுந் துயிறலு = நகரமுஞ் சிற்றூரும் விலங்கு துயி லிடமும் = பள்ளி யென்பர் கோயிலும் பகரும்

பறம்பு = மலையு மடந்தையர் முலையும் பறம்பெனல்

பறை = முரசு புள்ளிறகு மொழியிவை பறையெனல்

பனி = துன்பமு நோயுந் துகினமுஞ் சீதமு = மச்சமு நடுக்கமும் பனியென் றுரைப்பர்.

பாகம் = பாதியும் பிச்சையும் பாக மென்ப.

பாகல் = பலாவுங் கார வல்லியும் பாகல்.

பாகு = சருக்கரைப் பெயருங் குழம்பும் பாகே.

பாசம் = பசாசும் பற்றுந் துன்னமும் பாசம்.

பாசனம் = தமருந் தளிகையும் பாசன மென்ப.

பாடி = முல்லைநிலத்தூரும் பாசறையும் படையு = நாடு நகரமும் பாடியாகும்.

பாடு = கேடுஞ் சத்த வொலியு மருகும் = பாடென் றுரைக்கும் பெருமையும் பகரும்.

பாணம் = மழைவண்ணக் குறிஞ்சியு மம்பும் பாணம்.

பாணி = பதியொடு சேர்ந்த பைம்பொழிற் பெயரு = மழகுங் கானமு மப்பும் பண்டமும் = வழுவில் பற்று நாடுங் கையும் = பொழுதி னீட்டமு மியமும்பாணி.

பாண்டில் = வட்டந் தகழி மஞ்ச மூர்தி = கஞ்சஞ் சிரீட மெருதும் பாண்டில்.

பாதிரி = ஒருமரப் பெயரு மூங்கிலும் பாதிரி.

பாத்தி = பகுத்தல் சிறுசெ யில்லமும் பாத்தி.

பாம்பு = பன்னகப் பெயரும் வரம்பும் பாம்பெனல்.

பாரதி = பாரதி வங்கமும் பனுவ லாட்டியுமாம்.

பாராவாரம் = மகார லயமு மதன்கரைப் பெயரும் = பகரிற் பாராவார மாகும்.

பாரி = காதலி பெயருநல் லாடையும் புவியும் = பரி யங்கமும் வள்ளலும் பாரி யென்ப.

பார் = தேரின் பரப்பும் புவியும் பாரெனல்.

பாலிகை = வதுவைமுளைவட்டம் வாயிதழ் பாலிகை.

பால் = பாதியு மிடமும் பயசுங் குணமும் =
பக்கமுந்திசையுமியல்பும்
பாலே.

பாழி = தாபத ரிருப்பும் விலங்குதுயி லிடமு = மகலமும் வலியு நகரும் பாழுங் = கல்லின் முழையும் பாழி யென்ப.

பாளிதம் = கண்டசருக்கரையுஞ் சோறுங்கர்ப்பூரமும் = பட்டுவருக்கமும் பாளிதமென்ப.

பானல் = கருநிறக் குவளையும் வயலும் பானல்.

பானு = நல்லொளிப் பெயரு ஞாயிறும் பானு

பிசி = பொய்யுஞ் சோறு மரும்பொருளும் பிசியே

பிசிதம் = விடக்கு நீறும் வேம்பும் பிசிதம்

பிச்சம் = ஆண்பான் மயிரும் வெண்குடைப் பெயரும் = பீலிக்குடையும் பிச்சமாகும்

பிணிமுகம் = புட்பொதுப் பெயரு மயிலும் பிணிமுகம்

பிணை = விருப்பமான் விலங்கின் பெண்டொடர் பும்பிணை

பிண்டம் = பிச்சையுந் திரட்சியும் பிண்ட மெனப்படும்

பிண்டி = பிண்ணாக்கு மாவு மசோகமும் பிண்டி

பிதா = சங்கரன் பெயரு மயனுந் தாதையும் – பெருநாரைப் பெயரும் பிதாவாகும்மே

பிதிர் = துவலையு நொடியுங் கதையும் பிதிரே

பித்திகை = கருமுகை யுஞ்சுவர்த் தலமும் பித்திகை

பிரசம் = தேனீப் பெயருந் தேனும் பிரசம்

பிள்ளை = காரிப் புள்ளுங் காரிக்கடவுளும் = பேசின்மகவும் பிள்ளையாகும்

பிறங்கல் = மிகுதியு முயர்வும் பெருகலும் பிறங்கல்

மற்றும்பிறங்கல் = மலையின்பெயரு மன்னு மதற்கே

பிறப்பு = அச்சமும் பவமுஞ் செறிவும் பிறப்பெனல்

பீடிகை = பீடமுந் தட்டு மாவணமும் பீடிகை

பீதகம் = பொன்னிரு வேலி பொன்மை பீதகம்

பீதம் = பொன்மையுஞ் சாந்தும் பொன்னும் பீதம்

பீரு = அச்சமுற் றோனும் புருவமும் பீரு

பீலி = சயிலமு மயிலின் கலாபமுஞ் சவளமுஞ் – சின்னமுஞ் சிற்றால வட்டமும் பீலி

புகர் = புற்கெனு நிறம்வெள்ளி குற்றமும் புகரே

புகல் = யாக்கைசொல் வெற்றி குதிரும் புகலே

புங்கம் = அம்புக் குதைதுகி லுயர்ச்சியும் புங்கம்

புட்டம் = புடவையுங் காக்கையும் புட்டமென்ப

புணரி = புணரி கடலுங் கடற்றிரை யும்மே

புணர்ச்சி = கலவியு மியைபும் புணர்ச்சி யென்ப

புண்டரீகம் = கமலமுந் திசையின் கரிகளி லொன்றும் – புலியும் வண்டும் புண்டரீகம்மே

புதவு = கதவுமொரு விகற்பப் புல்லும் புதவே

புத்தன் = போதிக்கிறைவனு மாயனும் புத்தன்

புத்தேள் = புதுமையுந் தெய்வமும் புத்தேளாகும்

புந்தி = புதனு மறிவுஞ் சிந்தையும் புந்தி

புரத்தல் = வண்மையுங் காத்தலும் வணங்குதலும் புரத்தல்

புரவலன் = பூபா லனுங்கொடை யோனும் புரவலன்

புரை = உவமை குற்ற முயர்வேயுட்டொளைப் = பொருளென்றின்னவை புரையெனலாகும்

புலம்பு = தனிமையு மச்சமுஞ் சத்தமும் புலம்பே

புலவர் = அறிஞருஞ் சளுக்கியர் பெயரு மண்டருங் – கவிஞருங் கூத்தருங் கலைவல் லாளரும் = புரந்தர ருங்கண் ணாளரும் புலவர்

புலி = சிங்க விராசியு நால்வகைச் சாந்தத் = தொன்றும் வியாக்கிரமு முரைப்பர் புலியே

புலிங்கம் = பொறியுமூர்க்குருவியும் புலிங்க மாகும்

புல் = அநுடமோர்புதலும்புற்கெனுநிறமும் – மொருசார்மரமும் பனையும்புலியும் – புணர்ச்சியும் புல்லெனப் புகலப்பெறுமே

புவனம் = புவனமு முலகும் புனலும் புவியுமாம்

புளகம் = கண்ணாடியுங் குமிழ்த்தலு மன்னமும்புளகம்

புள் = பகரிசை வண்டும் பறவைப் பெயரும் = புகலு மவிட்ட நாளும் புள்ளெனல்

புறணி = குறிஞ்சி நிலமு முல்லையின் புறமுந் = தோலுமரப் பட்டையும் புறணியென்ப

புறம்பணை = குறிஞ்சி நிலமு முல்லையின் புறமும் = புறம்பணை யென்று புகலப் பெறுமே

புறவணி = குறிஞ்சிநிலமு முல்லையும் புறவணி

புறவம் = முலலை நிலமுங் காடும் புறவம்

புனை = பொலிவு மழகுமொப் பனையும் புனையெனல்

புன்கண் = துன்பமு நோயும் புன்கணென்ப

பூ = அவனியும் வனப்பு மலருங்கூர்மையும் = பொலிவும் பிறப்பும் பூவெனலாகும்

பூகம் = கமுகுந்திரட்சியுங் கழுகும் பூகம்

பூக்கம் = பூகமு மருத வூரும் பூக்கம்

பூட்கை = யானை யாளிப்பெயரும் யானையு = மேற்கோளும்மிவை
பூட்கையென்ப

பூதம் = பரணி நாளும் பல்லுயிர்ப்பெயரும் – பாரிடமுமிறந்தகால மூமாலும் = புனிதமும் புலிமுத லைந்தும் பூதம்

பூதி = நீறுஞ் செல்வமு நிகழ்துர்க் கந்தமும் = பூதியென்பர் நரகும் புகலும்

பூதியம் = புவியு முடம்புஞ் செல்வமும் பூதியம்

பூரணம் = நிறைவுமோர் திதியும் பூரணமென்ப

பூருவம் = முதுமையுங் கிழக்கு முன்பும் பூருவம்

பூவை = நாகணவாய்ப் புள்ளுங் காயாவும் பூவை

பூழ்தி = கொடுமையுந் தசையுநுண் பொடியும் பூழ்தி

பூளை = பொருப்பின் கணவாயுமோர் புதலும்பூளை

பேடு = அலியு மூருமத னாடலும் பேடு

பேதை = அறிவிலோனு மெளியனும்பேதை

பேராளன் = மிக்கோன் பெயரு மிருகசீரிடமும் =

பெற்றியுரைக்கிற் பேராளன்னே

பை = படமும் பச்சையு மழகும் பையே

பொகுட்டு = சேற்றெழுமொக்குளு மலையும் பங்கயப் – பொன்னிறக் கொட்டையும் பொகுட்டெனலாகும்

பொங்கர் = பொருப்பு மரத்தின் கொம்பும் பொங்கர்

மற்றும்பொங்கர் = இலவின் பெயரு மியம்பல் வேண்டும்

பொங்கல் = பொலிவு மிகுதியுங் கொந்தலும் பொங்கர்

பொம்மல் = பொலிவுஞ்சோறும் பொருமலும் பொம்மல்

பொருநன் = கொற்றவன் பெயருந் தலைவனுங்கூத்தனும் = வீரனுந்திண்ணி யோனும் பொருநன்

பொழில் = புவியுஞ் சோலையும் பெருமையும்பொழிலே

பொறி = எழுத்துச் செல்வ மிலாஞ்சனை திருமகண் – மரக்கலம் யந்திரம் வரியிந்திரியம் = பொடித்தெழு நுண்சிறு கனலிவைபொறியே

பொறை = புவனமுந் துறுகலும் பொருப்பும் பொறையெனல்

பொற்பு = பொலிவு மழகு மொப்பனையும் பொற்பெனல்

பொன் = அழகு மைவகை யுலோகமு மிரும்புந் = திருவும் வியாழமும் பொன்னெனச் செப்புவர்

போகி = பொன்னுல காளியும் பாம்பும் போகி

போகில் = பூமொட்டு நாபியும் புட்பொதுவும் போகில்

போக்கு = வழியு மிளமரக் கன்றுங் குற்றமும் – புகலிற்போதலு நடையும் போக்கே

போதகம் = அப்பவருக்கமும் யானைக்கன்று = மிளமையு மரத்தின் கன்றும் போதகம்

போந்து = பல்லியும் பனையும் போந்தெனலாகும்

போர் = சமரமு நென்முதற் சும்மையுஞ் சதயமும் = புகலுங் காலைப் போரினலாகும்

போர்வை = தோலு மீக்கோளும் போர்வையாகும்

மகரவருக்கம்

மகரம் = மலரின் றாதுஞ் சுறவும் மகரம்

மஞ்சரி = மலரின் றிரளுந் தளிரு மஞ்சரி

மஞ்சு = எழிலும் பனியு மிளமையு மேகமும் = வலியும் யானையின் முதுகு மஞ்சே

மடங்கல் = மடங்கலென் கிளவி மறலியு மிடியு – மடங்கலு நோயும் யாளியு மூழியு = மடங்கலும் வடவையு முடிவு மென்ப

மடி = பொய்யு நோயும் புடைவையுஞ் சோம்பும் = புலம்புங்கேடு மடக்கமுந் தாழையும் = வயிறு மடங்கலு மடியென லாகும்

மடு = மடுவுநீர் நிலையு மடுவென வகுப்பர்

மடை = பூண்கடைப் புணர்வுஞ் சோறு மடையே

மட்டு = மதுவு மளவு மட்டென லாகும்

மணி = வனப்பு நவமணியு மௌத்திகமு நீலமுங் – கருநிறமு நன்மையுங் கண்டையு மணியே

மண்டலி = ஒருபெரும் பாம்பும் பூசையு மண்டலி

மண்டிலம் = வட்டமு நாடுங் குதிரையு மண்டிலம்

மதலை = மைந்தனுங் கொன்றை மரமுந் தூணு – மரக்கலமுங் கொடுங்கையு மதலை யாகும்

மதன் = வலியு மழகு மலர்க்கணை வேளு = மாட்சிமைப் பெயரு மதனென லாகும்

திங்கள், மதி = முன்னிலை யசைச்சொலு முடுபதியு முணர்வு

மதியம் = சந்திரன் பெயரு மாதமுஞ் சாற்றிற் – றிங்களுமதியமு மெனச்சிறந் தனவே

மது = மதுவிள வேனிலுந் தேனுங் கள்ளுமாம்

மதுகம் = அட்டிமதரமு மிருப்பையுந் தராவும் = வண்டு மழகு மதுக மாகும்

மத்திகை = மாலையுஞ் சம்மட்டியு மத்திகை யாகும்

மந்தரம் = மந்த வோசையு மேருவு மந்தரம்

மந்தாரம் = தெய்வ மரத்திலொன்றுஞ் செம் பரத்தையு = மந்தார மென்று வழங்கப் பெறுமே

மந்தி = மந்திபெண் குரங்கும் வண்டு முசுவுமாம்

மந்திரம் = கோவிலுங் குதிரைப் பந்தியு மெண்ணமு – மதுவும் வீடு மறையு மந்திரம்.

மயல் = அவாவின் பெயரு மலகைப் பெயரு = மயலென் றறைந்தனர் வாய்மொழிப் புலவர்.

மயிலை = மீனின் பொதுவு மீனவிராசியு = மலரிரு வாட்சியு மயிலையாகும்.

மரக்கால் = அளவையு மாயவனாடலு மன்றி = வளவிய சோதியு மரக்கா லாகும்.

மருள் = பேயுங் குறிஞ்சி யாழின் றிறனு = மாலுமோர் புதலு மருளென்றாகும். (

மல் = மாயோ னாடலும் வலியு மல்லெனல். (

மல்லிகை = மாலதி சுடர்நிலைத் தண்டிவை மல்லிகை.

மழை = மழையே குளிர்ச்சியும் வருடமு மேகமும்.

மள்ளர் = செருமலை வீரருந் திண்ணி யோரு = மருதநில மாக்களு

மள்ள ரென்ப.

மறம் = சினமும் பாவமும் பிணக்குங் கூற்றும் – வலியுஞ் சேவகமும் வம்பு மறமே.

மறலி = அயர்ப்புங் கூற்று மழுக்காறு மறலி.

மறவர் = வேடர்தம் பெயரும் வீரரு மறவர்.

மறவி = மறப்பு மழுக்காறு மறவி யாகும்.

மனவு = மணிப்பெயரு மக்கு மணியு மனவே.

மன் = மறையு முத்திரட் டாதியு மரசனு = நிலையு மிகுதியு மாக்கமு மொழிவு = முரைசெயி லிடைச் சொலு மன்னென் றுரைக்கும்.

மன்றம் = வாய்மைவெளி வாசம் பொதுவு மன்றம்.

மன்றல் = பாலையா ழிசையுங் கடிப் பரிமளமும் – வதுவையு மென்றிவை மன்றலாகும்.

மன்னல் = பீடும் வலியு மடுப்பது மன்னல்.

மன்னன் = அரசனு முத்திரட் டாதியு மன்னன்.

மா = ஒருமரப் பெயரு மழைத்தலுங் கறுப்புங் = குதிரையும் விலங்குந் திருவும் வனப்பும் = வலியும் வண்டும் பிண்டியுஞ் செல்வமு – நிறனும் பெருமையு நிலனு மோரிலக்கமு = மருவிய பெயரு மாவென லாகும்.

மாசு = குற்றமு மேகமு மழுக்கு மாசே.

மாடம் = மனையு முழுந்து மாட மாகும்.

மாதர் = அரிவையரு மழகுங் காதலு மாதர்.

மாதவம் = மதுவுநற் றவமு மிளவேனிலு மாதவம்.

மாதா = வாணியுங் கௌரியு மன்னையு மாதா.

மாதிரம் = மலையுந் திசையும் யானையு மாதிரம்.

மாந்தல் = உண்டலுங் குடித்தலு மிறத்தலு மாந்தல்.

மாரி = மழையு முகிலு மரணமு மதுவும் = வடுகியு நோயுமோர் புள்ளு மாரி.

மார்க்கம் = வழியுஞ் சமயமுந் தெருவு மார்க்கம்.

மாலதி = மாலதி சுடர்நிலைத் தண்டுநிரு வாணமும்.

மாலை = இரவுந் தொடுத்த தொடையலு மந்தியும் – வரன்முறை யொழுக்கமு மியல்பு மாலை.

மால் = வாயு கருமை பெருமை மதிமகன் = மாயோன் மேக மயக்கம் வேட்கை = மாலென் றுரைப்பர்கண் ணேணியு மாகும்.

மாழை = அழகு திரட்சி யாடக மாமர = மோலை மடமை யுலோகக் கட்டி = புளிமா மாழை யாகு மென்ப.

மான் = விலங்கின் பெயரும் வெற்புங் குதிரையு = மகர விராசியு முழையு மானெனல்.

மிசை = மேடு மொழியு மிசையென விளம்புவர்.

மிச்சை = மிச்சை பொய்த்தலஞ் ஞானமு மிடித்தலும்.

மீளி = பெருமையும் வலியுந் தலைவன் பெயரும் – விறலோன் பெயரு மீளி யாகும்.

மீன் = மச்சப் பெயரும் வானத் துடுவுஞ் = சித்திரை நாளு மீனெனச் செப்புவர்.

முகில் = திரளு மேகமு முகிலென லாகும்.

முடங்கல் = மூங்கிலுந் தாழையு முடங்க லென்ப.

முடலை = உண்டையுந் திரட்சியும் பெருமையு முடலை.

முண்டகம் = தாமரைப் பெயருந் தாழையுங் கள்ளு – முள்ளுடை முள்ளியு நெற்றியு முண்டகம்.

முதலை = முதலை செங்கிடையு முருந்து மிடங்கரும்.

முதுமை = முற்றுதற் பெயரும் பழமையு முதுமை.

முரசு = உத்திரட் டாதியும் பறையு முரசசெனல்.

முரண் = பகையும் வலியு முரணெனப் பகர்வர்.

முரம்பு = பரலடுத்த நிலமும் பாறையு முரம்பே.

முருகு = இளமையு நாற்றமுங் கள்ளும் விழவு = முருக வேளு மழகு முருகே.

முளரி = கமலமு நுட்பமுங் காடு நெருப்பு = முளரி யென்ன மொழிந்திசி னோரே.

முளை = மூங்கிலுஞ் சுதனுமங் குரிப்பு முளையே.

முறம் = விசாகமுஞ் சுளகும் விளம்புவர் முறமே.

முறிகுளம் = அணைமுறி குளமும் பூராடமு முறிகுளம்.

முறுவல் = பல்லுஞ் சிரிப்பு முறுவலென்ப.

முறை = கோசமும் பழமையு மூழுங்கூட்டு = மார்ப்புமுறைமையு முறையெனலாகும்.

முனி = இருடியும் வில்லும் யானைக்கன்று – முனியென்றுரைப்ப வகத்தியு மொழிப.

முனை = பகையும் வேண்டாமையும் வினையு முனையே.

முன்னம் = சீக்கிரி மரமுமுற் காலமுஞ் சிங்கமு = முன்னமென்று மொழியப் பெறுமே.

மூசல் = மொய்த்தலு மரணமு மூச லென்ப.

மூரல் = முறுவலும் பல்லுஞ் சோறு மூரல்.

மூரி = எருமையு மெருதும் பெருமையுஞ் சோம்பும் – வலியு முரணு

நெரிவு மூரி.

மூலம் = ஒருநாண் மீனு மேதுவுங் கிழங்கு = மூலமென்று மொழியப் பெறுமே.

மெத்தை = சட்டை யணையிவை மெத்தை யாகும்.

மெய் = யாக்கையும் வாய்மையு மெய்யெனலாகும்.

மேடம் = மெய்புகு கருவியும் யாடு மேடம்.

மேடு = உயரமும் பெருமையு வயிறு மேடே.

மேதை = புதனு மறிஞனு நரம்பு மேதை.

மேல் = மேற்கு மும்பரு மேன்மையு மேலே.

மை = அஞ்சனங் குற்றங் கருநிறமலடு = மஞ்சும்யாடுமையெனலாகும்

மொக்குள் = பூவின் மொட்டுங் குமிழியு மொக்குள்.

மொய் = திரளும் யானையுஞ் செருக்கள மும்மொய்.

மொய்ம்பு = வலியுந்தோளு மொய்ம்பெனலாகும்.

மோடு = உயரமும் பெருமையும் வயிறு மோடெனல்.

மௌவல் = வனமல்லிகை யுங்குளிர் வாரமு மௌவல்.

யகரவருக்கம்.

யாணர் = கண்ணாளர் பெயரும் புதுமையு மழகு = நன்றும் யாணரெனும்பெயர் நவில்வர்.

யாமம் = இரவுஞ் சாமமுந் தெற்கும் யாமம்.

யாழ் = மிதுன விராசியும் வீணைக்கருவியு = மசுபதி நாளும் யாழெனலாகும்.

யூகம் = உடற்குறை கருங்குரங் கோர்தல் கோட்டா – னுட்பொ

ருடருக்கம் யூகமாகும்.

யூபம் = வேள்வித்தறி கவந்தம் படையுறுப்பும் யூபம்.

வகரவருக்கம்,

வங்கம் = வழுதுணைப் பெயரும் வெள்ளியு மீயமும் = வங்கமென் பநாவாயுமாகும்.

வசதி = நகரமு மனையுந் தாவும் வசதி.

வசந்தம் = வசந்தஞ்சல் லாபமுஞ் சித்திரை மாதமும்.

வசி = வசியே கூர்மை வசிவாள் வடுவுமாம்.

வசு = தேவர் கோதனந் தீபொன்னும் வசு.

வஞ்சம் = வாளும் பொய்யுங் கொடுமையும் வஞ்சம்.

வஞ்சனை = மாயையும் பெண்ணும் பொய்யும் வஞ்சனை.

வஞ்சி = போரின்மேற் செலவும் புதலுமங்கையரும் – பாவிலோர் பாவு மோர்பதிப் பெயரு = மாற்றருங் குடையும் வஞ்சியாகும்.

மற்றும்வஞ்சி = மருதயாழ்த் திறத்தோ ரோசையும் வகுப்பர்.

வடகம் = அத்தவாளப்பட்டு மதளும் வடகம்.

வடவை = வடவா வனலு மடநடைப் பிடியு – மெருமை பெயருங் குதிரையும் வடவை .

வடு = தழும்புஞ் செம்புந்தவறும் வண்டும் = வடுவென வுரைக்கு மரபாகும்மே.

வடுகு = மருதயா ழோர்குல மிந்தளமும் வடுகே.

வட்டம் = பரிசை பாரா வளையங் கைம்மணி = திரிகை வலயஞ் சாலூர்கோள் வட்டம்.

வண்டு = குருநாளுங் குற்றமு மளியுங்கை வளையு = நூலு மம்புஞ் சங்கும் வண்டெனல்.

வண்ணம் = வனப்புஞ் சந்தமுங்குணமும் வண்ணம்.

வண்மை = வலிவளங்கொடைவாய்மை வண்மை.

வதுவை = வதுவைகலி யாணமு மணமு மாகும்.

வம்பு = மணமுறிநிலை யின்மையும் பாடரும் புதுமையு = முலையின்
கச்சும் படிறும்வம்பே.

வயம் = வலியு நீரும் புள்ளும் வயமெனல்.

வயல் = வெளியுஞ் செய்யும் வயலென்றாகும்.

வயவன் = திண்ணியோன் பெயரும் வேட்டோன்பெயரு = வலியோன் பெயரும் வயவ னென்ப.

வயா = வருத்தமுங் கருவும் விருப்பமும் வயாவே.

வயிரம்...தணியா முனிவுங் கூர்மையு மணியும் = வச்சிரப் பெயருங் காழும் வயிரம்.

வரி = இசையும் பாட்டு மெழுத்து மிறையு = நெல்லுங் கடலு நிறமுஞ் சுணங்குஞ் = சந்தித் தெருவுங் கடனும் வரியே.

வருடம் = மழையு மாண்டும் வருடமாகும்.

வருணம் = குலமு நீரு மழகும் வருணம்.

வரை = அளவுங் கையிறையு மலையு மூங்கிலும் – வரைவுமெழுத்தும் வரையென லாகும்.

வலம்புரி = நந்தியா வர்த்தமுஞ் சங்கும் வலம்புரி.

வலவை = வஞ்சப் பெண்ணும் வல்லோனும் வலவை.

வலி = வலியே யொலியும் வலியோனும் வஞ்சமும்.

வலித்தல் = வலித்த லென்பது நிணைத்தலும் பேசலும்.

வழங்கல் = வண்மையு முலாவுதலும் வழங்க லென்ப.

வழி = மரபு மொழுக்க முந்திரட்சியுமகாரு = மிடமும் பின்னு முறைமையும் வழியே.

வளம் = மாட்சிமை கொழுப்புந் தகுதி வளமெனல்.

வள் = வலிப்பற் றிரும்பும் வாளுங் காதும் = வலியுங் கூர்மையும் வள்ளெனலாகும்.

வறிது = சிறுமை பயனில் சொலறியாமை வறிதே.

மற்றும்வறிது = இளிமையிய லாமையும் வறிதெனலாகும்.

வன்னி = ஒருமரப் பெயருங் கிளியு நெருப்பும் = பிரம சாரிப் பெயரும் வன்னி.

வாசம் = வாசமிருப்பிடமு மலரின் மணமும் = புள்ளி னிறகும் புடைவையும் புகலும்.

வாசி = வங்கியங் குதிரைவாசியென்ப.

வாடை = வடகாற்றுஞ் சேரியுமோர் மருந்தும்வாடை.

வாணி = பாரதிப் பெயரும் பகழிப் பெயரும் = வார்த்தையு மோர் கூத்தும் வாணியாகும்.

வாமனம் = குறளுந்திசை நிலைக்குஞ்சரத்தொன்றும் – வருமொரு நூலு மாலும் வாமனம்.

வாயில் = வாய்புலந் திறங்கரணந் துவாரமும் வாயில்.

வாரணம் = யானையுங் கோழியுஞ் சங்கும் வாரணம்.

மற்றும்வாரணம் = தடைகடன் மெய்புகு கருவியுஞ் சாற்றுவர்.

வாரம் = ஆர்கலி கிழமைக் கூறுபா டன்பு = புனற்கரை மலையடி பகுதியும் வாரம்.

வாரி = கடலும் வெள்ளமும் பகுதியும் விளைவுஞ் = சுற்றுங் கதவும் வருவாயு நீரும் = வட்டையு மதிலும்வாரியாமே.

வாருணம் = மறிகடற் பெயருமேற்கும் வாருணம்.

வால் = வெண்ணிறம் பெருமை தூய் தோகையும் வாலே.

வாள் = வசியு மொளியும் வாளென லாகும்.

வானம் = வானமழையு மரத்தின் கனியு மாகமு – முலர்மரப் பெயரும் வரையார்.

வானி = வானியோர் நதியும் வளர் துகிற் கொடியுஞ் – சேனையு மேற்கட்டியுஞ் செப்பல்வேண்டும்.

வான் = வானென் கிளவி வலியும் பெருமையு = மேகமு மாகாயமும் பெருமழையு மிடைச்சொல்லு = மோர்மர மென்று மோதுவர் புலவர்.

விசும்பு = விண்ணுஞ் சுவர்க்கமு மேகமும் விசும்பே.

மற்றும்விசும்பு = திசையின் பெயருஞ் செப்புவ ரதற்கே.

விசையம் = சருக்கரைப் பெயருந் தபனமண் டிலமும் = வெற்றிப் பெயரும் விசைய மாகும்.

விடங்கம் = வீதிக் கொடியும் வீட்டின் முகடு = மழகுங்கொடுங்கையு மாண்மையும் விடங்கம்.

விடம் = மரப்பொதுப் பெயரு நஞ்சுந்தே ளும்விடம்.

விடர் = கல்வளைப் பெயருங் கமரும் விடரே.

விடலை = திண்ணியோனுந் தலைவனும் பாலை = யிறைவனுங் காமத் துறைவனும் விடலை.

விடை = ஏறு மெருது மெதிர் மொழியும் விடை.

விண்டு = மாயவன் காற்று மலையே மூங்கின் – மேகமிவ்வைைந்தும் விண்டு வெனலாகும்.

விதப்பு = விபரமு நடுக்கமு மிகுதியும் விதப்பே.

விதவை = சோறுங்கைம் பெண்ணும் விதவையாகும்.

விதிர்ப்பு = மிகுதியு நடுக்கமும் விதிர்ப்பென விளம்புவர்.

விபுலம் = விரிவும் பெருமையும் விபுல மென்ப.

விபூதி = நிரயத்தி லொன்று நீறுங்கொடுமையுந் = தசையுங் குற்றமுஞ் செல்வமும் விபூதி.

விம்மல் = பொருமலு மழுதலு மொலித்தலும் விம்மல்.

வியப்பு = சினமுஞ் சினக்குறிப்பு மதிசயமும் வியப்பே.

வியல் = அகலமும் பெருமையுங் காடும் வியலே.

விலோதம் = மங்கையர் மயிர்சுருள் பதாதையும் விலோதம்.

வில் = மூல நாளொளி கோதண்டம் வில்லெனல்.

விழவு = மிதுன விராசியு முற்சவமும் விழவே.

விளைச்சு = இளமையுங் கலவியும் விளைச்சென லாகும்.

விளைந்தோர் = வேட்டோருங் காத லோரும் விளைந்தோர்.

விளர் = இளமையுங் கொழுப்பும் விளரென்றிசைக்கும்.

விள = விளாமர மிளமை கமரிவை விளவெனல்.

விறப்பு = அச்சமும் பலமுஞ் செறிவும் விறப்பெனல்.

விறல் = வென்றியும் வலிமையும் விற லாகும்மே.

வீ...பூவு மொழிவு நீக்கமு மடிவும் = புள்ளின் பெயருஞ் சாவும் வீயே.

வீசல் = கொடுத்தலு மெறிதலும் வீச லென்ப.

வீதி = நேரோடுதலுந் தெருவும் வீதி.

வீரை = ஒருமரப் பெயரு முறுதுயர்ப் பெயரும் = விரி கடற் பெயரும் வீரையாகும்.

வெடி = நறைபடு புகையு மச்சமு மன்றி – வெளியின்பெயரும் வெடியென்றாகும்.

வெதிர் = செவிடு மூங்கிலும் வெதிரென மொழிப.

வெளில் = யானைத் தறியு மணிலும் பாடையுந் – தயிர்கடைதறியும் வெளிலெனச்சாற்றும்.

வெள்ளம் = ஈரமுங் கடலும் கடலின்றிரையு = நீரின் பெருக்குமோ ரெண்ணும் வெள்ளம்.

வெள்ளி = புகரு மிரசதமும் புகலும் வெள்ளி.

வெள்ளை = பலதேவனும் வெண்பாவும் வெளிறும் = வெள்ளை வெள்ளாட்டு மறியு மதுவுஞ் = சங்கும் வெள்ளை யென்றுஞ் சாற்றும்.

வெறி = அணங்காட்டும் வட்டமு மச்சமும் பேயு = மணக்கு நாற்றமு மாற்றருங் கலக்கமும் = விளம்பிய நோயும் யாடும் வெறியெனல்.

வெறுக்கை = செல்வமும் பொன்னும் வெறுக்கை யாகும்.

வேங்கை = புலியுமோர் மரமும் பொன்னும் வேங்கை.

வேசரி = கழுதையுங் கோவேறு கழுதையும் வேசரி.

வேட்டுவன் = மகமோர் குளவி மறவனும் வேட்டுவன்.

வேணி = வேணி சடையு நதியும் விசும்புமாம்.

வேணு = உட்டொளைப் பொருளு மூங்கிலும் வேணு.

வேதிகை = பலகையுங் குறடுந் திண்ணையும் வேதிகை.

வேய் = ஒற்று மூங்கிலு முட்டொளையும் வேயே.

வேய்தல் = வேயுளுஞ் சூடுதலும் வேய்த லென்ப.

வேலன் = வெறியாட்டாளனுங் குமரனும் வேலன்.

வேலி = ஊரு மரணுங் காவலு நிலமு = மேவிய வயலும் வேலியாகும்.

வேலை = கடலுங் கடலின் கரையும் பொழுதும் = வினையுங் காலையும் வேலையென்றாகும்.

வேல் = படைக்கலமு ஞாங்கரு மோர் மரமும் வேலே.

வேழம் = குஞ்வசரமுங் கொறுக்கைச்சிப் பெயருமிசையுங் கரும்பு மூங்கிலும் வேழம்.

வேளாண்மை = மெய்ம்மையுங் கொடையும் வேளாண்மை யாகும்.

வேளாளர் = சதுர்த்தருங்கொடை வள்ளலும் வேளாளர்.

வேள் = தார காரியுஞ் சளுக்கியர் வேந்தனும் = வேனி லாளனும் வேளெனலாகும்.

வேள்வி = அருச்சனை யளித்த லாதி யெழுஞ்சனி = வேள்விங் குண்டமும் வேள்வியும் வேள்வி.

வேனில் = பொலிவுங் கொடையுமோ ரழகு மொப்பனையும் பேயின் றெரும் வேனிலாகும்.

வை = வைக்கோலுங் கூர்மையும் பகுதியும் வையெனல்.

வைகல் = தினமுந் தங்கலுந் தெரியின் வைகல்.

வையம் = உரோகிணி நாளும் பாருந்தேரு = மேறு மூர்தியும்வைய மெனப்படும்.

பத்தாவது = = ஒருசொற்பல்பொருள்வகை முற்றிற்று
ஆகச்சூத்திரம் –
= = = = = = = = = = = = = = = = = = = = = =

பத்தாவது = ஒருசொற்பல்பொருள்வகை / பெயர்ப்பிரிவு

அகரவருக்கம்

அகப்பா = = = மதில்,மதிலுண்மேடை

அகம் = = = = = மனம், உள்வீடு, பாவம், பூமி, மரப்பொது

அகலுள் = = = ஊர், நாடு

அகி = = = = = = பாம்பு, இரும்பு

அக்காரம் = = = புடைவை, சருக்கரை

அக்கு = = = = = = சங்குமணி, எருத்துத்திமில்

அங்கணம் = = சலதாரை, முன்றில்

அங்கதம் = = = பாம்பு, வாகுவலயம், வசைச்சொல்

அங்கம் = = உடல், அவயவம், கட்டில்

அங்கி = = நெருப்பு, சட்டை

அசனம் = = பசி,கொழுப்பு, பகுதி, அளவு, வேங்கைமரம், உண்டி.

அச்சம் = = அகத்தி, பயம்

அஞ்சலி = = கும்பிடுதல், வாவல்

அஞ்சனம் = = கரிய நிறம், மை, மேற்றிசையானை

அடல் = = வலி, பொருதல்

அடி = = ஆதி, கால், தண்டித்தல்

அடுப்பு = = பரணிநாள், அடுப்பு, பயம்

அடை = = இலை, கனம், விலை, வழி, அப்பம்

அணங்கு = = தெய்வம், கொல்லியம்பாவையர், நோய், வருத்தம், கொலை,
அழகு, ஆசை.

அணி = = படைவகுப்பு, அலங்காரம், அழகு, பெருமை, ஆபரணம், அன்பு.

அணு = உயிர், நுண்மை.

அணை = புணர்ச்சி, செய்கரை, மெத்தை, படுக்கை

அண்டசம் = பாம்பு, தவளை, முதலை, ஆமை, யானை, உடும்பு, மீன், ஒந்தி, பறவை, பல்லி, இப்பி.

அண்டம் = முட்டை, ஆகாயம்.

அண்டர் = தேவர், பகைஞர், இடையர்.

அத்தம் = ஓர்நட்சத்திரம், பொன், அருநெறி, கண்ணாடி, பாதி, கை, சொற்பொருள்.

அத்தி = யானை, ஓர்மரம், எலும்பு, கடல்.

அத்து = அரைப்பட்டிகை, தைப்பு, அசைச்சொல், செவப்பு.

அத்தை = முன்னிலையசைச்சொல், குரு.

அந்தம் = அழகு, கடை.

அந்தரம் = தனிமை, தேவராலயம், ஆகாயம், முடிவு, இருள், கூட்டம்.

அந்தரி = பார்ப்பதி, துர்க்கை.

அந்தி = பாலையாழ்த்திறத்திலொன்று, மாலைக்காலம்.

அபரம் = நரகம், பொய், பிற்பக்கம்.

அமரர் = பகைவர், தேவர்.

அமலம் = அழுக்கின்மை, அறிவு, அழகு.

அமுதம் = சுவை, பால், குணம், சோறு, தெய்வவுணவு, நீர், மோட்சம், உப்பு.

அமை = அழகு, மூங்கில்,அமைவு.

அம்பணம் = அளவை, மரக்கால், வாழை.

அம்பரம் = கடல், சீலை, ஆகாயம்.

அம்பல் = சிலரறிந்துபுறங்கூறல், பழிமொழி.

அம்மை = அழகு, வருபிறப்பு, தாய்.

அயம் = ஆடு, இரும்பு, குளம், நீர், குதிரை.

அயிராவதம் = கீழ்த்திசையானை, இந்திரன்யானை.

அயில் = வேல், கூர்மை.

அரணம் = காடு,மதில், கவசம்.

அரண் = காவல், வேல், காவற்காடு.

அரத்தம் = கடப்பமரம், உதிரம், செங்குவளை, அரக்கு,செவப்பு.

அரந்தை = குறிஞ்சியாழிசை, வருத்தம்.

அரம்பை = தெய்வப்பெண், வாழை.

அரலை = கழலை, விதை, ஓர்கற்றாழை.

அரவம் = காற்சிலம்பு, பாம்பு, ஒலி.

அரற்றல் = அழுதல், ஒலித்தல்.

அராகம் = பாடடினோருறுப்பு, செவப்பு, பாலையாழ்த்திறம், பொன், ஓர்பண்.

அரி = சுதங்கையின்பருக்கைக்கல், ஒளி, பன்றி, இந்திரன், வண்டு, பாம்பு, குரங்கு, குதிரை, கிளி, தவளை, மூங்கில், சக்கரம், நிறம், சிங்கம், தேர், படுக்கை, கண்வரி, நித்திரை, இயமன், நெருப்பு, காற்று, புகை, பகை, மாவயிரம், பறை, கள், சந்திரன், சூரியன், திருமால், உட்டொளை, கடல், பொன், பச்சை, மலை, தகட்டுவடிவு, நெற்கதிர், சோலை, ஆயுதப்பொது, கட்டிலின்விசி, அரிசி, வரி.

அரிட்டம் = காக்கை, கள், பிறவிக்குற்றம்.

அருணம் எ= து ஆடு, மான்.

அருணன் = சூரியன், சூரியன்றேர்ப்பாகன், புதன்.

அருப்பம் = ஊர்ப்பொது, ஓர்பிணி, காடு.

அருவி = மலைச்சாரலாறு, தினைத்தாள்.

அலகு = பலகறை, கொதுகு, அளவு.

அலங்கல் = பூமாலை, தளிர், அசைவு, இரங்குதல், ஒளிசெய்தல்.

அலரி = பூப்பொது, சூரியன், அழகு, கண்வரி, ஓர்மரம்.

அலர் = பழிச்சொல், பலரறிந்து பழிதூற்றல், பூ மகிழ்ச்சி.

அலை = கொலை, திரை.

அல் = இரவு, இருள்.

அல்கல் = தங்குதல், தினம்.

அல்லி = வெள்ளாம்பல், காயாமரம், அகவிதழ்.

அவந்தி = கிளி, ஓர்நகர்.

அவலை = காடு, கடுப்பு.

அழனம் = நெருப்பு, பிணம்.

அழுக்காறு = பொறாமை, மனத்தழுக்கு.

அளகம் = நீர், மயிர்.

அளக்கர் = கடல் பூமி, கார்த்திகைநாள், உப்பளம், சேறு.

அளறு = சரகம், சேறு.

அளி = வண்டு, அன்பு, கள்.

அளித்தல் = கொடுத்தல், காத்தல், செறித்தல்.

அளை = வளை, தயிர், புற்று.

அறல் = அறுதல், நீர்.

அறுவை = சீலை, சித்திரைநட்சத்திரம்.

அனந்தம் = அளவின்மை, பொன்.

அனந்தன் = அட்டமாநாகத்தொன்று, பிரமன், அருகன், சிவன், திருமால், சேடன்.

அனலி = சூரியன், நெருப்பு.

அன்றில் = மூலநட்சத்திரம், ஓர்பறவை.

அன்னம் = சோறு, அன்னப்புள்.

அன்னை = தாய், அக்காள்.

ஆகம் = உடல், மார்பு.

ஆகாரம் = போசனம், நெய், வடிவு.

ஆகு = எலி, பெருச்சாளி.

ஆகுலம் = வருத்தம், ஆரவாரம்.

ஆக்கம் = செல்வம், இலக்குமி.

ஆசாரம் எ= து = சிலை, ஒழுக்கம், பெருமழை, அரசிருக்கை.

ஆசினி எ= து = ஈரப்பலா, மரவயிரம்.

ஆசு எ= து = மெய்க்கவசம், சீக்கிரம், குற்றம், சிறுமை, ஓர்கவி.

ஆசை எ= து = அன்பு, பொன், திசை.

ஆடல் எ= து = சொல்லல், கூத்து, வெற்றி.

ஆடவர் எ= து = ஆண்மக்கள், இளையோர்.

ஆடி எ= து = கண்ணாடி, ஓர் மாதம், உத்தராடநாள்.

ஆடு எ= து = மேடவிராசி, வெற்றி.

ஆணை எ= து = ஏவல், மெய், வெற்றிசெயல், தடுத்தல், சபதம், அடையாளம்.

ஆண்மை எ= து = வலிமை, வெற்றி, உண்மை.

ஆதி எ= து = பழமை, சிவன், திருமால், முதல், நேரோட்டம்.

ஆம்பல் எ= து = இசைக்குழல், கள், மூங்கில், அல்லி, யானை.

